அடமானக்
என் பணி கடன் செய்து கொடுப்பதே!
CENTUM
Optima Mortgages Inc.
Das Narayanasamy AMP
Mortgage Specialist
Cell: 416-543-6614
Business: 416-759-1818, Fax: 416-299-0789
E-mail: das.narayanasamy@centumveedu.com
www.centumveedu.com

தாய்
வீடு
THAIVEEDU ஒகஸ்ட் 2008 HOME & LIVING

வீடு வாங்க, விற்க மற்றும் income tax, mortgage சம்பந்தமான சகல ஆலோசனைகளுக்கும் அழையுங்கள்
HOMELIFE
HIGHER STANDARDS
T: 416.264.0101
C: 416.568.4301
SELVA VETTYVEL
Broker of Record
HomeLife Future Realty Inc. Brokerage
262 Markham Road Scarborough, On M1J 3C5

# கேடு விளைவிக்கக் கூடிய நோய்கள் மக்களைத் தாக்கலாம்!

## கனேடிய சுகாதாரத்துறை எச்சரிக்கை!

கனேடிய சுகாதாரத் துறை, கனேடிய தட்ப, வெப்ப நிலை மாற்றங்களால் உடலுக்குக் கடுமையான கேடு விளைவிக்கக் கூடிய நோய்கள் மக்களைத் தாக்கலாம் எனவும், இதனால் பலவித வெப்பஞ் சார்ந்த நோய்களும், மரணங்களும் நிகழ லாம் என்ற ஒரு பாரிய அறிக்கையை வெளியிட்டுள்ளது. இவை முன்னர் கண்டறியப்படாமல் இருந்த நோய்களுக்கும் முக்கிய காரணியாக இருக்கலாம் என இவ்அறிக்கை மேலும் தெரிவிக்கின்றது.

கடந்த வாரம் வெளியிடப்பட்ட இந்த அறிக்கையில், கனேடிய அரசாங்கம் உடனே மக்களிடம் இதுபற்றிய விழிப்புணர்வை வலியுறுத்தும்படி பணிக்கப் பட்டிருக்கிறது.

“இக்கண்டு பிடிப்புக்களிலிருந்து சேகரிக்கப் பட்ட தகவல் களின்படி, இதில் அவசரமாக எடுக்கப்பட வேண்டிய முடிவு கள் உள்ளடங்கியிருப்பதுடன், வெப்பக் காரணிகளால் தாக்கம் அடைந்திருப்பவர்களுக்கு உடனடி மருத்துவ உதவிகள் அவசியம்” என்று இந்த அறிக்கை கூறுகிறது.

கூடுதலான வெப்ப அலைகள் பரவும் இந்த வேளையில், வெப்பத்தைச் சார்ந்த நோய்கள் கூடுவதுடன், அதிக மரணங்களும் இதனால் நிகழலாம். அத்துடன், சுவாச மற்றும் இதய சம்பந்தமான நோய்களும் இந்த வெப்ப அலைகளால் மனிதர் களைத் தாக்கக் கூடிய சாத்தியக் கூறுகள் அதிகம்.

*3ம் பக்கம் பார்க்க...*



படம் - கருணா

சேரனின் ஆக்கத்தில் துசி ஞானப்பிரகாசத்தின் நெறியாள்கையில் யூலைக் கலவரத்தை நினைவுகூரும்முகமாக **Young Centre For Performing Arts**தியேட்டரில் கடந்த 26ம் திகதி ஆங்கிலத்தில் இடம்பெற்ற **What If The Rain Fails** என்ற நாடகத்தின் ஓர் காட்சி

RAMAN APPLIANCES
Air Conditioning & Heating
எமக்கூடாக Furnace வாங்கும்போது ஒன்ராரியோ அரசு வழங்கும் Rebateஐப் பெற்றுக்கொள்ளலாம்
General Contractors For:
• Air Conditioning • Gas Furnaces • Central Vacuum
• Air Cleaners • Gas Fireplaces • Garage Door Openers
• Security Alarm
Tel: 416.332.1989
Cell: 647.893.4414
Raman Chelliah
President
3021 Markham Rd., Unit 51,
Scarborough, ON - M1X 1L8

THE LAW OFFICE OF
GaryAnandasangaree
Tel: 416 321 1100 Fax: 416 321 1107
gary@galaw.ca

BUYING, SELLING,
INVESTING & MORTGAGE NEEDS CALL
SUN SANMUGATHAS
Broker & Manager
One stop shopping for all your mortgage & realestate needs.
Buying - Selling - Investing
PROPERTY MAX
Realty Inc. Brokerage
Dir: 416.948.0693
Bus: 416.291.3000
PMCI
MORTGAGE CANADA

Insuring your life. Ensuring your trust.
Siva Kandiah
Managing General Agent, RBC
416-992-1259
ROYAL BROKERS
Corporation
Tel: 416-298-4722 Fax: 416-298-4664

PMCI
MORTGAGE CANADA INC.
Buying - Selling - Investing
PROPERTY MAX
Realty Inc. Brokerage
One Source For Many Type of Properties & Mortgages
Mohan Subramaniyam
Broker of Record
416.321.2300

இனிய இல்லம் ஒளிமயமான எதிர்காலதிற்கு அடித்தளம்
மகேன் சிங்கராஜா
Sales Representative
Direct: 416.302.7283 (SAVE)
E-mail: msingarajah@trebnet.com
web: www.mahenonline.com
RE/MAX
RE/MAX Vision Realty Inc., Realtor
2210 Marham Road, Unit-1, Toronto, ON M1B 5V6
Tel: 416.321.2228, Fax: 416.321.0002

முக்கிய குறிப்பு வீட்டு உரிமையாளர்களுக்கு
60 நாட்களில் அதிகூடிய விலையில் உங்கள் வீட்டை என்னால் விற்க முடியும் உங்கள் அனுசரணையுடன். தாமதிக்காது உடன் அழைத்தால்...
S.K. Bales CRA, MVA, CRES, FRI
Canadian Residential Appraiser, Real Estate Broker
416.801.3219 (Cell)
416.290.1200 (Bus), www.skbales.com
Century 21
Affiliate Realty Inc.


R&S AUTO SALES
HONDA - TOYOTA - GM MINI VANS ON THE SPOT FINANCING
சிறந்த சேவைக்கான பல விருதுகளைப் பெற்ற வாகன விற்பனை முகவர்
Radha
Tel: 416.412.3838
Fax: 416.412.1174
4362 Sheppard Ave. East
Scarborough, ON
M1S 1T6 Canada


Tel: 416-836-1946, 416-423-5057
40 Crockford Blvd., Scarborough, ON, M1R 3C3
24 hrs Service
SAM
Mobile Mechanic
K.S.TRUCK & CAR TRAILER REPAIR
All Automotive Repairs
Specializing in Mechanical, Body, Electrical Repairs & Wheel Spring


416.200.5470
ELECTRICAL - PLUMBING & DRAINAGE SERVICES
SANTHA
www.santha.ca
416-200-5470


வீடு வாங்குவதற்கும் விற்பதற்கும்
CENTURY 21 SERVICES PLUS
5855, Taschereau blvd (office 207)
Brossard, Quebec
J4Z 1A5
sugumaran@sympatico.ca
SUGUMARAN SINNIAH
(Chartered real estate broker)
Office : (514) 299-3186
(450) 926-1881


வீடு வியாபார ஸ்தாபனம்
வாங்க விற்க
Your #1 Choice
Logan Manikavasagar
Broker
Direct : 416.708.9903
Century 21
Percy Fulton Ltd. Brokerage
Email : sales@loganhotproperties.com
Kalai Logan
Sales Representative
Direct : 416.697.9903
Buy or Sell Your Properties? Real Estate is My Job...Worry Free for you...


HIGHPOINT LASER
Brand Name Toners Cartridges for Copy Machines
Laser Printers Fax Machines.
brother EPSON DELL hp
LANIER LEXMARK Panasonic IBM
TOSHIBA NEC océ SAMSUNG
Pitney Bowes XEROX
Tektronix muratec KYOCERA
SHARP Canon
100 IRONSIDE CRESENT, UNIT #10, TORONTO, ONT M1X 1M9
Tel: 416-297-9994 · Toll Free: 1.877.281-9997 · Fax: 416-297-6113
www.HighPointLaser.ca · email: Sales@HighPointLaser.ca
Lower Cost - 100% Guaranteed - Free Delivery 416-708-9903

## மனித உரிமை மீறல்களும் "சார்க்' மாநாடும்

சர்வதேச மட்டத்தில் மதிக்கப்படும் ஓர் உயர் மட்ட நிகழ்வாக "சார்க்' மாநாடு இலங்கையில் நடைபெற்று முடிவடைந்து விட்டது. இலங்கை, இந்தியா, பாகிஸ்தான், வங்காளதேசம், மாலத்தீவு, பூட்டான், நேபாளம் மற்றும் ஆப்கானிஸ்தான் ஆகிய எட்டு நாடுகளை உள்ளடக்கிய தெற்காசிய நாடுகளின் பிராந்திய ஒத்துழைப்பு ஒன்றியத்தின் 15வது உச்சி மாநாடு ஞாயிறன்று கொழும்பில் நிறைவுபெற்றது.

உணவுப் பாதுகாப்பு, எரிபொருள் பாதுகாப்பு, பிராந்திய நாடுகளுக்கு இடையில் வர்த்தக மேம்பாடு மற்றும் பயங்கரவாதத்தினை முறியடித்தல் போன்ற விடயங்களுக்கு இந்த மாநாட்டில் அதிக முக்கியத்தும் அளிக்கப்பட்டது

இந்தியாவிடம் இருந்து, சார்க் அமைப்பின் தலைவராக இலங்கை ஜனாதிபதி மகிந்த ராஜபக்ச பொறுப்பெடுத்துள்ளார்.

அரசியல் சுதந்திரம், உயிர்வாழ்வதற்கான உரிமை, நீதி- நிர்வாகம், தேசிய மனித உரிமைகளின் செயற்திறன், ஊடக சுதந்திரம் போன்றன செயற்பாடற்ற நிலையிலேயே பல நாடுகளிலும் உள்ளன. பெண்களுக்கு எதிரான வன்முறைகள், சிறார் உரிமை மீதான வன்முறை, சிறுபான்மை இனத்தவர் மீதான வன்முறைகள், மனித உரிமைகளை நிலைநாட்ட முயல்பவர்கள் மீதான வன்முறைகள், பத்திரிகையாளருக்கு எதிரான வன்முறை என்று மனிதர்களுக்கு எதிரான உரிமைகள் உலகம் எங்கும் மீறப்பட்டுக் கொண்டுதான் உள்ளன.

இந்த மனித உரிமை மீறல்கள் தொடர்பான குற்றசாட்டில் உலகத்தில் உள்ள எந்த நாடும் தப்ப முடியாது.

அவ்வப்போது மற்ற நாடுகள் கண்டித்தாலும், மறுபக்கத்தில் தடவிக் கொடுத்துக் கொண்டுதான் உள்ளன.

இதே சமயம் சார்க் கூட்டமைப்பில் உள்ள நாடுகளில் சிறிலங்காவே மிகவும் மோசமான மனித உரிமை மீறல்களைக் கொண்ட நாடாகும் என்று ஆசிய மனித உரிமை மையம் தெரிவித்துள்ளது.

இலங்கையில் நிகழும் மனித உரிமை மீறல்கள் தொடர்பாக ஐ.நாடுகள் சபையும் கண்டனங்களை தெரிவித்து வருகின்றது. சர்வதேச மன்னிப்புச் சபையும் இலங்கையில் உள்ள பத்திரிகையாளருக்கு எதிரான வன்முறைகள் தொடர்பாக கண்டனங்களை தெரிவித்து அது தொடர்பான தொடர்ச்சியான பிரச்சாரத்தில் ஈடுபட்டுள்ளது.

ஒட்டு மொத்தமாக பார்க்கையில் இந்த சார்க் அமைப்பின் தலைமைக்கு இலங்கை பொருத்தமானதா? என்ற கேள்வி மிக பிரமாண்டமாக எழுந்து நின்கின்றது.

...

பெயர் தோற்றாத கட்டுரைகளுக்கு ஆசிரியரே பொறுப்பு. கனடியத் தமிழ் வானொலியில் ஒலிபரப்பாகி பின்னர் எமக்குத் தரப்பட்ட விளம்பரங்கள் இலவசமாகப் பிரசுரமாகின்றன. அவற்றின் சரிபிழைகளுக்கு தாய்வீடு பொறுப்பல்ல. ஏனைய விளம்பரங்கள் இலவசமல்ல. ஆக்கங்கள் அனைத்துக்கும் ஆக்கியோரே பொறுப்பு.

www.inayam.net

உங்கள் நிகழ்வுகளை பார்ப்பதற்கும் பதிவதற்கும்

416 400 6406

# கேடு விளைவிக்கக் கூடிய...

1ம் பக்கத் தொடர்ச்சி...

இயற்கையின் கடுமையான அனர்த்தங்களான குறைந்த அளவு மழை, மூர்க்கத்தனமான இயற்கைத் தாக்கங்கள், கடுங்குளிர், வெப்ப அலைகள் இவற்றினால் விபத்துக்கள், வெப்பம் சார்ந்த நோய்கள், மனச்சோர்வு சம்பந்தப்பட்ட நோய்களும் மக்களைத் தாக்கலாம்.

மாசு கலந்த வளி, மகரந்தம் மற்றும் பூஞ்சணங்களால் உண்டாகும் ஆஸ்துமா, மற்றும் உடலுக்கு ஒவ்வாமை போன்றன அதிகரிக்க வழிகள் கூடுதலாக உள்ளது. சுத்தமில்லாக் காற்றினால், மாரடைப்பு, இதர இதய நோய்கள், நரம்பியக்கமின்மை போன்றன ஏற்படலாம் என்று இந்த அறிக்கை சொல்கிறது.

இ.கோலி எனப்படும் நுண்கிருமி, மற்றும் தைபொய்டு காய்ச்சலை உண்டாக்கும் கிருமி, ஏனைய கண்ணுக்குத் தெரியா நுண்கிருமிகள் உள்ள நீரை நாம் அருந்துவதன் மூலம், சில நோய்களால் தாக்கப் படுகின்றோம். காரணம், நாம் குடிக்கும் இந்த நீர் கடுமையான மழைநீரினால் நிலத்தை அடைந்து பாதிப்புக்குள்ளாகியிருக்கும்.

அந்த அறிக்கையில் மேலும், கியூபெக்கில், இனிவரும் காலங்களில் படிப்படியாக வளரும் காலநிலை மாற்றங்களினால், எத்தனை மரணங்கள் வெப்பநிலைக் காரணங்களைக் காட்டியே நிகழலாம் என்ற ஒரு கணிப்பீடும் மதிப்பிடப்பட்டிருக்கின்றது. கியூபெக்கில், லீவைஸ் நகரத்தில், ஊடகவியலாளர்கள் மத்தியில் பேசிய சுகாதாரத்துறை அமைச்சர் டோனி கிளமெண்ட், "கனேடியவாசிகள் அறிக்கையில் வெளியிடப் பட்டிருக்கும் இந்த மாதிரி மாற்றங்களுக்கும், தாக்கங்களுக்கும் தங்களைத் தயார்ப்படுத்திக் கொள்ள வேண்டும்" என்று கருத்து வெளியிட்டார். "அறிக்கையில் தெளிவாகக் குறிப்பிட்டுள்ளதுபோல், நீங்கள் இப்பொழுது சில நோய்களால் தாக்கப் பட்டிருந்தால், வரும் காலங்களில், இந்த நோய்க்காரணிகளால், அதாவது தட்ப, வெப்பநிலை மாற்றங்களால், மேலும் மேலும் நீங்கள் கடுமையாக நோய்வாய்ப்பட வாய்ப்புள்ளது" என்று மேலும் அவர் கூறினார். ஒட்டாவா, மக்களை இந்த மாதிரி காலநிலை மாற்றங்களுடன் ஒத்துப் போகக்கூடிய வகையில் உதவுதல் அவசியம் என்று அறிக்கை குறிப்பிடுகிறது. முக்கியமாக, இந்த காலநிலை கடுமையாகத் தாக்கும் குறிப்பிட்ட சில நகரங்களில், இதுபற்றிய போதிய அறிவு இல்லாததுடன் அங்கு வாழும் மக்களுக்குத் தேவையான பாதுகாப்பு உதவிகளும் சரியான நிலையில் கிடைப்பதில்லை. இவர்களை முக்கியமாகக் கருத்தில் கொள்ள வேண்டும்.

டோனி மேலும் கூறுகையில், "டோரி அரசாங்கத் திட்டத்தின்படி, Greenhouse வாயுக்களில் இருந்து உருவாகும் மாசுக்களையும் 2020ம் ஆண்டளவில் 20 விழுக்காடு குறைக்க திட்டங்கள் வகுக்கப் பட்டுள்ளது" என்றார்.

கன்சர்வேட்டிவ் அரசு பதவிக்கு வந்ததிலிருந்து, இதுவரை 85.9 மில்லியன் டொலர்களை காலநிலை விழிப்புணர்ச்சியிலிருந்து மக்களை எச்சரிக்கை செய்யவும், இக்கால நிலை மாற்றங்களுக்கேற்றவாறு மக்களைத் தயார்ப்படுத்தவும் செலவழித்துள்ளது என்று அவர் கருத்துத் தெரிவித்தார்.

அங்கத்தினரான குயின்ட்டன் கியோட்டி, இது கனேடியவாழ் மக்களுக்கு ஒரு விழிப்புணர்ச்சி தரும் அறைகூவல் என்று கூறினார்.

"மனதில் இறுக்கநிலை, சகஜமற்ற நிலை உள்ளதெனில், அதற்குக் காரணம்கூட இது தான். நாம் இவ்வாறு ஒரு கற்பனையை உருவாக்கவில்லை, உண்மையில் நடப்பது இதுதான். அதை நாம் உணர்ந்து கொண்டு, நிதர்சனத்துடன் ஒத்துப்போதல் அவசியம்" என்று அவர் தனது கருத்தைத் தெரிவித்தார்.

"மாறும் காலநிலையில், மனிதனின் உடல நலம்" என்ற தலைப்புடன் இவ் அறிக்கை வந்துள்ள.

■ ■ ■

Publisher & Editor : P.J. Dilipkumar
பதிப்பாளர், ஆசிரியர் : பி.ஜே. டிலிப்குமார்

ஆலோசகர் குழு : ஞானம் லம்பேட், மாமூலன், கருணா, பொன்னையா விவேகானந்தன், ரதன், சுந்தர் சின்னத்தம்பி.

தட்டச்சு : கௌரி, கௌசலா, ஜீவா, பிரியதர்சினி.

ஒப்புநோக்கல் : சாவையம்பதி சுப்ரமணியம், கௌரி.

வரைகலை ஆலோசனை : கருணா (டிஜி வரைகலை அமையம்)

தொடர்புகள் :
For More Info : Editor
P.O.Box #63581
Woodside Squarew
1571 Sandhurast Circ.
Toronto, ON. M1V 1V0

Montréal விநியோகம் : சுகுமாரன் சின்னையா
1-514-299-3186

Ottawa விநியோகம் : அலெக்ஸ் சிவசம்பு
1-613 -276-7253

Tel : 416-646-3422, 416.400.6406
Fax : 416.849.0594
Web : www.thaiveedu.com
E-mail : info@thaiveedu.com

#1 TEAM @ PROPERTY/MAX REALTY INC.



PROPERTY MAX
Realty Inc. Realtor
Mohan Subramaniyam
Broker of Record
416.321.2300

New Mortgage, Commercial Mortgage
New Immigrans, Ist, 2nd Mortgage
Re-Financing, New Home Buyers

WE BRING CANADA'S LEASING LENDER'S TO YOU
PMCI
PROPERTY MORTGAGE CANADA INC.

Search More Properties @
www.realestatebrokerofrecord.info

PLEASE MENTION PROPERTY/MAX WHEN ENQUIRING ABOURT PROPERTIES!

# அரசாங்கங்களே கட்டுப்படுத்த முடியாத ஆட்கடத்தல் நாடகங்கள் அரங்கேறிக்கொண்டிருக்கின்றன

- அ. கணபதிப்பிள்ளை -
kanapathipillai@thaiveedu.com

மனிதர்களை மையமாக வைத்தும், மனித உணர்வுகளை அடிபணியவைத்தும் செய்யப்படும் முதலீடுகளில் ஆட்கடத்தல் என்பது காலாகாலமாக முக்கியம் பெற்று வந்திருக்கிறது. இலகுவில் சம்பாதிக்கக்கூடிய பணம், அதிகாரத்தை தக்கவைத்துக்கொள்ளுதல் பலப்பரீட்சையில் பலத்தை உறுதி செய்து கொள்ளுதல் ஆகிய நடவடிக்கைகளை ஒன்றிணைத்த ஒரே உருவம் தான் ஆட்கடத்தல் என்ற வடிவம்.

தனியார்களினால் மேற்கொள்ளப்படும் ஆட் கடத்தல்கள் அரச நிறுவனங்களினால் தடுத்து நிறுத்தப்படுவதும் அதன் வழி கடத்தல்காரர் கள் புதிய புதிய உத்திகளைக் கையாளுவதும் உலகில் பரவலாக நிகழ்ந்து வரும் சம்பவங்களாகும்.

மறுபுறமாக அரச அனுசரணையுடன் செயற்படுத்தப்படும் ஆட்கடத்தல்கள் அதிகாரத்தைக் தக்கவைத்துக் கொள்ள உதவியாக இருப்பதுடன் சமகாலப் பரம்பரையினரின் அடாவடித்தனத்துக்கும் அதிகார வெறிக்கும் காவு கொடுத்துக்கொண்டிருக்கும் செயற்பாடாகவும் மாறிவருகிறது. சனநாயகம், பொதுவுடமை, சுதந்திரம், சமத்துவம், சகோதரத்துவம் என்ற போர்வைகளுக்குள் ஒழிந்து கொண்டு அரசியல் சித்தாந்தத்தை தூக்கி எறிந்துவிட்டு ஆட்களின் அடிவருடிகளாக வாழுபவர்களுக்கு ஆட்கடத்தல் ஒரு ஆயுதமாகவும் இருந்து வருவது அரசாங்கங்களுக்குப் பெருமையாக இருப்பினும் அதுவே அரசுக்குக் கிடைக்கும் மாபெரும் தோல்வியாகும்.

“வெள்ளை வான் கலாச்சாரம்” என்று இலங்கையில் பரவலாகப் பேசப்பட்டு வரும் ஆட்கடத்தற் கலாசாரம் பலரைச் சங்கடத்துக்குட்படுத்தியும், துன்பத்தின் மேல் துன்பத்தினை ஏற்படுத்தும் துன்பியற் செயற்பாடு களில் தலையாயதாக இருந்தும் வருகிறது. அரச யந்திரத்தின் தொழிற்பாடு ஆட்கடத்தல் இல்லாமல் இயங்கச் செய்ய முடியாத தாக மாறிவிட்டது என்று சொல்லப்படும் அளவுக்கு அரசத்துணை உதவி நிறுவனங்களின் செயற்பாடுகள் அமைந்துள்ளன. அண்மையில் ஜே.வி.பி. பாராளுமன்ற உறுப்பினர் விஜித கேரத்தின் குற்றச்சாட்டு அரசாங்க சார்பானதும் அரச உதவி பெற்ற தனியார்களினதும் குழுக்களினதும் செயற்பாடுகளில் திரும்பியிருந்தமை நோக்கற்பாலது.

பாம்பின் கால் பாம்பே அறியமுடியும் என்பது போல அரசாங்கத்திற்கு முண்டு கொடுத்துக் கொண்டிருக்கும் அரசியற் கட்சிகளின் கருத்துக்கள் உட்பூசலும் போட்டியும் கலந்து வெளிவந்த செய்தியாக இருந்த பொழுதிலும் கூட அது ஏற்படுத்தியிருந்த அவலத்தினை வெளிக்கொணரும் மிகப்பெரிய செயற்பாடாக அதனைக் குறிப்பிடலாம்.

இலங்கையில் இந்தக் கலாசாரம் தடியர்களையும் குண்டர்களையும் கூலிப் படைகளையும் பின்னணியாகக் கொண்டு நடாத்தப்பட்ட ஆட்சிக்காலங்களினூடாகச் செழித்து வளர்ந்து கொண்டிருக்கிறது.

அரசியல் எதிரிகள், பணக்காரர்கள், அதிகார வர்க்கத்தினர், அப்பாவித் தமிழ் வர்த்தகர்கள், ஊழியர்கள் ஊடகத்துறையில் உண்மையை வெளியிட்டவர்கள், கல்விமான்கள், இயக்கங்களின் பெயரைச் சூட்டி அதன் மூலம் பலிக்கடாவாக்கப்பட்டவர்கள், வெளிநாடுகளிலிருந்து பணங்களுடன் வந்த தமிழ் உல்லாசப் பிரயாணிகள் என்ற பல் வேறு தரத்தினரும் இக்கலாச்சாரத்தின் பிடியினால் பாதிப்புக்குள்ளாக்கப்பட்டு உயிரையும் உடைமைகளையும் இழந்து கொண்டிருக்கிறார்கள்.

> *“ போராளிகளை அடிபணியச் செய்யவும்,*
>
> *அவர்களது நடமாட்டத்தைக் குறைக்கச் செய்யவும்,*
>
> *போராட்ட ஆதரவாளர்களுக்குப் பயத்தினை ஏற்படுத்தவும்,*
>
> *போராட்டம் சம்பந்தமான தரவுகளைக் கொடுக்கின்ற*
>
> *ஊடகவியலாளர்களை ஒடுக்கவும், அரச சார்புடைய*
>
> *இயக்கங்களினால் கடத்தல்கள் இடம்பெறுவதாகக்*
>
> *கூறிக்கொண்டு இலங்கையின்*
>
> *அரச படைகள் தப்பித்துக் கொள்ளுகின்றன. ”*

இலங்கையின் சமூக பொருளாதார அரசியல் நடவடிக்கைகளில் குழுக்களினால் வஞ்சம் தீர்க்கப்படுதல் என்ற குறிகாட்டியினைக் கொண்டு அளவிடுகின்ற பொழுது இலங்கையானது சூடான் என்ற ஆபிரிக்க நாட்டுக்கு அடுத்ததாக இரண்டாவது இடத்தினைப் பெற்றிருக்கிறது கடந்த மூன்று ஆண்டுகளில் படிப்படியாக அதிகரித்து இவ்வாண்டு உச்சக் கட்டத்தை எட்டிப் பிடித்து விட்டதொரு பண்பினைக் காண முடிகிறது. மறுபுறமாக அரசியல் படைத்துறைசார் சேவைகளின் குறிகாட்டி வீழ்ச்சியடைந்து கொண்டே போகிறது. இந்நிலையில் தான் அரசியல் ஆதரவற்ற அத்தனை சமூகத்தின் பிரிவினரும் இத்தகைய துன்ப நிகழ்வில் பாதிக்கப்பட்டு வருகிறார்கள். இனம் மதம் மொழி என்ற வரையறைகளுக்கு அப்பாற்பட்டு பாதிக்கப்படுகின்றவர்களின் தொகை கூடிக்கொண்டேயிருக்கிறது.

தலைநகர்ப்பகுதிகளில் வாழும் தமிழர்களும் தலைநகரை நோக்கிச் சென்றுகொண்டிருக்கும் தமிழர்களும் இலகுவில் இத்தகைய பாதிப்பினைச் சந்தித்துவிடுகிறார்கள் மேல் மாகாண மக்கள் பிரதிநிதியும் தவறை இடித்துரைக்கும் துணிவாளருமான மனோ கணேசன் தமிழர்களின் அரசியல் அனாதைத்தன்மையினை எடுத்துக்காட்டும் பொழுது வடக்குக் கிழக்குத் தமிழர்களை கொழும்புக்கு வருவதைத் தவிர்த்துக் கொள்ள வேண்டும் என்று கூறிய கூற்றின் உட்பொருள் விளக்கம் இத்தகைய பயத்தின்பாற்பாட்டதே.

ஆட்கடத்தல் என்பது பல்வேறு குற்றச் செயல்களுடன் இணைந்ததும் அவற்றுக்குத் துணை போவதுமான செயற்பாடு ஆகும். அரசியல் வஞ்சகம், குழுவான்மம், போதைப் பொருள் உற்பத்தி, விற்பனை, கடத்தல், அடிமைத் தொழிலாளர், பாலியல் அடிமைத் தொழிலாளர், சிறுவர் தொழிலாளர் கடத்தல்கள் என்ற சர்வதேச சட்ட விதிகளுக்குப் புறம்பான குற்ற நடவடிக்கைகளின் பாற்பட்டதாகவே இந்த ஆட்கடத்தற் செயற்பாடு அமைந்துள்ளது. இது தனிநாட்டுச் சட்டத்துக்கும் சர்வதேசச் சட்ட நடவடிக்கைகளுக்கும் எதிராகச் செய்யப்படும் குற்றச் செயலாக உள்ளதனால் அதனைத் தட்டிக் கேட்க வேண்டிய உரிமை ஒவ்வொரு பிரஜைக்கும் இருப்பது போல அதனைக் கட்டுப்படுத்த வேண்டிய கடமை அரசாங்கங்களுக்கும் சர்வதேச அரசாங்கங்களுக்கும் இருக்கிறது.

லத்தீன் அமெரிக்க நாடான கொலம்பியாவுடன் இலங்கையினை ஒப்பிட்டு நோக்குவது இந்நாடுகளில் அரசியல் திடத்தன்மை, நேர்மையான அரசியல் என்பன இல்லை என்பதனை வெளியிடுவதுடன் பல்வேறு சர்வதேச நிறுவனங்களின் கண்டனங்களுக்கும் இந்நாடுகளின் ஆட்கடத்தல்கள் உட்படுத்தப்பட்டிருந்தன. கெலம்பியாவில் பெரும் பாலான ஆட்கடத்தல்கள் அரச எதிர்ப்புக் குழுக்களினால் நடாத்தப்படுகையில் அரச எதிர்ப்புக் குழுக்கள் தங்கள் பலத்தினை அரசுக்குத் தெரியப்படுத்தும் உத்தியாக ஆட்கடதடதலைக் கையாண்டு வருகின்றனர். கொலம்பிய அரசாங்கம் முன்னின்று தடுக்க வேண்டிய செயற்பாடு என்று சொல்லப்படும் அளவுக்கு அரச எதிர்ப்புக் குழுக்களின் நடவடிக்கைகள் அமைந்துள்ளன. மாறாக இலங்கையில் அரச சார்பான குழக்களினதும் ஒட்டுக்குழுக்களினதும் செயற்பாடாக இச் செயற்பாடுகள் அமைந்துள்ள அதேவேளையில் அரச எதிர்பாளர்களுக்குத் தமது பலத்தினைக் காட்டுவதான அரச ஆதரவாளர்களின் ஆட்கடத்தற் செயற்பாடுகள் அமைந்திருக்கின்றன. இலங்கையில் பெரும்பாலான ஆட்கடத்தல்கள் அரச நிறுவனங்களின் அதிகார எல்லைக்குள்ளேயே நடாத்தப்படுகின்றன. பாதிக்கப்படுபவர்கள் அப்பாவிகள் அரச ஆதரவுக்குட்படாதவர்கள் என்ற வகையினரையும் உள்ளடக்கியே நிகழ்த்தப்பட்டு வந்ததனைப் புள்ளிவிபரங்கள் தெளிவுபடுத்தின.

கொலம்பியாவில் 2001 ஆண்டு சர்வதேச மன்னிப்புச் சபையின் அறிக்கையின்படி 300க்கு மேற்பட்ட காணாமல் போதல்களும் நாலாயிரத்துக்கு மேற்பட்ட அரசியற் கொலைகளும் 1500க்கு மேற்பட்ட ஆட்கடத்தல்களும் 300,000க்கு மேற்பட்ட அகதிகள் இடம் பெயர்வுகளும் ஏற்பட்டிருக்கிறது. ஆட்கடத்தல் தொடர்பான புள்ளி விபரப்படி கொலம்பியாவை முதலாம் இடத்தில் வைத்து கணிப்பிட்டிருக்கிறார்கள். 1990களிலிருந்து இந்தத் தொகை படிப்படியாகக் கூடியமையினைக் காண முடிகிறது.

இலங்கையில் சட்டபூர்வமான புள்ளிவிபரப் படி 2006ல் 1200 ஆட்கடத்தல் நிகழ்த்தப்பட்டிருப்பதனைத் தெளிவுபடுத்துகிறது. இத்தய அளவு தொடர்ந்து கூடிவருகிறது. நாளொன்றுக்குச் சுமார் மூன்றுபேர் கடத்தப்படுவது இவ்வாண்டில் மேலும் அதிகரித்துள்ளது. சட்டப்படி அறிவிக்கப்பட்ட தொகையாகவே இது உள்ளது. அறிவிக்கப்படாது தொலைந்ததாக விடப்படும்

5ம் பக்கம் பார்க்க...



# அரசாங்கங்களே..

தொகையினை இதனுடன் சேர்க்கும் பொழுது மொத்தத் தொகையும் நாளாந்த ஆட்கடத்தல் விகிதாசாரமும் கூடுதலாகவே இருக்கும்.

கொலம்பியாவில் வருடா வருடம் 3000 ஆட் கடத்தல்கள் நிகழ்ந்த வண்ணம் இருக்கின்றன. ஆயுததாரிகளினால் மேற்கொள்ளப்படும் இந்தக் கடத்தல்களுக்கு கொலம்பிய விடுதலை ஆயுத இயக்கம் தான் காரணம் என்று கூறப்படுகிறது. கொலம்பிய இராணுவம் பிரதான அரசியல் ஆட்கடத்தலினை இந்த ஆயுதக் குழுவின் மீது சாட்டிவிட்டுத் தப்பித்துக்கொள்ளுகிறது. இதில் ஒன்றுக்கு மேற்பட்ட ஆயுதக் குழுக்கள் ஈடுபட்டிருப்பதனால் பிரதான அரசியல் ஆட்கடத்தல்களைக் கூட அடையாளம் காணமுடிவதில்லை. பெரிய அளவிலான ஆட்கடத்தல்கள் உரிமைகோரப்படுகின்றன. ஆய்வாளர்களின் கருத்துப்படி ஆயுதக் குழு தமது பலத்தினைக் காட்டவும் அரசாங்கத்திடமிருந்து சலுகைகளைப் பெறவும் பயன்படுத்தும் உத்தியாகவும் அதனூடாக அரசாங்கம் பேச்சு வார்த்தைக்கு வருவதற்கான ஒரு நிபந்தனை கொண்ட நடவடிக்கையாகவும் இது அமைவதாக கருதுகிறார்கள்.

இலங்கையின் இனப்பிரச்சினைத் தீர்வில் ஆட்கடத்தல் நாடகம் பயன்படுத்தப்படுவதில்லை. ஒரு சில ஆயுதக் குழுக்களின் ஆரம்ப கால உத்தியாகிக் கைவிடப்பட்ட செயற்பாடு அது. இன்று போராளிகளை அடிபணியச் செய்யவும், அவர்களது நடமாட்டத்தைக் குறைக்கச் செய்யவும் போராட்ட ஆதரவாளர்களுக்குப் பயத்தினை ஏற்படுத்தவும் போராட்டம் சம்பந்தமான தரவுகளைக் கொடுக்கின்ற ஊடகவியலாளர்களை ஒடுக்கவும் அரச சார்புடைய இயக்கங்களினால் கடத்தல்கள் இடம்பெறுவதாகக் கூறிக்கொண்டு இலங்கையின் அரச படைகள் தப்பித்துக் கொள்ளுகின்றன. பல கடத்தல்கள் இன்னமும் மர்மமானவைகளாகவே இருந்து வருகின்றன. அரச சர்பான இயக்கங்கள் ஆட்கடத்தல்களை மறுப்பதும், அதனை அரச படைகள் உறுதிப்படுத்தி அவர்களைத் தப்பிக்க வைப்பதும் கொலம்பியாவை விட வேறுபட்ட செயற்பாடுகளாக இருக்கின்றன. கொலம்பியாவில் பலவருடங்களுக்கு முன் கடத்தப்பட்டு ஆயுதக் குழுவினால் வைத்திருக்கும் இங்கிறிட் பெற்றான்கோட் என்ற ஜனாதிபதி வேட்பாளரின் படத்தினை வெளியிட்டு அவரது இருப்பினைத் தெளிவுபடுத்தியிருந்தார்கள். இலங்கையில இத்தகைய அரசியல் கடத்தல்கள் நிகழும் பொழுது முழுமையான கொலையாகவே இடம்பெறுவது அரசியல் அநாகரீகத்தின் அசிங்கத்தை வெளிப்படுத்துவதாக அமைகிறது.

அரசியல் சாயம் பூசப்பட்ட ஆட்கடத்தல்கள் இலங்கையில் சர்வசாதாரணமாக நிகழ்த்தப் படுகிறது. கைதுசெய்வது, பணம் பறிப்பது, ஆட்கடத்திப் பணம் பறிப்பது போன்று முற்றுமுழுதாக பொருளாதார நலன் சார்ந்த குழுக்களின் நடவடிக்கைகளாக அமைந்துள்ளன. இத்தகைய போக்கு கொலம்பியாவில் போதை மருந்து உற்பத்தி விற்பனை பின்னணியில் இருப்பதாக எண்ணப்பட்டது தவிரவும் பணம் பறிப்பு இடதுசாரி பாராளுமன்றத்தினர், குற்றச் செயல்புரியும் குழுக்கள் அரசியற் காரணம் என்பன முக்கியப்படுத்தப்பட்டன.

மனிதர்களைக் கடத்துவதும், அவர்கள் விருப்பத்தின் பேரில் அன்றி அடைத்துவைப்பதும் அநாகரீகச் செயலாகவும் சட்டத்துக்குப் புறம்பானதாகவும் இருப்பதுடன் இத்தகைய செயற்பாடுகளைச் செய்யத் துணைபோகும் அரசாங்க நிறுவன யந்திரம் தனது கறையினைத் துடைத்து எறிவதற்கு எப்பொழுதும் ஆயத்தமாக இருப்பதில்லை.

'உனது உடம்பைச் சரியாகக் காப்பாற்ற வேண்டுமாயின் உனது தலையைக் கவனமாகக் காப்பாற்று' என்ற எடுகோளினை முன்வைத்து நோக்கும் பொழுது தலை பாதிக்கப்பட்டிருப்பின் உடம்பு முழுவதும் பாதிப்புக்குட்படும் இந்த நிலைதான் இலங்கையில் இன்று காணப்படுகிறது.

கடத்தப்படுதல் என்பது ஒரு பயங்கர அனுபவம். இதில் தப்பிப் பிழைத்தல் என்பது எல்லோருக்கும் கிடைப்பதல்ல. கடத்தப்படுபவர்களைவிட அவர்களது உறவினர்களே மிகவும் பாதிப்புக்குள்ளாகின்றார்கள். கடத்தப்பட்டவருக்கு தான் கடத்தப்பட்டுவிட்டேன் என்பதும் யாரால் கடத்தப்பட்டேன் என்பதும் தெரியும். இது எதுவுமே தெரியாமல் தவிக்கும் உறவுகள் என்றுதான் ஆறுதலடைய முடியும்.

பேயரசு யெ்தால் பிணம் தின்னும் சாத்திரங்கள்தான் அங்கு மலிந்திருக்கும். அரசு மாற்றமும் அரசாங்கங்களின் மாற்றமும் பல ஆண்டுகளாக ஏற்படுத்திக் கொண்டு வந்த கலாச்சாரத்தை எவ்வாறு மாற்றப் போகின்றன என்பதும் அதற்கு ஏற்ற தலை கொழும்புக்குக் கிடைக்குமா என்பதும் கேள்விக்குறியே இலங்கையில் பரந்து வாழும் தமிழர்களின் உயிருக்கு உறுதி எப்பொழுது கிடைக்கும் என்ற கேள்விக்கும் விடைதேடுவோம்.


■ ■ ■







# துன்பம் நேர்கையில்...



கே. எஸ். பாலச்சந்திரன்
ks@thaiveedu.com

“புனரபி ஜனனம் புனரபி மரணம்”

மீண்டும் மீண்டும் பிறப்பும் நிகழும். மீண்டும் மீண்டும் மரணங்களும் நிகழும். மரணம் என்பது சாஸ்வதமானதொன்று. அது என்றோ ஒரு நாள் வரும் என்று நிச்சயமாகத் தெரிந்தாலும் மனதிற்குள் ஒத்திப்போடுகிறோம். நிரந்தரமான ஜீவிதம் எங்களுக்கு நியமிக்கப்பட்டதுபோல காரியமாற்றுகிறோம்.

பகைமையை மனதிற்குள் வளர்த்துக் கொண்டு பிரிந்து, பிளவுண்டு போகிறோம். அன்பு காட்டவே நேரமில்லாதவர்களாக, அவசரயுகத்தில் பயணம் செய்து, வாழ்வதற்கான அர்த்தமில்லாமல் வாழ்ந்து மழைக்கால நீர்க்குமிழிபோல மறைந்து போவதில் என்ன பிரயோசனம் இருக்கிறது.

அன்பு செய்யுங்கள். உங்களுக்கு ஒரு சுவையான விஷயத்தைச் சொல்ல விரும்புகிறேன். அவுஸ்திரேலியாவில் சிட்னியில் 2004ல் நகரின் நடுப்பகுதியில் நின்று கொண்டு ஜுவான் மான் என்ற இளைஞன் ஒரு பதாகையை உயர்த்திப்பிடித்தான். அதில் ‘இலவசமான அணைப்பு’ (Free Hugs) என்றிருந்தது. “அறியாதவர்கள், தெரியாதவர்களாயினும் உங்களை கட்டி அணைப்பேன்” என்ற அவரது கோரிக்கை அந்த நகர மக்களைக் கவர்ந்தது. பலரும் கூச்சங்களை உதறிவிட்டு அவரை அணைத்துவிட்டுச் சென்றார்கள். இந்தச்செய்தி இணையத்தளங்களின் ஊடாக உலகமெல்லாம் பரவியது. இப்போது பல நாடுகளில் ‘இலவச அணைப்பு’ பலராலும் விரும்பி முன்னெடுக்கப்படுகிறது. அன்னியர்களுக்கிடையே நேசபாவத்தை வளர்க்கும் ஒரு இயக்கமாகக் கருதப்படுகிறது. இப்படிச் சிறிய ஒரு நேசவெளிப்பாட்டினாலேயே அன்பை வெளிக்காட்டமுடியும் என்று நிருபித்திருக்கிறார் அந்த இளைஞன்.

நாங்கள் சிலவேளைகளில் நெருங்கிய உறவுகளையே அற்பகாரணங்களுக்காக வெறுத்தொதுக்குவதும், சுடுவார்த்தைகள் சொல்லி அவர்களை மனவேதனைப்படுத்துவதையும் செய்கிறோம். மனதின் ஆழத்தில் அவர்கள்மீது எங்களுக்கு அன்பு இருந்தாலும் அதை வெளிக்காட்டுவதில்லை. சற்று யோசித்துப் பாருங்கள். அவர்களுக்கு ஏதாவது நடந்துவிட்டால், நாங்கள் செய்த ஒவ்வொரு காரியங்களும், சொன்ன ஒவ்வொரு வார்த்தைகளும், நாங்கள் வாழும் வரை எங்கள் நினைவிற்கு வந்து எங்களை ஊசிபோலக்குத்தும்.

என் இளமைப்பராயத்தில் நான் படித்த ஒரு ஆங்கிலக்கவிதை ஞாபகத்திற்கு வருகிறது.

ஒரு குழந்தையின் முதற்சோகம் என்ற கவிதையென நினைக்கிறேன். தனது சின்னத்தம்பியை மரணத்திற்கு பறிகொடுத்துவிட்டதை முழுவதுமே புரிந்து கொள்ளாத ஒரு சிறுமி பாடுவதாக வரும் கவிதை.

“படரும் சூரியக்கதிர்களின் ஊடே குறுக்கறுத்து பறக்கும் வண்ணாத்திப்பூச்சிகளின் பின்னால் என்னோடு போட்டி போட்டுக் கொண்டு ஓடி வரும் தம்பியே, நீ எங்கே போனாய்.. இப்படிப்போவாய் என்று முன்னமே தெரிந்திருந்தால், நீ என்னிடம் கேட்ட எல்லாவற்றையும் உனக்கு விட்டுத் தந்திருப்பேனே. சூரியக்கதிர்களும், வண்ணாத்திப்பூச்சிகளும் மீண்டும் வந்து விட்டன. நீ வரமாட்டாயா?”

என்பதாக கவிதைவரிகள் வரும். உண்மை-



யிலேயே என் சிறுவயதில் என் சின்னத் தம்பியை இழந்த எனக்கு அந்த வரிகள் கண்களை கலங்கவைக்கும்.

இருந்தபோது செய்யாததை, செய்யத்தவறியதை இழப்பின்பின் நினைத்து வருந்தும் சோகம் தாங்கொணாதது. அதை தவிர்த்துக் கொள்வோம்.

அவசியமானவற்றுக்கு இரக்கம் காட்டுங்கள். மனதில் ஈரம் இருந்தால் அது ஏமாளியாக்கப்படுவதற்கான காரணமாக அமையலாம் என்று சிலர் நினைக்கலாம். அதற்காக எதற்குமே இளகாத மனமுடையவராக இருக்கவேண்டுமென்ற அவசியம் இல்லை.

இதில்கூட உளவியல்ரீதியான தன்மை ஒன்றிருக்கிறது. நாம் தனிப்பட்ட ஒருவரின் இழப்பினால் பாதிக்கப்படுவதுதான் வழக்கம். பெரிதான ஒரு சமூகக்கூட்டமே பாதிக்கப்படும்போது அதை நாம் துக்கமான சம்பவம் என்று வர்ணித்தாலும் ஆழ்மனதில் உண்மையான துக்கம் எழுவதில்லை. “ஒரு மனிதன் இறந்தால் அது ஒரு துயரமான சம்பவம். பல்லாயிரக்கணக்கான மனிதர்கள் இறந்தால் அது வெறும் புள்ளிவிபரந்தான்” என்று ஸ்டாலின் சொன்னதை எங்கோ வாசித்திருக்கிறேன்.

நாங்கள் பல சந்தோசமான நிகழ்வுகளில் தவறாமல் கலந்து கொள்கிறோம். திருமண விழாக்களில், பிறந்த தின வைபவங்களில் என்றெல்லாம் கலந்துகொண்டு, சம்பந்தப்பட்டவர்களோடும், வந்திருக்கும் நண்பர்கள், உறவினர்களோடும் கலந்து உறவாடி மகிழ்கிறோம். அவர்களுக்கும் சந்தோசம். எங்களுக்கும் அப்படியே.

மனிதன் சிரிக்கும்போது சூழ பலர் இருக்கிறார்கள். ஆனால் அவன் அழும்போது தனியே அழுகின்றான்.

துன்பம் நேரும்போதுதான் உங்கள் அன்பு அவனுக்கு அதிகமாகத் தேவைப்படுகிறது. உங்கள் பிரசன்னம், உங்கள் அணைப்பு அவனுக்கு ஆறுதலைத்தரும்.

சந்தோசமான வேளைகளில் கலந்து கொள்ள நேரம் கிடைக்காவிடினும், துக்கமான வேளைகளில் தவறாமல் இணைந்து கொள்ளவேண்டும் என்பது பொதுவான விதி.

புலம்பெயர் நாடுகளிலே வாழும் நாங்கள் அதிலும் சில நெறிகளைக் கையாள வேண்டும் என்பது எனது பணிவான அபிப்பிராயம்.

இங்கே மரணத்தின்பின் அஞ்சலிக்காக வைக்கப்படும் மண்டபங்கள் அனேகமாக குளிரூட்டல் வசதியுள்ளவையாக இருக்கின்ற காரணத்தினால், நாங்கள் சுத்தமாக ஆடைகள் அணிந்து செல்வது அவசியமாகின்றது.

அதேநேரத்தில், ‘பளிச்’சென்ற வர்ணஆடைகள் அணிவதைத் தவிர்த்துக்கொள்ளல் பொருத்தமானது.

இப்போது எங்கள் கைகளில் நிரந்தரமாக குடியேறிவிட்ட கைத்தொலைபேசிகளை இத்தகைய அஞ்சலி நிகழ்வுகளில், தற்காலிகமாக நிறுத்திவிடுதல் உசிதமானது. சனக்கூட்டத்தின் மத்தியிலே விதவிதமான ஒலியெழுப்பும் கைத்தொலைபேசிகள் அந்த சூழ்நிலையின் தன்மையையே குலைப்பதாக அமையலாம் அல்லவா?

பொதுவாகவே இந்த சந்தர்ப்பங்களில் அமைதி பேணப்படுவது பொருத்தமானது என்பது நாம் அறிந்ததே.

இவையெல்லாம் உங்களுக்கு தெரியாதவையல்ல. அறிவுறுத்துவதும் என் நோக்கமுமல்ல.

ஆனால் நான் சற்று உரக்கச்சிந்திப்பவன் என்று நினைத்து ஏற்றுக்கொள்ளுங்கள்.

■ ■ ■

## இம் மாதத்திற்குரிய முக்கிய குறிப்புக்கள்

ஒகஸ்ட் மாதக் குறிப்புகள்

- பிள்ளைகளுக்கு பாடசாலையில் பயன்படுத்தத் தேவையான உபகரணங்கள், உடைகள் போன்றவற்றை அடுத்த மாதம் பாடசாலை தொடங்குவதால் பிள்ளைகளுக்கு தேவையானவற்றை இப்பொழுதே வாங்குவது நல்லது.
- உங்கள் விடுமுறைகால நினைவுகளை நினைவுப் புத்தகங்களில் பேணுங்கள்.
- பூட்டுக்களையும் (Locks) பிணைச்சல்களையும் (Hinges) உற்பத்தியாளரால் கூறப்பட்டபடி எண்ணெயிடுங்கள்
- நீரை வெப்பமேற்றும் கருவியில் (Boiler), கசிவுகள் காணப்படுகின்றனவா? வேலை செய்கின்றதா? என சரிபாருங்கள்.
- சலவை இயந்திரத்தின் குழாய்களில் வெடிப்புகள், உடைவுகள் காணப்படுகின்றனவா எனவும் பொருத்துக்கள் துருப்பிடித்து கசிவுகள் ஏற்பட்டுள்ளதா எனவும் சரி பாருங்கள்
- வருடத்திற்கொரு தடவை பூக்கக் கூடிய தாவரங்கட்கு (Annuals) 2 தொடக்கம் 3 கிழமைகட்கு ஒரு தடவை நீரில் கரையக் கூடிய வளமாக்கிகளை இடுங்கள்
- நீண்ட காலத்திற்கு வாழக்கூடிய (Perennials) தாவரங்களின் அடிப் பகுதியில் கடினமான, மணியுருவிலான (Granular) வளமாக்கிகளை இடுங்கள்.
- தாவரங்களில் பூக்கள் உதிர்ந்தவுடன் அவற்றின் காம்புகளை முறிப்பதன் மூலம் (Deadhead) அவற்றின் தோற்றத்தை பொலிவாகச் செய்வதுடன் மேலும் அதிகமாகப் பூக்கவும் வழி ஏற்படும்.
- தோட்டத் தரையின் ஈரலிப்பைப் பேணவும் களைகளை அகற்றுமுகமாகவும் சேதனப் பொருட்களை (mulch) தோட்டத்திற்கு இடுங்கள்.
- முன்னைய இதழ்களில் கூறியபடி தாவரங்களுக்கு காலையிலேயே நீர் விடுவதன் மூலம் இந் நீர் காய்வதற்கு போதிய அவகாசம் கொடுங்கள்.
- உங்கள் தோட்டத்தில் களைகள் காணப்படுகின்றதா என்பதை ஆராய்ந்து உடனடியாக களைகளை நீக்குங்கள்.
- பீலிகள், கூரை போன்றவற்றில் கசிவுகள் காணப்படுகின்றதா என அவதானித்து தேவையெனின் திருத்தம் செய்யுங்கள்.
- மேலதிகமாக வளர்ந்த புதர்களை வெட்டி விடுங்கள்.

தொகுப்பு: மகேன் சிங்கராசா



# கோடைகாலம் - சில துணுக்குகள்



மகேன் சிங்கராஜா
- வீடு விற்பனைப் பிரதிநிதி -
mahen@thaiveedu.com


நாம் எல்லோரும் நீண்ட தூர பயணமானாலும் சரி அல்லது விடுமுறைக்கு வெளியே செல்வதானாலும் சரி, பயணம் ஆரம்பிக்கு முன் என்னென்ன தயார் செய்ய வேண்டும் என்று நினைத்து, அதற்கேற்ப தயார் படுத்தி செல்பவர்கள் மிகவும் குறைவு. எனவே இக் கட்டுரை கொஞ்சமாவது உங்களுக்கு உதவும் என்ற நம்பிக்கையில் தொடர்கின்றேன்.

### வீதியோரத்தில் அவசரகால நிலமை ஏற்படும் போது செய்ய வேண்டியவை. WHAT TO DO IN A ROADSIDE EMERGENCY

தினமும் ஆயிரக்கணக்கான வாகன சாரதிகள் வாகனம் பழுதடையும் அனுபவத்தை எதிர்நோக்குகின்றனர். எனினும் ஒரு சில சாரதிகள் மட்டுமே இவ்வாறான நிலைமைகளை எதிர்நோக்க தயாராக உள்ளனர். உங்கள் வாகனம் பழுதடைய நேரிட்டால், உங்களையும் உங்கள் குடும்பத்தினரையும் பாதுகாப்பதற்கு வசதியாக, கீழே குறிப்பிடப் பட்டுள்ள முன் எச்சரிக்கையான பாதுகாப்பு நடவடிக்கைகளை மீளாய்வு செய்யவும்.

### வீதியின் ஓரத்தில் வாகனத்தை நிறுத்தி வைத்தல்

ஓர் சிறிய மலைப்பகுதியின் உச்சிப் பிரதேசம், திடீரென ஏற்படும் வீதி வளைவு போன்ற ஆபத்தான பகுதிகளில் வாகனத்தை நிறுத்தி வைப்பதை தவிர்க்க வேண்டும்.



தொடர்ந்து பாதுகாப்பாக வாகனத்தை செலுத்த முடியுமாயின், அதனை குறைவான வேகத்தில் செலுத்த வேண்டும். அதே சமயம் திரும்பும் சமிக்ஞையை (Turn Signal) உபயோகிப்பதன் மூலம் நீங்கள் வீதியில் இருந்து விலகவுள்ளதை ஏனைய சாரதிகளுக்கு தெரிவிக்க வேண்டும்.

### வீதியின் ஓரத்தில்

உங்களிடம் Cell Phone இருந்தால் வாகனத்தை நிறுத்தியபின்பு உதவிக்கு அழையுங்கள்.

அவசர கால விளக்குகளை (Hazard lights) எரிய விட்டு, வாகனத்தின் Hood பகுதியை திறந்து வையுங்கள். வாகனத்தின் இயந்திரம் அதிக சூடேறியிருந்தால், Hoodஐ திறப்பதற்கு பதிலாக Truneஐ திறந்து வைக்கவும்.

### நெடுஞ்சாலையில்

உங்களது வாகனம் இயக்க முடியாத நிலை ஏற்பட்டு வீதிப் போக்குவரத்து நடைபெற்றுக் கொண்டிருக்கும் ஒரு பாதையில் வாகனம் நிற்கும் நிலை ஏற்பட்டால், உங்களுக்கு எதிர்ப்புறத்தில் பயணிக்கும் வாகனங்களை எச்சரிப்பதற்காக அவசரகால நிலை விளக்குகளை எரிய விடவும்.

இருளில் அல்லது கால நிலை சீரற்ற சூழ்நிலையில் குறைவான ஒளி வீச்சு (Law Beam) விளக்குகளை எரிய விடவும்.

நீங்கள் வாகனத்தில் இருந்து வெளியேறாமல், ஆசனப்பட்டியை அணிந்தவாறு இருக்க வேண்டும். ஏனெனில் தற்செயலாக வேறு ஒரு வாகனம் உங்கள் வாகனத்தின் மீது மோதினால், உங்களது வாகனம் உங்களுக்கு பாதுகாப்பு வழங்கக் கூடியதாக இருக்கும்.

### பனிக்காலத்தில்

உங்கள் வாகனத்தில் யன்னல்கள், கதவுகள் என்பவற்றை மூடி வைத்து வாகனத்துள் உள்ள சூடான நிலையை பயன்படுத்தி பாதுகாப்பாக இருக்கவும். வாகனத்தில் இருந்து வெளியேறி அலைந்து திரியும் அநேகர் குளிர் விறைப்புக்கு உள்ளாவது வழக்கம்.

### கோடை காலத்தில் பாதுகாப்பு ஏற்படுத்துதல் (Summer Safety)

விடுதலைக்கால மாதங்களான ஆடி, ஆவணி மாதங்கள் மகிழ்ச்சியான காலங்கள். ஆனால், இந்த விடுமுறைக் காலத்தில் அநேக வீதி விபத்துக்களும், நீரில் மூழ்கி மரணம் அடைதல், விளையாடும் போது காயங்கள் ஏற்படுதல் போன்ற சம்பவங்கள் நடைபெறுகின்றன.

### நீச்சல் தடாகங்கள் (Swimming Pools)

ஆழமான பகுதிகள், ஒரு நீச்சல் தடாகத்தின் ஆழமற்ற பகுதிகள் என்பவை தெளிவாக அடையாளப்படுத்தப்பட்டுள்ளன என்பதை நீங்கள் உறுதிப்படுத்த வேண்டும். நீச்சலில் ஈடுபடாதவர்களை தடாகத்தின் ஆழமற்ற பகுதியில் மட்டுமே இருக்கும்படி செய்யவும்.

நீச்சல் தடாக சூழல் பகுதியில் எவரும் ஓடித்திரிவதை அனுமதிக்க வேண்டாம்.

எவரும் தனியாக நீந்துவதை அனுமதிக்க வேண்டாம்.

நீச்சல் தடாகத்தில் நீரின் வடிகட்டல் தன்மை குளோரின் என்பவற்றை கிரமமாக சோதனை செய்யவும்.

தடாகத்தை சுத்தமாக வைத்திருக்க வேண்டும்.

தடாகத்தை சூழ அமைந்துள்ள பாதுகாப்பு வேலிகள், கதவுகள் என்பதை நல்ல நிலையில் இருப்பதை நீங்கள் உறுதி செய்ய வேண்டும்.

### விடுமுறைக் காலங்கள்

உங்கள் பிரயாணத்தை நன்கு திட்டமிடவும். (உ-ம்) ஓய்வு எடுத்தல், நித்திரை செய்யும் இடங்கள், பிரயாண பாதை வழிகள். நீங்கள் வேறு ஒரு நாட்டிற்கு செல்லுவதற்கு முன்பு தேவையான நோய்த் தடுப்பு ஊசிகளை போடுவது அவசியம்.

வசதியான பாதணிகளை அணிந்து கொள்ளுங்கள்.

போத்தலில் அடைக்கப்பட்ட தண்ணீர் குழாய் நீரை விட பாதுகாப்பானது என அறிந்திருங்கள்.

விமானப் பயணம் களைப்பை ஏற்படுத்தும். எனவே தொடர்ந்து பயணிப்பதற்கு முன் ஓய்வு எடுக்க வேண்டும்.

வழமையாக பயன்படுத்தும் மருந்து வகைகளை உங்களுடன் கொண்டு செல்லவும்.

அந்நிய தேசங்களில் உள்ள வேளைகளில், உல்லாசப் பயணிகள் வழமையாக நடமாடும் பகுதிகளிலேயே நீங்களும் நடமாடுதல் பாதுகாப்பானது.

### சகலவிதமான மேற்பரப்புக்களிலும் பயணிக்கக்கூடிய வாகனங்கள். (All TERAIN VEHICLES)

பாரிய அளவுடைய வாகனங்களில் இளைஞர்கள் பயணம் செய்ய அனுமதிக்க வேண்டாம்.

மண் பாங்கான இடங்களில் வாகனத்தை செலுத்தும் போது Antenna வில் கொடிகளை பறக்க விட வேண்டும். அதே சமயம் பிரகாசமான நிறமுடையதும் ஒளி பிரதிபலிக்கும் தன்மையானதுமான உடைகளை அணிய வேண்டும்.

சமச்சீரான பாதைகளில் ATVக்களை செலுத்த வேண்டாம்.

பாதுகாப்பான உபகரணங்களை குறிப்பாக தலைக்கவசத்தை அணிதல் அவசியம்.

### முகாமிடுதல் (Camping)

உலர்வானதும், நன்கு நீர் வடியக்கூடியதுமான பகுதியை தெரிவு செய்யவும்.

நச்சுத் தன்மையான மரங்களை அடையாளம் கண்டு அறிந்து கொள்ளவும்.

விஷேடமாக குறிப்பிட்ட இடங்களில் மட்டுமே நெருப்பு மூட்டவும். நெருப்பு மூட்டும் பகுதி (Fire Place) இல்லாவிடில் மரங்களில் இருந்து தூரமான பகுதிகளிலேயே தீ மூட்ட வேண்டும். பாரிய அளவிலான தீயை மூட்ட வேண்டாம்.

ஒரு பொழுதும் கூடாரத்தினுள் அல்லது Trailer வாகனத்தினுள் நெருப்பு தணலை அல்லது இறைச்சி வாட்டும் உபகரணத்தை (Barbecue Machine) கொண்டு செல்ல வேண்டாம்.

தீப்பிடிக்கக்கூடிய பொருட்களை வெளியில் சேமித்து வைக்க வேண்டும்.

தீப்பெட்டிகள், Lighter ஆகியவற்றை சிறுவர்களின் கைகளுக்கு எட்டாமல் வைக்க வேண்டும்.

நீங்கள் முகாமிடும் பகுதிக்கு வந்தவுடன் ஆபத்து ஏற்படுத்தக்கூடிய காரணிகள் உள்ளனவா என்று அவதானிக்கவும்.

குப்பை கூழங்களை அகற்றவும்.

குடிநீரை கொதிக்க வைத்து பயன்படுத்தவும்.

நீங்கள் முகாமிட்ட பகுதியை விட்டு அகலும் போது எரிந்து கொண்டிருக்கும் நெருப்பை அணைத்து விடுவதுடன் சூழலை சுத்தமாக்கி விட்டு செல்லவும். அதேவேளை எங்கிருந்து உதவியை பெறலாம் என்பதையும் அறிந்திருக்கவும்.

### Heat Stroke ஏற்படுவதை தடுப்பதற்கு எடுக்கப்பட வேண்டிய நடவடிக்கைகள்

பகலில் உயர் வெப்பம் உள்ள வேளையில் களைப்பு ஏற்படுத்தும் செயற்பாடுகளை தவிர்க்கவும்.

அடிக்கடி ஓய்வு எடுக்கவும்.

அதிகளவு தண்ணீரை குடிக்க வேண்டும்.

இறுக்கமற்றதும், மெல்லிய நிறமுடைய ஆடைகளை அணியவும்.

உங்களது தோலின் மீது அதிக வெப்பம் படாமல் இருக்கும்படி கவனம் செலுத்த வேண்டும். சூரிய ஒளியினால் உங்கள் தோல் (skin) பாதிப்படையாமல் இருக்க sun cream பாவிக்கலாம்.

### வீட்டை விட்டு விடுமுறைக்கு செல்லு முன்...

பெறுமதி மிக்க ஆபரணங்களை வங்கியின் பாதுகாப்பு பெட்டகத்தில் வைக்கவும்.

ஊரிய முறையில் கதவுகள் யன்னல்கள் மூடப்பட்டு உள்ளனவா சரி பாருங்கள்.

நீங்கள் வீட்டில் இருப்பது போன்ற பாவனையை காட்ட நேர அட்டவணையின் படி இயங்கும் ரைமர்(Timer)ஐ பாவித்து தொலைகாட்சி பெட்டி (Television), றேடியோ (Radio), மின்குமிள் விளக்கு (Lights) போன்றவற்ளை இயங்க வைத்து வீட்டில் நீங்கள் இருப்பது போன்று பாவனை செய்யவும்.

உங்களுக்கு நம்பிக்கையான அயலவர் மூலம் உங்கள் வீட்டிற்கு வரும் பத்திரிகை (News Paper) கடிதம் (mail) போன்றவற்றை எடுத்து அவர்கள் வீட்டிலேயே நீங்கள் வரும் வரை வைத்திருக்கும்படி சொல்லவும். ஏனெனில் உங்கள் வீட்டில் பத்திரிகைகள் கடிதங்கள் போன்றவை நிறைந்து இருந்தால் நீங்கள் வீட்டில் இல்லை என்பதினை கள்வருக்கு இலகுவாக காட்டி கொடுக்கும். உங்களுக்கு நம்பிக்கையான அயலவருடைய காரினை உங்கள் வீட்டின் வாகன ஓடுபாதையில் (Driveway) நிறுத்துமாறு கேட்கலாம்.

உங்கள் வீட்டின் தொலைபேசியின் தகவல் பதிவில் (Telephone Answering Machine) நீங்கள் வீட்டில் இல்லை என்று பதிவு செய்ய வேண்டாம்.

உங்கள் வீட்டில் முன் எச்சரிக்கை மணி (Alarm) இருந்தால் அதனை, நீங்கள் வீட்டை விட்டு வெளியேறு முன்னர் அதை போட்டுவிட்டு செல்லுங்கள்.

■ ■ ■


ROYAL SHUTTERS & BLINDS INC.
DIRECT FROM MANUFACTURER
Everything Factory Direct Prices



உங்கள் இல்லத்தின் உட்புறத்திற்கு ஏற்றவகையில் யன்னல்களை மறைப்புச் செய்திடவும் அழகு படுத்திடவும் நாடுங்கள்



Sales - Service - Installations

Custom Made

Wood & Vinyl Shutters: California Style Shutters, Plantation Style Shutters, Traditional Style Shutters, Arches

Blinds: Vertical Blinds, Venetian Blinds, Wood Blinds, Bamboo Shades, Roller Shades, And More

Draperies: Swags, Sheers, Valance, Curtains, And More

(We Do Any Colour Of Paint & Stain)

Workmanship Guaranteed
Free Shop At Home
CALL FOR A FREE ESTIMATE:
தாஸ் Thaas Sivathason
13 Years of Experience in Shutter Business
Tel: (416) 562-0340
Full Satisfaction Guaranteed

## Gnani & Judy Real Estate

All Your Real Estate Needs

ஞானேந்திரன் நரசிங்கம்
Sales Representative
CELL: 416.937.8090





ஜூடி ஞானேந்திரன்
Sales Representative
CELL: 416.629.9797

OFFICE: 416.321.6969

**Markham**



**Markham Rd & Steeles Ave**

- 4 Bedroom Detached Home.
- Finished Bsmt with 2 Br and 3Pc Wr.
- Luxuriously Upgraded And Dutch Clean.
- Close to Evevrything.

**$479,900**

**Gas Station For Sale**



- Self-Service Esso Gas Station With Convenience.
- Located In A High Traffic Junction.
- Volume 3 Million Litres, Store over $360,000 Per Year.

**$185,000**




Purchase a Tridel-built condo tower suite or loft in one of downtown Toronto's hottest locations in the Entertainment District.

If you buy, sell or lease in any residential or commercial properties from us.

**CHANCE TO WIN**

BMW

A Trip to Cuba

**CAPE CHIN**
$66K - $5K DOWN, VTB
8% - 10 YRS OPEN

- 25 acres, some clear land
- 10 minutes from Georgian Bay
- Build & Invest. It's a "WOW" LOT!
- PT LOT 11, CONCESSION 7, EBR – PT 6, NORTH BRUCE PENINSULA



| Markham | Scarborough | Innisville | Oshawa | Scarborough | Scarborough | Oshawa | Oshawa |
|---|---|---|---|---|---|---|---|
| **Middlefield & Denison** | **Brimley & Finch** | | **Simcoe N. & Conlin Rd.** | **Kennedy & Ellesmere** | **Kennedy & Finch** | **Sports Bar** | **Strip Plaza** |
| • Demand Area Approximately 11 Years Old<br>• Well Maintained 3 Br Two Storey home<br>• Generously Sized Bedrooms<br>• Close to Transit, Temple, Mosque, Park & Schools | • Beautiful Detached 2-Storey Home In Quiet Family Neighbourhood<br>• High Demand Location, Close to all amenities<br>• Lots of Upgrades | • Brand New 2100 Sft 2 Storey<br>• 4 Br with Double garage<br>• Very Convenient Location<br>• Please take off open house for Oldfinch & Doubtfire | • Brandnew 2 Storey Brick House<br>• 3 Br and walk out BSMT<br>• 3 To 5 Min Walk To University Of Ont Inst Tech<br>• Go Transit From Uoft To Scarborough Town Cntr. | • Great Bungalow in Good Location<br>• Bsmt Finished with Washroom & Sep. Ent.<br>• Many Upgrades In House | • Nice Bungalow In An Excellent Location.<br>• Lot size is 60' x 125' with lots of trees.<br>• Newer Wrooms, kitchen, Furnace and laminate floor.<br>EXCLUSIVE | • Fully equiped with 295 seats<br>• $900,000/Year sales<br>• 4600 Sft with Patio<br>• Financial Available | • Fully leased plaza<br>• Net income $180,000<br>• 35,000 sft land with 10,000 sft building. |
| **$349,000** | **$335,000** | **$309,900** | **$309,000** | **$349,000** | **$379,900** | **$325,000** | **$2.2 Million** |

வீடு வியாபார நிலையங்கள் வாங்க விற்க

HOMELIFE GTA REALTY INC., 1711 MCCOWAN RD. SUITE # 206, TORONTO, ON. M1S 3Y3

*EACH OFFICE IS INDEPENDENTLY OWNED AND OPERATED





MORTGAGE ALLIANCE
RIGHT BROKER = RIGHT MORTGAGE


- No Money Down Programs
- Credit பிரச்சிளை உள்ளவர்கள் Credit இல்லாதவர்கள்
  Late Payment, Bankruptcy and R9's - No Problem
- புதிய குடிவரவாளர்களுக்கும், சுய தொழில் வாய்ப்புள்ளவர்களுக்கும் Mortgage ஒழுங்குகள் செய்து தரப்படும்
- New Mortgages, Refinances, Switches - (Switch for free) & Pre - Approval
- தமிழில் இலவச ஆலோசனைகள், கடைசி நிமிடக் கட்டணம் இல்லை
- Fast Approvals & Closings
- 45 வங்கிகளிடமிருந்து குறைந்த வட்டி வீதம் ஒழுங்கு செய்து தரப்படும்
- உங்களது வீட்டுக்கே வந்து Mortgage செய்து தரப்படும்
- உங்கள் திருப்தியே எங்கள் வெற்றி

digi Media Creations - 416.467.4952

# MORTGAGE
# MORTGAGE
# MORTGAGE

## ராம் கிருஷ்
## RAM KRISH

Senior Mortgage Consultant
The Mortgage Alliance company of Canada
Head Office: 2005 Sheppard Ave. E, Suite 200,
Toronto, ON M2J 5B4
Phone: 416.499.5454, Fax: 416.499.8366



**TEL: 416.526.4996**

NATIONAL BANK OF CANADA · BRIDGEWATER Financial services ltd. · FirstLine MORTGAGES · Scotiabank · FIRST NATIONAL · TD · cervus · BMO

# மாதவிலக்கும் கர்ப்பப்பை உதிரப்பெருக்கும்

## (Menstruation & Uterine Bleeding)



கந்தையா செந்தில்நாதன்
- Echo - Cardiogapher -
senthil@thaiveedu.com

### இதயம் மலர்கிறது - 4

இதயம் மலர்கின்றது என்ற தொடரில் கர்ப்பப்பை பற்றி எழுதுவது மிகையாகாது என்று தோன்றியது. நாம் எல்லோரும் பத்துத் திங்கள் தங்கியிருந்து குழந்தைகளாக முதுமை பெற்ற இடம். நமது இதயங்களை மலர வைத்த இடம். கோவிலாகப் போற்றப்பட வேண்டிய இடம்.

கர்ப்பப்பையில் ஏற்படும் நோய்களைக் கிரமமாக உணர்த்துவது இதன் நோக்கம்.

பத்துத் திங்கள் என்பது சந்திரமாதக் கணிப்பின்படியாகும். பூமி சூரியனைச் சுற்றி வரும் பாதையை அச்சுவினி முதல் ரேவதி வரை 27 நட்சத்திரங்களாக வகுத்துள்ளார்கள். ஒரு தடவை சந்திரன் பூமியைச் சுற்றிவர எடுக்கும் காலம் சராசரியாக 27 நாட்களாகும். பத்துத் திங்கள் என்பது 270 நாட்களாகும்.

ஒரு குழந்தை நல்லபடியாக நலமுடன் உருவாகி இவ்வுலகில் பிறப்பதற்கு ஆரோக்கியமான கர்ப்பப்பைச் சூழல் இன்றியமையாதது.

தெளிவான விளக்கத்தைப் பெறுவதற்கு கர்ப்பப்பையின் அமைப்பைப் பற்றி அறிந்திருப்பது அவசியம். நோய்களை இலகுவில் விளங்கிக்கொள்ள வழிவகுக்கும் கர்ப்பப்பையும், அதனுடன் சேர்ந்துள்ள சூழலகமும் பெண்களின் அடிவயிற்றுப் பகுதியில் காணப்படும் உறுப்புக்களாகும். கர்ப்பப்பையின் கழுத்து யோனியின் உட் பகுதியில் திறக்கின்றது. யோனியினுள் விடப்படும் ஆணின் விந்தானது கர்ப்பப்பைக் கழுத்தினூடாக கர்ப்பப்பையை அடைந்து பலோப்பியன் குழாய்களை நோக்கி நீந்திச் செல்கின்றன. அச்சமயத்தில் பெண்ணின் சூலகத்தில் இருந்து முட்டையானது வெளி வருமேயானால் விந்தும் முட்டையும் சேர்ந்து பலோப்பியன் குழாயில் கருக்கட்டுகின்றன. கருக்கட்டிய முட்டை கருப்பையை நோக்கி நகர்ந்து அங்கே கருவாக வளர்கின்றது.

எந்த இடமாக இருப்பினும் கட்டியின் பருமன் அதன் தொழிற்பாடு என்பனவற்றைப் பொறுத்து குணங்குறிகள் ஏற்படும். வைத்திய ஆலோசனையை நாடுவது நல்லது.

### சாதாரண மாத விடாய்

பெண்ணானவள் பூப்படைந்த நாள் முதல் மாதா மாதம் மாத விலக்கு ஏற்படுவது வழமை. மாத விலக்கின் பொழுது மூன்று தொட்டு ஐந்து நாட்கள் வரை உதிரம் செல்வது இயல்பானதே. சில பெண்களுக்கு பூப்படைந்த பின்பு சில மாதங்களிற்கு மாத விலக்கு ஏற்படாமல் இருக்கலாம் அல்லது ஒழுங்கற்ற முறையில் மாதவிலக்கு நடைபெறலாம். இயல்பாக இருக்கலாம். அல்லது இதற்கு உணவு, சூழல், மனோநிலை, பரம்பரை போன்ற பல காரணங்களை முன்வைக்கலாம்.

கர்ப்பப்பையின் சுவர் மூன்று படைகளினால் ஆனது. அவற்றை வெளிப்படை, நடுப்படை, உட்படை என்று கூறிவிடலாம். மாதவிடாய் சுற்றின் பொழுது கர்ப்பப்பையின் உட்படையில் பல விதமான மாற்றங்கள் நிகழ்வதை அவதானிக்கலாம். கர்ப்பப்பையின் அருகே சூலகம் உண்டு. அங்கேதான் மாதாமாதம் முட்டைகள் உருவாக்கப்படுகின்றன. மூளையின் அடிப்பகுதியில் காணப்படும் கேடயம் போலிச் சுரப்பியானது FSH என்கின்ற ஹோர்மோனை சுரக்கின்றது. இந்தச் சுரப்பானது சூலகத்தில் உள்ள சுக்கிலப் புடகங்களைத் தூண்டி ஈஸ்ரைஜன் என்னும் பதார்த்தத்தை உருவாக்க உதவுகிறது, ஈஸ்றொஜன் என்கின்ற ஹோர்மோன் கர்ப்பப்பையின் உட்படையைப் பதப்படுத்தி மிகவும் தடிப்பபமாக உருவாக்குகின்றது. வயலில் விதைகளைத் தூவுவதற்கு முன்பு உழவர்கள் வயலை நன்கு உழுது பதப்படுத்தித் தானியங்கள் முளைப்பதற்கு ஏதுவாக உருவாக்குவார்கள். அதே போலவே கர்ப்பப்பையின் உட்பகுதியானது கருக்கட்டிய முட்டை அதில் தங்கி வளர்வதற்கு ஏற்ற சூழலை உருவாக்குவதற்காக ஈஸ்றொஜன் என்ற ஹோமோனால் பதப்படுத்தப்படுகின்றது.

ஒழுங்காக மாதவிடாய் ஏற்படும் மாதர்களுக்கு, மாதவிலக்கு ஏற்பட்டு 14ம் நாள் அளவில் சூலகமானது முட்டையொன்றை வெளியேற்றும். இம் முட்டையானது பலோப்பியன் குழாயினூடாக கர்ப்பப்பை நோக்கி நகரும் பொழுது, அப்பெண்ணாணவள் கணவனுடன் கூடியிருந்தால் அங்கு யோனியினுள் வெளியிடப்பட்ட விந்தானது கருப்பப்பைக் கழுத்தினூடாக கருப்பப்பையை அடைந்து பலோப்பியன் குழாய்களை அடையும் பொழுது இந்த முட்டையைச் சந்திக்க நேர்ந்தால் கருக்கட்டல் நடைபெறும். கருக்கட்டிய முட்டை கர்ப்பப்பை நோக்கி நகர்த்தப்பட்டு கர்ப்பப்பையில் தங்கிக் குழந்தையாக வளரும்.

சூலகத்தினால் முட்டை வெளியிடப்பட்ட அடுத்த கணமே இரண்டாவது ஹோர்மோனாகிய புறொஜெஸ்ரெறோன் சூலகத்தினால் சுரக்கப்படுகின்றது. முதிர்ந்த சுக்கிலப் புடகம் 14 நாட்கள் வரை புறொஜெஸ்ரெறோன் என்கின்ற ஹோர்மோனைச் சுரக்கும். இது கர்ப்பப்பையின் உட்பக்கச் சுவரை மேலும் பஞ்சு போன்று மென்மையாக்கி சிசு வளர்வதற்கு மிகவும் உகந்த ஓர் இடமாக கர்ப்பப்பையை ஏற்படுத்துகின்றது.


கருக்கட்டல் நிகழவில்லையானால் இவ்வாறு பதப்படுத்தப்பட்ட கருப்பையின் உட்பக்கப் படை உதிர்ந்து உதிரமாக வெளிவருகின்றது. இது சாதாரணமான மாதவிலக்காகும். கருக்கட்டல் நடைபெற்று சிசு வளரத் தொடங்கினால் இப்படையானது உதிர்க்கப்படாமல் தொடர்ந்து பேணப்பட்டுச் சிசுவைப் போசிக்கும் தொப்புள் நாண் கர்ப்பப்பையில் வேரூன்றவும் சிசு வளர்வதற்குரிய நல்ல சூழலை உருவாக்கவும் பயனாகின்றது.

மாதவிடாய் வெளிவரும் கலவையில் யோனிச் சுரப்புக்கள், சளியங்கள், உட்படையினால் சிந்தப்பட்ட கலங்கள், மற்றும் உறைந்தும், உறையாததுமான குருதி என்பன காணப்படும். இவை உடுப்பை சிவப்பு நிறமாகவோ, கபில நிறமாக கறைபடியச் செய்து விடும். மாதவிடாயின் பொழுது சராசரியாக ஒரு பெண்ணானவள் 30mg தொட்டு 60mg எடையுள்ள இரும்புச் சத்தை இழப்பதனால் ஆண்களிலும் பார்க்க பெண்கள் கூடுதலான இரும்புச் சத்தை உணவில் சேர்த்தல் அவசியம். ஆண்களுக்குத் தினமும் 1mg இரும்பும், பெண்களுக்கு தினமும் 2mg இரும்புச் சத்தும் தேவைப்படுகின்றது.

மாதவிலக்கின் பொழுது பாவிக்கப்படும் உறிஞ்சும் துணிகள் பலவகைப்படும். சிலர் தமது கலாச்சார வழக்கப்படி தாமே தயாரித்த துப்பரவான கனத்த துணிப்பட்டியைப் பயன்படுத்துவார்கள். கடைகளில் பலவிதமான உறிஞ்சும் தன்மை கொண்ட அளவான துணிப்பட்டிகள் உண்டு. வெளிப்புறத்தில் குருதியை உறிஞ்சுவதற்கு வெளிப்புறப்

11ம் பக்கம் பார்க்க...

### கருப்பையின் மாதிரிப் படம்




இடம் 1 : கருப்பையின் வெளிப்புறத்தில் கட்டிகள் வளரலாம். இவை வயிற்றுப் பகுதியில் உள்ள உறுப்புக்களை அமுக்கி அதன் மூலம் குணங்குறிகள் ஏற்படலாம்.

இடம் 2 : கருப்பையின் நடுத்தசையில் கட்டிகள் உருவானால் கருப்பை மிகவும் தடிப்படைந்து கனதியாக இருக்கும்.

இடம் 3 : கருப்பையின் உட்புறத்தில் உருவாகும் கட்டிகள் கர்ப்பம் தங்குவதற்கு இடையூறாக இருந்து கர்ப்பச் சிதைவை ஏற்படுத்தலாம்.

முதலுதவி கற்பதற்கும் ஆலோசனைகளிற்கும்

**Dr.Kandiah Senthilnathan**
(Registered Medical Officer - SLMC)
Echo-cardiographer - Canada,
First Aid & CPR Instructor
(Certified in Canada)

**647-801-9252, 416-502-9252**

# எமக்கென்று ஒரு தனிக்குழல்



சொந்த இல்லத்திற்கு தேவையான அடமானத்தை சுலபமாகப் பெறுவதற்கு பலவருட அனுபவம் பெற்ற முகாமையாளர்களை நாடுங்கள்

**TWO PROFESSIONAL MORTGAGE SPECIALISTS UNDER ONE ROOF WITH RATES YOU CAN'T BEAT**

**MAILVAGANAM (MIKE) AHILAN**
Senior Accounts Manager
Residential Mortgages
(2006 Platinum Award winner)
**416-220-1184**

**VINCE SINNADURAI**
Senior Accounts Manager
Residential Mortgages
(2006 Platinum Award winner)
**416-917-9462**

**416.438.1688**

Fax: 416.438.1612
2250 Midland Ave., #3
(South of Sheppard)
Unit 3, Scarborough, ON M1P 4R9


RBC Financial Group

# HomeLife/GTA Realty Inc., Brokerage*

1711, McCowan Rd,#206, Scarborough, ON. Office:416.321.6969



Buy Or Sell Any Properties Or Business With Me And Win This New BMW**



**Justin William**
Real Estate Broker
**Direct:416.803.7344**

# Business For Sale







- Profitable Business in a prime Scarborough Location.
- Lotto commission approx $ 1500/mth. Sales approx $ 6000/mth.
- Variety, Dollar store, laundry and Party Rentals. All in one Store.
- Basement With Separate Entrance can be rented for extra income.
- Daisy Mart name can be changed to your preferable store name.
- Very Low Rent for this area. $ 2800/Mth TMI included with rent.

- Excellent Variety Store in a busy plaza. Next to coffee shop.
- Lotto commission $ 1800/mth. Sales approx $6500/mth.
- High Traffic area. Surrounded by apartments.
- Reasonable rent $ 2800/mth.TMI included with rent.
- Perfect opportunity to own a established business for this price.
- Please call us for any further details....

This is not intend to solicit properties currently listed for sale

*Each office independently owned and operated ** Some conditions apply

# மாதவிலக்கும் கர்ப்பப்பை உதிரப்...

9ம் பக்கத் தொடர்ச்சி...

பட்டிகள் உதவும். சிலர் TAMPONS எனப்படும் யோனியினுள் வைக்கப்படும் பருத்தியால் அல்லது றேயோனால் ஆக்கிய உருளையான துணிகளைப் பாவிப்பார்கள். இதில் அதிகூடிய உறிஞ்சும் தன்மையுள்ள TAMPONS சமயங்களில் TOXIC SHOCK SYNDROME (TSS) என்னும் பாரிய ஆபத்தான குருதித் தொற்றை ஏற்படுத்தி விடுகின்றது. இதனைத் தவிப்பதற்கு பருத்தியாலான TAMPONகளைத் தெரிவு செய்வதுடன், இரவில் படுக்கையில் பாவிப்பதை நிறுத்தி விடவும். பெட்டியில் எழுதியுள்ள உறிஞ்சும் திறனை வாசித்துக் கொள்ளவும். அதி உறிஞ்சுதிறன் உள்ளவைதான் அநேகமாக யோனியின் உட்பக்கச் சுவருடன் நன்கு ஒட்டிக் கொள்வதால் அகற்றும் பொழுது யோனியின் உட்புறம் புண்பட்டுவிடுவதால் கிருமித் தொற்றிற்கு வாய்ப்புகள் அதிகம்.

பெண்களில் பலரிற்கு மாதவிலக்கின் பொழுது உடல் ரீதியாகவும் உள ரீதியாகவும் மாற்றங்கள் ஏற்பட்டு சில அசௌகரியங்கள் ஏற்படலாம். சில பெண்களிற்கு இவை பாரியதாகி இடுப்புப் பகுதியில் மிகுந்த வேதனையும் மற்றும் உளவியல் ரீதியாகப் பாதிப்பும் ஏற்படுகின்றது. அப்பொழுது வேதனை தணிக்கும் வில்லைகள், மனதை அமைதிப்படுத்தும் வில்லைகள் என்பன வைத்தியரினால் கொடுக்கப்படுகின்றன. சிலரிற்கு கைவைத்தியம் தகுந்த பலனைக் கொடுக்கின்றது. இரண்டிற்கும் கட்டுப்படாவிட்டால் ACUPUNCTURE சிகிச்சை பயனளிக்கலாம். யோகாப் பயிற்சிகளும், தியானமும் கூட கைகொடுத்து உதவலாம்.

## சூலகத்தில் இருந்து முட்டை வெளிவருவதில் ஏற்படும் பிரச்சினைகள்:

மனதில் ஏற்படும் கவலைகள், நீண்ட பயணங்கள் அல்லது புதிதாக வேலையில் சேரும் பொழுது ஏற்படும் மன எழுச்சிகள் முட்டை வெளிவருவதை தாமதப்படுத்தலாம். இது தற்காலிகமானதே. ஆனால் நீண்டகாலமாக முட்டை வெளிவருதல் தடைப்பட்டிருந்தால் வைத்தியர்கள் புறொஜெஸ்ரெறோன் என்ற ஹோர்மோனை ஒழுங்காகக் கொடுத்து கருப்பையின் உட்படையை ஒழுங்காக மாதவிலக்குடன் கழியச் செய்வார்கள். குடும்பக் கட்டுப்பாட்டு வில்லைகளும் இதே தொழிற்பாட்டை ஏற்படுத்தவல்லது. முட்டை உருவாகுவதை சிசிக்சை மூலம் தூண்ட முடியும். பிள்ளைப்பேறு வேண்டி நிற்கும் தாய்மார்களுக்கு இச் சிகிச்சை உகந்தது.

முட்டை வெளியேறல் நடைபெறாவிட்டால், சூலகம் தொடர்ந்து ஈஸ்றொஜெனை உருவாக்கும். இது கர்ப்பப்பையின் உட்படையை தடிப்பமாக வைத்திருப்பதால் பிந்திய மாதவிலக்கை ஏற்படுத்தி ஒழுங்கற்ற உதிரப் பெருக்காகவும், இடையிடையே குருதி படுதலையும் ஏற்படுத்திவிடும். தொடர்ந்தும் இச்சுற்றுமுறை நடைபெற்று வந்தால் கர்ப்பப்பை உட்படையில் கட்டிகள் உருவாகிப் பின்பு புற்றுநோயாக மாறுவதற்கும் வாய்ப்புகள் உண்டாகும்.

## கர்ப்பப்பைக் கட்டிகள்

FIBROIDS என்று கூறப்படும் நார்த்தன்மையுடைய கட்டிகள் அநேகமாக இருபத்தைந்து வீதமான பெண்களிடத்தில் காணப்படுகின்றது. இத்தகைய கட்டிகள் பெரும்பாலும் ஆபத்தற்றவை. குணங்குறிகளும் தென்படுவது குறைவு. கட்டிகளின் பரிமாணம் வேறுபடும். கச்சான் கடலை அளவில் இருந்து பெரிய தேங்காய் அளவிலான கட்டிகள் வரை உருவாகலாம். கர்ப்பப்பையில் பல கட்டிகள் ஒரே தடவையில் காணப்படலாம். வயது ஏற ஏற கட்டியும் வளரலாம். பொதுவாக வயதானதும் மாதவிலக்கு நின்ற பின்பு கட்டிகள் பருமனில் குறையத் தொடங்கும்.

கர்ப்பப்பையினுள் கட்டிகள் தங்கியிருக்கும் இடத்தைப் பொறுத்து அவற்றை நான்கு வகையாகப் பிரிக்கலாம்.

1. கர்ப்பப்பையில் வெளிப்புறப் படையில் வளரும் கட்டிகள். இவை வயிற்றினுள் ஆனால் கர்ப்பப்பையின் வெளிப்புறத்தில் வளர்வதனால் பெண்ணின் மாதவிடாய் ஒழுக்கில் மாற்றத்தை ஏற்படுத்தாது. இக் கட்டிகள் வெளிப்புறத்தில் இருப்பதனால் அதன் அருகேயுள்ள உறுப்புக்களை அமுக்கும் பொழுது வேதனை ஏற்படலாம்.

2. கர்ப்பப்பைச் சுவரின் நடுவே வளரும் கட்டிகள். இதனால் கர்ப்பப்பைச் சுவர் புடைத்து வீங்கி பாரியதாகக் காணப்படும். இடுப்பு நோவு, முதுகுவலி, அடிக்கடி சிறுநீர் கழிதல், மாதவிடாயின் பொழுது அதிக குருதிப் பெருக்கு என்பன இதன் குணங்குறிகளாகும். பெரும்பாலும் பெண்களிடத்தில் காணப்படும் கட்டி இதுவாகும்.

3. கர்ப்பப்பையின் உட்படையில் ஆனால் உள் மேலனிக் கலங்களுக்குக் கீழே உருவாகும் கட்டிகள் இக்கட்டிகளினால் பாரிய குருதிப் பெருக்கு நீண்டகாலத்திற்கு ஏற்படும். அரிதாக பெண்களிடம் காணப்படுகின்றது.

4. கர்ப்பப்பையின் உட்புறத்திலோ அல்லது வெளிப்புறத்திலோ காம்புடன் கூடிய கட்டிகள்.

மேற்கூறிய நான்கு வகைக் கட்டிகளில் ஒன்றோ அல்லது பலவோ ஒரு பெண்ணின் கர்ப்பப்பையில் தோன்றலாம்.

## எப்படி கண்டுபிடிக்கலாம்?

குணங்குறிகள் ஏற்படும் வரை பெண்கள் வைத்தியரை நாடாத பட்சத்தில் கட்டிகள் இருந்தும் அவைகள் கண்டுபிடிக்கப்படுவதில்லை. அநேகமானவை ஆபத்தற்றவை. வேறு பரிசோதனைகளுக்காக CT SCAN அல்லது ULTRASOUND செய்யும் பொழுது சில சமயங்களில் இக்கட்டிகள் புலப்படலாம். வைத்தியர் ஒருவர் இடுப்புப் பகுதியைப் பரிசோதிக்கும் பொழுது சில கட்டிகளை உணரக்கூடியதாக இருக்கும்.

இக்கட்டிகளால் சிலருக்கு எதுவித பிரச்சினைகளும் ஏற்படுவதில்லை. சில சமயங்களில் குணங்குறிகளைக் குறைப்பதற்கு சிசிச்சை செய்ய வேண்டி ஏற்படும். மகப்பேற்றை எதிர்பார்த்திருக்கும் பெண்களுக்கு இக்கட்டிகளால் பிரச்சினை ஏற்படலாம். கர்ப்பப்பைச் சுவர் முழுவதும் திட்டுத் திட்டாக கட்டிகள் இருந்தால் கருக்கட்டிய முட்டை அதில் தங்கி வளர முடியாமல் போய்விடலாம். கட்டிகளின் தன்மை, இடம் என்பனவற்றைப் பொறுத்தே கர்ப்பம் தரிக்கும் தகமை தீர்மானிக்கப்படும்.

## சிகிச்சைகள் பின்வருமாறு:

வைத்தியர் ஒருவரினால் பல பரிசோதனைகளின் பின்பு எத்தனை கட்டிகள் உள்ளன? எங்கே உள்ளன? அதன் பரிமாணம் என்ன? எத்தகைய கட்டி? பெண்ணின் அப்போதைய தேவை என்ன? என்பனவற்றை ஆராய்ந்து சிகிச்சை பற்றித் தீர்மானிக்கப்படும். இதில் குணங்குறிகளின் தீவிரத்தன்மை, எதிர்காலத்தில் மகப்பேற்றை எதிர்பார்த்து நிற்கும் நிலைமை என்பனவும் கருத்திற்கொள்ளப்படும்.

## சிகிச்சை முறைகள்

கட்டிகளைச் சத்திர சிகிச்சை மூலம் அகற்றுதல். கட்டியை மாத்திரம் கருப்பையில் இருந்து அகற்றுவது, கர்ப்பப்பையை பகுதியாகவோ, முழுமையாகவோ அகற்றுவதிலும் பார்க்க அதிகம் ஆபத்தானது. இதனால் மகப்பேற்றை வேண்டி நிற்றும் தாய்மார்களுக்கு மாத்திரம் இதைச் செய்வார்கள்.

கட்டிகளுக்கு குருதி விநியோகிக்கும் குருதிக் குழாய்களை வெட்டிவிடுவது. குணங்குறிகள் குறைவாக அமைந்துள்ள கட்டிகளுக்கு இச் செய்முறை நல்லது.

மின் அதிர்வு கருவியினால் கட்டிகளைச் சுருங்கச் செய்தல்.

குணங்குறிகள் அற்ற கட்டிகளுக்கு சிகிச்சை தேவையில்லை. ஆனால், வைத்தியரின் கண்காணிப்பில் தொடர்ந்து இருப்பதன் மூலம் கட்டியில் ஏற்படும் மாற்றங்களை கண்டறிந்து அதன் படி ஒழுகுவது நல்லது.

## குணங்குறிகள்

- வேதனையுடன் கூடிய குருதிப் பெருக்கு
- சாதாரண மாதவிலக்குக் காலங்களின் நடுவே குருதிப்படுதல்.
- அடிவயிற்றில் நிரம்பியது போன்ற உணர்வு
- கட்டிகள் சலப்பையை அமுக்கினால் அடிக்கடி சிறுநீர் கழிதல்
- இடுப்பு வேதனை, (உடலுறவின் பொழுது அல்லது மற்ற நேரங்களில்)
- கருக்கலைதல் அல்லது பிள்ளை தங்க முடியாமை.
- மகப்பேறு முழுக்கால அளவில் நடைபெறாது சில கிழமைகள் முன்னதாகவே ஏற்படுதல்.
- பலோப்பியன் குழாயானது கட்டியால் அமுக்கப்படும் பொழுது ஆணின் விந்து, பெண்ணின் முடடை என்பன அக்குழாயினூடாகச் செல்ல முடியாமல் போவதால் தாய்மைப் பேறு அற்றுப் போதல்.

காரணத்தை அறிந்து வைத்திய சிகிச்சை பெறுவதன் மூலம் இதனை நிவர்த்தி செய்யலாம்.

■ ■ ■

BALACHANDRAN LAW OFFICE

We specialize in:

- Business Law
  Purchase, sale, business registration
- Family Law
  Divorce, separation agreements
- Immigration Law
  Sponsorship, refugee hearings, work permit
- Estate Law
  Probates, estate planning
- Real Estate (Commercial/Residential)
  Buying and selling property, mortgages
- Last Will, Power of Attorney, Affidavit, etc.



Balachandran Muthaiah, LL.B.
Barrister, Solicitor & Notary Public

சட்டம் சம்பந்தமான சகல தேவைகளுக்கும்
பாலச்சந்திரன் சட்ட அலுவலகத்துடன்

தொடர்பு கொள்ளுங்கள்.

இலவச ஆரம்ப ஆலோசனை!

2401 Eglinton Ave. E.
Suite 300
Toronto, ON M1K 2M5

Tel.: 416 755 5544
Fax: 416 755 5594
Email: balalawoffice@gmail.com

(at southwest corner of Kennedy & Eglinton)

“பாவாரம்” நூல் வெளியீடு

கவிநாயகர் வி. கந்தவனம் அவர்களின்
பாவாரம் என்ற நூல் வெளியீடு

பேராசிரியர் கலாநிதி நா. சுப்பிரமணியன் தலைமையில் வெளியிடப்பெறும். வெளியீட்டுரையைத் தமிழ்நாடு திருவாவடுதுறை ஆதீனப் பேராசிரியர் சித்தாந்தக் கலாநிதி சு. சண்முகவேல் அவர்கள் நிகழ்த்துவார்கள்.

10.08.2008 ஞாயிற்றுக்கிழமை

கனடா கந்தசுவாமி கோயிலில்
பிற்பகல் 7.30 மணி

108 சிவத்தலங்கள் பற்றிய பதிகங்கள் இதில் அடங்கியுள்ளன. 370 பக்கங்களைக் கொண்ட இந்நூலைத் தமிழ்நாடு காந்தளகம் பதிப்பக அதிபர் மறவன்புலவு க. சச்சிதானந்தம் அவர்கள் அழகுற வெளியிட்டுள்ளார்.

416 286 0457


Buy & Sell Residential &
Commercial Properties
1st PRIZE
NEW CAR - 2008 BMW 3 Series
You can win!**
** Some terms and conditions apply
2nd PRIZE
WIN a TRIP for 2 to CUBA
3rd PRIZE
46" flat screen TV
Raj. A. Rasaratnam B.Com.
Sales Representative
416-726-8055
416-299-8570
HOMELIFE
HomeLife/ GTA Realty Inc.
Real Estate Brokerage*
*Independently own and operated
1711 McCowan Rd., Suite #206,
Scarborough, ON. M1S 3Y3
Bus: (416) 321-6969
Fax: (416) 321-6963
Buy or sell any property with my help and enter the draw!
Don't miss out on these wonderful prizes!
Mortgage arrangement, Business incorporation
and corporate tax preparation
416-726-8055


குறைந்த செலவில் சிறந்த காப்புறுதி
RESP SPECIAL!
இம்மாதம் RESP செய்பவர்களுக்கு
3 விசேட சலுகைகள் உண்டு!
- Start from $25
INDUSTRIAL ALLIANCE
INSURANCE AND FINANCIAL SERVICES INC.
RBC Insurance
Canada Life
Manulife Financial
தனா
மாணிக்கவாசகர்
Broker
Life Insurance
Critical Illness Insurance
Home Equity Line of Credit
Disability Insurance
Mortgage Insurance
RRSP - Start from $25
Loan approval within 24hrs - Bad credit no problem
RESP - Start from $25
(20%-40% Government Grant + 15% Company Bonus)
INSURANCE SERVICE INC.
Cell: 416-728-5772
Business: 416-290-1200

# சட்டப்படி இணைந்து வாழ்பவர்கள், ஒவரின் பெயரில் சொத்துக்கள் வாங்குவது சரியா?



கருணா கோபாலபிள்ளை
- வீடு விற்பனை முகவர் -
karunagopal@thaiveedu.com

தாய்வீடு சஞ்சிகையின் வளர்ச்சிக்கு வாசகர் கள் நீங்கள் தரும் ஆதரவு அளப்பரியது. வதிவிடம் பற்றிய தகவல்களையே அதீத முக்கியத்துவம் கொடுத்து வெளியிடப்படும் இச் சஞ்சிகை, எண்ணிக்கையில் பெருமளவு வெளிவந்தாலும், ‘வெளியிடப்பட்டு சில நாட் களிலேயே கடைகளில் கிடைக்காமல் போவது”, வாசகர்கள் நீங்கள் விரும்பி எடுத்துச் செல்லும் சஞ்சிகை என்பது புலனாகும்.

வீடு சம்பந்தமான ‘வினாவும் விடையும்” இப்பகுதி மூலம் கடந்த பல காலங்களாக பல நேயர்களின் ஆக்கபூர்வமான சந்தேகங் களுக்கு விடைகாணும் நாம் தொடர்ந்தும் இம்மாதம் கிடைக்கப் பெற்ற சமகாலத்திற்கு பொருத்தமான கேள்விகளை ஆராய்வோம்.

**புதிதாக நிர்மானிக்கப்பட்டு பெற்றுக் கொள்ளப்படும் வீடுகளுக்கு நாம் வீட்டுப் பரிசோதனை (Home Inception) செய்வது அவசியமானதா? அவ்வாறாயின் (Builder) வீடு கட்டுபவர்களால் செய்யப்படும் Home Inspection ஏன் செய்யப்படுகின்றது.**

S. Kisoth, Scarborough

புதிதாக நிர்மானிக்கப்படும் வீடுகள், கொள்வனவாளர்களுக்கு வழங்கப்படும் முன்னர், அவ்வீட்டின் தரம் மற்றும் கட்டிட அமைப்புகள் பற்றிய ஓர் இறுதி பரிசோதனை கட்டட அமைப்பின் வீடு பரிசோதனை பிரிவினரால் மேற்கொள்ளப்படும். இதனை ஓர் மேலோட்டமான பரிசோதனை என்று கூட கூறலாம். அது மட்டுமன்றி தாங்கள் கட்டிய வீட்டினை தாங்களே பரிசோதிப்பது சிலவேளைகளில் கொள்வனவாளர்களுக்கு எவ்வளவு சாதகமாகவிருக்கும் என்பது ஐயமே. ஒன்ராறியோ மாகாண சட்டங்களுக்கமைய, பதிவு செய்யப்பட்ட வீடு கட்டட நிறுவனங்கள் வீட்டிற்கான Warranty யினை பெற்றுத்தரவேண்டியது கடமை. இவ் warrantyஆனது சுமார் இரண்டு வருடங்கள் நீடிக்கும். அது சம்பந்தமாக கொள்வனவாளர்களின் கடமையாக, 30நாள், 1வருடம், 2வருடம் மற்றும் 7 வருட காலங்களுக்கரிய Report தயாரிப்பது அமைகிறது. அவர்கள் கொடுக்கும் Reportஆனது warranty வழங் கும் நிறுவனம் மூலம் Builderகளுக்கு தெரிவிக்கப்பட்டு திருத்த வேலைகள் மேற்கொள்ளப்படும்.

மேற்கூறிய சலுகைகளை முறையே பெற்று நுகர்வதற்கு எமக்கென நாம் தெரிவு செய்யும் தகைமை வாய்ந்த வீட்டு பரிசோதர்களை அணுகுவது நன்று. சதாரண கண்களுக்கு புலப்படாத பல தகவல்களை அவர்கள் எமக்கு திரட்டித் தருவார்கள்.

**சமீப காலங்களில் நிர்மானிக்கின்ற Condoக்களில் மின்சார அளவு கருவிகள் ஒவ்வொரு வீடுகளுக்கும் தனித்தனியாக வழங்கப்படுகிறது. முன்னைய காலங்களில் மின்சாரக் கட்டணம் பொதுவாக Maintenance fees உடன் சேர்த்து அறவிடப்பட்டது. இவ்வாறான Condoக்களை வாங்குவது நன்றா?**

ஏ.வேணு. Brampton.

புதிதாக அறிமுகப்படுத்தப்படும் திட்டங்கள், அதிகம் கொள்வனவாளர்களின் நன்மை கருதியே செய்யப்படுகிறுது. தற்போதைய போட்டி வியாபார சந்தையில், இவ்வாறு செய்வது கூட ஓர் வியாபார தந்திரமே. இம் முறை மூலம் ஏற்படும் நன்மை தீமைகளை பார்ப்போம்.

பொதுவாக ஓர் Condo கட்டிடத்தில் மின்சாரம் தனியாக அறவிடப்பட்டாலும் குளிரூட்டல் மற்றும் சூடேற்றல் (Heating/ Cooling) பொதுப்படவே மேற்கொள்ளப்படுகின்றது. ஒருவர் அதிக சூட்டிலோ அல்லது அதிக குளிரிலோ இருக்கவிரும்பப்போவதில்லை. ஆதலால் வீண் விரயம் என்பது தடுக்கப்படுகிறது. ஆனால் மின்விளக்குகள் மற்றும் மின்சாரத்தினால் இயக்கவல்ல இதர உபகரணங்கள் தேவையில்லாத வேளைகளில் கூட வீணே இயங்குவது வீண்விரயமே. இந்தவிடயத்தில் கட்டுப்பாடற்று இருப்பவர்கள் விரயமாக்கும் சக்தி வீணே அக் Condoவை சார்ந்த ஏனையோரை பாதிக்காமல் இருப்பதற்கே இவ்வாறு தனித்தனியான அளவு கருவிகள் திட்டத்தினை அறிமுகப்படுத்தியுள்ளனர். இவ்வாறு செய்வதன் மூலம் வருடாவருடம் அதிகரித்துவரும் Maintenance fee ஆனது சற்று குறைந்தே காணப்படும். இதனால் Condo வின் விலைகள் கூட திடமாக இருப்பதற்கு சாத்தியங்கள் உண்டு. இவை அனைத்தும் Condo உரிமையாளர்களுக்கு நன்மையே. தீமைகளை ஆராய்ந்தால், விண் விரயம் செய்பவர்களுக்கு ஓர் கட்டுப்பாடு மட்டுமே. வளம் காப்போம்.

**வாடகை வீட்டில் குடியிருக்கும் நானும் எனது குடும்பமும் வீடு வாங்குவது பற்றி பலமுறை சிந்தித்தோம். தற்போதைய நிலவரத்தில் இருதலைகொள்ளி எறும்பாக இருக்கின்றது என்நிலை. வீடு வாங்குவதற்கு இது சரியான தருணமா? அல்லது பொறுத்திருக்கலாமா?**

ரஞ்சினி ப. Scarborough.

இன்றைய காலகட்டத்தில் உங்கள் கேள்வி மிகப்பொருத்தமான ஒன்று. இக்கேள்விபற்றிய ஓர் ஆராய்வு கடந்த இதழ்களிலும் விவாதிக்கப்பட்டது. இருப்பினும், வழமையான பாணியில், அமெரிக்காவின் பொருளாதார ஏற்றத்தாழ்வுகள் கனடாவினையும் பாதிப்பது வழமையே, ஆனால் கடந்த மூன்று வருடங்களாக அமெரிக்காவின் வீட்டு வீழ்ச்சியானது Toronto மற்றும் பெரும்பாகங்களில் எந்தவொரு விலை வீழ்ச்சியும் ஏற்படுத்தவில்லை. மாறாக, எமது சுற்றுவட்டாரங்களில் தொடர் வளர்ச்சியே விலைகளில் காணக்கூடியதாக இருக்கின்றது. கனடா தனது கடந்தகால அனுபவங்களின் வாயிலாக தெரிந்துகொண்ட பாடங்கள் இன்று பொருளாதாரத்தை தூக்கி நிறுத்தி-

14ம் பக்கம் பார்க்க...



# சட்டப்படி இணைந்து வாழ்பவர்கள்...

13ம் பக்கத் தொடர்ச்சி...

யிருக்கிறது என்றும் கூறலாம். அண்மையில், செய்தித்தாள்களில் வெளியான சந்தை நில வரங்களின் சாரமாக Toronto இன்றும் ஓர் பாதுகாப்பான வீடுசார் வைப்பீட்டுக்கு உகந்த இடமாகவே கருதப்படுகின்றது. அது மட்டுமன்றி அண்மையில் அறிமுகப்படுத்தப்பட்ட பல பில்லியன் செலவில் அமையும் Railway கட்டுமான செயற்பாடு எமது பொருளாதாரத்தின் மேன்மையை பறைசாற்றுகின்றது.

வாடகை வீட்டிற்காக நீங்கள் மாதாந்தம் செலவிடுகின்ற ஒவ்வொரு சிறு துளியும் வீண் விரயமே. மாறாக அதே செலவில் உங்கள் வருமானத்திற்கேற்ப வாங்கும் வீட்டினால் நாளடைவில் ஓர் சேமிப்பு உங்களுக்காக உருவாகும். இன்றைய காலங்களில் வட்டி விகிதம் மிகவும் குறைவாகவே காணப்படுகின்றது. இதனையும் உங்களுக்கு அனுகூலமாக்கிக் கொள்ளலாம்.

வீடு வாங்குபவர்கள் இரண்டு காரணங்களுக்காக வாங்குகின்றனர். இருப்பிட தெரிவு என்பது ஒன்று, மற்றயது Investment என்பது. வசிப்பதற்கான வீடு என்பது எமது அடிப்படை தேவை. இத்தேவையின் பூர்த்தியில் சந்தை பற்றிய ஓர் ஆய்வு அவசியம் தானா என்பது எனது கருத்து.

**சட்டப்படி இணைந்து வாழும் இருவர், வீடு அல்லது சொத்துக்கள் வாங்கும் வேளைகளில் தனியொருவரின் பெயரில் வாங்குமாறு சிலர் அறிவுறுத்துகிறார்கள். இது ஓர் உண்மையான தகவலா?**

ஆரதி.ம. North York

நீங்கள் தனியொருவரின் பெயரில் வாங்குவதனால் உள்ள நன்மை தீமைகளை ஆராய்வதே உங்கள் வினாவுக்கு பொருந்தும். முதலாவதாக என்ன நோக்கத்திற்காக அவ்வாறான முடிவுகளை எடுக்கின்றீர்கள் என்பதனைப் பொறுத்தும் இது அமையலாம். சட்டப்படி இணைந்து வாழும் தம்பதியினரின் சொத்துக்கள் யாவும் இருவருக்கும் பொதுவானதே. அவர்களுக்கிடையே பிரிவு ஏற்படும் வேளைகளில், ஒருவர் பெயரில் சொத்து இருந்தாலும் அல்லது இருவரது பெயரில் இருந்தாலும் அவை சம பங்காக பிரித்து பெறப்படும். இவ்வாறிருக்க நீங்கள் ஏன் ஒருவரது பெயரில் மாத்திரமே சொத்துக்கள் வாங்க வேண்டும்? பொதுவாக இருவர் சம்பாதிக்கின்ற வீடுகளில் உங்கள் வருமானம் குடும்ப வருமானமாக கணக்கிடப்பட்ட அடிப்படையிலேயே உங்கள் கடன் தொகை நிர்ணயிக்கப்படுகின்றது. அது மாத்திரமன்றி இருவர் இணைந்து பெற்றுக் கொள்கின்ற கடன்களின் வழங்குனர்கள் உங்களுக்கு கூடிய சலுகைகளை வழங்கவும் சாத்தியமுண்டு. Mortgage காப்புறுதியின் அடிப்படையில் பார்ப்போமாயின், இருவரும் காப்புறுதி பெற்றுக்கொள்ளும் வாய்ப்பு ஏற்படுகின்றது. வருமான வரி மற்றும் சலுகைகள் எம்முறை பார்க்கினும் ஒரே மாதிரியான போக்கினையே கொண்டிருக்கின்றது.

இவ்வாறு தம்பதிகள் இணைந்து வீட்டினை வாங்கும் போது பல முன்நோக்கான காரணிகள் இருக்கும்போது நீங்கள் பல சிரமங்களின் மத்தியில் ஒருவரது பெரியல் மட்டுமே வாங்கி சலுகைகளையும் இழக்க வேண்டாம்.

**பணம் ஈட்டும் நோக்குடன் சமீப காலங்களில் பல Condoக்கள் Toronto மத்திய பகுதியில் நிர்மானிக்கப்பட்டு வருகின்றது. இதில் பலர் வைப்பிட்டு நிறைந்த லாபமும் அடைந்திருக்கின்றார்கள். அவ்வாறு அறிமுகப்படுத்தப்படும் Condo க்களை நாமும் எவ்வாறு பெற்றுக்கொள்ளலாம்? தற்போதைய நிலையில் இவ்வாறு செய்வது பயன் தருமா?**

மகேந்திரன் S. Richmond hill

நிட்சயமாக Toronto நடுப்பகுதிகளில் நிர்மானிக்கப்படுகின்ற Condoக்கள் விலையுயர்ச்சியின் பாதையில் செல்லுமே தவிர விலை வீழ்ச்சியடையாது என்பது நீண்டகால அனுபவ உண்மை. ஆனால், நீங்கள் தெரிவு செய்யும் இடம், தரம் மற்றும் கட்டட நிறுவனம் போன்றவற்றை பொறுத்து உங்கள் லாபம் வேறுபடலாம்.

நீங்கள் Investment செய்கின்ற எண்ணம் உள்ளவராயின், இதற்கென பயிற்சி பெற்ற வீடு விற்பனை பிரதிநிதிகளின் உதவியுடன் தற்போது அறிமுகமாகி வரும் தரம்வாய்ந்த கட்டடங்களை அடையாளம் கண்டு கொள்ளுங்கள். Condo நிர்மானிக்கும் நிறுவனங்கள் மற்றும் வீடு விற்பனை நிறுவனங்கள் தமக்குள் ஒப்பந்தமிட்டு பல ‘VIP Agent Show”களை அறிமுகம் செய்கின்றனர். இவ்வாறு அறிமுகப்படுத்தப்படுகின்றபோது பொதுச் சந்தையில் விற்பனைக்கு வருமுன்னரே நீங்கள் தரமான பகுதிகளில் உங்களுக்கு பிடித்தமான Unitஇனை பெற்றுக் கொள்ள முடியும். அது மாத்திரமன்றி மேலே குறிப்பிடப்பட்ட வீடு துறை நிறுவனங்கள் அதிகளவு எண்ணிக்கையில் கொள்வனவு மேற்கொள்வதால் அவர்களுக்கான சலுகைகள் விலை குறைப்புகள் மற்றும் ‘Flipping option’ என்று கூறப்படுகின்ற கட்டிடம் கட்டி முடிப்பதற்குள் விற்று பணம் சம்பாதிக்கக்கூடிய சலுகைகள் VIP Agentகளினால் பெற்றுத் தரப்படுகின்றது. அது மாத்திரமன்றி Parking / Locker போன்ற மேற்படி இணைப்புக்களையும் குறைந்த செலவில் பெற்றுக்கொள்ள முடியும். அனுபவஸ்தர்களின் உதவி உங்கள் லாபத்தினை அதிகரிக்கும் என்பது உண்மையே. இதற்காக நீங்கள் முகவர்களக்கு பணம் செலுத்தவேண்டியதில்லை.

**Multiple offer என்றால் என்ன? அதன் நன்மை, தீமைகள் யாது?**

சிறிசங்கர். சி. ஸ்காபுரோ.

விற்பனைக்காக சந்தையிலிடப்படும் வீடொன்றிற்கு ஒன்றிற்கு மேற்பட்டவர்கள் வாங்குவதற்காக விண்ணப்பிப்பதனையே இவ்வாறு குறிப்பிடுகிறார்கள். வீடு வாங்குபவர்களைப் பொறுத்தவரை இக்கட்டம் சற்று கவனிகக்பட வேண்டியதொன்று. இருவரோ அல்லது மேற்பட்டவரோ போட்டியிடும் வேளைகளில் சந்தைவிலையை விட அதிக விலைக்கு நீங்கள் தள்ளப்படலாம். மற்றும் வீட்டுப் பரிசோதனை, மற்றும் விற்பனையாளர்களிடம் செய்யக்கூய இதர பரிமாற்றங்களுக்கான சந்தர்ப்பங்கள் தவிர்க்கப்படலாம். இருப்பினும் நீங்கள் அக்குறிப்பிட்ட வீட்டினை கண்டிப்பாக வாங்க விருப்பமுள்ளவர்களாய் இருப்பின், குறைந்த கட்டுப்பாட்டுடன், கூடிய விலை கொடுப்பது மாத்திரமன்றி Deposit மற்றும் Closing Date போன்றவற்றை விற்பவர்களின் விருப்பத்திற்கேற்ப அமைத்துக்கொள்வதால் சந்தர்ப்பங்கள் அதிகமாகின்றது.

வீடு விற்பனையாளர்களைப் பொறுத்தவரை இவ்வாறான சந்தர்ப்பம் அவர்களுக்கு ஓர் வரப்பிரசாதமே. இச்சந்தர்ப்பம் சில வேளைகளில் இயற்கையாகவே அமைகின்றது. ஆனால் அனேக சந்தர்ப்பங்களில் இந் நிலை செயற்கையாக மேற்கொள்ளப்படும் ஓர் விற்பனை தந்திரமே. இவ்வாறான சந்தர்ப்பங்களில் நீங்கள் அதிக விலை கொடுத்து உங்கள் வீட்டினை வாங்க முன் வருபவரை மட்டுமே தெரிவு செய்யாமல், இவ்வாறு பெற்றுக்கொள்ளும் நபர் தகுதியானவரா என்பதனையும் தெரிந்துகொள்ளுங்கள்.

நன்றி, நேயர்களே, மீண்டும் மீண்டும் தொடர்வோம்.

■ ■ ■



I'm here to get your mortgage smarter and faster.

உங்களுக்கு அதிக கடன் பளு இருந்தால் அனைத்தையும் குறைந்த ஒரு மாதக்கட்டணத்தில் கொண்டுவருவதுடன் உங்களுக்கு அதிக பணத்தையும் சேமிக்க உதவுவேன்.

**NO FEE FOR RESIDENTIAL MORTGAGES**

- Rate discount up to 3%
- Give me a call for free consultation
- Mortgages without no down payment

**We do the best for you**

நீங்கள் வங்குரோத்துக்கு போயிருந்தாலும் நிராகரிக்கப் பட மாட்டீர்கள். யாருமே நிராகரிக்கப் படமாட்டார்கள் அனைவரும் தகுதியானவர்கள். குறைந்த வட்டி வீதத்தில் ஈட்டுக்கடன் பெற்றுக்கொள்ளவும், கடன்கள் குறித்த இலவச ஆலோசனைகளுக்கும் அனைவரதும் நம்பிக்கைக்கு பாத்திரமான அகிலா செந்திலை அழையுங்கள்

When it comes to finding the Right Mortgage Solution to meet your needs, Please call **ME** befor making any **Decision!!!**

**Our interest rates starts from 0%**

- First-time Buyers
- Renewal
- Refinancing
- Pre-Approval
- Self Employed
- Bankruptcies
- Poor Credit
- New Immigrants
- Debt. Consolidation
- Construction Loans

invis

- **Residential**
- **Industrial**
- **Commercial**

**1st, 2nd, 3rd Mortgages Upto 100%...**

**வங்கி வட்டி வீதத்தை விட குறைந்தளவு வட்டி வீதம்**

**After Approval**

# Joy is yours Pride is ours





**அகிலா செந்தில்**

**Akila Senthil**, *AMP*

*Senior Mortgage Consultant,*
*Team Leader, Platinum Award Winner*
*A Challenging Prosperity Long Term Experienced Team Leader*

**Cell: 416.895.4321**

104-5770 Hurontario St., Mississauga, ON L5R 3G5
Fax: 905-283-3339, Web: www.mortgageprincess.ca, E-mail: akilasenthil@invis.ca
Head Office: Invis Inc., 100-480 University Ave., Toronto, ON M5G 1V2



**mediherbs.ca**

**சலரோகமா...?**
**சலரோக உபாதைகளிலிருந்து நீங்குவதற்கான மூலிகைப் பானம்!**

**உடலின் கெடுதியான மிகைக் கொழுப்பைக் குறைத்து உடல் தென்பை பேணுவதற்கு!**







**டயபீனா** தினமும் அருந்தக்கூடிய மூலிகை ஆரோக்கிய பானம். இது உடலில் மிகுதியான குழுக்கோசினை குறைக்கக்கூடியதும், இரத்தத்திலுள்ள அதிகளவு குழுக்கோசினால் ஏற்படக்கூடிய நோய்களை ஒழுங்கு முறையாக தடுக்கவும் உதவுகிறது. விறைப்புத்தன்மை, பாதங்களில் சுளுக்கு, அலட்சியத் தன்மை மற்றும் மீண்டும் மீண்டும் வியாதிகளை படிப்படியாக நீக்கிவிடக் கூடியது. டயபீனா கண்டிப்பாக நீரிழிவு நோயினால் வருந்துபவர்கள் மட்டுமே பாவிக்கவேண்டியது.

**க்லூாட்டியலா** பானமானது மிகுதியான உடல் கொழுப்பை குறைக்கக் கூடியதும், குறிப்பாக உடலின் இடுப்பு, தொடை, தோற்பட்டை, கைகள் போன்ற பகுதிகளில் ஏற்படக்கூடிய ஊமைச் சதை பெருகுவதை தடுக்கவும், கொழுப்பினால் விளையக் கூடிய கெடுதியினை கட்டுப்படுத்தவும், உடல் வலியை நீக்கவும், அத்துடன் வாதத்தினால் ஏற்படக்கூடிய வலியினை குறைக்கவும் உதவுகிறது. க்லூாட்டியா உடலுக்கு புதுத்தெம்பைக் கொடுப்பதோடு நீண்ட சுகமான வாழ்விற்கும் வழிவகுக்கிறது.

Amazon Health Care

BBB


SABONA


**Tel: 416 264 8787**
**www.amazonhealthcare.ca**
**2602, Eglinton Ave East. (Midland/Eglinton)**


JayaCS•416 275 0070


# வீடு வியாபார நிலையம் வாங்க விற்க...


வீடு வாங்க விற்க அல்லது அது சம்பந்தமான விபரங்களுக்கும் குறைந்த வட்டி விகிதத்தில் மோட்கேஜ் செய்யவும் நட்புடன் அழையுங்கள்....


$419,000

Countryside / Sunny Meadow
4 Bedrooms 3 Washroom
Separate Entrance


$125,000

Warden/ Eglinton
Sale of Business
Automotive

$244,900

Hurontario/Strathave
2 Bedrooms 2 Washroom

$114,000

Neilson & Tapscode
2 Bedrooms 2 Washroom

$179,900

Brimley / Finch

$365,000

Ravenacroft/Rossland
4 Bedrooms 3 Washroom

$382,900

Islington & Rutherford
3 Bedrooms 4 Washroom
Finished Basement

$389,900

Manse/Lawrence
4+2 Bedrooms 3 Washroom
Part-Finished Basement

$388,900

Jane / Lawrence
4 Bedrooms 3 Washroom
Finished W/O Basement
Sep Entrance



$255,000

McLevin & Swells
3+1 Bedrooms 4 Washroom
Finished Basement

$349,900

Whites RD / Finch
3 Bedrooms 4 Washroom
Finished Basement

$422,900

Middlefield & 14th Ave
4+2 Bedrooms 4 Washroom
Finished Basement

$379,900

Rosebank & finch
4 Bedrooms 4 Washroom

Ravi Logarajah B.Sc
Tharsi Rajenthiram B.B.A
*Sales Representative
Call : 416-843-7474

HOMELIFE HIGHER STANDARDS

HomeLife/Today Realty Ltd., Brokerage*
31 Progress Ave., Suite 210, Toronto, ON, M1P 4S6
*Independently Owned and Operated, Realtor
BUS: 416-298-3200 / FAX: 416-298-3440



# For all your Real Estate Investment Needs...

வீடு வாங்க, விற்க
முழு நேர வீடு
விற்பனை பிரதிநிதி....

KARU'S ROYAL TEAM
Top 10 TEAM Across CANADA




Bus: 416-284-4751
(24 Hrs.Pager)

ROYAL LEPAGE
Connect Realty, Brokerage
INDEPENDENTLY OWNED AND OPERATED

ASHOK RAGUPATHY B.COM
Sales Representative
Cell: 647-401-9203
E-Mail: ashokragupathy@yahoo.ca

Mountainash/sandalwood


$549,900 For Sale
5 Bedrooms, 4 Washrooms Approx. 3,340 Sq Ft Only 1. Yrs Old In A Desirable High Demand Location 9Ft Ceilings On Mn, Sunken Lr


Mccowan/Ellesmere


$250,000 For Sale
2 Bedrooms, 2 Washrooms Enjoy Luxury Condo Living In This Unit Close To Scarborough Town Centre, Rt, Ttc, Great Schools, Parks

Heartlake/sandalwood

$349,900 For Sale
3+1 Bedrooms, 4 Washrooms Upgraded & Decorated Thru-Out Bsmnt Finished-Kit With W/O To Yard & Deck Com Lr/ Dr-Formal, Family Room

Victoriapark/Lawrence

$196,000 For Sale
3 Bedrooms, 2 Washrooms Come And Live In A Great Wall Kept Building With Library, Exercise & Party Room

Neilson/Mclevin

$319,000 For Sale
3+1 Bedrooms, 4 Washrooms Detached Home In A Quiet Neighbourhood, Close To Public & Catholic Schools, Ttc And Shopping.


Bayly/Monarch

$259,900 For Sale
3 Bedrooms, 3 Washrooms Brand New Freehold Town-house, Never Been Lived In! Sundial-Jackson Model. 1620 Sq Ft

9th Line/14th Ave

$519,900 For Sale
4 Bedrooms, 3 Washrooms Excellent Box Grove Neighbourhood! 2712 Sq Ft! Less Than 1 Year New Arista Home! Dble Dr Entry W/Porch

14th Avenue/9th Line

$599,000 For Sale
5 Bedrooms, 4 Washrooms Stunning Green Park True Model Home - 3350 Approx Sq Ft, 55 Thousand In Total Upgrades

Mavis/Dundas

$399,900 For Sale
3+1 Bedrooms, 4 Washrooms Fabulous Detached Central Mississauga Home. Freshly Painted, Bright Modern Kitchen With Backsplash

880 Ellesmere Road, Suite 203, Toronto, M1P 2W6

# கழிவுப் பொருள் அகற்றல் (Garbage Removal)

சாதாரண ஒவ்வொரு கனேடிய வீட்டுரிமை யாளர்களும் வருடமொன்றிற்கு 1000 KG அளவான கழிவுப் பொருட்களை வீசுவதாக கணிப்பிடப்பட்டுள்ளது. நகரமயப்படுத்தப் பட்டுக் கொண்டிருக்கும் ரொறொன்ரோவை அண்டிய பகுதிகளில் கழிவுப் பொருட்களை அகற்றுவது இப்பகுதியில் உள்ள மாநகர சபைகளுக்கு ஒரு பெரிய பிரச்சினையான விடயமாகவும், மிகச்செலவான ஒரு சேவை-யாகவும் கடந்த ஆண்டுகளில் பேசப்பட்டது பலருக்கும் நினைவில் இருக்கலாம்.

ரொறொன்ரோவில் இருந்து அகற்றப்படும் கழிவுப்பொருட்களை மிக்சிக்கன் நகரத்தில் உள்ள ஓர் குறிப்பிட்ட இடத்தில் கொட்டு-வதற்காக ஏற்படுத்தப்பட்டிருந்த குத்தகை ஒப்பந்தம் 2010ம் ஆண்டில் முடிவடைய இருப்பதை கருத்திற்கொண்ட ரொறொன்ரோ பெரும்பாக நகர சபைகளின் மாற்று நடவடிக்கைகளின் காரணமாகவே நாம் பல வித மாற்றங்களைச் சந்திக்க வேண்டியவர்-களாகிறோம்.

இந்த வகையில் 2007ம் ஆண்டு ஏப்ரல் 2ந் திகதி ரொறொன்ரோ மாநகரம் உத்தியோக பூர்வமாக லண்டன் நகரத்தில் 320 ஏக்கர் அளவு கொண்ட நிலத்தை (Green Lane Landfill) அகற்றப்படும் கழிவுப் பொருட்-களை கொட்டி நிரப்புவதற்கான நிலமாக சுவீகரித்துள்ளது. சுமார் 200 கிலோ மீற்றர் தூரத்திலுள்ள இந்த இடத்திற்கு கழிவுப் பொருட்களைக் கொண்டு சென்று அகற்று-வதில் பாரிய செலவு ஏற்படும் என்பது ஒருபுறம் இருக்க அதனை முறையாகப் பயன்படுத்தாமல் விட்டால் சிறிது காலத்தில் அந்த இடமும் போதாமல் போய்விட வாய்ப்பு உள்ளதாக கணக்கிடப்பட்டுள்ளது. அதாவது அகற்றப்படும் கழிவுப் பொருட் களில் 45%-50% அங்கு கொண்டு செல்லப்-படுமானால் 19-21 வருடங்களில் மீண்டும் இடமில்லாப் பிரச்சினை உருவாகும். அத-னைக் கருத்திற்கொண்டே 30%மான கழிவுப் பொருட்கள் அங்கு கொண்டு செல்லப்படக் கூடிய திட்டங்களை உருவாக்கினால் ஒதுக்கப்பட்ட நிலம் 28 வருடங்களுக்குப் போதுமானதாக இருக்கும் என்பது மட்டு மன்றி கழிவைக் கொண்டு செல்லும் போக் குவரத்துச் செலவிலும் அதிகளவு பணத்-தைச் சேமிக்கலாம் என்பதே ரொறொன்ரோ மாநகர சபையின் திட்டமாகும்.

இதன் விளைவாகத் திட்டமிட்டபடி 2010 ஆண்டு குறித்த இலக்கினை அடையும் நோக்கோடு பல வித புதிய திட்டங்கள் உருவாக்கப்பட்டுக் கொண்டிருக்கின்றன.

- பச்சைக் கொள்கலன் திட்டம்- 2002 செப்டெம்பர்.
- மீள் பாவனைப் பொருட்களுக்கான நீல நிற, பெட்டிகள் (Recycle Box)
- மீள் பாவனைப் பொருட்களுக்கான நீல நிறக் கொள்கலன்கள் (Blue Bin)
- கழிவுப் பொருட்களுக்கான கொள்கலன்-கள்
- வேறும் பல மாற்றுத் திட்டங்கள்.

## வீடும் விடியலும் - 30



வேலா சுப்ரமணியம்
- Certified Home Inspector -
vela@thaiveedu.com

இவ்வாறு உருவாக்கப்படும் திட்டங்களை வீட்டுரிமையாளர்கள் முறையாகப் பாவிப்ப-திலேயே அதன் வெற்றி தங்கி இருக்கின்றது.

நிமிடத்திற்கு நிமிடம் மாசுபடும் சுற்றுச் சூழலை பாதுகாக்கும் பணியில் நாம் ஒவ் வொருவரும் சிரத்தையுடன் பங்கெடுக்க வேண்டியதும் மிக அவசியமாகும். எனவே பலருக்கும் நன்மை தரும் விதத்தில், இந்த நகரத்தை புகுந்த வீடாகக் கொண்டு வாழ்ந்து வரும் நாங்கள் நகரத்துக்குச் செய்யும் ஒரு சேவையாகவும் இதனைக் கருதி பங்காற்ற வேண்டும் என்ற நோக்கில் ஒவ்வொரு திட்டம் பற்றியும் சற்று விரிவாக ஆராய முற்படுகிறேன்.

### பச்சைக் கொள்கலன் திட்டம் (GREEN BIN)

2002ம் ஆண்டு செப்டெம்பர் மாதம் ETO-BICOKE நகரில் முதன் முதலாகப் பரீட்-சாத்தமாக ஆரம்பிக்கப்பட்ட இத் திட்டம் ரொறொன்ரோ மாநகரம் முழுவதும் அறிமு-கப்படுத்தப்பட்டுள்ளது. ரொறொன்ரோவில் மட்டும் சுமார் 510,000 தனி வீட்டுரிமை யாளர்கள் இத்தகைய பச்சைக் கொள்-கலன்களைப் பாவிக்கின்றார்கள். இதன் வெற்றியைக் கண்டு, அயல் நகரமான மார்க்கம் நகரமும் இத்திட்டத்தை அறிமுகப் படுத்தியுள்ளது.

இத்திட்டத்தின் கீழ் எத்தகைய பொருட்க ளை இக் கொள்கலன்களில் போடலாம் என்பது பற்றி விரிவாகக் குறிப்பிடப்பட்டுள்-ளது. சுமார் 6 ஆண்டுகளுக்கு முன்னர் அறிமுகப்படுத்தப்பட்ட திட்டமாக இருந்த போதும் பலரும் இந்த அறிவுறுத்தல்களைக் கணக்கெடுக்காது தமது விருப்பிற்கும் வசதிக்கும் ஏற்றவாறு பாவிப்பதைக் காணக் கூடியதாக இருக்கின்றது. பொதுவாக உணவின் மிச்சங்கள், எச்சங்கள் என வகுக்கப்பட்டிருக்கும் பட்டியல் கீழே தரப்-படுகிறது. அதன்படி அவற்றை அகற்றுவதன் மூலம் இத்திட்டத்தின் வெற்றிக்கு நாம் வழிசமைக்க முடியும். அதாவது, இக்கொள் கலனின் சேகரிக்கப்படும் பொருட்களை 200 மைல்களுக்கு அப்பால் கொண்டு செல்லாது அவற்றை உரிய முறையில் பதனிட்டு, உரமாக்கி மீள் பாவனைக்குகந்ததாக்க நாமும் உதவலாம்.

### பச்சைக் கொள்கலத்தினுள் இடவேண்டியவை

- பழவகை, மரக்கறிக் கழிவுகள்
- இறைச்சி, மீன் வகைகள் (எலும்பு, தோல், கொழுப்பு)
- பஸ்டா (Pasta), பாண், தானிய உணவு வகைகள்
- முட்டைக் கோது, பாலுணவு வகைகள்
- காப்பிக் கட்டை, தேயிலைச் சரைகள்
- அழுக்கு துடைப்புத் தாள், ஒற்றுத் தாள் வகைகள்
- அழுக்கடைந்த உணவுச் சரைகள் – மின்னலை அடுப்பில் வேகும் சோளப் பொரிச் சரை, ஐஸ்கிறீம் பெட்டி வகைகள்
- இனிப்பு, விசுக்கோத்து, கேக்கு வகைகள்
- கழிவுக் கச்சு, உடல்தூய்மை பேணும் பொருட்கள்
- மண்ணுடன் கூடிய வீட்டுத் தாவரங்கள்
- பிராணிகளின் கழிவு, படுக்கை, மலம்

### தயவுசெய்து பின்வருவனவற்றை இடவேண்டாம்.

அவை உருக்குலையா. ஆதலால் அவற்றைக் கலப்புரமாக மாற்ற முடியாது.

- உலர்த்தி-தூசு (Dryer lint)
- உலர்த்தி-தகடுகள் (Dryer sheets)
- இறகுகள்
- முடி/உரோமம்
- கணப்பு அல்லது இறைச்சி சுடும் அடுப்புச் சாம்பல்
- சுள்ளிகள்
- உறிஞ்சிப் பைகள் (Vacuum bags)

இக்கொள்கலன்கள் ஒவ்வொரு வாரமும் குறிப்பிட்ட தினத்தில் சேகரிக்கப்படும். கட்டணம் எதுவும் கிடையாது. ஒன்றுக்கு மேற்பட்ட கொள்கலன் வேண்டுமானாலும் அதனை வாங்கிப் பாவிக்க முடியும். கொள் கலன் காணாதவிடத்து இதனுள் போட வேண்டிய மேற்குறிப்பிட்ட பொருட்களை Clear பைகளில் போட்டும் வைக்கலாம்.

**குறிப்பு :** கழிவு அகற்றும் நாளுக்கு முதல் நாளே உணவுக் கழிவுகள் உள்ள இக் கொள்கலன்களை வெளியில் வைத்தால் Racoon போன்ற மிருகங்கள் இவற்றைத் திறந்து தெரு முழுவதும் சிதறி நாற வைக்-கும் நிலையையும், அயலவர்கள் பார்த்து சிரிக்கும் நிலையையும் உருவாக்குவது தேவைதானா? என்பதைச் சிந்தித்துச் செயற்படவும்.

சேகரிக்கப்படும் இத்தகைய கழிவுப்பொருட கள் பதமாக்கப்பட்டு மீள்பாவனைக்கு வருவதில் 5 பாரிய படிமுறைகள் உண்டு. அது பற்றி பிறிதொரு கட்டுரையில் விரி வாக ஆராயப்படும்.

### Major Steps

There are five major steps that transform organic material collected at curbside into a finished compost product:



Curbside Collection



Pre-processing organic material



Primary processing by anaerobic digestion



Secondary processing by anaerobic compost



Using compost




Home Inspection
Vela Subramaniam
Certified Home Inspector
Optimal Home Inspection Services
Tel:416-786-0760
416-299-0700
E-Mail:vela.ohis@gmail.com
Web:www.ohis.ca



# உயில்கள்

செந்தூரன் புனிதவேல்
- காப்புறுதி முகவர் -
senrhuran@thaiveedu.com

நீங்கள் 18 வயதுக்கு கூடிய கனேடியர் களில் உயில் எழுதாத 50% மானோரில் ஒருவரா? அப்படியானால் நீங்கள் இதை தொடர்ந்து படிப்பது நல்லம். ஒரு அடிப்படை உயில் எழுத வழக்கறிஞருக்கு கொடுக்கும் $100, உங்களுக்குப்பின் உங்கள் குடும்பத் துக்கு ஏற்படும் செலவு, மன உலைச்சல் என்பதை கவணிக்கும்போது கட்டாயமாக $100, டொலருக்கு கஞ்சப்பட்டு உயிலை தயாரிக்காமல் இருந்திருக்கமாட்டீர்கள், ஆனால் அப்படி செய்வதன் தீமை அறியா- திருப்பது தான் காரணம் எனவே தொடர்ந்து வாசியுங்கள்.

பலர் உயில்கள் எழுதாமைக்கு முக்கிய காரணி தம்மிடம் அப்படி என்ன செல்வம் இருக்கிறது என்ற எண்ணமே. உண்மை யாதெனில் எல்லாரும் எவ்வளவு செல்வம் உண்டு என்பதல்லாமல் ஒரு உயில் தயாா- ித்து வைப்பதவசியம்.

உங்கள் சொந்த உயில் இல்லாத வேளை- யில் உங்கள் சொத்து யாவும் மாகாண சட்டத்துக்கமைய பிரித்துக் கொடுக்கப்படு வதுடன் அந்தச் சேவைக்காக பணமும் அறவிடுவார்கள். சுருக்கமாக சொல்வதானால் அரசு உங்கள் உயிலை எழுதும் என்று கூறலாம். உங்கள் விருப்பத்துக்கமைய உங்கள் செல்வம் செல்ல சிக்கல் இல்லாத வழிமுறைதான் உயில்.

உயில் இல்லாத வேளையில் உங்கள் வாரிசுகள் நீங்கள் விரும்பிய பங்கு செல்வத்- தைப் பெறாமல் அரசு முன்கூட்டியே அமைத்துள்ள சட்டப்படி பெற்றுக்கொள்வர். மேலும் இக்காரியத்தை செய்ய நியமிக்கப்- படுபவருக்கும் பணம் கொடுக்கப்படும். ஏன் உயில் எழுதிவைத்திருப்பது அவசியம் என்று தெளிவுபடுத்த நான் உங்களுக்கு ஒன்பது காரணங்களைத் தருவேன்.

### காரணம் 1

உங்கள் பொருள் உயில் இருப்பதன் மூலம் நீங்கள் விரும்பியவருக்கு சென்றடை வதை உறுதிப்படுத்தும்.

### காரணம் 2

**குழந்தைகள் / பேரக்குழந்தைகள்.**

ஒரு உயில் குழந்தைகள் சிறியவர்களாக இருக்கும் பட்சத்தில் அவருக்கு நீங்கள் விட்டுச்செல்லும் செல்வத்தை பராமரிப்பா ளரை தெரிவு செய்யும் உரிமையை நீங்கள் உடையவராவீர்கள். உயில் இல்லாத வேளையில் குழந்தைகள் நீதித்துறையின் பகடைக்காய்களாக வந்துவிடுவார்கள்.

> “இங்கு வரும்போது
> கொண்டுவந்தது ஒன்றுமில்லை.
> கொண்டு செல்வதும் ஒன்றுமில்லை.
> இடையில் வந்த செல்வத்தை இடையில் வந்த
> உறவுகளுக்கு
> கொடுத்துச் செல்ல உதவுவதே “உயில்கள்”.”

### காரணம் 3

விவகாரங்கள் விரைவாக தீர்த்துவைக்கப்- படும். உயில் இல்லாதவேளைகளில் செல் வத்தை எப்படி பகிர்வது என்பதில் வாதப்- பிரதிவாதங்கள் ஏற்பட்டு செல்வத்தை வாரி சுகளுக்கிடையில் பங்கிடுவது நீண்ட நாட் கள் எடுக்கும். இதனால் உங்கள் குடும்பத்- தவர்களுக்கு பெரும் சிரமம் ஏற்படும்.

### காரணம் 4

உயில்கள் திட்டமிட்டு எழுதப்படும் வேளை களில் எத்தனையோ வீனான வரிகளைத் தடுத்து அப்பணத்தையும் உங்கள் வாரிசு களே பெறச் செய்யலாம். இதனால் உங்கள் வாரிசுகளுக்கு கூடிய செல்வம் சென்றடை- யும்.

### காரணம் 5

நீங்கள் உங்கள் உயில்களை எழுதிவைப்- பதினால் உங்கள் குடும்பத்தவர்கள் உங்கள் நோக்கம் என்னவாயிருக்கும் என்ற வாதப் பிரதிவாதங்கள் இல்லாமல் எளிதாக உங்கள் ஆசையை நிறைவேற்றக் கூடியதாயிருக்கும்.

### காரணம் 6

நீங்கள் உயில் எழுதிவைப்பதால் உங்கள் மனதுக்கு ஆறுதல் ஏற்படும். இல்லாவிட்- டால் என்ன செய்வார்களோ என்று யோசித் துக் கொண்டு இருப்பீர்கள்.

### காரணம் 7

தேவையற்ற முரண்பாட்டுச் சண்டைகளை தவிர்ப்பவராவீர்கள். வீனாக உங்கள் வாரிசு கள் தமக்குள் சண்டையிடவேண்டியிராது.

### காரணம் 8


நீங்கள் ஆறுதலாய் சிந்தித்து உண்மையில் கூடிய பயன்தக்க விதத்தில் மட்டுமல்லா- மல், யார் யாருக்கு அதிகம் தேவையோ, அல்லது எப்போ தேவையோ அப்போ அச்செல்வம் சென்றடைய செய்யலாம்.

### காரணம் 9

நன்கொடைகள் அதாவது, அறக்கட்டளை கள் போன்றவற்றை ஏற்படுத்தி நீங்கள் சென்ற பின்பும் பல ஆண்டுகள் பயன் உடையதாக உங்கள் செல்வத்தைச் செய்யலாம்.

இங்கு வரும்போது கொண்டுவந்தது ஒன்று- மில்லை. கொண்டு செல்வதும் ஒன்றுமில்லை. இடையில் வந்த செல்வத்தை இடையில் வந்த உறவுகளுக்கு கொடுத்துச் செல்ல உதவுவது உயில்கள். எனவே தவறாமல் அவற்றைச் செய்து வையுங்கள்.

■ ■ ■



# வீடு வியாபார நிலையம் வாங்க விற்க



புத்தம் புது வாகனத்தை வெல்லுங்கள்

WIN



$329.900
Kipling & Steeles
3 Bedrooms 3 Washroom



$448.900
Western & Rutherford
3 Bedrooms 3 Washroom
All Wood Floor




$319.888
SOLD
Sheppard & Markham
3 Bedrooms 4 Washroom
Finised Basement



ULTRAMAR GAS STATION WITH 5 BEDROOM HOUSE & GARAGE
$499.000

GAS STATION WITH CONV. + LOTTO 649 + WAREHOUSE +GARAGE WEST END OF TORONTO
$845.000



$162.500
0 % DOWN
Weston & Sheppard
2 Bedrooms 2 Washroom



$389.900
Finch & Morningside
4 Bedrooms 4 Washroom
Finised Basement / Sep Ent.

மேலும் பல வீடுகளும், விற்பனை நிலையங்களும் விற்பனைக்குண்டு.

நம்பிக்கை நேர்மை நட்பான சேவைக்கும் அழையுங்கள்

Win a brand New TOYOTA - fj - CRUISER

*Some conditions may apply

Century 21
Affiliate Realty Inc.
Brokerage

## சத்தி மருதப்பா

Sales Representative

(முழுநேர வீடு விற்பனை முகவர்)

**416-816-1500**

208 - 80 Corporate Drive,
Toronto, Ontario M1H 3G5
Bus: 416-290-1200
Fax: 416-290-1900

brightsun print - 416-845-6565



# நிம்மதியான வாழ்வுக்கு நிரந்தரத்தீர்வு காப்புறுதி ஒன்றே...

ஆமாம் உங்கள் நம்பிக்கைக்கு பாத்திரமான ஒரு காப்புறுதி நிறுவனத்தில் உங்கள் குடும்பத்திற்குரிய அனைத்துக் காப்புறுதி ஒப்பந்தங்களையும் ஒழுங்காக அமைத்துத் தருவதே எனது சேவை....

## சியாமளா ரட்ணசபாபதி

RBC

Manulife Financial

Canada Life

COMMUNITY
FINANCIAL SERVICE GROUP INC.
2100 Ellesmere Road, Unit 105, Scarborough, Ontario M1H 3B7



# LIFE INSURANCE

## Shiamala Ratnasababapathy

Life Insurance Broker

**Dir : 416.414.2374**

# வீடு வாங்குதல்... எப்படி ஆரம்பிப்பது?



மங்கா அருனாசலம்
- வீடு விற்பனைப் பிரதிநிதி -
manga@thaiveedu.com

(சென்ற மாதத் தொடர்)

**- பகுதி 2 -**

### வீடுகளைப் பார்க்கும் தறுவாயில், நான் எம்மாதிரி யான கேள்விகளைக் கேட்க வேண்டும்?

கூடுதலான கேள்விகள் வீட்டைப் பராமரிக்கும் மற்றும் ஒரு வீட்டில் சாதாரணமாக ஏற்படக் கூடிய அன்றாட வீட்டுச் சம்பந்த மான பிரச்சனைகளைப் பற்றியதாக இருத்தல் வேண்டும். ஏதாவது புதிதாய் நிருமாணிக் கப்படல் வேண்டுமா? எந்த வித பராமரிப்புக் கள் வழமையாக கையாளப்படல் வேண்டும் (அதாவது, வர்ணம் பூசுதல், கூரை, தரைவிரிப்பு, மின்உபகரணத் தேவைகள்)? அத்துடன் வீட்டைப் பற்றியும் விரிவாக விசாரியுங்கள்.

### பார்க்கும் எல்லா வீட்டின் தகவல்களையும் நான் எப்படி பத்திரமாக வைத்துக் கொள்வது?

பார்க்கும் ஒவ்வொரு வீட்டின் பட்டியலின் பிரதியையும் கவனமாக வைத்திருங்கள் (உங்கள் முகவரிடம் ஒவ்வொன்றின் பிரதி-யையும் தாராளமாகக் கேட்கலாம்).

### ஒரு வீட்டைத் தெரிவு செய்ய முன்னர், மொத்தத்தில் எத்தனை வீடுகளை நான் தீவிரமாக முயற்சிக்கலாம்?

இதற்கு ஒரு கணக்கு வழக்கு கிடையாது. நீங்கள் ஒரு வீட்டைத் தெரிவு செய்ய முன்னர், எத்தனை வீடுகளை வேண்டுமா-னாலும் தாராளமாகப் பார்வையிடலாம். ஒரு சராசரிக் கணக்கில், வீடு வாங்கும் ஒருவர், தன் தெரிவுக்கு முன்னர், அதிக-பட்சம் 15 வீடுகளைப் பார்வையிடுகிறார். பார்க்கும் ஒவ்வொரு வீட்டைப் பற்றியும் விலாவாரியாக உங்கள் முகவருடன் கலந்-தாலோசியுங்கள். இது உங்கள் நேரம் வீணாவதைத் தடுக்கும்.

### வீட்டுச் சோதனையாளரின் பணி என்ன? வீடு வாங்குவதில் வீட்டுச் சோதனையின் தலையாய பங்கு என்ன?

வீட்டுச் சோதனையாளர் வீட்டின் பாதுகாப்பு வலயத்தில் அதிகம் கவனம் செலுத்துவார். அவர் மேலும் முக்கியத்துவம் கொடுப்பது வீட்டின் அமைப்பு, கட்டமைக்கப் பட்டிருக்-கும் முறை, மற்றும் தொழில்நுட்ப வடிவ-மும் அவற்றின் தேவையைப் பொறுத்து அவற்றை காலத்திற்குக் காலம் திருத்திய-மைக்க வேண்டிய அவசியம். அத்துடன் தற்போது ஏதாவது திருத்தங்கள் செய்யக் கூடிய தேவைகள் உள்ளனவா என்பதை யும் சொல்வார்.

உங்கள் கொடுக்கலுக்கான பெறுமதியை அந்த வீடு கொண்டுள்ளதா என்று சொல்வது வீட்டுச் சோதனையாளரின் வேலையில்லை. மின்சார உபகரணத் தேவைகள், குழாய் கள் மற்றும் கழிவு வெளியேற்றம், நீர் வெப்பமேற்றி மற்றும் அதைப் போன்ற மற்ற அமைப்புக்கள், அனாவசியமான பூச்சிகளின் நடமாட்டம், நீரின் தன்மையும், அதன் இருப் பிடமும், கதவுகள், யன்னல்கள், அத்திவாரம், உட்கூரை, சுவர், தரை மற்றும் வெளிக் கூரை, இவற்றில் ஏதாவது மாற்றம் தேவை யெனில் அவற்றிற்கான தேவையையும், சராசரி செலவினக் கணக்கினையும் அவரால் குறிப்பிட்டுச் சொல்ல முடியும். நிச்சயமாய், சட்டபூர்வமாக ஒரு தகுதியும், தரமும் வாய்ந்தவரையே இந்த வேலைக்கு நியமிக்க வேண்டும்.

### வீட்டுச் சோதனையின் போது நான் அங்கே பிரசன்னமாயிருக்க வேண்டுமா?

நீங்கள் அங்கே இருக்க வேண்டிய கட்டாய மில்லை. ஆனால் இருந்தால் நல்லதுதான். சோதனை முடிந்ததும், சம்பந்தப் பட்டவர், அங்குள்ள தப்புகளையும், தவறுகளையும் நேரடியாக உங்களுக்குச் சுட்டிக் காட்டி, உங்கள் கேள்விகளுக்குத் தகுந்த பதிலை யும் கூறுவார். இதில் உங்கள் எண்ணப்படி வீடு அமைந்துள்ளதா என்பதைத் தெரிவு செய்வதுடன், தேவைப்பட்ட பலதரப்பட்ட பராமரிப்பு மற்றும் திருத்த வேலைகளைப் பற்றியும் அவரிடம் நீங்கள் கேட்டறிந்து கொள்ள அரியதோர் சந்தர்ப்பம் இது.

### வீட்டைச் சோதனைக்குள்ளாக்குவது முக்கியமான ஒரு நிகழ்வாகுமா?

ஒரு விலை ஒப்பந்தத்தைக் கையொப்பமிட முன்னர், வீட்டுச் சோதனையாளர் ஒருவரைக் கொண்டு வீட்டை பார்வையிடச் செய்தல் நலம் ஏனெனில், வீட்டுப் பத்திரத்தை ஒப்பந் தம் பண்ணினால் பண்ணியது தான். பின்னர் மாற்றங்களைக் கொண்டு வருவது கடினம். அல்லது ஒரு வீட்டைத் தீர்மானிக்கும் போது, வீட்டைப் பரிசோதனைக்குட்படுத்து-வதற்கான ஆவண செய்தல் அப்பத்திரத்தில் நியமனப் படுத்தப் பட்டிருக்க வேண்டியதும் அவசியமாகிறது. இது நீங்கள் ஒரு வீட்டை வாங்கும் உங்கள் எண்ணத்தை மாற்றிக் கொள்வதற்கும், திருத்தங்கள் இருப்பின் விலையை மாற்றிக் கேட்கக் கூடிய சந்தர்ப்-பத்தையும் இது உங்களுக்குக் கொடுக்கி-றது. அத்துடன் திருத்தங்கள் இருப்பின், அதை வீடு விற்பவர் திருத்திக் கொடுத்தா-லே நாம் அந்த வீட்டை வாங்கும் உறுதிக்கு உள்ளாகின்றோம் என்ற உத்திரவாதத்தை யும் இது எமக்கு வழங்கி விடுகிறது.

### வேறு எந்த விதமான வீட்டுச் பரிசோதனைகள் அவசியமாகின்றது?

வீட்டைப் பொறுத்து மிகவும் பாரதூரமான பிழைகள் இருப்பின் அப்பரிசோதனையாளரே வேறு என்னவிதமான பரிசோதனைகள் அவசியம் என்பதை விளக்குவார். கூரைத் தரங்களினால் ஏற்படக்கூடிய உடல் உபா-தைகள், தண்ணீர், மற்றும் கழிவகற்றும் பிரச்சினைகள் இருப்பின் இவை உடல் நலத்தைப் பாதிக்கும் என்பதைக் கருத்திற் கொண்டு அவற்றை கூடுதல் கவனத்துடன் பரிசோதிப்பது அவசியம்.

22ம் பக்கம் பார்க்க...

LIFE INSURANCE • RESP • ACCOUNTING & TAX



- **ஆயுட்காப்புறுதி**
  10, 15 அல்லது 20 வருடங்களில் செலுத்தி முடிக்கலாம்
- **வயோதிபர்களுக்கான காப்புறுதி**
  மருத்துவ பரிசோதனை எதுவும் இல்லாமல் பெற்றுக்கொள்ளலாம்.
- **கொடிய நோய்களுக்கான காப்புறுதி**
  காப்புறுதித் தொகையைப் பெற்றுக்கொள்ளலாம் அல்லது கட்டிய பணம் முழுவதும் திரும்பப் பெறலாம்.
- **குழந்தைகளின் உயர்கல்விக்கான சேமிப்புத்திட்டம்**
  20% அரச மானியத்துடன் எமது நிறுவனத்தால் 15% சலுகையும் வழங்கப்படும்.
- **ஈட்டுக்கடன் காப்புறுதி**
  Mortgage Insurance

Apex Creations - 416-297-0707



**வசந்த் விநாயகமூர்த்தி**
காப்புறுதி முகவர்

**647-885-3012**

ACCOUNTING & TAX

**Queen & Jameson**
10 MacDonell Ave.

**Pharamcy & Finch**
2525 Pharmacy Ave.

LiLAND INSURANCE INC.
IA INDUSTRIAL ALLIANCE INSURANCE AND FINANCIAL SERVICES INC.

759 Warden Ave. Toronto, ON. M1L 4B5 Tel : 416-759-5453 ext. 362

# வாழ்க்கை கவர்க்கமானது இனிய இல்லமொன்றில்...


## Elagupplai (Mike) Srinathan B.Sc

**Sales Representative**

**Dir: 416-276-1225 Off: 905-470-9800**

**Email: esrinathan@trebnet.com**





**Finch/Staines**




**$429,000**
Detached 2 story, Bed rooms 4, Washrooms 3,Over 2452 Sqft. Hardwood On Main Floor

**E.Woodbine/N.16th**



**$638,800**
Detached 2 story, Bed rooms 4, Washrooms 3,Thermal Windows'06 In Main & 2nd Flr

**Markham/16th Ave**



**$699,900**
Detached 2 story, Bed rooms 4+1, Washrooms 3, Lot Of Upgrades Over 70,000

**Lawrence/Orton Park**



**$219,000 plus Stock**
A Non-Franchise **Gas Station** With Very Busy Convenience Store Together For Sale

**Brimley / Eglinton**



**$259,800**
2 Story, Bedrooms 3, Washrooms 2 Close To All Amenities. Big Backyard. 4 Car Parking With Detached Garage. Seperate Entrance

**Mcmurchy N Of Queen St**




**$259,900**
Townhouse, Bedrooms 3, Washrooms 2 Brand New Freehold Townhome, No Maintenance Fees. Close To Go Station

**Morningside/401**




**$275,000**
Twnhouse 2 Story, Bed rooms 3, Washrooms 3 5 Year New Freehold Townhouse With Many Upgrades. Ceramic Floors In Hallway

**Hwy 50 / Nashville**



**$299,000**
Sales of Business, **GAS STATIONS**, Self-Service Esso With Seperate Diesel And Snack Shop Located On A Bush Hwy 10 Min. North Of Gta.

**Kennedy / Steeles**




**$309,900**
Link 2storyt, Bed rooms 3, Washrooms 2
Very Well Maintained, Move-In Condition, High Efficieny Gas Furnace(2004),

**Markham/Steeles**



**$310,000**
Townhouse 2 Story, Bed rooms 3+1, Washrooms 2, Very Convenient Location, Near Ttc, Shopping & School. $$$ In Upgrades,

**Brimley/Steeles**




**$323,000**
Link 2Story, Bedrooms 3+1, Washrooms 3, Updated Kitchen W/Newer Cabinets & French Dr; Gleaming Hardwood Fl

**Middlefield/Denison**



**$339,000**
Link2 Story, Bed rooms 3, Washrooms 2, Demand Area Approximately 11 Years Old, Well Maintained, Large Enclosed Front Porch,

**Port Union/ LawsonRd**



**$339,000**
Detached 2 Story, Bedrooms 3, Washrooms 2,Upgrades Include Hardwood Staircase, Hardwood Floors, Modern 3Pc Bath Lower Level

**Markham Rd/14 Ave**



**$349,900**
Link 2 story, Bed rooms 3, Washrooms 3 Demand Location!Beautfully Fenced Back Yard! , Extra Wide Driveway With Flower Garden

**Passmore/Markham**



**$354,900**
Detached 2 Story, Bedrooms 3, Washrooms 2, All Brick 3 Bedroom Brookside House In A Family Neighborhood, Walk To Ttc, Park, School

**Markham/14th Ave.**




**$359,900**
Link 2 Story, Bedrooms 3, Washrooms 3, Hardwood Floors In The Living Room, Dining Room And Foyer Bright Open Kitchen .

**Markham & 16th**



**$364,900**
Detached 2 Story, Bedrooms 3, Washrooms 3Main Floor Family Room /Gas Fireplace-Ceramis In Kitchen,Baths And Hallway ,

**Brimley/Denison**



**$369,900**
link 2 Story, Bedrooms 4+2, Washrooms 4, 2000 Sq Ft Plus Two Bedroom Bsmt Apt With Sep Ent, Deep Lot, Newer Roof

**Creditview / Britannia W**



**$409,000**
Detached 2 Story, Bed rooms 4, Washrooms 3 Close To Heartland Shopping Centre,Hwy,Schools,Parks,Public Transit

**9th Line/ 14th Ave.**



**$419,000**
Detached 2 Story, Bed rooms 3,Upgraded 3' Maple Strip Hardwood Floor + Tile Throughout Main Floor, Upgraded Kitchen Cabinet,

**Markhan Road & Passmore**



**$419,900**
Detached 2 Story, Bed rooms 4, Washrooms 3 Approximately 2000 Sq Ft. Casement Windows, Upgraded Kit, Door To Garage

**Middlefield/Highglen**



**$419,900**
Detached 2 Story, Bed rooms 4+2, Washrooms 4 Enclosed Front Porch,Hardwood In Living Room, Walk To Park,

**Bur Oak/ Markham**



**$474,900**
Detached 2 Story, Bed rooms 4, Washrooms 4 Fully Upgraded: Hardwood Floors In Family, Living And Dining Room,

**RE/MAX**
**Realtron Realty Inc. Brokerage**
Independently Owned and Operated
7800 Woodbine Ave. Penthouse, Markham,ON. L3R 2N7

**'I can also assist you with: Mortgage Financing Home Inspection, Real Estate Lawyer'**

# வீடு வாங்குதல்... எப்படி...

20ம் பக்கத் தொடர்ச்சி...

### குறுக்கால் ஓடும் மின்சார இணைப்புக்களால் உடலுக்குக் கேடுகள் விளையக்கூடிய சாத்தியமுள்ளதா?

மின்சார இணைப்புக்களால் குறிப்பிடும்படியான விளைவுகளோ நோய்களோ வர வாய்ப்புக்கள் மிகவும் குறைவு.

### வீட்டை வாங்கும் பட்சத்தில் எனக்கொரு வக்கீல் தேவையா?

ஒரு வீட்டுப் பத்திரத்தை ஒப்பந்தப் படுத்தி அதை முடித்து வைக்க ஒரு வக்கீல் உங்களுக்குக் கட்டாயம் தேவை. அவரால் தான், இதிலுள்ள ஒப்பந்தச் சட்டங்கள், மிகவும் கருத்தில் கொள்ள வேண்டிய விடயங்கள், மற்றும் கடைசியாக முடிக்க வேண்டிய விடயங்கள் அனைத்திலும் துணை நிற்பார். நீங்களாகவே ஒரு வக்கீலை தேடிக் கொண்டாலும் சரிதான். அல்லது உங்கள் வீட்டு முகவர் மூலமும் அறிமுகப்படுத்திக் கொள்ளலாம். அத்துடன் அந்த வக்கீல் வீட்டு விற்பனைகளின் பத்திரப் பரிமாற்றங்களில் எவ்வளவு தூரம் அனுபவப்பட்டவர் என்பதுடன் என்ன மாதிரியான சேவைகளுக்கு எவ்வளவு பணம் எதிர்பார்க்கின்றார் என்பதையும் தெரிந்து கொள்ளுதல் அவசியம்.

### நான் வீட்டு உரிமைப்பத்திர காப்புறுதி வைத்திருக்க வேண்டியது அவசியமா?

நிச்சயமாய். இந்த விடயத்தில் அனாவசிய குளறுபடிகள் ஏற்பட்டு அதன் நிமித்தம், இழப்புக்கள் மற்றும் சேதங்கள் வீட்டு உரிமைப்பத்திரத்தில் ஏற்பட்டிருந்தால், அதை மீட்டு, அதற்கான இழப்புத் தொகையைப் பெற இக்காப்புறுதி உதவி செய்யும். இது மட்டுமன்றி இன்னும் பலதரப்பட்ட பிரச்சினைகளையும் இக்காப்புறுதி ஈடுகட்டக் கூடிய சந்தர்ப்பங்களுண்டு. உங்கள் வக்கீலுடன் இதுபற்றி மேலும் கலந்தாலோசிப்பது நலம்.

### எனக்கு வீட்டுக் காப்புறுதி அவசியமானதொன்றா?

ஆமாம். காப்புறுதிக்கான உறுதி, அல்லது அதற்குக் கட்டிய பண ரசீது போன்ற ஒரு சான்றாவது உங்கள் கையில், அந்த வீட்டை பத்திரக் கையொப்பமிடும் நாளில் அல்லது அதற்கு முன்னரே இருக்க வேண்டும். அதிலும், காப்புறுதி முகவரை வீட்டைப் பத்திரப் படுத்த முன்னரே அமர்த்தினால், இதன் மூலம் நிறைய பணத்தையும் நீங்கள் சேமிக்கலாம். இந்த முகவர்களுக்கும் அந்த வீட்டைப் பற்றிய உபரிய தகவல்கள் தெரிந்திருப்பதோடு, காப்புறுதி விடயத்தில் எவ்வாறு பணத்தைச் சேமிக்கலாம் (அதாவது எப்படி குறைந்த மாதாந்தத் தவணைத் தொகையைக் கட்டுவது) என்பதையும் அவர்கள் உங்களுக்கு அறிவுறுத்துவார்கள்.

### எந்தவகையான வழிகளைக் கையாள்வதன் மூலம் எனது வீட்டுக் காப்புறுதித் தவணைத் தொகையை வெகுவாகக் குறைக்கலாம்?

பலதரப்பட்ட காப்புறுதி நிறுவனங்களையும் அலசிப் பார்க்கவும். வீடுகளைப் பார்க்கும் போதே அந்த வீடு எவ்வளவுக் காப்புறுதித் தொகைக்கு உட்பட்டது என்பதையும் அறிந்து கொள்ளுங்கள். புது வீடுகள் மற்றும் செங்கல்லால் ஆன வீடுகள் குறைந்த காப்புறுதியையே கொள்ளும். தீப்பிடிக்கும் சமயங்களில் தீயணைக்கும் நீர்நிலைக் குழாய்கள், தீயணைப்புப் பிரிவின் அலுவலங்கள் இவற்றை அண்மித்துள்ள பகுதிகளில் வீடுகளை வாங்குதல் கூடுதல் நன்மை பயக்கும். நமது வாகனம் காப்புறுதி செய்யப்பட்டிருக்கும் இடத்திலேயே வீட்டுக்கான காப்புறுதியையும் சேர்ப்பின், இரண்டிற்கும் சேர்த்தே குறைவான கட்டணம் கட்டக் கூடிய சாத்தியமுண்டு. அத்துடன் இது வீட்டின் பாதுகாப்பையும் இரட்டிப்பாக்கும்.

### வீடு வாங்க முன்னர் வேறு என்ன மாதிரியான விடயங்களை நான் கருத்தில் கொள்ள வேண்டும்?

சூழல் மாசுபடும்படியான கூடுதல் இருப்பிடங்கள் இருப்பின் அவற்றைத் தவிர்த்தல் நல்லது. கட்டிடக் கோட்பாடுகளுக்கேற்ப நீங்கள் வாங்கும் வீடு அமைந்துள்ளதா என்பதை அறிந்து கொள்ளுங்கள். ஒரு வீட்டு அமைப்பின் பரிமாணத்தின் சட்ட திட்டங்களும் தெரிந்திருக்க வேண்டும். ஒரு காலத்தில் ஒரு கூடுதலான அமைப்பை அந்த வீட்டுக்கு நீங்கள் சேர்ப்பதாயிருந்தால், அந்த சட்ட திட்டங்களுக்குள் உங்கள் விருப்பம் ஒத்துவருமா என்பதைத் தெரிந்து கொள்ளவே இந்த முன்னேற்பாடு. உங்கள் முகவரிடம் இக்கேள்விகளுக்கான விடைகள் கட்டாயம் இருக்கும்.

### என் வீட்டு விலையை நிர்ணயித்து ஒரு நியமனம் கொடுப்பது எப்படி?

உங்கள் முகவர் என்ன செய்ய வேண்டுமென்பதைச் சொல்லிக் கொடுப்பார். அந்தப் பத்திரப் படிவத்தில் பின்வருவன பற்றி கேட்கப் பட்டிருக்கும்.
உங்கள் பெயர்,
வீடு விற்பவரின் பெயர்
வீட்டின் அமைப்பைப் பற்றிய முழுமையான விபரங்கள்
குறைந்த முதலீட்டுப் பணத்தின் அளவு
நீங்கள் அந்த வீட்டுக்கு நிர்ணயித்துள்ள விலை
பத்திரக் கையொப்பத்தின் இறுதி நாள் எப்போது
எவ்வளவு காலத்திற்கு நியமனப் பத்திரம் செல்லுபடியாகும்?
ஒப்பந்தத்தின் விரிவாக்க விளக்கங்கள்
நியமனப் பத்திரத்தின் உறுதிப்பாட்டு அடிப்படை விளக்கங்கள்

ஞாபகத்தில் கொள்ளுங்கள். ஒரு விலைப்பாட்டு பத்திரத்தைக் கொடுப்பதுடன் கடமை முடிவதில்லை. அதில் வாங்குபவரின் முழுத் திருப்தியுடனும், சம்மதத்துடனும், விருப்பத்துடனும் மட்டுமே ஒரு வீடு ஒப்பமிடப் படல் வேண்டும்.

### இதில் முக்கியமாக் கவனிக்கப்பட வேண்டிய ஆவணங்கள், பத்திரங்கள் யாவை?

1) Buyer Agency Agreement
2) Agreement of Purchase and Sale

■ ■ ■

*தாய்வீடு பத்திரிகை பற்றிய விமர்சனங்களை எதிர்பார்க்கின்றோம். விமர்சனங்கள் எம்மை ஓர் ஆரோக்கியமான பாதையில் இட்டுச்செல்லும்.*

*E-mail:thaiveedu@gmail.com*
*Fax: 416-849-0594*
*Tel: 416-646-3422*



# Unique Financial & Business Solutions Inc.

One Stop for all Your Financial Needs

We Offer
- FREE Mortgage Consultation
- Residential & Commercial
- Business Loan & Personal Loan
- Real Property Marketing
- Life Insurance
- All Accounting and Bookkeeping services

## COMMERCIAL MORTGAGE

*All Services Under One Roof*

*Call One Place For Your...*
*Mortgage Financing....Insurance...Real Estate Needs*

Unique financial & business solutions



**Kannan K.**
*Mortgage Business Development Manager*
(416) 854-6183



**Theepan L.**
*Real Estate Sales Representative*
(416) 830-2700



**Hariharan N.**
*Insurance/R.E.S.P Insurance Broker*
(416) 856-4276



**Raj T**
*Mortgage Specialist*
(416) 831-2550

Finder Financial Services Ltd.

Home Life Future Realty Inc.
262 Markham Road, Scarborough

GTA Square: 5215 Finch Avenue, Suite 257, Scarborough (Middlefield & Finch)
Tel: (416) 754-8327 · Fax: (416) 754-8328 · Toll Free: 1 (877) 554-8327 · www.ufbsi.ca



வளமான வாழ்விற்கு வதிவிடம் வாங்கிட......
Mccowan/Sheppard
$196,900 For Sale
2 Bedrooms, 2 Washrooms Beautiful Penthouse Unit. Approx 1350 Sq.Ft. **9Ft Ceiling**Newly Refinished Parquet Floor With Mocha Stain
Morningside/Finch
$279,900 For Sale
3+2 Bedrooms, 3 Washrooms All Brick Home, Close To Schools, 401, Shopping, Ttc, University, College, Library, Medical Clinics, Parks
Victoriapark/Lawrence
$196,000 For Sale
3 Bedrooms, 2 Washrooms Come And Live In A Great Wall Kept Building With Library, Exercise & Party Room
Neilson/Mclevin
$319,000 For Sale
3+1 Bedrooms, 4 Washrooms Detached Home In A Quiet Neighbourhood, Close To Public & Catholic Schools, Ttc And Shopping.
Bayly/Monarch
$259,900 For Sale
3 Bedrooms, 3 Washrooms Brand New Freehold Townhouse, Never Been Lived In! Sundial-Jackson Model. 1620 Sq Ft
Church And Delaney
$449,900 For Sale
4+1 Bedrooms, 4 Washrooms 'Fabulous Riverside Estates Home' In Great Family Community. All Brick, 3200 Sq Ft Interlocked Walkway
Mccowan/Denison
$429,000 For Sale
4+2 Bedrooms, 4 Washrooms Gorgeous Premium Lot! Main Floor Laundry, New Roof, 2 Bedroom Basement Apartment With Separate Entrance.
9th Line/14th Ave
$519,900 For Sale
4 Bedrooms, 3 Washrooms Excellent Box Grove Neighbourhood! 2712 Sq Ft! Less Than 1 Year New Arista Home! Dble Dr Entry W/Porch
14th Avenue/9th Line
$599,000 For Sale
5 Bedrooms, 4 Washrooms Stunning Green Park True Model Home - 3350 Approx Sq Ft, 55 Thousand In Total Upgrades
Mavis/Dundas
$399,900 For Sale
3+1 Bedrooms, 4 Washrooms Fabulous Detached Central Mississauga Home. Freshly Painted, Bright Modern Kitchen With Backsplash
Williamsparkway/400
$339,000 For Sale
3 Bedrooms, 3 Washrooms Arista Home In A Demanding Lakelands Village. Sunken Foyer, Oak Staircase With Natural Finish Cultured Marbles
Mavis/Steeles
$449,900 For Sale
4+1 Bedrooms, 3 Washrooms Attention Serious Buyers! Check Out This Beauty In The Brampton-Mississauga Border! 9' Ceiling
Keele/Finch
$175,000 For Sale
3 Bedrooms, 2 Washrooms Budget! Freshly Painted, Spacious 3 Bedroom. Very Clean, Good Size Bedrooms, In Good Condition
Passmore/Markham
$369,800 For Sale
3 Bedrooms, 2 Washrooms Brookside 3 Bedrooom Brick House Backing On Park/School. Close To Ttc, Minutes To 401, Shopping
Brimley/Lawrence
$299,900 For Sale
3+3 Bedrooms, 3 Washrooms Income Potential Home. Updated Bungalow, Fully Renovated 3 Bdrm Basement, Window 2004, New Carpet
TORONTO, SCARBOROUGH ,MARKHAM , MISSISSAUGA, BRAMPTON , AJAX ஆகிய இடங்களில்
புத்தம் புதிய Condos, வீடுகள், வியாபார நிலையங்கள் விற்பனைக்கு உண்டு
ரஞ்சன் பிரான்சிஸ்
416-816-1220
OPEN
ROYAL LEPAGE
Connect Realty, Brokerage
INDEPENDENTLY OWNED AND OPERATED
RANJAN FRANCIS XAVIER
Sales Representative
DIR: 416-816-1220

# அழகிய பூஞ்செடிகள்



சந்திரசேகரி
segari@thaiveedu.com


- வீட்டுத் தோட்டம் - 7

## லில்லியம் ( Lilium )

நீடித்து வாழக்கூடிய, அழகான பூக்கள் தரும் செடிகள் உங்கள் மனதைக் கொள்ளை கொள்ளும் என்பதில் சிறிதும் சந்தேகம் இல்லை. எனவேதான் அத்தகைய சில செடிகளை நான் அறிமுகப்படுத்த விரும்பினேன். தொடர்ந்து, இம்முறை எடுத்துக் கொண்ட செடி லில்லியம் (Lilium) ஆகும். இது லில்லியேசி Liliaceae எனும் குடும்பத்தைச் சார்ந்தது. லில்லியம் எனும் இனம், பெரிய செடிவகையாக, அனேகவர்க்க தாவாரங்களைக் கொண்டு, பூந்தோட்டப் பிரியர்களை அவற்றின் பன்மையான பருமன், நிறங்கள், உருவம் போன்றவற்றைக் கவரக் கூடியதாக பிரதிபலிக்கின்றது.



Lilium candidum - White
Glows in the moonlight.

அடுத்து, தாவரத்தை எப்படி வளர்க்கலாம் என்பதைச் சிறிது கவனிப்போம். நல்ல முறையில் வளர்ச்சிக்குரிய முறைகளைக் கையாளும்போது, தாவரம் நீண்ட காலம் வாழும் கிளங்குகளைக் கொண்டு நீடித்து வாழக்கூடியதாக இருக்கும். இச் செடிகளை மிகச் சுலபமாக நாம் பராமரிக்க முடியும். பலவகை இனங்கள் இருப்பதால், இனத்திற்கு இனம் வேறுபாடான மண்தன்மை, பசளை, pH திறன், சூரியஒளி வேறுபடும். மண்வளம் ஆழமாகவும், சிறிது அமிலத்தன்மையாகவும், நன்கு நீர் ஓடக்கூடியதுமாக இருக்க வேண்டும். சூரியஒளி முழுமையாக அல்லது சிறிது நிழலானதாக இருக்கலாம்.

இலையுதிர் காலத்தில், செடிகளை நிலத்திலிருந்து 6 அங் விட்டு வெட்டிவிடவும். லில்லியம் கிளங்குகளை இலையுதிர் காலத்தில், அதாவது செப்ரெம்பர் தொடக்கம் நவம்பர்வரையுள்ள காலத்தில் அல்லது முன் இளவேனிற்காலத்தில், அதாவது மார்ச் தொடக்கம் ஏப்பிறில்வரையுள்ள காலத்தில் குழிகளில் பதிக்கலாம். பதிக்கும் ஆழம் செடியின் உயரத்தைப் பொறுத்து வேறுபடும். ஏறக்குறைய 6 அங் தொடக்கம் 10 அங் வரை ஆழமாக குழிகளைத் தோண்டவும். செடிக்குச் செடியுள்ள இடைவெளிக் தூரம் 1அடி தொடக்கம் 1 1/2அடி இருக்க வேண்டும். கிளங்குகள் செதில்களாக ஒருங்கு சேர்ந்து காணப்படும். இவற்றைப் பிரித்து குழிகளில் நடவேண்டும்.

கிளங்குகள் பிரித்து சாடிகளில் வைத்து உண்டாக்கப்பட்டன
இளவேனிற்காலத்தில் கிளங்கின் நடுவேயிருந்து முளைவிட்டு நீளமான தண்டு வளர்ந்து வருவதை அவதானிக்கலாம். தண்டில் ஒடுக்கமான அதாவது வாள்போன்ற அமைப்பில் அநேக இலைகள் சேர்ந்து காணப்படும். இருவாரங்களில் முனைமுடியில் 3 தொடக்கம் 60 வரையிலான பூ அரும்புகள் தோன்றும். பூ அரும்புகள் இருவாரங்களில் பூக்களாக விரிகின்றன. நீளமான பெரிய செடிகளை அநேக பூக்களையுடையதாக இருக்கும்போது, கடும் காற்று, மழைவீச்சு சாய்த்து விழுத்திவிடும். எனவே, இதை நிவர்த்தி செய்யும் வகையில் பாதுகாப்புத் தடிகள் ஊன்றுவது சாலச்சிறந்தது.

ஒவ்வொரு பூவும் மூன்று அல்லிகளையும் இவற்றை மூடியதாக மூன்று அல்லிகள் போன்ற புல்லிகளையும் கொண்டு தோன்றும். பூக்கள் இனத்திற்கு இனம் உருவம், பருமன், நிறம், தோற்றம் ஆகியவற்றில் வேறுபாடாக இருக்கும். பூக்கள் குழல், நட்சத்திரம், கிண்ணம் போன்ற அமைப்பில் காணப்படலாம். வெள்ளை, சிவப்பு, மஞ்சள், செம்மஞ்சள், சிவந்தமஞ்சள், இளஞ்சிவப்பு ஆகிய பலநிறப்பூக்கள் காணப்படுகின்றன. கறுப்பு, ஊதா நிறப்பூக்கள் காணப்படா. சிலபூக்களின் அல்லிகளில் தடித்த புள்ளிகள் அல்லது தடித்த கோடுகள் காணப்படும். பூக்கள் மங்கும்போது, பூக்களை வெட்டி விடவும். தேவையேற்படின் அதாவது விதைகள் எடுக்கவேண்டுமாயின் பூக்களை விட்டு விடலாம். இதனால் கூடிய சக்தி விரயமாகின்றது என்பதை நாம் உணரவேண்டும்.

லில்லியம் அநேக பங்கஸ், பற்றீரியா தாக்கல்களுக்கு மிக இலேசாக பாதிக்கப்படலாம். செடிகளுக்கு ஒழுங்காக இயற்கைப் பசளை போட்டுவரவும். ஒவ்வொரு கிழமையும் செடிகளை அவதானித்து ஆபத்தான சீர்கேடுகளை அறிந்து கொள்ளவேண்டும். இலைகளில் ஓட்டைகள் அல்லது புள்ளிகள், அல்லது வளர்ச்சியின்மை ஏற்பட்டிருப்பின் உடனடியாக கவனித்து நேர்ப்படுத்த வேண்டும். கிருமிநாசினியாக சோப் அல்லது கந்தகம் சிறிது தாவர எண்ணையோடு சேர்த்து உபயோகித்து நிவாரணத்தைப் பெறலாம். உள்ளி, காரமான மிளகாய் அநேக கிருமிகளைக் கொல்லக் கூடியதாக இருக்கின்றன. தாக்கும் பங்கசுகளை நல்ல வாய்ப்பான மாற்றுமருந்துகளான சுண்ணாம்பு, கராம்பு, உள்ளி போன்றவற்றின் தூளை சிறிது கனிப்பொருள் எண்ணெயுடன் கலந்து தூவுதல்.

சில பொதுவான இனங்களின் பெயர்களை இங்கு அறிமுகப்படுத்துகிறேன்.

Lilium auratum : “Goldband lily” என அழைக்கப்படும். 2-6 அடிஉயரம் வரை வளரும், இலைகள் 9 அங் நீளமானவை, ‘Queen of the Lilies’ என அழைக்கப்படும். ஏறக்குறைய கிண்ணவடிவிலான ஏறக்குறைய 30-35 அகலமான பூக்களைக் கொண்டு காணப்படும். வெள்ளை நிறப் பூக்களையுடையவை தடித்த மஞ்சள் நிறக் கோடுகள் ஒவ்வொரு அல்லியிலும் கொண்டிருக்கும்.

Lilium Corsica : “Asiatic lily” என அழைக்கப்படும். நீண்டகாலம் நிலைத்து வாழக்கூடியவை. கூட்டு நிறங்களையுடையவை. குழல் போன்ற அமைப்பான பூக்களையுடையவை.

Lilium lancifolium : “ Tiger lily” என அழைக்கப்படும். 4-6 அடிஉயரம் வரை வளரும். இலைகள் 8 அங் நீளாமானவை. பிரகாசமான 5 அங் அகலமான செம்மஞ்சள் நிறப்பூக்களையுடையவை. சிறிய கறுப்புநிற குமிழ்கள் இலைகளின் கணுக்களில் காணப்படும். இவை நிலத்தில் விழுந்து புதிய செடிகளாக வளரக்கூடும்.

Lilium superbum : “Turk’s-cap lily” என அழைக்கப்படும். 4-7 அடிஉயரம் வரை வளரும், இலைகள் 6 அங் நீளமானவை. 4அங் அகலமான புள்ளிகளுள்ள செம்மஞ்சள் நிறப்பூத்தொடர்களைக் கொண்டிருக்கும்.

Lilium regale : “ Regal lily” என அழைக்கப்படும். இலைகள் 5அங் நீளமாகவிருக்கும். பெரிய குழல் போன்ற அமைப்பான 6அங் அகலமான மணமுள்ள வெள்ளை நிறப் பூக்களையுடையவை.

Lilium candidum : “Madonna Lily” என அழைக்கப்படும். 2-4 அடிஉயரம் வரை வளரும். இலைகள் 9அங் நீளமானவை. நீண்ட குழல் போன்ற அமைப்பான வெள்ளை நிறப்பூக்களைக் கொண்டிருக்கும்.

Lilium speciosum : “Japanese lily” என அழைக்கப்படும். 4-5 அடிஉயரம் வரை வளரும். இலைகள் 7 அங் நீளாமானவை. தட்டையான 6 அங் அகலமான வெள்ளை நிறப் பூக்களையுடையவை.

■ ■ ■

## Family Rutaceae : விழாத்தி மரம்

### (விழாம்பழ மரம்)

**(Botanical Name:Feronia limonia) (Eng.Name:Wood-apple)**




விழாம்பழமரம் இந்தியா, இலங்கை, மலேசியா, தென் கிழக்கு ஆசியா நாடுகளில் வளரும். இதன் பழம், வழமையாக ஏழைகளின் உணவு எனக் கூறப்படுவது, பின்னர் 1950 நடுப் பகுதியில் இதன் சுவை காரணமாக பழத்திலி இருந்து யாம், யூஸ் தயாரிப்பதை நாம் அறிவோம். நேர் உயரமான மரம், பல கிளைகளை யுடையவையாகவும் பட்டைகள் செதில்கள் போன்றும் கூரிய முட்களையுடைய வளைவான கிளைநுனிகளையும் கொண்டு காணப்படும். பழங்கள் உருண்டையானவை. கடினமான வெள்ளை நிற ஓடுகளையுடையவை. ஓட்டை உடைத்து சதைப்பற்றுள்ள பசைபோன்ற பகுதியை பாலோடு அல்லது சீனியோடுசேர்த்து உண்போம். பழத்தின் ஓடு மூக்குப்பொடி வைக்கும் பெட்டி செய்வதற்கும் வேறு சிறிய டப்பிகள் செய்வதற்கும் பயன்படும். மரத்தின்பலகை கட்டிடவேலைகள், அடிமட்டம், கமத்தொழில் உபகரணங்கள் செய்வதற்கு உபயோகமாகும். பழமானது ஈரல், இதயம் ஆகிய உறுப்புகள் தொடர்பான நோய்களைப் போக்கும். இலைகள், பட்டைகள், வேர்கள், பழச்சதை பாம்புக்கடியை மாற்றும். பட்டைகள், கிளைகள் ஒருவித வெண்மையான திரவத்தைச் சுரக்கின்றமையால் மை, டை, வாணிஸ், நிறமைகள் செய்வதற்கு பயன்படும்.


கனடாவில்
TTR TORONTO TAMIL RADIO
கீதவாணி
உலகெமெங்கும்
உலக தமிழ் வானொலி

# வியர்வை நாற்றம், முகப்பரு நீங்குமா?

## மருத்துவக் கேள்வி - பதில்

இராஜசேகர் ஆத்தியப்பன்
rajasegar@thaiveedu.com



**நமது உடம்புதான் கோவில் என்கிறார்களே விளக்க முடியுமா?**

ஆன்மா என்பது இறைவனின் அங்கம். இதனை சுமக்கும் இரதம் மனித உடல்.

நட்ட கல்லைத் தெய்வம் என்று நாலு
புஷ்பம் சாத்தியே
சுற்றி வந்து முணுமுணென்று
சொல்லும் மந்திரம் ஏதடா?
நட்ட கல்லும் பேசுமோ
நாதன் உள்ளிருக்கையில்
சுட்ட சட்டி சட்டுவம்
கறிச்சுவை அறியுமோ?

இந்தப் பாடலை சிவ வாக்கியர் என்ற சித்தர் பாடியுள்ளார்.

**உண்ணும் உணவால் நோய்கள் வருமா?**

நாவுக்கு அடிமையான மனிதன் எதைப்பற்றியும் கவலைப்படாமல் அளவுக்கு மிஞ்சி சாப்பிட்டால் அமிர்தமும் நஞ்சாகும். உணவால் உடலில் ஏற்படும் மந்தநிலையே அனைத்து நோய்களுக்கும் மூல காரணமாக அமைகிறது. உடலின் மந்தத்தில் இருந்து வாயுவும், வாயு மிகுதியால் மலச்சிக்கலும், மலச்சிக்கலால் உடலில் பல சிக்கல்களும் உண்டாவதாக சித்தர்கள் கூறுகின்றனர்.

காணுமே மந்தம் கவலிக்கும் அன்னத்தால்
காணுமே மந்தம் கடுமா மிசம் மீறல்
காணுமே மந்தம் கலந்தமாப் பண்டத்தால்
காணுமே மந்தம் கடுமேதிப் பாலுக்கே'

என்று திருமூலரின் பாடல் விவரிக்கின்றது.

அரைகுறையாக மென்று விழுங்குதல், மாமிசம் அதிகமாக சாப்பிடுதல், மாவில் செய்த உணவுப் பொருட்களை அதிகமாகச் சாப்பிடுதல், எருமைப் பாலை உணவில் அதிகம் சேர்த்தல் போன்றவை மந்தத்தை உண்டு பண்ணும்.

உணவு என்பது வாழ்வுக்கான ஆதாரம். அந்த உணவே வாழ்வின் அச்சாணியையே முறித்து விடும்.

**(Life Style) வாழ்க்கை முறை விளக்க முடியுமா?**

திண்ணமி ரண்டுள்ளே சிக்கல டக்காமல்
பெண்ணின்பால் ஒன்றை
பெருக்காமல் உண்ணுங்கால்
நீர்ச்சுருக்கி மோர் பெருக்கி
நெய்யுருக்கி உண்பவர்தம்
பேருரைக்கில் போமே பிணி

இதனைத் தேரையர் என்ற சித்தர் பாடியுள்ளார். மலம், சிறுநீர் போன்ற உபாதைகளை அடக்காமல், அவ்வப்போது கழித்து விட வேண்டும். புணர்ச்சியில் மிகுதியாக ஈடுபட்டு உயிர்த்துளியான விந்தை வீணாக்கக் கூடாது. நீரைக் காய்ச்சியே பருக வேண்டும். தினசரி ஆகாரத்தில், நெய்யைச் சேர்த்து, நிறைய மோர் குடிக்க வேண்டும். இப்படிப்பட்ட வாழ்வியல் நெறிமுறைகளோடு வாழ்பவரின் பெயரைச் சொன்னாலே நோய்கள் நீங்கி விடும்.

**சிறப்பான அம்சங்களுடன் குழந்தை பெற தமிழர் மருத்துவம் கூறும் வழிமுறை என்ன?**

ஆணும், பெண்ணும் உடலில் மறைப்புகள் இல்லாத நிலையில், ஆசை, அன்பு, அரவணைப்பு, அதற்குப் பிறகு உடலுறவு என்று நிகழ்ந்தால், அப்படி உருவாகும் கருவானது, தாய், தந்தைக்கு உரிய சிறப்பு அம்சங்களுடன் உருவாகும்.

'அண்டத்தில் உள்ளதே பிண்டம்
பிண்டத்தில் உள்ளதே அண்டம்'

**தமிழர் மருத்துவம் கூறும் உடலின் 96 தத்துவங்கள் எவை எவை என்று விவரிக்க இயலுமா?**

பூதம் 5, பொறி 5, புலன் 5, ஞானேந்திரியம் 5, நன்மேந்திரியம் 5, கரணம் 4, அறிவு 1, ஆசயம் 5, கோசம் 5, வினை 2, குணம் 3, ஈடணை 3, மலம் 3, மண்டலம் 3, ராகம் 8, ஆதாரம் 6, நாடிகள் 10, அவஸ்தை 5, வாயு 10, தோஷம் 3 ஆக மொத்தம் 96 தத்துவங்கள்.

**வாத நோய் தீர தமிழர் மருத்துவம் ஒன்று வேண்டும்.**

வெள்ளாட்டுப்பால் 1 லீட்டர், பச்சை முருங்கை இலை 100 கிராம், கடுகு 10 கிராம் எடுத்துக் கொள்ளவும். முதலில் பாலை நன்றாகக் காய்ச்சிய பிறகு மற்ற பொருட்களை போட்டு மீண்டும் காய்ச்சி வடிகட்டிக் கொள்ளவும். இதில் இருந்து தினமும் 200 மிலி சாப்பிட்டுவந்தால் அனைத்து விதமான வாத நோய்களும் குணமாகும்.

**கழுத்து வலி குணமாக தமிழரின் வீட்டு வைத்தியம் என்ன?**

இரண்டு லீட்டர் பசும்பாலை 500 மிலி யாக சுண்டக் காய்ச்சவும். பிறகு அதில், வெல்லம் 200 கிராம், நல்லெண்ணெய் 100 மிலி உளுந்துப் பொடி 200 கிராம் சேர்த்துக் களிபோல் கிளறவும். இதில் எலுமிச்சை பழம் அளவு சாப்பிட்டு மல்லாந்து படுத்தால் இடுப்பில் ஏற்படும் பிடிப்பு, கடுப்பு போன்ற பிரச்சினைகள் தீரும்.

**டாக்டர், எனக்கு வயது 40. ஆறு மாத காலமாக மூட்டுவலியினால் அவதிப்படுகின்றேன். தமிழர் மருத்துவத்தில் என்ன தீர்வு சொல்வீர்கள்?**

கடுகு, மிளகு, உப்பு மூன்றையும் சம அளவில் எடுத்து அரைத்து கொட்டைப்பாக்கு அளவுக்கு தினமும் காலையில் சாப்பிட்டு வந்தால் எப்படிப்பட்ட மூட்டு வலியும் குணமாகும்.

கடுகையும், அரிசி மாவையும் நன்கு அரைத்து பத்துப் போட்டால், மூட்டு வீக்கம், இடுப்பு வலி, கழுத்து வலி போன்றவை தீரும்.

அத்திக்காயையும், சிறுபருப்பையும் சேர்த்துக் கடைந்து சாப்பிட்டால், அனைத்து விதமான கைகால் வலிகள் நீங்கும்.

**எனது மகனுக்கு வயது 19. மிகவும் உடல் இளைத்து தேகம் மெலிந்தவனாகப் பார்ப்பதற்கு தேவாங்கு போன்று இருக்கின்றான். நன்கு தோற்றமளிக்க என்ன செய்ய வேண்டும்?**

அமுக்ரா 100 கிராம், எள் 100 கிராம், உளுந்து 100 கிராம் எடுத்து நன்கு பொடி செய்து கொள்ளவும். 600 கிராம் தேனைக் கொதிக்க வைத்து நுரையை நீக்கவும். பின்னர் அரைத்து வைத்த பொடியைச் சேர்த்து நன்றாகக் கிளறவும். சூடு ஆறிய பிறகு நெய்யை உருக்கிச் சேர்த்து நன்றாக கிளறி பத்திரப்படுத்தவும். இதில் காலை மாலை இருவேளையும் 10 கிராம் வீதம் சாப்பிட்டு உடன் சூடான பால் குடிக்கவும். ஒரே மாதத்தில் வனப்பான மேனிக்கு நான் உத்திரவாதம்.

கீழ்க்காணும் இன்னொரு முறையும் கடைப்பிடிக்கலாம். வெள்ளைப்பூண்டுச் சாறு 10மிலி. இஞ்சிச்சாறு 10மிலி முட்டை வெள்ளைக் கரு 20 மிலி (ஒரு முட்டை) நெய் 10 மிலி (இரு தேக்கரண்டி) தேன் 10 மிலி, உளுந்து மாவு 50 கிராம் என்று அனைத்துப் பொருட்களையும் பிசைந்து வைத்துக்கொண்டு தினசரி சாப்பிட்டு வரவும்.

வாசகர்கள் தொடர்ந்து இதுபோன்று கேள்விகளைக் கேட்பதால் இன்னொரு முறையும் சொல்கின்றேன்.

வெள்ளைப் பூசணிப் பருப்பை (pumpkin seed) அரைத்துப் பாலுடன் மூன்று வேளையும் சாப்பிட இளைத்த உடல் தேறும்.

**இதய தசைகள் பலவீனமாயிருக்கின்றது என்று எனது குடும்ப வைத்தியர் கூறுகின்றார். வலுவடைய ஒரு வழி சொல்ல முடியுமா?**

அன்பரே ஒரு வழி என்ன.. இரண்டு வழிகளைச் சொல்லுகின்றேன்.

சந்தனம் 100 கிராம், தாமரைப்பூ 100 கிராம், குங்குமப் பூ 10 கிராம் எடுத்து நன்கு பொடி செய்து தினமும் அரை கிராம் அளவு தேனில் குழைத்துச் சாப்பிட்டால் இதயத் தசைகள் பலம் பெறும்.

ரோஜாப்பூ 150 கிராம், சந்தனம் 150 கிராம் சாதிக்காய் 150 கிராம் எடுத்து நன்கு தூள் செய்து கொள்ளவும். தினமும் 2 கிராம் அளவு எடுத்து தேனில் குழைத்து சாப்பிட்டால் இதயம் வலுவடையும்.

தினந்தோறும் 20 நிமிடங்களாவது நடை பயிற்சி வேண்டும்.

**தசைப் பிடிப்பு நீங்க என்ன செய்ய வேண்டும்?**

முருங்கை இலை ஒரு கைப்பிடி, சுக்கு (வேர்க்கொம்பு) 1 துண்டு, கடுகு அரைத் தேக்கரண்டி, மஞ்சள் அரைத் தேக்கரண்டி, அரிசி மாவு 100 கிராம் இவற்றை ஒன்றாகச் சேர்த்து நன்றாக அரைத்து பத்துப்போட்டால், தசைப் பிடிப்பு உடனடியாக நீங்கும்.

இன்னுமொரு எளிய வழியைக் கூறுகின்றேன். சூடான பாலுடன் குங்குமப்பூ, சிறிது மஞ்சள் தூள் கலந்து சாப்பிட்டால் தசைப் பிடிப்பு, மூச்சுப்பிடிப்பு போன்றவை குணமாகும். முகத்தில் வசீகரம், கவர்ச்சி கூடும்.

உங்கள் சமையலறையில் குடை மிளகாய் இருந்தால் எடுத்துக் கொள்ளுங்கள். இதனை சிறு சிறு துண்டுகளாக அரிந்து அத்துடன் சின்ன வெங்காயம், தக்காளி, புதினா, பூண்டு, இஞ்சி, மிளகு ஆகியவற்றை சேர்த்து வதக்கி, தேவையான அளவு உப்பு சேர்த்து துவையலாக அரைத்து சாப்பிட்டால் எப்படிப்பட்ட மூச்சுப் பிடிப்பும் தசைப்பிடிப்பும் விலகும்.

**டாக்டர், எனது அக்குள் பகுதியில் வியர்வை நாற்றத்தை என்னால் தாங்க முடியவில்லை. என்ன செய்யலாம்?**

அதிமதுர இலையைத் தண்ணீர் சேர்த்து அரைத்துத் தடவினால் அக்குள் பகுதியில் ஏற்படும் நாற்றம் தீரும்.

**உள்ளம் நலமாக இருக்க என்ன செய்ய வேண்டும்?**

உடலைப் பேண வேண்டும் 'A Sound mind in a Sound body'

'உடம்பார் அழியின் உயிரார்
அழிவர்
திடம்பட மெய்ஞ்ஞானம் சேரவும்
மாட்டார்
உடம்பை வளர்க்கும் உபாயம்
அறிந்தேன்
உடம்பை வளர்த்தேன் உயிர்
வளர்த்தேனே'

என்று திருமூலர் என்ற சித்தர் பாடிவைத் ததன் பொருள் புரிகின்றதா? உங்கள் சரீரம் தேவனுடைய ஆலயமாயிருக்கிறது என்று இயேசு கிறிஸ்து கூறியதன் முக்கியத்துவம் நன்கு விளங்கும்.

■ ■ ■

Arthritis

முழங்கால், தோல்பட்டை, கைவிரல்களில்

திருகு வலியா? விரைவில் குணமடையலாம்

Blood pressure - Hyper Tension

அமைதியான ஆட்கொள்ளி

SILINT KILLER


இரத்த அழுத்தமா

நல்ல சுகமடைய இயற்கை மூலிகை மருத்துவம்




canada 416 - 995 -0416

India -91-9362728808



GTA SQUARE
Grand Opening on August 16, 2008
1st South Asian Indoor Mall
All your shopping and Services
Under One Roof
Law Office
Doctor Office
Pharmacy
Mortgage/ Tax
Coffee & Sandwiches
Party Supplies
Gift Items
Photocopy Shop
Cool Bar
Custom Design Clothes
Spa/ Facial for Ladies
Electronics
TV/ Computer Repairing
Kids Clothing
Printing Services
Ink Toner Cartridges Sales
Office Supplies
Ladies Garments
Real Estate Inspection
Baby Items
Dry Cleaning
Accounting Services
Tax Services
Newspaper Office
Real Estate Office
Dollar Store
Physiotherapy
Convenience Store
Video Games
Tours
Printing
Book Store + Video
Mortgage/ Investment/ Financing
Bakery
Computer Store
Jewellery Store
Salon
CD/ Video & Audio-Stores
Textiles
Telecommunications
Cell Phone
Tailoring
Money Transfer
Dollar Store
Middlefield Rd.
N
Finch Ave.
5215 Finch Ave. East
Scarborough, ON M1S 0C2
(Finch & Middlefield)



வீடு, வியாபாரம் வாங்க, விற்க....
20 வருடங்களாக இத்துறையில் முன்னணியில்
அனுபவம்! அறிவு!! திறமை!!! பொறுமை!!!
KARU'S ROYAL TEAM
Top 10 TEAM in CANADA
Karu Kandiah FRI.CRES.,
Real Estate Broker
THE CHAIRMAN'S CLUB
NATIONAL Award Winner 2003 - 2007
Top 1% in Canada
REAL ESTATE துறையில் ஈடுபட்டு வெற்றி காணவிரும்புகிறீர்களா? அழையுங்கள்.....
Finch/Staines
$474,900 For Sale
4+1 Bedrooms, 4 Washrooms, Just Like A Model Home* A Must See! Approx $75,000 In Upgrades, Gorgeous Detached 2 Storey Home
9th Line/Hooverpark
$465,000 For Sale
4 Bedrooms, 3 Washrooms Gorgeous And Unique Mattamy Built Home On Premium Lot With Panoramic View Of Park. Tastefully Upgraded.
Mountainash/sandalwood
$549,900 For Sale
5 Bedrooms, 4 Washrooms Approx. 3,340 Sq Ft Only 1. Yrs Old In A Desirable High Demand Location 9Ft Ceilings On Mn, Sunken Lr
Mccowan/Ellesmere
$250,000 For Sale
2 Bedrooms, 2 Washrooms Enjoy Luxury Condo Living In This Unit Close To Scarborough Town Centre, Rt, Ttc, Great Schools, Parks
Heartlake/sandalwood
$349,900 For Sale
3+1 Bedrooms, 4 Washrooms Upgraded & Decorated Thru-Out Bsmnt Finished-Kit With W/O To Yard & Deck Com Lr/ Dr-Formal, Family Room
Mccowan/Sheppard
$196,900 For Sale
2 Bedrooms, 2 Washrooms Beautiful Penthouse Unit. Approx 1350 Sq.Ft. **9Ft Ceiling**Newly Refinished Parquet Floor With Mocha Stain
Morningside/Finch
$279,900 For Sale
3+2 Bedrooms, 3 Washrooms All Brick Home, Close To Schools, 401, Shopping, Ttc, University, College, Library, Medical Clinics, Parks
Victoriapark/Lawrence
$196,000 For Sale
3 Bedrooms, 2 Washrooms Come And Live In A Great Wall Kept Building With Library, Exercise & Party Room
Neilson/Mclevin
$319,000 For Sale
3+1 Bedrooms, 4 Washrooms Detached Home In A Quiet Neighbourhood, Close To Public & Catholic Schools, Ttc And Shopping.
Bayly/Monarch
$259,900 For Sale
3 Bedrooms, 3 Washrooms Brand New Freehold Townhouse, Never Been Lived In! Sundial-Jackson Model. 1620 Sq Ft
Church And Delaney
$449,900 For Sale
4+1 Bedrooms, 4 Washrooms 'Fabulous Riverside Estates Home' In Great Family Community. All Brick, 3200 Sq Ft Interlocked Walkway
Mccowan/Denison
$429,000 For Sale
4+2 Bedrooms, 4 Washrooms Gorgeous Premium Lot! Main Floor Laundry, New Roof, 2 Bedroom Basement Apartment With Separate Entrance.
9th Line/14th Ave
$519,900 For Sale
4 Bedrooms, 3 Washrooms Excellent Box Grove Neighbourhood! 2712 Sq Ft! Less Than 1 Year New Arista Home! Dble Dr Entry W/Porch
14th Avenue/9th Line
$599,000 For Sale
5 Bedrooms, 4 Washrooms Stunning Green Park True Model Home - 3350 Approx Sq Ft, 55 Thousand In Total Upgrades
Mavis/Dundas
$399,900 For Sale
3+1 Bedrooms, 4 Washrooms Fabulous Detached Central Mississauga Home. Freshly Painted, Bright Modern Kitchen With Backsplash
Williamsparkway/400
$339,000 For Sale
3 Bedrooms, 3 Washrooms Arista Home In A Demanding Lakelands Village. Sunken Foyer, Oak Staircase With Natural Finish Cultured Marbles
Mavis/Steeles
$449,900 For Sale
4+1 Bedrooms, 3 Washrooms Attention Serious Buyers! Check Out This Beauty In The Brampton-Mississauga Border! 9' Ceiling
Keele/Finch
$175,000 For Sale
3 Bedrooms, 2 Washrooms Budget! Freshly Painted, Spacious 3 Bedroom. Very Clean, Good Size Bedrooms, In Good Condition
Passmore/Markham
$369,800 For Sale
3 Bedrooms, 2 Washrooms Brookside 3 Bedrooom Brick House Backing On Park/School. Close To Ttc, Minutes To 401, Shopping
Brimley/Lawrence
$299,900 For Sale
3+3 Bedrooms, 3 Washrooms Income Potential Home. Updated Bungalow, Fully Renovated 3 Bdrm Basement, Window 2004, New Carpet
ROYAL LEPAGE
Connect Realty, Brokerage
INDEPENDENTLY OWNED AND OPERATED
DIR: 416 284 5555
Bus: 416-284-4751(24 Hrs)
Toll Free: 1-888-766-4456
E-Mail: karusroyalteam@yahoo.ca
Visit: www.royalteamonline.com
880 Ellesmere Rd, Suite 203, Toronto

# வியாபாரத்தை விட்டுச்செல்ல வேண்டும்.



**கல்யாணி நாதன்**
நிதி திட்டமிடல் ஆலோசகர்
kalyany@thaiveedu.com

நீ என்ன கொண்டு வந்தாய் கொண்டு செல்வதற்கு? எங்கோ பார்த்த ஞாபகம் வருகிறதா? ஆம் நம்மவர் வீட்டு சுவர்களில் பிறேம்போட்டும், போடாமலும் கீதாசாரம் என்று தொங்கும் படத்தில் உள்ள வாசகம் தான் இது. ஆம் நாம் கொண்டு வந்தது ஒன்றுமில்லை. இங்குதான் எல்லாம் பெறப் பட்டது. எனவே இங்கு விட்டுச்செல்லத் தானே வேண்டும். அப்படியானால் எமது முயற்சியினால் சேர்த்த செல்வத்தை அப்படியே அம்போ என்று விட்டுச்செல்வதுதானா வாழ்க்கை.

இல்லை. உங்களுக்கு அதை யார் அனுபவிப்பது என்பதைத் தீர்மானிக்கும் உரிமை உண்டு. ஆனால் அதற்கு நீங்கள் தகுந்த முறையில் திட்டமிட்டு செயல்பட வேண்டும். அல்லாவிட்டால் பாடுபட்டுத்தேடி பணத்தை புதைத்துவைத்து யாரோ அனுபவிக்க குடுத்த கதையாய் போய்விடும்.

அனுபவத்தில் நான் கண்ட ஒரு உண்மை எம்மவர் சிரமப்பட்டு உழைக்கும் அளவிற்கு திட்டமிடலில் நேரத்தை செலவிடுவதில்லை என்பதே. ஒரு தொழிலை ஆரம்பித்து அயராது உழைத்து அதனை கட்டி எழுப்பும் கவனத்தில் திட்டமிடல் பற்றிய விடயத்தில் அக்கறை இல்லாமல் இருந்து விடுகிறார்கள். இதனால் தமது வாரிசுகளுக்கு செல்லவேண்டிய செல்வத்தில் பெரும்பகுதி அரசாங்கத்திற்கும் தமக்கு விரும்பாதவர்கைக்கு மாறுவதற்கும் காரணமாயிருக்கிறார்கள். எனவே இங்கே பெற்றசெல்வத்தை இங்கு உள்ள வாரிசுகளுக்கு எப்படி விட்டுச் செல்லலாம் எனப் பார்ப்போம்.

நீங்கள் ஒரு சொந்தமான தொழிற்துறை உரிமையாளராயிருப்பின் அதன் வருவாயை, பலனை நீங்களும் உங்களைச் சார்ந்தவர்களும் அனுபவத்தில் தான் தங்கியுள்ளது. இதற்காக திட்டமிடுவது ஒரு உயில் எழுதுவது போன்றதே. ஆனால் உயில் எழுதுவதை பிற்போடுவதுபோல எம்மவர் நிதி திரட்டுவதையும் பிற்போடுகிறார்கள். கிட்டதாயின், வெட்டென மற என்ற வாக்குப்படி கொண்டு செல்ல முடியாத செல்வத்தை விட்டுச்செல்லும் வாரிசுகளுக்கு எப்படி பயன் படச்செய்யலாம் எனப்பார்ப்போம்.

## சுயதேவை முதல்:

தனக்கு மிஞ்சியது தான் தானம் என்பார்கள். உங்கள் தொழில் நிறுவனம் தான் உங்கள் நாளாந்த தேவைக்கான செல்வத்தை தருவதாகில் முதலாவதாக உங்களுக்கு வேலை செய்ய முடியாத நிலை வந்தால் தொடர்ந்து வருவாய் வர திட்டமிடல் அவசியம். உதாரணத்திற்கு உரிமையாளராகிய உங்களுக்கு Stoke வந்து தொடர்ந்து தொழில் செய்ய இயலாத நிலை வந்தால் நீங்களும் உங்கள் குடும்பமும் நடுத்தெருவில் நிற்கவேண்டியதுதான். இதற்காக திட்டமிட்டு தகுந்த காப்பை உறுதிசெய்ய காப்புறுதி வைத்திருப்பது அவசியம்.

## தொழிலில் தேவை:

நாம் ஓய்வுபெறும் காலம் வரை இருந்து பின் எமது வியாபாரத்தை எப்படி நாம் விரும்புபவர்களுக்கு கொடுக்கலாம் என்று இருப்பதிலும் முன்கூட்டியே திட்டமிடுவதினால் பெருமளவு பணத்தை மீதம் பிடிக்கலாம். அதேவேளை உங்கள் தொழில் அமைப்பில் ஒரு முக்கிய இயக்குனருக்கு நோய் அல்லது இறப்பு வந்தால் அதனை ஈடுசெய்வதற்கும் திட்மிடல் அவசியம். இவை அனைத்தையும் மனதில் கொண்டு செயலாற்றுவது ஒளிமயமான எதிர்காலத்திற்கு உதவியாகயிருக்கும். மேலும் உங்கள் வியாபாரத்தை வாரிசுகளுக்கு விட்டுச் செல்லும் திட்டத்தை காலத்திற்கு காலம் மீளாய்வு செய்வதவசியம். முக்கியமாக உங்கள் கிட்டிய உறவினர்களில் பிறப்பு, மரணம், திருமணம் அல்லது உங்கள் கிட்டிய உறவினர் உங்களுடன் சேர்ந்து உழைக்கும்போது அவற்றைக் கவனத்தில் கொண்டு திட்டத்தை திருத்தி அமைப்பதவசியம்.

## உங்கள் வண்டியில் எல்லேரும் ஏறிவிட்டார்களா?

இங்கு நான் வண்டி எனக்குறிப்பிடுவது உங்கள் சிந்தனையை. நீங்கள் 'சரி இரண்டாவது பிள்ளைக்கு இந்தத்தொழில் அமைப்பை விட்டுச்செல்வோம்.'என்று இருப்பீர்கள். ஆனால் இரண்டாவது பிள்ளைக்கு இந்தத் தொழிலில் விரும்பமில்லாமல் வெறுப்பு இருக்கலாம். எனவே இத்தகைய தீர்மானங்களை கலந்தாலோசித்து தக்க ஆலோசகர் வழிநடத்தலில் செயல்படுவது எதிர்கால ஏமாற்றத்தை தவிர்க்கும். இதில் கவனத்தில் எடுக்கவேண்டிய முக்கிய விடயம் தொழில்துறை அறிவு வேறு, கொண்டு நடத்தும் திறன் வேறு. சில சமயங்களில் உங்கள் குடும்பம் அந்த வியாபாரத்தின் உரிமையை வைத்துக்கொண்டு அதை முன்னெடுத்து நடத்துவதற்கு தக்க ஊழியரை நியமிப்பது நலம். நீங்கள் தொழில் அறிவும், நடத்தும் திறமையும் கொண்டவராயிருக்க உங்கள் வாரிசுகள் அப்படி இல்லாதிருக்கலாம்.

சில சந்தர்ப்பங்களில் அந்த வியாபாரத்தை விற்று விடுவது நலம். காரணம் பணமாக அதன் பெறுமதி கிடைப்பதுடன் குடும்பப் பிளவு ஏற்படுவதை தவிர்க்கலாம். இத்தகைய முடிவுகள் அறிவுபூர்வமாக எடுக்க வேண்டுமேயன்றி உணர்ச்சிகளுக்கு இடம் கொடுக்கலாகாது.

ஒரு வியாபாரத்தின் பெறுமதியை விற்காமல் வேறு விதத்தில் பெறலாமா என்று பார்ப்பது நலம். சரியான திட்டமிடல் செய்பவர் வியாபாரத்தின் பெறுமதியை கூட்டும் வேளையில் அதற்குச் செலவிடும் வரிப்பணத்தை மீதம் பிடிக்கச்செய்வதுடன் அதை முதலீடு செய்வது, ஆயுள்காப்புறுதியை பயன்படுத்தி சேமிப்பு தக்கவிதத்தில் வியாபாரத்தை ஒழுங்குசெய்வது போன்றவற்றால் பணத்தை மிச்சப்படுத்தலாம்.


உங்கள் வியாபாரத்தை விட்டுச்செல்லும் திட்டத்தில் உங்கள் சொந்த செல்வமும் ஒரு அங்கமாக அமைவது சிறப்பாகும். காரணம் இவை ஒன்றோடு ஒன்று பின்னிப்பிணைந்தவை. உங்கள் ஓய்வுதியத்தை உங்கள் வியாபாரத்திலிருந்து பெறுவதற்கான ஏற்பாடுகள் செய்யலாம். இதனை Retirement compensation Arrangements (RCS's) என்றும் குறிப்பிடுவார்கள். மேலும் Indiduval Pension Plan IPP's) என்ற முறையையும் இங்கு குறிப்பிடலாம். இத்திட்டங்களை உங்கள் சொந்த செல்வத்தின் விளைவுகளுடன் சேர்த்து செய்வதால் கூடிய பயனை பெறுவீர்கள்.

திட்டமிடல் என்பது வெற்றியின் அச்சாணி. 'குருடன் பெண்டிலுக்கு அடித்த மாதிரி.' என்பார்கள். ஏதோ அந்தந்த நாளை கவனித்துச் செய்தால் சரி என்று இருப்பது நீங்கள் பெரிய பயனைப்பெற உதவாது. சரியான திட்டமிடல் உங்களுடைய பொருளை உங்களுக்கு விரும்பிய விதத்தில் விட்டுச்செல்வதற்கு உதவும். கொண்டு செல்வது ஒன்றுமில்லை என்றாலும் விட்டுச் செல்வது உங்களுக்கு விரும்பியவர்களுக்காக இருக்கட்டும். திட்டமிட்டு வளம்பெற என வாழ்த்துக்கள்.

■ ■ ■



# சூரியன்



மாறன் செல்லையா
- நிதி திட்டமிடல் ஆலோசகர் -
maran@thaiveedu.com

வான் வீதியில் ஏழு குதிரைகளில் பூமியை கிழக்கு மேற்காக வலம் வரும் சூரிய பகவானை வழிபட்டு பலன் பலத்தையும் பெற்று வாழ்வைச் சிறப்பிக்க நம்மவர் பலரும் முயற்சி எடுத்துவரும் இந்த நேரத்தில் உலகின் சக்திப் பிரச்சினைக்கு முடிவு தேடி வரும் விஞ்ஞானிகள் சூரிய பகவானின் உதவியுடன் இந்த பிரச்சினைக்கு



ஒரு விடைதேடலாம் என்று அக்கறை காட்டி வருகிறார்கள்.

இதனால் இந்த சூரிய தொழில்நுட்பத் துறையில் முதலீட்டாளர்கள் பலரும் ஆர்வத்துடன் முதலிட்டுவருகிறார்கள் புதிய தொழில் நுட்ப வளர்ச்சிகள் உலகின் பல்வேறு நாடுகளிலும் வளர்ச்சி காரணமாக அதிகரித்து வரும் சக்தித் தேவை, கிராமப்புறங்களின் வாழ்க்கைத்தர வளர்ச்சி காரணமாக இந்தத் துறைகள் நீண்ட கால வளர்ச்சியில் லாபமீட்டக்கூடிய தன்மையை பலரும் உணர்ந்துள்ளார்கள்.

UBS ஆய்வாளர் Stephen Chin என்பார். உலக சூரிய சக்தி தொழில்நுட்ப வளர்ச்சி சம்பந்தமாக ஒரு குறிப்பு ஒன்றை வெளியிட்டுள்ளார். உலக சூரிய சக்தி ஒரு சீராக வளர்ச்சியைக் காட்டாததாலும் நீண்ட காலத்தில் பிரகாசந் தரக்கூடியது என்கிறார் அவர்.

Germanyஇல் உள்ள 30% வளர்ச்சியடைந்து கொண்டிருக்கும் இந்தத் துறையில் 46% புதிய அலகுகள் ஜேர்மனியிலேயே அமைக்கப்பட்டுள்ளன. ஆனால், மற்றைய நாடுகளில் பலமான வளர்ச்சி தென்பட்ட போதும் அங்கு சட்டவாக்கங்கள் மூலமாகக் கிடைக்கக்கூடிய ஆதரவைப் பார்த்து இந்த தொழில் சார்ந்தவர்கள் மதில் மேல் பூனையாகக் காத்து இருக்கின்றார்கள்.

உதாரணமாக அமெரிக்காவைப் பொறுத்தமட்டில் எதிர்வரும் ஜனாதிபதி தேர்தல் முடிவைப் பொறுத்து புதிய நிர்வாகம் அந்தத் திசையில் போகக்கூடும் என்று அந்த நிர்வாகிகள் தரக்கூடிய முதலீட்டு வரி விலக்குகள் குறித்தும் தெளிவாக தெரிவதற்காகக் காத்திருக்கிறார்கள். தற்போது இருக்கும் வரி விலக்குகள் 2008இன் முடிவில் காலாவதியாகிவிடும்.

ஆனால், புதிய புதிய நாடுகளில் புதிய புதிய சந்தர்ப்பம் கிடைத்து வருகையில் வளர்ந்த நாடுகளில் கிடைக்கக்கூடிய வரிச் சலுகைகளை விட இந்த புதிய சந்தர்ப்பங்கள் கூடிய வருவாய் கிடைக்கக்கூடும். தற்போது 9 நாடுகளில் 100 MW மின் சக்தி சூரியனில் இருந்து பெறப்படுகிறது. இது 2012இல் 30 நாடுகளாக அதிகரிக்க இருக்கிறது. இதனால் இன்னும் பல சந்தர்ப்பங்கள் முதலிட கிடைக்கும் என்கிறார் திரு. Chin அவர்கள். Koreaவில் மட்டும் தற்போது 50 MW ஆக இருக்கும் மின் உற்பத்தி 2012இல் 1.3 GWஆக உயர இருப்பதாக கணிபிடப்பட்டுள்ளது. இந்தத் துறையின் வளர்ச்சி புதிதாக கண்டுபிடிக்கப்பட்ட மெல்லிய ஆடை (Thin film) ஒளி அழுத்த கலங்கள் மூலம் எளிதாகவும் வினைத்திறனுடனும் கூடிய மின்சக்தியைப் பெறக்கூடியதாக உள்ளது. இந்த மெல்லிய ஆடை ஒளி அழுத்தக் கலங்கள் பளிங்கு ஒளி அழுத்தக் கலங்களை விட வேகமாக வளரும் எனவும் திரு Chin அவர்கள் எதிர்வு கூறுகிறார்கள்.


இந்த மெல்லிய ஆடை ஒளிஅழுத்தக் கலங்களில் புதிய இரசாயனங்கள் பல மிக மெல்லிய படையாக பரவி இந்த புதிய கலங்கள் செய்யப்படுகின்றன. ஆனால், Silionஆல் செய்யப்படும் கலங்கள் தடிப்பு கூடியவையாக இருக்கும்.

Applied Material என்ற நிறுவனத்தை (AMAT/Nasdaq) என்ற நிறுவனத்தை மிகவும் பெருமைப்படுத்திக் கூறும் திரு Chin அவர்கள் அதனுடைய உற்பத்தி 5.7 Million மட்டுமே உள்ளதாக மிகவும் மெல்லிய ஆடையை தயாரிப்பதாகக் கூறினார்.

அத்துடன் தற்போது மின்சார விநியோகத்துடன் தொடர்பு கொடுக்கப்படாத கிராமப்புறங்களில் இப்படிப்பட்ட சூரிய சக்திக் கலங்களுக்கு நல்ல மவுசு இருக்கும் என் திரு Chin அவர்கள் குறிப்பு மேலும் கூறுகிறது. சில ஆய்வாளர்கள் தற்போதைய அளவான 300 MWஇலிருந்து சில ஆண்டுகளில் 30மடங்காக திகரிக்கும் எனத் தெரிவித்து இருக்கிறார்கள்.

ஆனாலும் இந்தத் துறை முதலீட்டாளர்களுக்கு ஆபத்து நிறைந்ததாகவே இருக்கிறது. பல்வேறு ஒரேமாதிரி நிறுவனங்களிடையே போட்டியும் வீழ்ச்சி அடைந்து வரும் அடிப்படைப் பொருள் விலைகளின் காரண மாக கூடுதலான வழங்கல் காரணமாக ஒளி அழுத்த கலங்களின் வலைகளிலும் வீழ்ச்சி காணப்படக்கூடும் என்ற நிலையில் இந்த நிறுவனங்களின் பங்குகளின் விலைகள் இடர் நிறைந்தாகவே இருக்கின்றது.

■ ■ ■



உங்கள் குழந்தைகளின் உறுதியான எதிர்காலத்திற்கான முதலீடு



## HERITAGE EDUCATION FUNDS

Save towards your child's post-secondary education and find out how the government can help you pay for it.

- With a Heritage Education Funds RESP How much can you comfortably save?
- Want to start building your child's future today?
- 40 years of RESP expertise helping families from coast to coast.
- Start Early, Invest often, Stay invested.
- Start saving now and plan for your child's future possibilities.

**We are also hiring sales representatives that are self motivated and are capable of building their own business.**

HERITAGE Educational Foundation

**Thaya Balan**
(Agency Director)
**416.831.4725**





அமைதியான வாழ்க்கைக்கு ஓர் அருமையான தீர்வு காப்புறுதி

**Life Insurance • Critical Insurance • Long Term Coverage • Disability Insurance**
**Final Expenses • Dental & Hospital Expenses • Travel Insurance**

All your Insurance Needs



**Thaya Balan**
Licensed Insurance Broker
Dir: **416.831.4725**
**Morning Star Financial Service**
5050 Dufferin St., Suite 218, Toronto, ON M3H 5T5
Tel: 416.661.9155 ext. 340

INDUSTRIAL ALLIANCE INSURANCE AND FINANCIAL SERVICES INC.
MEDAVIE BLUE CROSS
TRANSAMERICA REINSURANCE
Canada Life
Manulife Financial
RBC Insurance

# Shan Thayaparan



Sales Repesentative

**To Sell or Buy Call**

## "Shan's Home Team"

**Dir: 416.567.7675 / Bus: 416.321.6969**

**Web:www.shan123.com E-mail: shan123@rogers.com**

"FREE MARKET EVALUATION"
"FLEXIBLE COMMISSION"

Your peace of mind is our goal.....

**HomeLife GTA Realty Inc. Brokerage**

206 - 1711 McCowan Rd., Scarborough, ON. M1SS 3Y3

Not intended to solicit properties currently listed for sale or buyers under contract








# Looking for.......

- > Mortgages
- > Refinancing
- > 2nd Mortgages
- > Business Loans

## Call 416-826-7426

**Your call will be answered**






**Call Now 416-826-7426**

# Are you a Landlord?
# Looking for good tenants?
# Don't worry................

**We will help you to find good tenants.**
**We Do...**

- > MLS Listing of your property
- > Credit, Reference & Employment Check
- > Post dated Cheques for a year
- > Your Peace of Mind for a One month Rent.

## காசுமேலே காசுவரும் நேரமிது

# வீட்டு அடமானக் கடனும் நடைமுறைக்கு வரும் புது விதிமுறைகளும்




பெரி முத்துராமன்

- நிதித்துறை ஆலோசகர் -

muthuraman@thaiveedu.com


அமெரிக்க வீட்டுக் கடன் பிரச்சினை அமெரிக்கப் பொருளாதாரத்தை மட்டும் பாதிக்கவில்லை. உலகின் பல நாட்டு வங்கிகளுக்கும் பிரச்சினையை ஏற்படுத்தியுள்ளது. ஏனென்றால் பல நாட்டு வங்கிகளும், அமெரிக்காவில் பொறுப்பில்லாமல் கொடுக்கப்பட்ட வீட்டுக் கடன்களை நல்ல முதலீடுகளாகக் கருதி அவற்றில் பணத்தை முதலீடு செய்திருந்தது தான் காரணம். இதே காரணங்களுக்காக அமெரிக்க வங்கிகளின் பங்குகளும் பங்குச் சந்தையில் பெரும் சரிவை ஏற்படுத்தியுள்ளன. அமெரிக்க வங்கிகளின் செயல்களினால் மொத்த பங்குச் சந்தையும், அமெரிக்கப் பொருளாதாரமும் தள்ளாடிக் கொண்டிருக்கின்றது. இதைப் பற்றி தனிப்பட்ட முறையில் அமெரிக்க அதிபர் புஷ் என்ன நினைக்கிறார்?

ஒரு வேட்பாளருக்காக பணம் சேகரிக்கும் கூட்டத்தில் கலந்து கொண்ட புஷ்ஷிடம் இந்தக் கேள்வி கேட்கப்பட்டது. தொலைக்காட்சி காமிராக்களை நிறுத்தச் சொல்லி விட்டு, வேடிக்கையாக புஷ் அளித்த பதில் இதோ:

'வால் தெரு அளவுக்கு அதிகமாகக் குடித்து விட்டது" 'Wall Street got drunk" வால் தெருதான் அமெரிக்க நிதிச் சந்தையின் மூளை எனலாம். அளவுக்கு அதிகமாக (அந்த சந்தையை நிர்வகிப்பவர்கள்) குடித்ததனால் அமெரிக்கப் பொருளாதாரம் தள்ளாடுகின்றது என்று வேடிக்கையாக அளித்த பதிலை ரகசியமாக செல்போன் மூலமாகப் பதிவு செய்து இணையத் தளங்களுக்கும், தொலைகாட்சி நிலையங்களுக்கும் அனுப்பிவிட்டார் ஒருவர். அது போகட்டும், இப்போது கனடிய பொருளாதாரத்துக்கு வருவோம்.

அமெரிக்க வீட்டுக் கடன் பிரச்சினையால் கனடிய வங்கிகளின் பங்கு விலைகளும் சரிந்திருப்பது ஊர் அறிந்த உண்மை. மேலும் வீட்டுக் கடன் கொடுப்பதிலும் அமெரிக்காவைப் போன்று சில புதுமைகள் இரண்டு வருடங்களுக்கு முன் கனடாவிலும் அறிமுகப்படுத்தப்பட்டன.

### குறிப்பிடத்தக்க இரண்டு அம்சங்கள்:

- 40 வருடம் வரை வீட்டுக் கடனைத் திருப்பிச் செலுத்துவது, (முன்பு 25 வருடம் வரை தான் காலம் தரப்பட்டிருந்தது)
- பணமே போடாமல் முற்றிலும் கடனில் வீடு வாங்குவது.

இந்த நிலையில் அமெரிக்காவைப் போன்று கனடிய பொருளாதாரத்திலும் பிரச்சினைகள் வராமல் தடுப்பதற்காக கனடிய அரசாங்கம் சில புது விதிமுறைகளை அறிவித்துள்ளது. இந்தப் புது விதிமுறைகள் முதன் முறை வீடு வாங்குபவர்களை நிச்சயம் பாதிக்கும் என்பதிலும், வீட்டு விலைகளில் சற்றே சரிவையும் உண்டாக்கும் என்பதிலும் சந்தேகம் ஒன்றுமில்லை.

மேலே தொடருமுன் அந்த புது விதிமுறைகளின் சுருக்கத்தை இங்கே பார்ப்போம்.

- வீட்டுக் கடனைத் திருப்பிச் செலுத்தும் காலம் நாற்பதிலிருந்து 35 வருடங்களாகக் குறைக்கப்படுகின்றது.
- குறைந்தபட்சம், வீடு வாங்க Down Payment என்று சொல்லப்படும் சொந்தப் பணம் ஐந்து சதவீதமாவது இருக்க வேண்டும்.
- குறைந்தபட்சம் கிரிடிட்ஸ்கோர் 620இருக்க வேண்டும். மேலும் இந்த குறைந்த பட்ச கிரிடிட் ஸ்கோருக்கான காரணங்களும் ஆராயப்பட்டு ஏற்றுக்கொள்ளத்தக்கதா என்று முடிவு செய்யப் படும். (முன்பு கிரிடிட் ஸ்கோர் 580 இருந்தாலே வீட்டுக் கடன் கொடுக்கப்பட்டது)

### கடினமான முறையில் அறிமுகப் படுத்தப்படும் வீட்டுக் கடனுக்காக புதிய படிவங்கள்

கனடாவில் 20 சதவீத முன்பணம் அல்லது Down Payment இல்லாமல் கடன் வாங்குபவர்கள் வீட்டுக் கடனுக்கான காப்பீட்டை CMHC என்ற காசு நிறுவனத்திடமிருந்தோ பெற்றிட வேண்டும் என்பது விதி. பெரும்பாலான காப்பீட்டை நடைமுறையில் வழங்குவது CMHC தான். இப்போது அறிவிக்கப்பட்டிருக்கும் விதிமுறைகள் CMHCக்குத் தான் பொருந்தும் என்றாலும் தனியார் நிறுவனங்களும் அவற்றைப் பின்பற்றலாம் என்று நினைக்கத் தோன்றுகின்றது. மேலும் கனடிய வங்கிகள் ஏற்கெனவே வீட்டுக் கடன் வழங்குவதைக் கடினமாக்கியுள்ளன. இந்நிலையில் அரசின் அறிவிப்பை பல வங்கிகள் மனப்பூர்வமாக ஏற்றுக்கொண்டு நடைமுறையில் எல்லாவித வீட்டுக் கடன்களுக்குமே அவற்றை பொது விதியாகக் கருதிச் செயல்படத் துவங்கியுள்ளன. அரசின் புதுவிதிமுறைகள் அக்டோபர் 15 முதல் நடைமுறைக்கு வருகின்றது.

ஏற்கெனவே பணமே போடாமல் வீட்டுக் கடன் வாங்கியவர்களையும், 40 வருடங்களுக்குத் திருப்பிக்கட்ட அனுமதி பெற்றவர்களையும், இந்தப் புது விதிகள் பாதிக்காது என்பதையும் இங்கே குறிப்பிட விரும்புகின்றேன்.

### மாறிவரும் சூழ்நிலையில் என் அறிவுரை இதோ

கடன்கள் பெறுவது என்பது பொதுவில் கனடாவில் கடினமாகி வருகின்றது. இந்த நிலையில் உங்கள் கிரிடிட் ஸ்கோரை 720க்குக் குறையாமல் வைத்துக் கொள்ள முயல வேண்டும். அப்படி இருக்குமானால், (தகுந்த வருமானமும் இருக்கும் போது) புதிதாக எத்தகைய வீட்டுக் கடன்களையும் பெறுவதில் சிரமம் இருக்காது. கூடிய ஸ்கோர் குறைந்த வட்டியில் கடனைப் பெற்றுத் தரும் என்பதையும் மறந்து விடக் கூடாது. 720 ஸ்கோரைப் பெறுவது ஒன்றும் சிரமம் அல்ல. கடன்களைத் தவணை தவறாமல் உரிய காலத்துக்குள் செலுத்தி வரும் போதும், உங்களிடம் இருக்கும் கிறடிட் காா்ட், லைன் ஆப் கிரிடிட் போன்றவற்றைப் பாதிக்கும். குறைவாக (50 சதவீதத்துக்குக் குறைவாக) உபயோகித்து வரும் போது எளிதில் 720 ஸ்கோரைப் பெற்று விடலாம். அதற்கு நீங்கள் தயாரா? புதிய விதி முறைகள் கிரிடிட்ஸ்கோர் குறைந்த பட்சம் 620 இருக்க வேண்டும் என்று சொன்னாலும், 620 இருக்கும் எல்லோருக்கும் கடன் கிடைக்கும் என்று சொல்ல முடியாது. 620 ஆக, (அதாவது குறைவாக) இருப்பதற்கான காரணங்களும் ஆராயப்படும். இத்தகைய குறைந்த ஸ்கோர், காலதாமதம், மற்றும் பாங்க்சப்ரஸி) காரணமாக இருந்தால் கடன் மறுக்கப்படலாம். கிரிடிட் காா்ட், லைன் ஆப் கிரிடிட் போன்றவற்றில் கூடுதல் கடன் இருப்பதன் காரணமாக ஸ்கோர் குறைந்திருந்தால் கடன் கிடைக்க வாய்ப்பு உள்ளது.

சுருங்கச் சொன்னால் வரவுக்கு ஏற்ற செலவு இருக்க வேண்டும், விரலுக்கு ஏற்ற வீக்கம் இருக்க வேண்டும். தாத்தா பாட்டி சொன்ன மாதிரி பணத்தைக் கையாண்டால் பிரச்சினை வராது. இல்லையேல் பிரச்சினை தான். இதைத்தான் அமெரிக்க பொருளாதார நிபுணர்கள் தற்சமயம் கண்டு-பிடித்திருக்கின்றார்கள். அந்த கண்டு பிடிப்பின் அடிப்படையில் தான் கனடிய அரசாங்கமும் விதிமுறைகளை மாற்றுகின்றது. புஷ்ஷின் வேடிக்கைப் பேச்சும் இதைத்தான் குறிப்பிடுகின்றது.

காசு மேல காசு வரும் நேரத்தில் உங்கள் வழி முறைகள் சரியான முறையில் இல்லாவிட்டால் நீங்களும் மாற்றிக் கொண்டு விடுங்கள். பின்னால் பிரச்சினை ஒன்றும் வராது. வாழ்த்துக்கள்.

■ ■ ■


## சக்தி என்றால் காப்புறுதி



1983ஆம் ஆண்டிலிருந்து காப்புறுதித்துறையில் முழுநேர நெறியான சேவை

"சகல காப்புறுதி நிறுவனங்களினதும் பிரதிநிதி"

- பாரபட்சமின்றி எந்த நிறுவன திட்டமாக இருப்பினும் தெளிவான துல்லியமான இலகுவில் கிரகிக்கும் வண்ணம் விளக்கம்.
- 9000 இற்கும் மேற்பட்ட திருப்திகரமான வாடிக்கையாளர்கள்
- 90க்கும் மேலான துரித காப்புறுதி இழப்பீடுகள்.
- எனது வாடிக்கையாளர் பட்டியலில் ஒருசில
  - வருமான வரி இலாகா, கணக்கியல் சோதனையாளர்கள் (Revenue Canada Auditors) .
  - நிதியமைச்சு அதிகாரிகள் (Ministry of Financial Services).
  - காப்புறுதி பிரதிநிதிகள், அவர்கள் குடும்ப அங்கத்தவர்கள், முதியோர், சிறார்கள்.
  - பிரபல வர்த்தகர்கள், குடும்பத்தவர்கள்.
  - பிரபல எழுத்தாளர்கள்,
  - வைத்தியர்கள்,
  - வழக்கறிஞர்கள்
- 85 வயதுக்குட்பட்ட எவருக்கும், எச்சூழ்நிலையிலும், நிச்சயமாக காப்புறுதியளிக்கும் திறமை (நிறுவனங்களின் நிபந்தனைப்படி)
- எக்காப்புறுதித் திட்டமாக இருப்பினும், விளக்கத்துடன் மன ஆறுதல் திட்டமாக பெற்றிட தயங்காமல் நாடுங்கள்
- மருத்துவ ரீதியின்றி 275,000 வரை காப்புறுதி

## - சக்திவேல் -

தொலைபேசி: 416.706.3530, 905.428.9299, 905.763.8912

Fax: 905.428.9307 Email: george14@sympatico.ca

மன்னிக்கவும்!

வாகனக் காப்புறுதி (Car Insurance). தீ காப்புறுதி (Fire Insurance) செய்வதில்லை!



## பெரி. முத்துராமன்

நிதித்துறை ஆலோசகர்

நிதித்துறை ஆலோசனைகளுடன் கூடிய சேவை

**Perrii Muthuraman**

MBA, M.COMM, PFP

Financial Advisor

Scotiabank

Direct Line:

416 439 3040 X:2010



தாய்வீடு பத்திரிகை பற்றிய விமர்சனங்களை எதிர்பார்க்கின்றோம். விமர்சனங்கள் எம்மை ஓர் ஆரோக்கியமான பாதையில் இட்டுச்செல்லும்.

E-mail:thaiveedu@gmail.com

Fax: 416-849-0594

Tel: 416-646-3422

# Love is Fine Darling When no one Knows

ராகுலன்
- Accountant -
ragulan@thaiveedu.com



அண்மையில் எமது Toronto வானொலி ஒன்றைக் கேட்க நேர்ந்தது. அதில் காதல் திருமணமா பேச்சுத் திருமணமா என வாதிட்டுக் கொண்டிருந்தார்கள். அதிலும் ஒரு முதியவர் பேசி செய்ய வேண்டிய திருமணத்தின் முக்கியத்துவம் பற்றி விளாசிக் கொண்டிருந்தார். அவர் இந்த கட்டுரை யைப் படித்தால் எனக்குப் பேசத் தொடங்கிவிடுவார்.

இது ஒரு புறம் இருக்க ஊரிலே திரு விழாக்கள் பூங்காவனங்கள் போன்றவை செய்வதற்கு கடவுள் வழிபாட்டுடன் வேறொரு முக்கிய காரணமும் உண்டு. அதாவது சந்திப்புக்களை ஏற்படுத்தி பெற்றாரின் சுமையைக் குறைப்பதற்குத்தான். ஆனால், கனடாவில் அப்படி நீண்ட திருவிழாக்கள் சின்ன மேளங்கள் குறைவு.

ஆனால் கனடாவில் வேலைத் தலங்களில் அப்படி சந்திப்புக்கள் நிறையவே இருப்பதாக ஆய்வாளர்கள் கூறுகிறார்கள். கனடா வில் எல்லோரும் வேலை வீடு என்று இருப்பதனால் இயற்கையாக வேலையிடத் தில் சந்திப்புக்கள் நடக்க சந்தர்ப்பம் நிறையவே உண்டு. வேலையிடத்தில் பல்வேறு பட்ட குணாதிசயங்களைக் கொண்டவர்கள் வருகிறார்கள். அதனால் பொருத்தங்களுடன் கூடியவரை தேர்ந்து கொள்ள நல்ல சந்தர்ப்பம். சந்தர்ப்பங்கள் கிடைத்தால் நன்கு பாவித்துக்கொள்ளலாம். ஆனால், ஒரு வளர்ந்தவருக்குரிய முதிர்ச்சியுடன் நடந்து கொள்ள வேண்டும் என்று Linda Kaban என்ற மனிதவள ஆலோசகர் தெரிவிக்கின்றார். எது எமக்கு பிரீதியானதோ மனதுக்கு சந்தோசத்தை தருகிறதோ அதைச் செய்து கொள்ள வேண்டும். அது கைக்கெட்டிய தாக இருக்கும் போது ஏன் நழுவ விட வேண்டும் என்கிறார் Linda.

Suzarine Kavanagh என்ற George Brown College மனித வளத்துறை பேராசிரியர் நீங்கள் உங்கள் இதயத்தின் அழைப்பை ஏற்றால் இரகசியமாகவும் விவேகத்துடன் நடந்து கொள்ள வேண்டும். அதாவது இப்படிப்பட்ட விடயங்கள் உங்களுக்குரிய தனிமையான விடயமாக இருக்க வேண்டும். இது பரகசியமாக வந்துவிட்டால் இது உங்கள் வேலைத்தளம் முழுவதையும் இதில் ஈடுபட வைத்துவிடக் கூடிய சந்தர்ப் பம் உண்டு. இந்த தொடர்பு முறிவடைந்தால் நீங்கள் வேலையை விட்டு நீங்கப் போகிறீர்களா? நாளைக்கு நடக்கக்கூடியது பற்றியும் சிந்திக்க வேண்டும்.

வேலைத்தள காதலர் இடையே ஊடல்கள் முறிவுகள் கட்டாயம் வருவதுண்டு. இது சிலநேரங்களில் பாரதூரமான சிக்கல்களுக்கு இட்டுச் செல்லலாம். சாதாரணமான வெளியிடத்து முறிவுகள் போல தொலைபேசியை எடுக்காமல் விடுதல், தேவையில்லாத இலத்திரனியல் கடிதங்களை அழித்தல் மூலம் இதை சமாளிக்க முடியாது. ஏனென்றால், நாளாந்தம் உங்களின் Exஐ முகம் கொடுத்து Ex உடன் வேலை செய்ய வேண்டி வரலாம். இது எல்லோராலும் இயலக்கூடிய விடயம் அல்ல. ஒரு பெண் பலமாதங்களாக 10 மாடி படிகளில் தனது Exஐ Elevotorஇல் தவிர்பதற்காக ஏறியதா கத் தெரிவித்திருக்கிறார்.

காதல் மனமுறிவுகள் எங்கும் நடக்கலாம். ஆனால் வேலைத்தள முறிவுகளை முதிர்ச்சியுடன் கையாள வேண்டும். இல்லாவிட்டால் இது சம்பந்தப்பட்ட எல்லோரையும் மனவேதனைக்குள்ளாக்கி ஒரு பரிதாபகரமான சூழலில் தள்ளிவிடும்.

அதிகமான வேலையிடங்களில் ஒரே குடும்பத்தினர், ஒரே Departmentஇல் வேலை செய்வதை தவிர்க்கும் கொள்கைகள் இருந்த போதிலும் இந்த முறைக்குப் காதலை தவிர்க்கும் கொள்கைகள் எந்த அலுவலகங்களிலும் இல்லை.

ஆனால், உங்கள் நிர்வாகி உங்கள் தனிப் பட்ட நடவடிக்கைகள் உங்களின் வேலைத்திறனை அல்லது அவரது நிறுவனம் பற்றிய வெளியில் இருக்கும் அபிப்பிராயத்தை பாதிக்கும் எனக் கரிசனை கொண்டிருக்கி றார். இந்த உள்ளத்தே ஏற்பட்ட பாதிப்பு உங்கள் வேலையில் உங்களின் கவனத்த வேலை சம்பந்தமாக நீங்கள் எடுக்கக்கூடிய தீர்மானத்தைப் பாதிக்குமானால் அங்கு உங்கள் நிர்வாகி தலையிடச் சந்தர்ப்பம் இருக்கிறது. ஆனால், கூடுதலான நிர்வாகி கள் இதில் தலையிட விரும்புவதில்லை. நீங்களும் அவரை உதவிக்கு அழைக்காமல் கவனமாக இருக்க வேண்டும்.

2003ல் எடுக்கப்பட்ட ஒரு புள்ளிவிபரங்களின் படி 47%மானவர்கள் ஒரு வேலைத்தலக் காதலில் ஈடுபட்டதாக ஒத்துக்கொண்டுள்ளார்கள். இன்னும் ஒரு 19%ஆனவர்கள் சந்தர்ப்பம் கிடைத்தால் தாங்களும் ஈடுபடுவோம் என்று கூறியிருக்கிறார்கள். இந்த புள்ளிவிபரப்படி 7%ஆனோர் மட்டும் தான் வேலைத்தலக் காதலை அங்கீகரிக்க முடியாது எனக் கூறிள்ளார்கள்.

இந்த காதல்என்று வரும் போது உடலுறவு உங்களுக்கு என்று ஒருவர் வீட்டில் இருக்கும் போது இன்னொன்று என பல பிரச்சினைகள் எழலாம். இவற்றில் எல்லாம் கண்ணியத்துடன் நடந்து கொள்ள வேண்டும். காலம் காலமாக சமுதாயம் ஆரோக்கிய மாக இருப்பதற்கு சில சட்டதிட்டங்கள் கட்டுப்பாடுகள் இருக்கின்றன. இவற்றைப் பொறுத்து உங்களுடைய எல்லைக் கோட்டை வைத்துக் கொள்ள வேண்டும்.

வட அமெரிக்க வேலைத்தல கலாச்சாரம் பற்றி கட்டுரை எழுதப்போன என்னை உங்கள் குடும்ப பேச்சுவார்த்தைக்கு இழுத்து விடாதீர்கள். அத்துடன் தவறுகளைச் செய்து விட்டு அமெரிக்க ஜனாதிபதி Bill Clinton எனது வழிகாட்டி என்று சொல்லிவிடாதீர்கள். ஏனென்றால் அது ஒன்றுக்கும் உதவாது.

■ ■ ■



உங்கள் வீட்டுக்கடன்
வியாபாரக்கடனிற்கு என்னை அழையுங்கள்

**MORTGAGE**

1st & 2nd Mortgages

New Immigrants / Self Employed / 0% Down

Refinance / Equity Line of Credit / Renewal

| MORTGAGE RATES | |
|---|---|
| Variable | Prime - 1.00% |
| Fixed | Call me |

**BUSINESS**

Commercial Mortgage

Business Loan upto One Million

Line of Credit / Personal Line of Credit



**Kethes Sivasubramaniyam**

Mortgage Consultant

**Cell : 416.873.5780**

ViaFinancial Services Inc.

Our Office : 5200 Finch Ave. E, Suite 304, Scarborough, ON. M1S 4Z5

RBC BMO Bank of Montreal TD Canada Trust Scotiabank

Apex Creations - 416-297-0707

வருமானவரிச்சேவையில் பலவருடம் அனுபவம்
வாய்ந்தவர்களினால் நம்பிக்கையான சேவை

**KETVAR**

TAX & ACCOUNTING

304-5200 Finch Ave.E, (Middlefield & Finch)
Toronto. ON M1S 4Z5
Tel : 416-548-8005 Fax : 416-548-8006
Email : ketvar@gmail.com

- Personal Tax
- Small Business Tax
- E-File Services
- Arrange RRSP
- Maximum Refund
- Tax Saving Advice

Tax Problems?
Penalties?
Haven't Filed?
We can help you...

# குடும்பமும் குழந்தைகளும்

குமார் புனிதவேல் பக்கம்
kpunithavel@thaiveedu.com

அண்மையில் ஒரு செய்தி; 17 வயதுடைய 17 பிள்ளைகள் ஒரு பள்ளியில் தாய்மை யடைந்துள்ளார்கள். பள்ளியில் படிக்க வேண்டிய பிள்ளைகள் பயிலாதவித்தையை அறிந்து கொள்ள பள்ளியறை நாடியதன் இரகசியம் என்ன என்று சிந்தித்துப்பார்த்தேன். இது வட அமெரிக்க சமுதாயத்தின் பரிணாம வளர்ச்சியா? வீழ்ச்சியா?

“நான் என்னதான் அறிவுரை சொன்னாலும் பிள்ளைகள் கேட்கிறார்கள் இல்லை நாங்கள் இருவருமே வேலைக்குச் செல்வதால் பிள்ளைகளை கவனிக்க நேரம் போதாது. இக்காலத்து பிள்ளைகள் துடுக்குமிகுந்து காணப்படுகிறார்கள்”. என்னை எனது பெற்றோர் அடித்து வளர்த்தமாதிரி நான் பிள்ளைகளை அடிக்க விரும்பவில்லை. இப்படியான ஓலங்களை பெற்றோரிடமிருந்து தினமும் கேட்கக்கூடியதாயுள்ளது. அண்மையில் வட அமெரிக்காவில் எடுத்த புள்ளிக் கணிப்புப்படி

- 14-17 வயதுக்குட்பட்ட பிள்ளைகளில் கொலைகள் 1985இல் இருந்து 72%ஆல் கூடியுள்ளது.
- 13-19 வயதுக்குட்பட்ட குழந்தைகளில் தற்கொலை 1990இல் இருந்து 30% கூடியுள்ளது.
- 13-19 வயதுக்குட்பட்ட பிள்ளைகளில் போதைவஸ்து பாவிப்பது 1980இல் இருந்து 44%ஆல் கூடியுள்ளது.

எமது சமூகத்திலும் இதனால் ஓரளவு தாக்கம் உண்டு என்றால் ஒருவருமே மறுக்க மாட்டார்கள்.

இதற்கான காரணங்களை ஆராயுமிடத்து உலகளாவிய விதத்தில் முற்காலத்து கூட்டுக்குடும்ப அமைப்பு அருகி வருகிறது. அத்துடன் தொழில் நிமித்தம் மக்கள் தமது பாரம்பரிய சுற்றாடலிலிருந்து விலகி இருப்பது நன்கு தெரியும். ஈழத்தில் இனசனத்துடன் திண்ணையில் இருந்து ஆறுதலாய் கதைத்த காலம் போய்விட்டது. அத்துடன் அப்பாவிடமோ அல்லது அம்மாவிடமோ பிள்ளையை எப்படி திருத்துவது என அறிவுரை கேட்ட காலமும் போய்விட்டது. அங்கு ஒருவருக்கொருவர் ஆதரவாக அனுசரணையாக இருந்தனர். இங்கு ஒவ்வொருவருமே ஒரு தனி மரமாக உள்ளார்கள். உண்மையில் ஒவ்வொருவருமே எமது குழந்தைகளுக்கு ஆதரவாய் உள்ளோம். ஆனால் எப்படிச் செய்வது என்பதில் குழம்பிப்போய் உள்ளோம். இங்கே சில கருத்துக்களைப் பார்ப்போம்.

## குடும்பமாக உணவு அருந்துவது

அவசரமான இந்த மேற்கு நாட்டு வாழ்க்கையிலே பொதுவாக இரவுப்போசனவேளை தான் முழுக் குடும்பமும் வீட்டில் இருக்கும். இதனை எல்லாரும் ஒன்றாகச் செய்யும் சடங்காகவே செய்வார்கள். இது குடும்பப் பிணைப்பு பலப்படுத்த உதவும். சில வேளைகளில் இளம் பிள்ளைகள் தொலைபேசியில் கதைத்துக்கொண்டு கொஞ்சம் பொறுத்து உண்பதாகச் சொன்னால், நீங்களும் பாராமுகமாக உணவை அருந்தினால் அது பிள்ளைகளுக்கு தாம் குடும்பத்தின் ஒரு முக்கிய அங்கம் எனும் உணர்வு இல்லாது போய்விடும். எனவே அக்குழந்தையும் வரும்வரை பொறுத்து உணவை உண்பதால் குழந்தைக்கு குடும்பத்தில் ஒரு பிடிப்பையும், அதேசமயம் உணவுவேளையில் மற்ற வேலைகளை ஒத்திப்போடும் தன்மையும் கொடுக்கும். அத்துடன் அவர்கள் வளர்ந்ததும் இரவு போசனத்துக்காக நேரத்திற்கு வீடு திரும்புவார்கள்.

அவர்கள் வரப்பிந்தினால் அவர்கள் வரும் வரை காத்து ஒருநாள் இருந்தால் மறுநாள் அப்படிச் செய்யமாட்டார்கள்.

சில சமயங்களில் இப்படிச்செய்வது வேலை காரணமாக கடினமாக இருக்கலாம். அப்பிடியாயின் காலை உணவை சம்பிரதாய போசனமாக்கலாம். குறைந்தபட்சம் காலை உணவும் இப்படிச் செய்ய முடியவில்லையாயின் வார இறுதி உணவை ஒரு சம்பிரதாய உணவாக மாற்றுங்கள். இது குடும்-பத்தை ஒற்றுமைப்படுத்தும்.

> “ *நீங்கள் வாரம் ஒரு நாடகம் பார்ப்பதை விட்டு விட்டு, வாரம் ஒரு புத்தகத்தை இரசிக்கத்த தொடங்கினால் பிள்ளைகளுக்கும் நல்லம். உங்களுக்கும் நல்லம்.* ”

## பிள்ளைகளுக்காக அல்லது பிள்ளைகளுடன் வாசித்தல்

கணனியும் தொலைக்காட்சியும் கூடிய முக்கியத்துவம் பெற்றுவரும் இந்நாளில் வாசிக்கும் பழக்கம் அருகி வருகிறது. ஒன்றாக பிள்ளைகளுடன் வாசிப்பது பிள்ளைகளை வாசிக்கும் பழக்கத்திற்கு உள்ளாக்கும். இதுவே உங்கள் குழந்தைகளுக்கு கொடுக்கக்கூடிய மிகச் சிறந்த பரிசாகும். முக்கியமாக கோடை விடுமுறை நாட்களில் மூன்று மாதங்களுக்கு மேல் பள்ளி செல்லாதிருப்பதால் அவர்கள் கல்வியையே மறந்து நேரத்தை வீணடிக்கப் பழகிவிடுவார்கள். வாசிக்கும் பழக்கத்தை ஏற்படுத்துவதால் குழந்தைகள் நேரத்தைப் பயனுள்ள விதமாகச் செலவழிக்கப் பழகுவார்கள்.

சிறு குழந்தைகளுக்கு நீங்கள் மாலை நேரங்களில் படுக்கைக்குமுன் வாசிப்பதனை ஒரு பழக்கமாகக் கொண்டு வரவேண்டும். வளர்ந்த பிள்ளைகளுக்கு வாரத்திற்கு ஒரு புத்தகமென பழக்கப்படுத்திக் கொண்டால் நல்லம். பிள்ளைகளுடன் வாசிகசாலைகளுக்குச் சென்று புத்தகங்களை தேர்ந்தெடுப்பதுடன் நீங்களும் அப்புத்தகத்தை வாசிக்க வேண்டும். அப்போது பிள்ளைகள் வாசித்த புத்தகத்தைப் பற்றிக் கலந்துரையாடலாம்.

பல வாசிகசாலைகளில் இலவசமாகக் கதைப்புத்தகங்கள் வாசிப்பு இடம்பெறுவதுண்டு. இதில் எம்குழந்தைகளைக் காண்பது மிக அரிது. இப்படியான பொது வாசிப்புக்கு பிள்ளைகளை அழைத்துச் சென்று நீங்களும் பெரும் பயன் அடையலாம். பிள்ளைகள் பெரியோர் செய்வதைப் பார்த்துப் பின்பற்றும் இயல்புடையவர்கள். நீங்கள் வாரம் ஒரு நாடகம் பார்ப்பதைவிட்டு வாரம் ஒரு புத்தகத்தை இரசிக்கத்த தொடங்கினால் பிள்ளைகளுக்கும் நல்லம். உங்களுக்கும் நல்லம்.

## தொலைக்காட்சி பார்த்தல்

தொலைக்காட்சியில் நன்மையிலும் தீமை தான் அதிகம் உள்ளது. இது ஊர் அறிந்த உண்மை. ஆனால் எல்லாத் தொலைக்காட்சியும் தீமையானது என்பது மடமை. தொலைக்காட்சியை நல்ல பயனுள்ள ஒரு ஊடகமாக பாவிக்கலாம். குழந்தைகள் காட்டூன் சித்திரத்தில் ஒருவன் இன்னொருவனை இரும்பால் அடித்தால் அதன் தவறை நீங்கள் பிள்ளைகளுடன் விளம்பர நேரத்தில் குழந்தைகளுக்கு உரையாடி விளங்கப்படுத்தவும். இது குழந்தைகளுக்கு ஆரோக்கியமான நடத்தையை வலியுறுத்த உதவும். மேலும் வளர்ந்த பிள்ளைகளுடன் இத்தகைய கலந்துரையாடல் மிகப்பயன் தரும். பொழுதுபோக்குப் படங்களை பார்க்கும் அதேவேளையில் நல்ல பயன்தரும் படங்கள் வருமானால் அத்தருணத்தில் நீங்களும் அவர்களுடன் இருந்து இரசிப்பது அவர்களை உங்களுடன் நெருக்கமாக பிணைத்துவிடும்.

## பிள்ளைகள் கருத்துக்குச் செவிசாய்த்தல்

உங்கள் குழந்தைகளுடன் உங்களுக்கு உள்ள பிணைப்பு வலுவடைவதற்கு இது மிக மிக அவசியம். இது குழந்தைகளுடைய தன்னம்பிக்கையையும் விருத்திசெய்வதுடன் தவறான, ஆபத்தான பழக்கங்களுக்கு உள்ளாவதைத் தடுக்கும். நான் எது சொன்னாலும் அம்மாவும் அப்பாவும் பெரிதுபடுத்துவதில்லை என்று பிள்ளை எண்ணினால் அக்குழந்தை தனது உள்ள ஐயப்பாடுகளையும் ஆதங்கங்களையும் அந்தரங்கங்களையும் பெற்றோருடன் பகிர்ந்துகொள்ளத் தயங்கும். எனவே சிறுவயதிலிருந்தே பள்ளியில் என்ன நடக்கிறது, அவர்கள் சினேகிதர் யார் என்பதை அறிந்திருப்பதுடன் அதைப் பற்றி கதைத்த்திருந்தால் அவர்கள் பெற்றோரிடம் அந்தரங்கங்களை பகிர்ந்துகொள்வார்கள். இது அவர்கள் தவறான வழியில் செல்வதைத் தவிர்க்கும். பிரச்சினைகள் வந்தவிடத்து அதற்கு பரிகாரத்தை செய்வதிலும் அவர்களை அதற்கான நல்ல முடிவை எடுக்கக்தக்க விதத்தில் கேள்விகளை கேட்டு வழிநடத்துவதே சிறந்தது. இப்படிச் செய்வது அவர்கள் சுயமாக சரியான முடிவை எடுக்க பழக்குவதற்கே.

பிள்ளைகளுடன் நீங்கள் ஒட்டாத உறவாக இருப்பது அவர்கள் தவறான வழியில் செல்ல உந்தும். இவ்விடயத்தில் பெற்றோர் விழிப்பாக இருப்பதவசியம். அடுத்தவாரம் என்ன செய்வதிலிருந்து அடுத்த வருடம் என்னசெய்வது என்பது வரையில் யாவற்றையும் நீங்கள் கலந்துரையாடலாம். இது ஐந்து வயதுமுதல் இருபதுவயதுவரை யாவரிடமும் நீங்கள் உரையாடக் கூடியது.

## பிள்ளைகளை ஒழுக்கப்படுத்துவது

குழந்தைகளை மேலோட்டமாக பார்க்கையில் தாங்கள் நினைத்தபடி நடந்து கொள்ள விரும்பினும், அவர்கள் மன அடித்தளத்தில் அப்படிச்செய்ய அஞ்சுவார்கள். அவர்களே தீர்மானம் எடுக்கும் வேளைகளில் தங்களைப் பொறுப்பெடுப்பது யார் எனும் அச்சம் அவர்களுக்குள் இருந்துகொண்டே இருக்கும். எப்போ பெற்றோர் பொறுப்பெடுத்து வீட்டின் ஒழுங்குகளை நிலைநாட்டுகிறார்களோ அப்போதான் வீட்டில் அமைதி ஏற்படும். பெற்றோர்கள் சிலவேளைகளில் இல்லை என மறுப்பு தெரிவிக்கலாம் என்பது மட்டுமன்றி அப்படிச்செய்வது அவசியம் என்பதை உணரவேண்டும். சிறுபிள்ளையாக இருக்கும்வேளை அழுது அடம்பிடிக்கும் போது விட்டுக்கொடுத்தால் கொஞ்சம் அதிகம் அடம்பிடித்தால் எதுவும் கிடைக்கும் எனும் எண்ணம் குழந்தை மனதில் பதிந்து விடும். எனவேதான் கண்டிப்பாக ஆனால்

38ம் பக்கம் பார்க்க...

Tution Classes

(at McCowan and Dennison)

From JK to Grade 8

- * Math
- * English
- * Science
- * Art
- * Homework Help (Any Subject)
- * Preparation for the Next Grade
- * Computer Subjects




1 to 1 or Group classes

Please call 905-554-2496

# வர்த்தக நிறுவனங்கள் வாங்க, விற்க



**Baskaran Sinnadurai**
Commercial & Residential Sales Representative
**416-880-8585**

**Home Life**
GTA Realty Inc., Brokerage*
206 - 1711 McCowan Road
Scarborough, ON. M1S 3YS
Bus: 416-321-6969
Fax: 416-321-6963




Convenience
weekly sales $12000,plus loto commission,
asking only 119,000




Convenience
weekly sales $11000- $3000 ,plus loto,Canada postal service,prolator courier, grey hound bus tickets.
Asking 149,9000




**Conin laundry :**
Very Busy Well Establish & Unattended, Coin Laundromat In High Density residential asking only $229,000.00




Industrial warehouse
10,000sq feet
$1250000



Store W/Apt/Office , Excellent Business Opportunity: 3 Newly Reno'd Apts,Variety Store & 'Cash' Store.All Rented Except convenience store asking only $379,000.00



Corner Location In The Town Main Street,Adjacent To Golf Course, Best Farmland In The Area. Asking
**$1,680,000**



Industrial Building In Scarborough
asking **$2,925,000**

# வீடு வாங்க விற்க



**Shanthy Vinay**
Sales Representative
**416-939-2288**



**Vana Shan**
Sales Representative
**416-833-2925**

**Home Life**
GTA Realty Inc., Brokerage*
206 - 1711 McCowan Road
Scarborough, ON. M1S 3YS
Bus: 416-321-6969
Fax: 416-321-6963



**Mahendran Muthukumaru**
Sales Representative
**416 3021994**



Warden/Finch
2 Bed Room 1 Washroom
**$149,000 For Sale**



Kingston/Valley Farm
2 Bedroom 1 Washroom
Excellent Location
**$299,900 For Sale**
Fabulous Investment Opportunity
Call for More Info



Lawrence/Warden
3 +1 Bedroom 2Washroom
Finished Sep Entrance
**$317,900 For Sale**



Kennedy/Eglinton
3+2 Bedroom 2Washroom
2 Kitchen
Apartment Sep Entrance
**$339,000 For Sale**



Ellesmere/Meadowvale
4+1 Bedroom 4 Washroom
Finished / Close to school
**$439,700 For Sale**



Albion/401
3+2 Bedroom 2 Washroom
2 Kitchen / Finished
**$349,900 For Sale**

# குடும்பமும் குழந்தைகளும்...

36ம் பக்கத் தொடர்ச்சி...

அன்பாக ஒழுங்கை நிலைநாட்டுவதவசியம். பொறுமை இழந்து நீங்களே அவ்வேலைகளை செய்தால் பிள்ளைக்குத் தெரியும் போதிய அளவு நேரம் அடம்பிடித்தால் நீங்கள் அவ்வேளையை செய்வீர்கள் என்று. மேலும் பிள்ளைகள் ஒரு வேலையை செய்யமுன்வரும்போது அதற்கு நன்றியைத் தெரிவிப்பதவசியம்.

பிள்ளைகள் தவறுசெய்யும் வேளை தகுந்த தண்டனை கொடுப்பதுடன் அதனை முழுமையாக செயற்படுத்துங்கள். உதாரணமாக அறையை துப்பரவாக வைக்காதிருந்தமைக்காக ஐந்துநாட்கள் T.V இல்லை என்று தீர்மானித்தால், பின் மூன்றாம் நாளே படம் பார்க்க விடாதீர்கள். அப்படிச் செய்வது நன்மையிலும் தீமையே தரும்.

## தன்நம்பிக்கையை கொடுங்கள்

குழந்தைகளின் இயல்பான குணம் தன்நம்பிக்கை. அவர்களுக்கு அச்சம் இல்லை. இதனால் தான் “இளம்காளை பயம் அறியாது” என்பர். இவர்களுக்கு தாழ்வு மனநிலையையும் அச்சத்தையும் கொடுப்பது வளர்ந்தவர்களே. உலகத்தில் ஒரு சில விடயங்களுக்கு அஞ்சவேண்டுமென்றாலும் பெரும் பங்கு அஞ்சவேண்டியதில்லாததே. அவர்கள் உங்களுடன் அச்சமின்றி எந்த விடயத்தையும் கதைக்கக்கூடியதாயிருக்க வேண்டும். உதாரணமாக போதை வஸ்துக்கோ பாலியல் அனுபவத்திற்கோ மற்றவர்களால் உந்தப்படும் போது அவர்கள் உங்களுடன் அவர்கள் அதுபற்றி கதைத்து அறிவுரை பெறத்தக்கதாய் இருக்கவேண்டும். இத்தகைய சம்பாஷனையில் அவற்றின் நன்மை தீமைகளை கதைத்து முடிவெடுக்கும்படி செய்து அந்த முடிவை செயற்படுத்தும் தன்நம்பிக்கையை அவர்களுக்கு கொடுக்கவேண்டும்.

உங்களை சுற்றி நடக்கும் கொலைகளும், கொள்ளைகளும் கற்பழிப்புகளும் பெரிதாக தோன்றினாலும் அவை மிகக் சொற்ப



எண்ணிக்கையே. உலகச் சனத்தொகையுடன் நோக்குகையில் இதில் கவனிக்க வேண்டியது என்னவென்றால் மனிதனை நாய் கடித்தால் செய்தியாக வராது. ஆனால் மனிதன் நாயைக் கடித்தால் “தாய்வீட்டில்” தலைப்புச் செய்தியாக ஆசிரியர் பதிப்பித்துவிடுவார். அதற்காக மனிதர்கள் எல்லாரும் நாயைக் கடிக்கிறார்கள் என்பதல்ல. எனவே பிள்ளைகளுக்கு நம்பிக்கையையும் ஒளிமயமான எதிர்காலத்தையும் காட்டுங்கள்.

## மற்றவர்களுக்கு உதவப் பழக்குங்கள்.

மற்றவர்களுக்காக இரங்கும் சுபாவம் உடைய குழந்தைகள் தம் கல்வியிலும், மற்றவர்களுடன் பழகுவதிலும் சிறப்பாக செயற்படுவதாக ஆய்வுகள் காட்டுகின்றன. நீங்கள் பிள்ளைகளை வைத்தியசாலைகளில், வயோதிபர் இல்லங்களில் தொண்டர்-களாக வாரம் ஒரு நாள் சில மணி நேர-மாவது செயற்பட்டால், அல்லது நீங்களும் சேர்ந்து ஈடுபட்டால் அவர்களுக்கும், உங்க-ளுக்கும் ஆன்ம திருப்தியையும் உணர்வில் பூரணத்துவத்தையும் தரும். அதேவேளை பயன் அடைபவர்கள் வாழ்த்தும் ஆசியும் உங்களுக்கு நிறையவே கிடைக்கும்.

## அணைப்பதும் முத்தம் கொடுப்பதும்

உலகில் ஆரோக்கியமான மருந்து எது என்றால் அது நிச்சியமாக அணைப்பதுதான் என்பேன். குழந்தை முதல் வயோதிபர் வரை அனைவருக்கும் அணைப்பு மிக அவசியமாகும். எனவே குழந்தைகளை அணைத்து வளர்க்க முன்வாருங்கள். இது வளர்ந்த பிள்ளைகளுக்கும் பொருந்தும்.

உதாரணமாக காலையில் பிள்ளைகளைத் துயில் எழுப்பும்போது எட்ட இருந்தபடி தம்பி பள்ளிக்கூட நேரமாகிவிட்டது என்று கூறாமல் அருகில் வந்து முதுகில் தடவி தம்பி எழும்பு! பள்ளிக்கு நேரமாகிவிட்டது என்று கோப்பியை குடிக்கக் கொடுத்தால் கட்டாயம் அந்தப் பிள்ளை நல்ல பிள்ளையாக வளரும்.

இப்படி வளர்ந்தபிள்ளை தவறி நடப்பதற்கு சந்தர்ப்பமே இருக்காது. ஏதோ கோபத்தில் வீட்டை விட்டுச் சென்ற குழந்தைகூடத் தாய் தந்தையர் அணைப்பைத் தேடி வீடு திரும்பிவிடும்.

எனவே வீடு ஒரு கோவிலாகவும் குழந்தைகள் அதில் தெய்வமாகவும் வளரச் செய்யுங்கள்.

■ ■ ■



# முகவரி காட்டும் முகவர்களாய் நாங்கள், வீடு வாங்க விற்க அழையுங்கள்



HIGHER STANDARDS

**HomeLife/Future Realty Inc., Brokerage***

262 Markham Road, Scarborough, Ontario M1J 3C5

**Bus.: 416.264.0101 Fax : 416.261.1519**

*Independently Owned and Operated, REALTOR

Not Intended to Solicit Currently Listed Properties or Buyers Under Contract.



**www.realhouse.ca**

## Thamil Suberamaniam (Selvan)

Sales Representative

**Direct : 416.358.6200**

Email : thamilrealtor@gmail.com

## Mugunthan Nadarajah

Sales Representative

**Direct : 416.276.8025**

Email : homelifemugunthan@gmail.com

**Williams Pkwy & Hwy 410**



**$297,000**

**3 Bedrooms, 3 Washroom**

Very Demand Location!!...
New House
2 Bedrooms,
Kitchen, Living & Washroom..
Close To School, Shopping,
Long Drive Way

**Kennedy & Finch**



**$264,900**

**3+1 Bedrooms, 3 Washroom**

Totally Renovated Condo Town House
** Close To Finch And Kennedy **
Over 60K Spent On All Hardwood Flooring*
Brand New Furnace**Pot Lights,
Finished Basement, Excellent Corner Unit
* New Garage Door*
*Close To School, Park, Shopping & Ttc.

**14th & 9th Line**



**$489,900**

**4 Bedrooms, 3 Washroom**

Brand New Oxward Build
Home In Very Demand Area. .
Hardwood Throughout Main Flr.
9' Ceiling, Circular Oak Staircase,
Close To School,
Hospital & Highway 407.

**McCowan & 16th**



**$439,000**

**4 Bedrooms, 3 Washroom**

High Demand Location!!...
Close to GO and York Transit
Schools,
Markville Shopping Center

**9th Lane & 16th Ave**



**$449,900**

**4 Bedrooms, 3 Washroom**

Great Neighbourhood,
Very Clean & Bright, Big Deck,
Granite Counter Top,
Close to School,
Park & Shoppings

**Brisdale & Sandalwood**



**$381,900**

**4 Bedroom, 3 Washroom**

Hardwood Floors. Tastefully
Decorated Thru-Out,
Many Upgrades, Very Nice Light Fixtures.
You Must See This Beauty. Fenced Backyard.
Lots Of Pot Lights.
Upgraded Kitchen Cabinet.

**Chinguacousy N Of Sandalwood**



**$389,900**

**4 Bedrooms, 3 Washroom**

Gorgeous 2 Yrs New Detached Home
On Premium Corner Lot In Very Demand Area.
Main Floor With Stunning
Hardwood Floor & Oak Staircase.
Absolutely Beautiful Kitchen
With One Of The Best Layouts.

**Kennedy & Sheppard**



**$264,900**

**2 Bedrooms, 2 Washroom**

Brand New Tridle Built,
Close to Agincourt Mall, TTC,
Minutes to 401, 404 & Kennedy
Commons mall.
24 Hrs Gate House Security

**Mcvean & Castlemore**



**$369,900**

**3 Bedrooms, 3 Washroom**

Very Good Location
Very Bright & Spacious Rooms,
Great Size Kitchen,
Close to School, Park & Shopping

**உங்களுடையது**

**அழையுங்கள்**

Apex Creations - 416-297-0707

**Make the Right Move, at the Right Time, with the Right Professional**


# புஸ் புஸ் ஏசி... ஆகா என்ன சுகம்...

ஒரு கோப்பி விலையில் நாங்கள் ஒரு சிறய நடமாடும் ஏசியை வைத்துக் கொள்ளலாம். ஏசி காருக்குள் மட்டும்தான் வெளியில் வரும். வீடடுக்குள் மட்டும்தான் இருக்கும். மற்ற இடங்களில்…

புஸ் புஸ் போத்தல் நினைவிருக்கா? சலூனில் பாவிக்கும் போத்தல். அந்தப் போத்தலில் சிறியது கடைகளில் மலிவாக் விற்கிறது. ஒரு கோப்பி விலைதான் இருக்கும். அதில் தண்ணீரை நிரப்பி வைத்துக் கொள்ள வேண்டும். வெளியில் போகையில் கையில் எடுத்த வைததுக்கொண்டு போகவேண்டும்.

வெயிலில் வெயில் போகையில் புஸ் புஸ் அடிக்கவேண்டும். அவ்வளவுதான்.

அனுபவித்துப் பார்தால்தான் ஆகா என்ன



சுகம் என்பது தெரிய வரும்.

இதைவிட முக்கியம். வெள்ளையிலிருந்து வெழுத்ததுவரை... எங்களை பொறாமை யோடு பார்க்கும். அட இது எங்களுக்கு தெரியாமல் போய்விட்டதே என்று…

விலையும் குறைவு. எப்போதும் எங்களோடு வரும்.

இதில் ஒரு நல்ல வணிகமும் இருக்கிறது. தமிழர்களின் கொண்டாட்டங்கள், திருவிழாக்களில் இந்தப்போத்தலை விற்கலாம். 50 க்கு 50 லாபம் இருக்கிறது.

(இந்த ஐடியாவை திருவிழா கொண்டட்டம் நடத்துபவர்களே எடுத்துக்கொண்டால் எமக்கு 25 வீதம் பங்கு தரவேண்டும்.)

## ஏசியும் எண்ணையும்

காரில்ஏசி போடுவது கொஞ்சம் எரிச்சலான



விசயம் - இந்த நாட்களில். ஆனால் ஏசி போடாவிட்டாலும் எரிச்சலான விசயம்தான். உடம்பெல்லாம் எரியும்.

அதுவும் கோடைகாலத்துக்குச் சுற்றுலாச் செல்கையில், நீண்ட பயணங்களில் எரிபொருள் விலை எல்லோரையும் எரிக்கிறது. எரிச்சலடைய வைக்கிறது.

அதற்காக எரிபொருள் மிச்சப்படுத்தவெண்டு கார் கண்ணாடியைத் திறந்து விட்டு, நீக்கி விட்டு ஹைவேயில் - பெருவழியில் ஓடினால் நட்டம்தான்.

கண்ணாடி திறந்திருக்க ஓடுவதைவிடவும் பெருவழியில் கண்ணாடி பூட்டியபடி ஏசி போட்டுக்கொண்டு ஓடுவதுதான் எரிபொருளை மிச்சப்படுத்தும்.

இதைவிட எரிபொருளை மிச்சப்படுத் சிறப்பான வழியிருக்கு. என்னைப்போல காரில்லாமல் இருந்துவிடவேண்டும்.

## பிளாஸ்டிக் - பிளாத்திக்கு Non stick , NO ! NO! No sick!

வீட்டில நிறைந்திருக்கும் பிளாதிக்குப்



பொருட்களால் வரும் தீமை பற்றி நாங்கள் முதலில் வீடு பத்திரிகையில் செய்தி தந்திருக்கிறோம்.

தற்போது சுப்பர் மார்க்கட்டுக்களுக்கு போனல் மக்கள் திருப்பிக் கொடுத்த பிளாத்திக்குப் போத்தல்களிலால் ஆன பால் புகட்டும் போத்தல்கள் குவிந்திருப்பதைப் பார்க்கிறோம். தாய்வீட்டில் செய்தி வந்து ஓராண்டுக்கு பின்னர்தான் அரசே அதன் தீமை பற்றி மக்களுக்கு அறிவித்திருக்கிறது.

ஆனால் இன்னும் வீடுகளில் பிளாத்திக்கு மயம்தான். அதே போல இன்னொன்று Non Stick சட்டிகள்.

உண்மையில் வீட்டுப்பாவனைக்கு உதவாத நேரடியான நச்சானது அந்த Non stick பூச்சைப் பூசியிருக்கும் எனப்படும் சட்டி. அதுவும் வீட்டில் முக்கிய இடம் பிடித்திருக்கிறது.

Non Stick சட்டியைப் போட்டு கரண்டியால் எங்கள் வீடுகளில் கிண்டுவதைப்பார்க்க பயமாக இருக்கும்.

'அடப்பாவிகளா… சாப்பாட்டுடன் கான்சர் நோயையுமல்லவா சேர்த்துக் கிண்டி நீங்களும் சாப்பிட்டு உங்கள் குழந்தைகளுக்கும் பரிமாறுகிறீர்கள்" என்று. அதை நேரடியாக உடனே சொன்னால் உடனடியாக அடி விழும் என்பதால்தான் தாய்வீட்டிலை எழுத வேண்டியிருக்கு.

எப்பிடியெண்டாலும் Non stick சட்டி தீமை தருவது. தவிர்க்கவேண்டியது.

ஆனால் கழுவும் சுகத்திற்காக எல்லாரும் இன்னும் போட்டுக் கிண்டிக்கொண்டிருப்பது.


உண்மையில் Non stick சட்டியைக் கைவிட்டால் பல நோய்கள் அண்டாது.

No sick வேணுமா Non stick வேணுமா எண்டு நீங்கள் யோசிக்க வேணும்.

சட்டியும் உங்களுடையது. உடலும் உங்களுடையது. உங்கள் நலம் பற்றிய அக்கறை மட்டுமே தாய்வீட்டினுடையது.

■ ■ ■





Kennedy/Ellesmere

-Welcoming Townhouse located in a Convenient Area
-3 BR & 2 WR
-Minutes to Hwy 401, Schools and Shopping

$214,900



Chapman/Kingston
Ajax

-Sun-Filled End Unit like a Semi
-Excellent Layout with Private Balcony and Private Drive
-Approx. 1850 sqft with 3BR & 3WR
-Close to All Amenties
-Close to Hwy 401 & GO

Buyers WANTED!!!



Martin Grove/Albion

- Cozy, Well Kept Townhouse
-3 BR & 2 WR
-Newly Renovated Washrooms
-Close to Schools and Shopping

$179,000

VEEDU REALTY INC.
BROKERAGE

Tel:416-759-6000
Fax:416-759-6005

*Realtors Without BORDERS....*



Tharsiny Varapragasam
Sales Representative
Dir:416-727-2391



இயற்கை மூலிகையின் உதவியுடன் உங்கள் கேசத்தை பராமரியுங்கள்!




The ERVAMATIN™ HAIR LOTION

உங்கள் முடியுதிர்வை தடுக்கவும் மீண்டும் தலைமயிர் வளரவும் மிக உன்னதமாக தொழில் புரிகிறது எவமாட்டின் மூலிகை ஒளடதம்! உலகெங்கும் பல்லாயிரக்கணக்கானவரின் பாராட்டுதலைப் பெற்ற மூலிகைத் தயாரிப்பு. இப்போது எவமாட்டின் சாம்பூவும் கிடைக்கிறது.




The Ervamatin Hair Lotion
Provides effective and fast therapy for hair loss
And its treatment ensures excellent therapeutic results.
Recommended as a treatment for
Hair loss, hair regeneration, dandruff, alopecia,
Thin hair, baldness, fragile and dry hair.



இயற்கை மூலிகையிலான தலை முடி மை

இயற்கை மூலிகையான மருதாண்டி கொண்டு செய்யப்படும் இவ் மை உங்கள் தலை முடியையும் நன்கு பராமரிக்கிறது.

Amazon Health Care
www.amazonhealthcare.com

BBB ACCREDITED BUSINESS

SABONA & Gift
Tel: 416 264 8787
www.amazonhealthcare.ca
2602, Eglinton Ave East. (Midland/Eglinton)

# Your life.
# Your career.
# *Your call.*

If you're looking for a career that offers the potential for financial success and have the drive, discipline, energy, and self-confidence to run your own business, then consider becoming a Sun Life Financial advisor. Contact us to learn more about this rewarding career opportunity.



**Chandran Rasalingam**
Sales Manager
Bus 416-412-0401 ext 305
Cell 416-909-0400
Fax 416-412-1438
gnanachandran.rasalingam@sunlife.com

2075 Kennedy Road, Suite 1300
Scarborough ON M1T 3V3

Sun Life Financial

Sun Life Financial advisors are contracted with Sun Life Financial Distributors (Canada) Inc., registered in Quebec as a financial services firm.
© Sun Life Assurance Company of Canada, 2008.


COMING SOON
CENTUM VISION
தமிழ் எங்கள் மொழி
தமிழுக்கும் அமுதென்று பேர் - அந்தத்
தமிழ் இன்பத் தமிழ் எங்கள் உயிருக்கு நேர்
-digi Media-

## specialize in

**• Storage**
Free of charge for Loading & Unloading

**• Cross Docking**

**• Pallets**
Custom Pallets
New & Used Pallets
We also buy used Pallets

**• Moving**
Also Available
24 ft Truck Rentel With Driver $145
**Call Kiruba**
**416-300-6458**



**GTA Special Rates!!!**
For Straight Truck.
Dock to Dock
*Direct*
*Rush*
*Sameday*
*TailGate Orders*

11 years in Business

CONTACT: MURALI
416.569.4065
89 Thournmount Dr., Unit 11&12, Scarborough, ON M1B 5V4
Morningside/Sheppard - Next to Home Depot
1 min. from Hwy401
fax: 416.724.8417, e-mail: emk4u@hotmail.com

emk ENTERPRISES INC
LOGISTIC & TRANSPORTATION



வக்தா.tv
vakthaa

தமிழீழ தேசியத்தொலைக்காட்சியில் ஒளிபரப்பாகும் தாயக நிகழ்வுகள், செய்திகள், கலைப்படைப்புகள், குறும்படங்கள், அரசியல்கண்ணோட்டம், என்பவற்றை இணையத்தில் பார்த்திட

www.vakthaa.tv

# சே குவேரா: ஒரு புரட்சியாளனின் உண்மைக் கதை



தேவகாந்தன்
devakanthan@thaiveedu.com

## வரலாற்றுச் சோகங்கள்

கடந்த இரண்டாயிரமாண்டுச் சரித்திரம் பல்வேறு புதைபொருள் ஆய்வுகள், மற்றும் நவீன அறிவியல் ரீதியிலான அறிமுறைகளால் கட்டமைப்புச் செய்யப்பட்டு வருகின்றது. இவற்றிலிருந்து எமக்கு இக்காலகட்டத்திய அண்ணளவான வரலாறு கிடைத்திருப்பதாகச் சொல்ல முடியும். இதன் உண்மைத் தன்மை சந்தேகத்துக்கு உரியதாயினும், சொல்லப்பட்ட அந்த வரலாற்றினடியாகவே இச் சந்தேகங்கள் தோற்றமெடுக்கின்றன என்பதும் கவனம் கொள்ளப்படவேண்டும். உண்மையின் தவிர்க்கவியலா அழுத்தம் காரணமாய் இவ்வரலாறுகள் மாற்றியெழுதப்பட்டும் வருகின்றன. இல்லையெனில் மாற்றுவரலாறாய் விஸ்வரூபமெடுத்து வாழ்ந்துகொண்டிருக்கின்றன. அந்த வரலாறு முழுக்க அவ்வப்போது நிகழ்ந்து வந்திருக்கிற நன்மைகளும், நல்லவர்களும் அழிக்கப்பட்ட சோகங்கள்தான் விரவிக்கிடக்கின்றன.

வரலாறு அறிந்துள்ள முதல் புரட்சியாளன் யேசுநாதர்தான். அந்த மரிப்பு – கொலைப்பாடு – தாங்கொணாத் துக்கம். கொடுமையின் உச்சம். அதைச் சினிமா மொழியில் வெளிக்கொண்டுவந்தது 'The Passion of Christ'. மனித இனம் இன்றும் யேசுநாதர் சிலுவையையே கடவுளாய் வணங்கி ஆன்ம வேதனை தணிகிறது.

அன்றைய கத்தோலிக்க மதத்துக்கு எதிராகக் குரலெழுப்பிய எராஸ்மஸ் எரித்துக் கொல்லப்பட்டான். மன்பதைக்குச் சிந்திக்கக் கற்றுக்கொடுத்தவன் பிளேட்டோ. சிந்தனையென்பது உண்மையை அறிவதற்கான கதவமென்பதை உணர்ந்து, தமக்கெதிரான கலகமாக அச் செயற்பாட்டை எண்ண முடிந்ததில், அன்றைய கிரேக்க அதிகார வர்க்கம் அவனை நஞ்சுகொடுத்துக் கொலைசெய்தது. அறிவுலகத்தின் தலைசிறந்த பண்டைய சிந்தனாவாதியென இன்றும் உலகம் அவனைக் கொண்டாடிக்கொண்டிருக்கிறது.

நவீன காலத்தில் அமெரிக்காவில் கறுப்பினத்தாரின் வாழ்வுரிமையை ஊர்ஜிதம் செய்யும் சட்டத்தை நடைமுறைக்குக் கொண்டுவந்த ஜோர்ஜ் வாஷிங்டன் சுடப்பட்டதும், அதிகார மமதைகொண்டு தொடங்கப்பட்ட வியட்னாம் யுத்தத்தை முடிவுக்குக் கொண்டுவரவிருந்த ஜோன் எப். கென்னடி கொல்லப்பட்டதுமான சம்பவங்கள் மறக்கப்பட முடியாதன.

ஆமெரிக்கக் கறுப்பினத் தலைவன் மார்ட்டின் லூதர் கிங் கொல்லப்பட்டும் வெகுகாலமில்லை. மகாத்மா என அழைக்கப்படும் மோகனதாஸ் கரம்சந்த் காந்தி இந்துத்துவ வெறியினால் கொலை செய்யப்பட்டதை நம் அண்டைய தேசச் சரித்திரமாக நாமறிந்திருக்கிறோம்.

இத்தனை கொலைகளில் யேசுநாதரின் கொலைக்கு நிகரானது ஏர்னெஸ்ட் சேகுவேரா என்ற ஆர்ஜென்ரீனாக்காரனின் கொலை. உலகம் முழுவதையும் தன் ஆயுத பலத்தால் அடக்கியாள நினைக்கும் அமெரிக்காவின் சதிவலைப் பின்னலினால் இது நடந்தது. தென்னமெரிக்காவின் அறியாமை, வறுமை, அதிகார துஷ்பிரயோகம் போன்றவற்றுக்கு எதிராக அப் பகுதியையே சோஷலிச மார்க்கம் நிறைந்த பூமியாக ஆக்கிவிட தன் தேசம்விட்டு வெளியேறி கியூபாவிலும், பொலிவியாவிலும், இன்னும் மற்றுமுள தென்னமெரிக்க மண்டலம் முழுவதிலுமே புரட்சியைக் கிளர்த்திவிட உழைத்த சேவினது மறைவுபோல் கொண்டாடப்படும் வரலாற்றுக் கதாநாயகன் நிகழ் சரித்திரத்தில் இல்லை.

பாபா சாகேப் அம்பேத்கர் ஒடுக்கப்பட்ட மக்களுக்காக தன் வாழ்க்கையை அர்ப்பணித்து ஆளும் வர்க்கத்துச் சாதிவெறியர்களுக்கு எதிராக இடையறாக் கருத்து யுத்தம் நடத்திக்கொண்டிருந்தவர். இன்றைக்கு அவர் பாதையில்தான் இந்தியாவின் தலித்திய இயக்கங்கள் ஏறுநடை போட்டுக்கொண்டிருக்கின்றன. இருந்தும் எந்த வர்க்கத்துக்கெதிராக தலித்துக்கள் போராட்டம் நடத்துகின்றார்களோ, அந்த தலித்துக்களின் போராட்டங்களுக்கு சிந்தனைத் திறன் அளித்த அதே அம்பேத்கரை நினைவுகூர்ந்து ஆளும் வர்க்கங்களே நினைவுதினம் கொண்டாடுகின்றமை வரலாற்றின் முரண்நகை.

சே குவேரா கொல்லப்பட்டமை உலகளாவிய துக்கத்தைக் கிளப்பியது. உண்மையினதும், புரட்சியினதும் ஆதரவாளர்களின் கதாநாயகனாக சே வளர்வதைத் தடுக்கவே முடியாத நிலை அதிகார வர்க்கத்துக்கு. அம்பேத்கர்போல் சே அரசாங்கங்களால் கொண்டாடப்படவில்லையெனினும், வேறு விதமாக சேவினது மறைவு கவுரவிக்கப்படுகிறது. ஒரு புரட்சியாளனின் உருவப்படம் பொருந்திய பெனியன்கள் கோடிகோடியாய் விற்கப்பட்டமை உலக வரலாற்றில் எங்கேயும் நடைபெறவில்லை, எப்போதும் நிகழவில்லை. ஒருவகையில் சே என்றும் நினைவுகூரப்படும் புரட்சியாளன், சிலுவையில் தன்னை மரிக்கக் கொடுத்த யேசுநாதர்போல்.

அவர் வியாபார நோக்கங்கங்களுக்காகப் பயன்படுத்தப்படுவது எந்தவகையிலும் அவர் மீதான அன்பையும், கவுரவத்தையும் உண்மை ஓர்ந்த மனிதர்களிடத்தில் அகற்றிவிடவில்லை. அதிகார வர்க்கம் அம்பேத்கர் நினைவு நாளைக் கொண்டாடுவதின் உள் நோக்கம் புரியப்படக் கூடியது. அதுபோல் சேவினது உருவம் வியாபார நோக்கங்களுக்காகப் பயன்படுத்தப் படுவதும் புரிந்துகொள்ளப்படக் கூடியதே. அதிகார வர்க்கங்களின் இக் காயடிப்பு முயற்சிகளினால் அவர்களது முதன்மையும், முக்கியத்துவமும் உலக மக்கள் பார்வையில் நீர்த்துப் போவதற்குப் பதிலாக, இன்னும் வலிமைகொண்டு மேற்கிளம்பவே செய்தன.
இவற்றையெல்லாம் பார்க்கும்போது ஒன்று சொல்லத் தோன்றுகிறது: 'கொல்லப்படுபவர்கள் பாக்கியவான்கள்.'

இம் மாபெரும் புரட்சியாளன்பற்றி பல்வேறு சினிமாக்கள் வந்துள்ளன. ஆயிரக் கணக்கான நூல்கள் எழுதப்பட்டுள்ளன. 'மோட்டார்ச் சைக்கிள் டயரி' என்ற சினிமா சேவின் இளமைக்கால வரலாற்றை, ஒரு வகையில் தென்னமெரிக்காவின் சமகால வரலாற்றையுமே, சொல்லிய சினிமா. தென்னமெரிக்க நாடுகள் சிலவற்றில் பயணம் செய்து சே எழுதிய நாட்குறிப்பினது அடிப்படையில் அச்சினிமாவின் பிரதியாக்கம் இருந்தது.



சே பற்றிய நூல்களில் குறிப்பிடக்கூடியது அண்மையில் வெளிவந்துள்ள Jon Lee Anderson எழுதிய 'Che Guevara: A Revolutionary Life'. இதன் அடிப்படையில் உருவாக்கப்பட்டிருக்கும் சினிமாதான் 'The True Story of Che Guevara'. இதை விவரணப்படமா, சினிமாவா எனச் சொல்ல முடியாதிருப்பது இப்படவாக்கத்தின் தனித்தன்மை.

அண்மையில் டிவிடியில் வெளிவந்திருந்தது. பார்த்தேன். அதிர்ந்துபோனேன். ஆனாலும் அதனடியில் இந்த உலகம், இந்த வாழ்க்கைபற்றிய ஒரு நம்பிக்கையிழையும் சேர்ந்து பிறந்தது. இதுபற்றி ஒரு நண்பருக்குச் சொன்னதும் எல்லா வாடகை DVDக்கடைகளிலும் தேடிவிட்டு கிடைக்கவில்லை என்றார். நானும் தேடிப்பார்த்தேன். நான் முன்னர் எடுத்த கடையில் அதன் ஒரிஜினல் கவர்கூட காணக்கிடைக்கவில்லை. என்ன நடந்தது என்று யூகிப்பதும் சிரமம் தான். இது மறைந்ததற்குப் பின்னால் ஒரு கதையே இருக்கக்கூடும். அப்படி எதுவுமேயில்லாமலும் இருக்கலாம்தான். ஆனால் இது நல்ல சினிமா பார்வையாளர்களின் மத்தியில் ஒரு களேபரத்தை ஏற்படுத்தியிருக்கிறது.

ஏறக்குறைய நாற்பது ஆண்டுகளுக்கு முன்னால் 'அவர் ஒ.ப் த பர்னாசெஸ்' என்றொரு ஆர்ஜென்ரீனிய படம் வெளிவந்திருந்தது. நூற்றெண்பது மணத்தியாலங்கள் படப்பிடிப்புச் செய்து, எண்பது மணத்தியாலங்களுக்குக் குறைத்து, கடைசியில் நாலு மணி இருபது நிமிடங்களுக்கு எடிட்டிங் செய்து, மூன்று பாகங்களாய் வெளிவந்திருந்த ஒரு அரசியற் சினிமா அது. இரகசியமாய்த் தயாரிக்கப்பட்டது. ஏறக்குறைய 'புத்தரின் பெயரினால்' (In the Name of Buddha) என்ற சமகால இலங்கையர் கதைபற்றிய இந்திய சினிமாபோல அது.

இப்போது இன்னும் இரண்டு சே பற்றிய குறும்படங்கள் அல்லது விவரணத் தமிழ்த் திரைப்படங்கள் தமிழ்நாட்டில் வெளிவந்திருப்பதாய்த் தெரியவருகிறது. அண்மையில் தயாரிக்கப்பட்டவை. ஆனாலும் இன்னும் எனக்கு பார்க்கக் கிடைக்கவில்லை. இவைபற்றிய விமர்சனங்களையே சஞ்சிகைளில் பார்த்தேன். இவைபற்றிச் சொல்லப்பட்ட குறைபாடுகளில் முக்கியமானது சே குவேரா சோவியத் ரஷ்யாவுடனும் செஞ்சீனாவுடனும் கொண்டிருந்த தொடர்புகள்பற்றி யாதொரு பிரஸ்தாபமும் இந்த இரண்டு தமிழ் விவரணப் படங்களிலும் இல்லையென்பது. அவற்றை நிவர்த்தி செய்வதாயிருந்தது 'The True Story of Che Guevara'.

நாற்பதாண்டுகளுக்கு முன்பு வெளிவந்த 'அவர் ஒ.ப் த பர்னாசஸ்' படத்தின் இறுதியில் சில நிமிடங்கள் காட்டப்பட்ட இறந்த சேவின் படம் மிகத் துன்பம் செய்வதாயிருந்தது. ஆனால் The True Story of Che Guevaraவிலிருந்த கூடுதலான விவரணம் என்னவெனில், சே குவேரா உழைக்கும் வர்க்கத்தின் போராட்டம் எந்தத் திசையில் செல்லவேண்டுமென்பதைத் தீர்மானித்து, அதற்கான ஒரு மையப்படுத்தப்பட்ட எதிர் அணிகளைத் திரட்டும் முயற்சியாக செஞ்சீனத்தை அணுகி மாஓ சே துங்கினைச் சந்தித்தமையாகும்.

பொலிவியாவில் கொல்லப்பட்டு புதைக்கப்பெற்ற சேவின் உடல் அறுபதுக்களின் இறுதியிலேயே கண்டுபிடிக்கப்பட்டுவிட்டது. ஆனால் இரண்டு மணிக்கட்டுகளும் அற்றதாக அது இருந்தது. வெட்டியெடுக்கப்பட்ட மணிக்கட்டுக்கள் எங்கே சென்றது என்பதற்கான விடை, இந்த சே பற்றிய விவரணப்படத்தில் சாட்சிகளின் மூலமாக முன்வைக்கப்படுகிறது.

சே மறைந்திருக்கலாம். ஆனால் அவரது ஞாபகங்கள் உலகின் மனச்சாட்சி பயிலும் உலகங்களில் இன்னும் இருந்துகொண்டே இருக்கிறது என்பதை படத்தில் காண்கிற போது மானிடம் பாடும் மனித ஜீவன்கள் மரணத்தைத் தழுவுவதில்லையென மனம் எக்காளமிடுவதைத் தவிர்க்க முடியாது.

இதைப் பார்க்கும் வாய்ப்புக் கிடைக்கப் பெறுபவர்கள் உண்மையில் பாக்கியவான்கள்.

■ ■ ■


FOR ALL MORTGAGE NEEDS



Rajmogan Selliah
Mortgage Consultant

TD Canada Trust Scotiabank™

2929 Lawrence Ave. East, Suite 203,
Scarborough, ON M1P 2S8
Head Office: 701 Evans Ave., Suite 600, Toronto, ON M9C 1A3
rajmoganselliah@invis.ca

Dir: 416.569.3200
Bus: 416.430.0111, Fax: 416.430.0222

digi

# என் வீட்டுத் தோட்டத்தில் பூவெல்லாம் கேட்டுப்பார்!

சிவாஜினி பாலராஜன்
sivajini@thaiveedu.com



‘என்ன பிள்ளை தாராளமாக காசு செலவழித்து தோட்டம் செய்திருக்கிறாய் போல் இருக்கிறது. பூக்கடைகளுக்கு பூ விற்கிறனீயோ. வித்தியாசம் வித்தியாசமான நிறத்தில ரோசா நிற்குது. விதவிதமா “பேர் கூட தெரியாத” பூங்கன்றுகள் நிற்குது. போனவருடமும் பார்த்தன். கோடை தொடங்கி பனி காலம் ஆரம்பிக்குமட்டும் உங்கடை தோட்டத்திலை மாறி மறி பூ நிறைய இருந்தது. எங்கடை வீட்டுத் தோட்டத்தில் சில சமயம் பூ இருக்கு சில சமயம் பூ இல்லாமல் பச்சையாக இருக்கு. எப்படி உங்கடை தோட்டம் மட்டும் இப்படி இருக்கு.’

இவ்வாறு கேட்டார் அந்த அப்பாவி அம்மா. இந்த தோட்டத்தில் வசந்த காலத்தின் ஆரம்பம் முதல் கோடை முடிந்து குளிர் கால ஆரம்பம் வரை பூ இருக்க வேண்டும் என்பதற்காக எந்தெந்த செடி எப்போது பூக்கும் என்று ஆராய்ச்சி பண்ணி இவை எல்லாவற்றையும் ஒரு ஒழுங்கில் நடுவதற்கு செலவழிந்த நேரமும் ஆராய்ச்சியும் கொஞ்ச நஞ்சமல்ல.

முழுமையான வெயிலும் அவ்வப்போது மழையுமாக கோடையையும் மாரியையும் மட்டும் கண்டு அனுபவித்துப் பழகிய எங்கள் வாழ்வில் இப்போ வசந்தமும் இலையுதிரும் சேர்ந்துள்ளன. இந்த ரம்மியமான இலையுதிர் பருவ முடிவில் வரும் கோடையை ஒவ்வொருவரும் அனுபவிப்பதில் வேறுபாடு உண்டு. சுற்றுலா செல்பவர்கள் ஒரு புறம். உற்றார் உறவினருடன் பூங்கா என்றும் கடற்கரை என்றும் செல்பவர் ஒரு புறம். இனி வீட்டுத் தோட்டத்தை பூந்தோட்டம் மரக்கறித் தோட்டம் என்று வகைப்படுத்தி கோடை காலத்தின் பெரும் பகுதியை செல வழிப்பவர்களும் உண்டு. மரக்கறித் தோட்டம் செய்வது பணத்திற்காக என்று யாரும் எண்ணிவிட முடியாது. ஏனெனில் அதில் எந்த வருமானமும் வராது. ஆனால் ஒரு மனத் திருப்தியும் சந்தோஷமும் மாத்திரமே கிடைக்கும். அத்துடன் கிருமி கொல்லிகள் அல்லது வளர்ச்சி ஓமோன்கள் அல்லாத மரக்கறி வகைகளைப் பெறக் கூடியதாக இருக்கும். தனியே பூந்தோட்டத்தில் அக்கறை உள்ளவர்கள் பலர். பூந்தோட்டம் அமைபபது எங்கள் நாட்டைப் போல சுகமானதோ சாதரணமானதோ அல்ல. நால்வகை கால நிலை இருப்பதால் பூக்கன்றுகளும் கால நிலைகளுக்கேற்ப வகைப்படுத்தப் படுகின்றன. Evergreen எனப்படும் நான்கு காலநிலைகளிலும் என்றும் பசுமையாக இருக்கக்கூடிய மரஞ்செடிகொடிகள், வசந்த காலத்தின் முற்பகுதி, பிற்பகுதி கோடையின் முற்பகுதி, பிற்பகுதி இலையுதிர் காலத்தின் முற்பகுதி, பிற்பகுதி போன்றவற்றில் பூக்கும் பூங்கன்றுகள் எனப் பல்வேறு வகைகள் உண்டு.

## தாவர வகைப்படுத்தல்

பல்வேறு காலகலங்களில் மலரும் செடிகளை வைத்து தோட்டம் அமைப்பது மிகவும் சிரமமான விடயமாக இருக்கிறது. ஏதோ ஆசைக்கு செடிகளை வாங்கி வந்து நட்டு விட முடியாது. ஒரு தாவரத்தின் வாழ்க்கை வட்டத்தைப் பார்ப்போம்: அது விதையில் ஆரம்பித்து சிறுதாவரம், வேர் , இலை, கிளை, தண்டு, பூ என்று மீண்டும் விதையாகிறது. இவ்வாறு விதையில் ஆரம்பித்து விதையில் ஒரு வருட காலத்துள் வாழ்க்கை முடியும் தாவரங்கள் ஓராண்டுத் தாவரங்கள் (annuals) எனப்படும். இவற்றை ஒவ்வொரு வருடமும் புதிதாக நாட்ட வேண்டும். இவ்வாறு ஒவ்வொரு வருடமும் வரும் செடிகளில் பொதுவானவை கொஸ்மொஸ் (Cosmos) சீனியாஸ் (Zinnias), செவ்வந்தி (Marigold) பெற்றூணியா (Petunia) போன்றவையாகும்.

வாழ்க்கை வட்டத்தை முடித்துக் கொள்வதற்கு இரண்டு முழு வருடங்கள் தேவைப் படுபவை ஈராண்டுத் தாவரங்கள் (biennials) எனப்படும். உதாரணமாக கோலி கொக் (Holly Cock), வொக்ஸ் குளோவ் (Foxglove) சுவீற் வில்லியம் (Sweet William) போன்றவை. பல வருடங்களுக்கு அழியாது காலநிலை மாற்றங்களுக்கு ஈடு கொடுத்து பனிக்காலம் வரும் போது வேர்கள் உறங்கு நிலையில் இருந்து பின்னர் கோடை காலம் வரும் போது முளைத்து வரும் தாவர இனங்கள் பல்லாண்டுத் தாவரங்கள் (perennials) எனப்படும். இவற்றை ஒரு தடவை நட்டால் போதும் பின்னர் தானே ஒவ்வொரு வருடமும் வளரும்.

## புதிதாக தோட்டம் அமைப்போர் இழைக்கக்கூடிய தவறுகள் எவை?

### • தோட்டத்துக்கான இடத் தெரிவு

புதிதாக தோட்டம் அமைப்பது என்பது சுவாராசியமானது மட்டுமல்ல சற்று சிரமமானதும் கூட. நாங்கள் ஆழ்ந்து சிந்தித்து இடத்தை தேர்ந்தெடுப்பது அரிது. வெறுமனே நிலத்தை பண்படுத்தி, பூங்கன்றுகளை நாட்டி விடுவோம். பூங்கன்றுகளை நாட்டுவதற்கு இடம் தெரிவு செய்யும் போது ஒளி என்னும் காரணியில் முக்கிய கவனம் செலுத்த வேண்டும். நிழலில் அல்லது அரைகுறை ஒளியில் வளரும் சில தாவர வகைகளைத் தவிர பொதுவாக அனைத்து தாவரங்களுக்கும் முழுநாள் சூரிய ஒளி தேவைப் படுவதால், எப்போதும் முழுநாள் சூரிய ஒளி, அல்லது ஆகக் குறைந்தது அரைநாள் சூரிய ஒளி படக்கூடிய இடத்தை தெரிவு செய்யவேண்டும்.

இரண்டாவது காரணி மண்ணின் வளம். சில மண்வகைகள் களி அல்லது உவர்ப்பு மிகுந்தவை. களிமண்ணில் வளரக்கூடிய தாவரங்களை களிமண்ணிலும், உவர் மண்ணில் வளரக்கூடிய தாவரங்களை உவர் மண்ணிலும் நட வேண்டும். மண்ணின்




வளத்திற்கேற்பத் தெரிவுசெய்யப்படும் தாவரங்கள் மிகவும் செழித்து, நலம்பெற வளரும். ஒன்ராரியோவில் பெருமளவு நிலம் களித் தன்மையானது. அத்தகைய மண்ணைப் பதப்படுத்துவதற்கு கிட்டத்தட்ட நாற்பது சென்ரி மீற்றர் அளவுக்கு மண்ணை வெட்டி அகற்றி விட்டு முக்கூட்டு மண் கலவை ( triple soil mix) இட்டுப் பயிரிட்டால் மிகுந்த பயன் கிட்டும்.

மூன்றாவது காரணி நீர் தேங்கி நிற்கும் தன்மை. நீர் தேங்கி நிற்கும் தன்மை மண்ணின் களித் தன்மையுடன் மட்டுமல்ல காணியின் அமைவிடத்துடனும் தொடர்புடையது. அதாவது மேட்டுக் காணியில் சுலபமாக நீர் வழிந்து ஓடிவிடும். ஆனால் பள்ளமான காணியில் தண்ணீர் தேங்கி நிற்பதால் தாவரங்கள் அழுகி விடும்.

### • மண் வகைகள்

மண்ணின் மிக முக்கிய கூறுகள்: மணல் (sand), வண்டல் (silt), களி (clay) என்பனவாகும். மண்ணின் இழைவும் (texture), தரமும் (quality) நிர்ணயிக்கப்படுவது இம் மூன்று விதமான கூறுகளினதும் சேர்க்கையின் விகிதத்தை வைத்து தான். இவை மூன்றும் சரியான விகிதத்தில் சேர்ந்திருப்பது வளமண் (loam) எனப்படும். மணல் மிகுந்த


மண் வகைகள்

மண் இலகுவாக நீர் வழிந்தோடக் கூடியது. காலநிலை மாற்றங்களுக்கு தன்னை இசைவிக்கக் கூடியது ஆனால் மிகக் குறைந்த அளவில்தான் நீரையும் கனிமங்களையும் வைத்திருக்கும். நீரை வெகுவிரைவாக வடிந்தோட விடுவதால் கனிமங்களும் நீருடன் சென்றுவிடும். அத்துடன் மணல் அரிப்புக்கும் சுலபமாக உட்பட்டுவிடும்

களித்தன்மை கூடிய மண் விரைவில் இறுக்கமாக ஒன்று சேர்வதால் நீர் வடிதலைத் தடை செய்வது மட்டுமல்ல வேர்களுக்கு வளி கிடைப்பதையும் தடை செய்யும். மிகவும் மெதுவாகவே காலநிலை மாற்றங்களுக்கு நெகிழும். இதனால் வசந்த காலம்

ம் பக்கம் பார்க்க...

S.P ELECTRONICS & COMPUTERS

அனைத்துத் தமிழ் வானொலிகளும் புதிதாக
வாங்குவதற்கும், திருத்திக் கொள்வதற்கும்

416 264 6400

2641 Eglinton Ave. Scarborough
(Brimley & Eglinton)

NATIONAL
Driving Institute

Experienced Male & Female Instructors
will Teach for G1, G2 Road Test

Early Apointment for Road Test

Please Call

Mrs. Saththi
416•219•0181
905•653•3878

வந்தபின்னரும் குளிரை வைத்திருக்கும்.. நல்ல மண் இவை இரண்டுக்கும் இடைப் பட்ட குணங்களைக் கொண்டிருக்கும். ஒரு கையளவு மண்ணை எடுத்துப் பார்க்கும் போது ஈரத்தன்மையுடையதாக ஆனால் உதிரக்கூடியதாக கடும் நிறமாக இருந்தால் அது நல்ல மண்ணாக இருக்கும்.

பெரிய ஆராய்ச்சிகள் இன்றி ஒரு மண் பாத்தி தோட்டச் செய்கைக்கு உகந்ததா என மண்ணைச் சோதித்துப் பார்ப்பது மிகவும் சுலபம். ஒருபிடி மண்ணை கையில் எடுத்து உருண்டையாக்கி பின்னர் அதனை நிலத்தில் எறிந்து பார்த்தால் சுலபமாக உருண்டையாகக் கூடிய தன்மையும் அதே சமயம் அதனை நிலத்தில் எறியும் போது சுலபமாக உதிர்ந்து போகக் கூடிய தன்மையும் இருந்தால் அம்மண் பயிர்ச்செய்கைக்கு நல்லது. அதாவது ஈரப்பற்றும் மணலும் சேர்ந்த மண்ணாக இருக்க வேண்டும். களி மண் உடனடியாக, சுலபமாக உருண்டையாக்கக் கூடியது ஆனால் நிலத்தில் எறியும் போது சுலபமாக உதிர்ந்து சிதறாது. ஆனால் மணல் மண்ணை உருண்டையாகப் பிடிக்கவே முடியாது!

## மண்ணை வளப்படுத்தலும் இயற்கையான பசளை வகைகளும்

● **பாசிப் பசளை (Peat Moss)**



இது ஒருவகைப் பாசி இனத்தை உலர்த்தி ஆக்கப்படும் பசளை. இந்தப் பாசி இனம் தனது கலங்களில் அதிகளவு நீரைக் கொள்ளக் கூடியது. அதாவது தனது உலர் நிறையின் 20 மடங்கு நீரை உள்வாங்கி பின்னர் தேவைப்படும் போது இந்நீரை வெளிவிடக் கூடியது. இதில் கனிமங்கள் இல்லை. இருந்தாலும் இது கரையக்கூடிய வடிவத்தில் இருக்கும் கனிமங்களை உறிஞ்சி பின்னர் தேவைப்படும்போது வெளிவிடக் கூடியது. இந்தப் பசளை எளிதில் மண்ணுடன் சேரவும், வளியை உள்வாங்கவும், கனிமங்களைப் பிணைக்கவும் வல்லது.

● **மேல் மண் (Top Soil)**

மேல் மண் எனப்படுவது பூமியின் மேற்பரப்பில் கிட்டத்தட்ட 8 அங்குலம் அளவிற்கு இருக்கும் படையாகும். இப்படையில் அழுகி, உக்கிய தாவர, விலங்குக் கூறுகள் போன்றவை சேர்ந்திருப்பதால், கனிமங்கள் நிறைந்ததாகக் காணப்படும். முன்னொரு காலத்தில் தோட்டக்காரர்கள் இலாபம் அல்லது கூடிய வருமானம் தரக்கூடிய பயிர்களையே மாறி மாறிப் பயிரிட்டு வந்தனர். பின்னர் இம்முறை மாற்றப்பட்டு, சுழற்சி முறைப் பயிர்ச்செய்கை ஆரம்பிக்கப்பட்டது. சுழற்சி முறைப் பயிர்ச்செய்கையில் வெவ்வேறு இனப் பயிர்கள் மாறி மாறிப் பயிரிடப்படும். இதனால் மேல் மண் பாதுகாக்கப் படுகிறது. வீட்டுச் சிறு தோட்டங்களிலும் பூந்தோட்டங்களிலும் இவ்வாறு செய்யமுடியாது என்பதால் ஒவ்வொரு வருடமும் ஆகக் குறைந்தளவாவது முக்கூட்டு மண் கலவை வாங்கி போடுவதால் மண் பாதுகாக்கப்படுவதுடன், நல்ல பயனும் கிட்டும்.

● **கலப்புப் பசளை (Compost)**

இது ஒரு கடும் மண்ணிறப் பசளை ஆகும். அழுகிய தாவரங்கள், வெட்டிய புல், மரக்கறி- பழவகைகளின் தோல் போன்ற சேதனப் பொருட்கள் ஆகியவைகளை உக்க வைத்து இக் கலப்புப் பசளை ஆக்கப்படுகிறது. இதன் அழுகுதன்மை (humus) மண் கனிமங்களைச் சேர்த்து வைத்திருக்க உதவுகின்றது. தாவரங்கள் நோய்வாய்ப்படாவாறு, அழுகு தன்மை தடுக்கிறது.

**முக்கலலைவை (Triple Mix)**

பாசிப் பசளை, மேல் மண், கலப்புப் பசளை மூன்றும் சரிநிகராகச் சேர்ந்த கலவையே முக்கலவை எனப்படும். பொதுவாக தாவர வகைகள் விற்பனையாகும் இடங்களில் (Loblaw's, Canadian Tire, Home Depot, Wal-Mart, Zellers & Garden Centers) இதனைப் பெற்றுக் கொள்ளக் கூடியதாக இருக்கும். இதனை இட்டு, தாவரங்களை நாட்டினால், அவை மிகவும் செழிப்பாக வளர்ந்து, மிகுந்த பயன் தரும்.

● **நிலத்தை பண்படுத்தல்**

புல்லை அகற்றி, நிலத்தைக் கிண்டி, முக்கூட்டு மண் கலவை இட்டு, நிரவ வேண்டும். ஓராண்டுத் தாவரங்களைப் புதுக்க நடுவதற்கு 6" ஆழத்துக்கும், பல்லாண்டுத் தாவரங்களை நடுவதற்கு 12" ஆழத்துக்கும் நிலத்தைப் பண்படுத்த வேண்டும். பல்லாண்டுத் தாவரங்கள் ஆழந்து வேரோடுபவை.

● **தாவரங்களை நாட்டுதல்**

தோட்டத்தின் உள்ளோரத்தில், அதாவது உங்கள் கைக்கு எட்டிய தூரத்தில் நடுவதற்கு குள்ளமாக வளரக்கூடிய தாவரங்களையே நாடவேண்டும். மறு ஓரத்தில் மிகவும் உயர்ந்து வளரக் கூடிய தாவரங்களையும், நடுவில் ஏனைய தாவரங்களையும் நடவேண்டும் அத்துடன் இவ்வாறு நடும்போது வசந்த கால ஆரம்பத்தில் பூக்கக் கூடிய ரியூலிப் (tulip) ஐரிஸ் (iris) டவோடில்ஸ் (daffodils) கைசிந் (hyacinth) போன்றவற்றையும் வசந்தத்தின் முடிவில் பூக்கும் கொலம்பைன் (columbine) கோரல் பெல் (coral bell) போன்றவற்றையும்

கோடையில் பூக்கக் கூடிய Hydrangea, Jacob's ladder போன்றவற்றையும் இலையுதிர் காலத்தில் பூக்கக் கூடிய rose of Sharon போன்றவற்றையும் நடவேண்டும். ரோசாச் செடிகளை விபரமறிந்து வாங்க வேண்டும். சில ரோசாச் செடிகள் வசந்தம் தொடக்கம் பனி ஆரம்பிக்கும் வரையில் பூக்கக்கூடியவை. அதேசமயம் சில இனங்கள் ஒரு வருடத்தில் ஒருதடவை மட்டும் பூக்கும். பறவை வகைகளையும் வண்ணத்து பூச்சி வகைகளையும் ஈர்க்கக் கூடிய இனங்களையும், நறுமணம் பரப்பக்கூடிய பூங்கன்றுகளையும் நடவேண்டும். இவ்வாறு தோட்டத்தை திட்டமிட்டு அமைத்தால் வருடம் முழுவதும் உங்கள் தோட்டத்தில் பூக்கள் இருக்கும். தோட்டமும் அழகாக, ரசிக்கத்தக்கதாக இருக்கும்.

● **தாவர நோய்கள்**

பொதுவாக சில பங்கசுக்களும் (fungi) சில பூச்சி இனங்களும் ரோசா மற்றும் பூங்கன்றுகளுக்கு தீமை விளைவிக்கும். நலமான தாவரங்கள் இவற்றை எதிர்க்கும் வல்லமை கொண்டவை. வளியில் ஈரப்பற்று இருந்தாலும் தாவரத்தின் இலை தண்டு போன்றவற்றில் ஈரப்பற்று நீடித்தாலும் பங்கசுக்களும் பற்றீரியாக்களும் (bacteria) பெருகும். வீட்டுத் தாவரங்களின் வேர்களை ஒட்டுண்ணிகள் (parasites), இழைப்புழுக்கள் (nematodes) என்பனவும் தாக்கும்.

வெப்பமோ ஈரமோ மிகுந்த நாட்களில் தாவர நோய்கள் பெருகும். எடுத்துக்காட்டுகள்: பூஞ்சணம் (mildew), வாடல் நோய் (wilts), நரைப் பூஞ்சணம் (grey mould), இலைப் புள்ளி (leaf- spots), இலை காய்தல்.

● **துகட்பூஞ்சணம் (Powdery Mildew)**

தாவரத்தில் வெள்ளைத் துகள் போல படர்ந்திருக்கும். இது மிகவும் மெதுவாகப் பரவும் நோய். மிகவும் பாரதூரமான விளைவுகளை ஏற்படுத்தாது. இது மிகவும் சுலபமாக வளி மூலம் பரவக் கூடியது. சவர்க்காரம் கரைத்த தண்ணீரை கிழமைக்கு இரண்டு மூன்று தடவைகள் தெளித்தால், நாளடைவில் இது மாறிவிடும்.

● **வாடல் நோய் (Wilts)**

சில வகையான பற்றீரியா அல்லது பங்கசுக்கள் மண்வழி பரவி, நீரை உறிஞ்சும் வேர்களைப் பாதிக்கும். இதனால் இலைகள் பழுப்பு நிறமடைந்து, பின்னர் மண்ணிறமாகவே தாவரம் விரைவில் மடிந்துவிடும்.

● **நரைப் பூஞ்சணம் (grey mould)**

இது பங்கசினால் ஏற்படும் ஒருவகை நோயாகும். பொதுவாக இந்நோய் பெகோனியாஸ் (begonia), ஜெரானியம் (geranium), கமெலியாஸ் (camellias), டெல்பினியம் (delphinium), டாலியாஸ் (dahlias), சினப்ட்ரகன் (snap dragon), கைசிந் (hyacinth) போன்ற தடித்த இலைத் தாவரங்களைத் தாக்கும். தாவரங்களைப் போதிய இடைவெளியின்றி நெருக்கி நட்டால், மடிந்த கூறுகள் அகற்றப்படாத நிலையில் அவை தாவரத்திலிருந்தபடியே அழுகினால் இப் பங்கசு உண்டாகும். இந்த நோயின் அறிகுறிகள் தாவரத்துக்குத் தாவரம் வேறுபடும். எனினும் இதனால் அனைத்தும் வளர்ச்சி குன்றி, செழிப்புக் குன்றி, நாளடைவில் மாண்டுவிடும். பங்கசு கொல்லிகளைப் பயன்படுத்தி இதனைக் கட்டுப்படுத்தலாம். இவ்வாறு தோட்டத்தைப் பற்றி ஆராய்ந்து செய்தால் உங்கள் தோட்டமும் அழகாக அமையும்.

என் வீட்டுத் தோட்டத்தில் பூவெல்லாம் கேட்டுப் பாருங்கள்... அவை எனது பெயர் சொல்லும்.

■ ■ ■



**ABC Abacus**

*Abacus training for creative minds*



* சிறுவர்களை புத்தி நுட்பம் மிக்கவர்களாக வளர்க்கும் பயிற்சிமுறை.

* உலகரீதியாக ஏற்றுக் கொள்ளப்பட்டு வேகமாக உலகெங்கும் பரவிவரும் கற்கைநெறி.

* கனடிய சூழலுக்கு ஏற்ப வடிவமைக்கப்பட்ட பாடத்திட்டத்தை உடையது, இதன் சிறப்பம்சம்.

* இக் கல்விமுறை உங்கள் பிள்ளைகளை பேரறிவாளராக்கக் கூடியது.

மேலதிகத் தொடர்புகளுக்கு: Active Brain Center

| Head Office: | Brampton | Newmarket | Scarborough N. |
|---|---|---|---|
| 416-615-2520 | 647-476-2532 | 647-890-2768 | 416-754-1141 |
| 2163 Lawrence Ave. E. (Birchmount & Lawrence) | 230 Sandalwood Parkway E. | 905-775-0395 | 80 Nashbene Rd. (Middlefield) |

Web:- www.activebraincenter.com | E-mail:- mail@activebraincenter.com

**EXPERT BUILDING INSPECTIONS LTD**

"Dedicated to Expert, Honest & Independent Inspections"

**Tel: 905 940 0811 Fax 905 940 6108**

**Toll Free 1 866 373 3315**

- Commercial Building Inspections
- Environmental Assessments
- Air Quality Investigations
- Problem Analysis & Solutions
- New Home Warranty Inspections
- Resale Home Inspections
- Complete Home Audit
- Thermal Imaging

**www.expertinspector.com**

- Tough and Thorough Inspections by **University of Toronto** educated Building Science Experts Specializing in Defect Recognition
- Our Inspectors are Registered Home Inspectors under the Province of Ontario 1994 Home Inspectors Act-Bill 158 and full members of **ASHI** and **CAHPI**-Ontario
- Exceed Nationally Recognized Standards
- Important Maintenance Advice & Follow Up Support For First Time Buyers
- On-Site Narrative Reports
- Seven Days a Week

ASHI MEMBER
CAHPI Ontario

**STRYKE 1**
**Security Solutions**





**Free Installation**

**உலகின் எப்பாகத்திலிருந்தும் உங்கள் வியாபாரத்தை, வீட்டையோ இலகுவாகக் கண்காணிக்கலாம்!**

24h Monitoring
**4 Color Cameras**
Computer System
17" LCD Monitor
Cabling
1 Year Full Warranty
Setup and Installation
**$1699.99**


24h Monitoring
**8 Color Cameras**
Computer System
17" LCD Monitor
Cabling
1 Year Full Warranty
Setup and Installation
**$2399.00**

**Security Camera System**
Starting From
**$999.00**
Including Computer System
Setup and Installation

**Easy Way To Monitor Your Business & Home From Anywhere In The World**

**NIGHT VISION UPGRADES $120.00**
**OUTDOOR UPGRADES $150.00**

# 416-400-7860




# ஊக்கமது கைவிடேல்

தனது படைப்புப் பத்திரிகையில் வெளிவரவில்லை என்பதற்காக, எழுத்தாளர் அதனைக் குப்பைத் தொட்டியில் எறிய வேண்டியதில்லை. பத்திரிகைகள் ஆரம்ப எழுத்தாளர்களுக்கு வாசகர்கள் மத்தியில் ஒரு கணிப்பை ஏற்படுத்த வல்லன என்பது உண்மையே. ஆயின், ஒரு படைப்புக் குறிப்பிட்ட ஒரு பத்திரிகையின் அல்லது சஞ்சிகையின் கணிப்பைப் பெறத்தவறின் அப்படைப்புத் தரக் குறைவானது என்று கருதுவது பிழை.

ஒரு பத்திரிகை நிராகரித்ததை, இன்னொரு பத்திரிகை ஏற்றுக் கொள்வதும், தரமான படைப்புக்களைப் பத்திரிகைகள், தாமாகவே வகுத்துக் கொண்ட சில காரணங்களுக்காகப் பிரசுரிக்க முடியாமைக்கு வருந்துவதும், பத்திரிகை உலகில் பெரிதும் நடைபெறும் வழமையாகும்.

உண்மையில், புகழ் பெற்ற எழுத்தாளர்கள் பலர், தமது ஆரம்பப் படைப்புகளைப் பத்திரிகைகளுக்கு அனுப்பவே இல்லை. Virginia Woolf, T.S. Eliot ஆகிய ஆற்றல் வாய்ந்த எழுத்தாளர்கள், தமது ஆரம்ப காலத்து ஆக்கங்கள், பத்திரிகைகளில் வெளிவர வேண்டும் என்றோ, நூலுருவம் பெற வேண்டும் என்றோ கவலைப்பட்டதில்லை. தங்கள் பாட்டுக்கு எழுதி எழுதிக் குவித்துக் கொண்டே இருந்திருக்கின்றார்கள். இத்தகைய அமைதிப் பயிற்சியில் அவர்கள் என்றைக்குமே சோர்வடைந்ததில்லை.

வளரும் எழுத்தாளருக்கு எழுத்து முயற்சியில் சோர்வு வருவது நல்லதல்ல. சோர்வு ஆர்வத்துக்கு எதிர். தளர்ச்சி வளர்ச்சிக்குப் பகை.

எழுத்தாளர், எக் கட்டத்திலும் தன்னம்பிக்கையை இழக்கலாகாது. என்னிலாரும் எனக்கினி யாரில்லை என்ற பாடினார் அப்பர் சுவாமிகள். தன் மீது நம்பிக்கை இல்லாதவன், சாதனை புரிந்து காட்டியதாகச் சரித்திரம் இல்லை. எந்தச் சாதனையாளர் சரித்திரமும், அவர்கள் முயற்சிக்குமேல் முயற்சி செய்த கதைகளையே எமக்குக் கூறுகின்றது.

ஊக்கமது கைவிடேல் என்பது ஆத்திசூடி. முயற்சி திருவினையாக்கும் என்ற நம்பிக்கையுடன் தொடர்ந்து முன்னேறும் வழிகளைத் தேடுபவனைப் பார்க்கவே வெற்றி மகள் காத்திருக்கின்றாள்.

தனது படைப்பில் என்ன குறைபாடு என்பதைக் கண்டறிய வேண்டும். சொற்கள் பொருத்தமாக இல்லையா? கேட்டுக் கேட்டு அலுத்துப்போன, அல்லது படித்துப் படித்துப் புளித்துப்போன சொற்றொடர்கள் அதிகமா? பிறர்மனம் புண்படக் கூடிய கருத்துக்கள், சொற்கள் எவையேனும் படைப்பின் பண்பைக் கெடுக்கின்றனவா? படிப்பதற்கு விறுவிறுப்பான ஒன்றும் இல்லையா? என்ன குறை என்பதனை ஆராய முற்பட வேண்டும்.

தனது படைப்புக்குத்தானே ஒரு சிறந்த திறனாய்வாளனாக இருக்கும் எழுத்தாளரே எழுத்துலகை ஆளவல்ல எழுத்தாளர்.

இலங்கை, இந்தியா போன்ற நாடுகளின் எழுத்துலகிற் போட்டிகள் அதிகம். அதனால் புதிய எழுத்தாளர்கள் பத்திரிகைகளில் வாய்ப்புகளைப் பெறப் பல ஆண்டுகள் காத்திருக்க வேண்டியுள்ளது.

புலம்பெயர்ந்த நாடுகளில் இத்தகைய நிலைமை இல்லை. கனடா, ஜெர்மனி, பிரான்சு, இங்கிலாந்து, ஆஸ்திரேலியா ஆகிய நாடுகளில் தமிழ்ப் பத்திரிகைகளிற் பல புதிய எழுத்தாளர்கள் எழுதி வருகின்றார்கள்.

இவர்களுள், ஒருசிலருக்கே இலக்கியப் பார்வை இருப்பதாகத் தெரிகின்றது.

# இலக்கியப் பார்வை

ஓர் ஆறு.

இதனை ஒரு விஞ்ஞானி பார்க்கின்றார். பள்ளத்தாக்கின் அகலம், நீரோட்ட வேகம், மண்ணரிப்பு, ஆறு அடித்துக் கொண்டு செல்லும் பொருள்கள் என்பன அவர் பார்வையைக் கவர்கின்றன.

ஆளும் கட்சித் தலைவருக்கு ஆறு வேறு கதை சொல்கிறது. ஆற்றில் நல்ல நீர் ஓடுகிறது. இம்முறை தண்ணீர்த் தட்டுப்பாடு அரசாங்கத்துக்கு ஒரு பிரச்சினையாக இருக்காது என்று மகிழ்ச்சி அடைகின்றார் அவர்.

கடவுளின் பக்தர் ஒருவர் வருகின்றார். இறைவன் கொடுத்த வளம், அவன் கருணை வெள்ளத்தைப் போல் ஊர் மக்கள் அனைவருக்கும் உதவி செய்யப் பாய்கிறது இந்த ஆறு எனக் கருதியவாறு இறங்கித் தலைமுழுகுகின்றார்.

ஓர் எழுத்தாளர் பார்க்கின்றார். *உதயசூரியனின் செம்பொற் கிரணங்களால் நதியின் செந்நீர்ப் பிரவாகம் பொன்னிறம் பெற்றுத் திகழ்ந்தது. அந்தப் புண்ணிய நதிக்குப் பொன்னி என்னும் பெயர் அந்த வேளையில் மிகப் பொருத்தமாகத் தோன்றியது* என்று வருணித்துப் பூரிப்படைகின்றான்.*(கல்கி: பார்த்திபன் கனவு)*

ஆளுக்கு ஆள் பார்வை வேறுபடுவது இயல்பு. எழுத்தாளரின் பார்வைக்கு இலக்கியப் பார்வை என்று பெயர்.

இலக்கியத்துக்குப் பொருள் முக்கியமன்று. பொருளை எழுத்தாளர் ஒருவர் பார்க்கும் விதமும் அதனைக் கையாளும் முறையுமே முக்கியம்.

பார்வைக்கு அடித்தளம் அநுபவம்.



வி. கந்தவனம்
kanthavanam@thaiveedu.com

கணந்தோறும் புதுப்புது அநுபவங்களில் எழுத்தாளர் தோய்ந்து எழுகின்றார். இவற்றுட், பல மறைந்து விடுகின்றன; சில நெஞ்சில் நிலைத்து விடுகின்றன. நெஞ்சில் நிலைத்து நிற்கும் தனது அநுபவத்தை மற்றவர்களுடன் பகிர்ந்து கொள்ள வேண்டும் என்கின்ற ஓர் உணர்ச்சித் துடிப்பு அவனை எழுதத் தூண்டுகின்றது.

அநுபவமும் ஆளுக்கு ஆள் வேறுபடும். சில பேர் எட்ட இருந்து அநுபவிப்பர். சில பேர்கிட்ட இருந்து அநுபவிப்பர். இன்னுஞ் சிலர் ஒட்டி உறவாடி அநுபவிப்பர். இதில் மூன்றாவது வகையே சிறந்தது என்பது என்னுடைய கருத்து. அப்படி இருக்க வேண்டியதில்லை என்று வாதிடுவோரும் உளர். இவர்களின் வாதம் இருவகை:

> குடிவெறியைப் பற்றி எழுதுவதற்கு மதுவைக் குடித்து வெறித்து அநுபவப்பட வேண்டும் என்றில்லை. குடித்து வெறியாடுபவனைப் பார்த்தாலே போதுமானது. அதாவது கிட்ட நின்று பார்க்கும் அநுபவமே போதுமானது.
>
> ஒட்டி உறவாடியும் ஒருவர் காணாத ஒன்றை இன்னொருவர் கிட்ட நின்றோ எட்ட நின்றோ காண முடியும். இதனைக் கற்ற கல்வி, இதற்கு முன் பெற்ற அநுபவங்கள் என்பவற்றைக் கொண்டு சாதிக்க முடியும்.

எவ்வகையாயினும் உள்ளம் தோய்ந்த, அநுபவத்துடன் கூடிய பொருளே இலக்கியப் படைப்புக்குத் தகுந்த பொருளாகும்.

# இலக்கியப் பொருள்

இவ்வுலகம், இவ்வுலகத்தில் வாழும் மனிதன், மனிதனைச் சூழ்ந்த இயற்கைப் பொருள்கள், மனிதனின் கற்பனை உலகங்கள், இவை எதுவும் இலக்கியத்துக்குப் பொருளாகலாம். இவை பற்றிய பெரும் ஆய்வையே நடத்தியிருக்கின்றனர் நம் முன்னோர்.

*முதற்கரு உரிப்பொருள் என்ற மூன்றே*
*நுவலுங் காலை முறைசிறந்த தனவே*
*பாடலுட் பயின்றவை நாடுங் காலை*

-தொல்காப்பியம், அகம் : 3

நூற் பொருள் முதல், கரு, உரி என மூவகைப்படும். நிலமும் (இடமும்) காலமும் முதற் பொருள்.

இவற்றிற் காணப்படும் தெய்வம், மக்கள் விலங்கு, பறவை, மரம், தொழில், இசை ஆகியனவும் பிறவும் கருப்பொருள்கள்.

ஐந்திணை ஒழுக்கம் உரிப்பொருள். திணை-நிலம்.
ஐந்திணை ஒழுக்கங்களாவன: குறிஞ்சிக்குப் புணர்தலும்,

பாலைக்குப் பிரிதலும், முல்லைக்கு இருந்தாலும், மருதத்துக்கு ஊடலும், நெய்தலுக்கு இரங்கலும் அவற்றின் காரணங்களும்.

இவை மேலும் அகத்திணை ஒழுக்கம் புறத்திணை ஒழுக்கம் என வேறுபடும்.

இவற்றுள் உரிப்பொருளே பிரதானமானது. சொல்ல வரும் விடயம் (theme or statement) உரிப்பொருள். (Theme என்ற ஆங்கிலப் பதத்துக்குச் சிலபேர் கருப்பொருள் என்ற சொல்லைப் பாவித்துக் குழப்பி வருகின்றனர்). உரிப் பொருளுக்கு உணர்ச்சிப் பொருள் என்றும் பெயர். உரியாகிய உணர்ச்சியின் முக்கியத்துவத்தை, இலக்கிய கலாநிதி பண்டிதமணி சி. கணபதிப்பிள்ளை அவர்கள் பின்வருமாறு விளக்குகின்றார்:

> *...ஒரு மணப்பந்தர். அப்பந்தரில் இருவர் மணமக்கள். அவர்களிடையே அன்பு உணர்ச்சி.. அன்புணர்ச்சியாகிய உரி இல்லையேல், மணமக்கள் வெறும் பிணங்கள், பந்தர் சுடுகாடு. இவற்றால் முத்திறப் பொருள்களில், உரியாகிய உணர்ச்சியே உயிரானது. உயர்ந்தது.*
>
> (நூல்: செந்தமிழ்க் களஞ்சியம், கட்டுரை இலக்கியம்)

எழுத்தாளர் தாம் அநுபவப்பட்ட – தம்முடன் ஐக்கியப் பட்ட – பொருளையே உரிப்பொருளாகத் தெரிவு செய்தல் வேண்டும். அதனை மக்களுக்கு ஏதாவதொரு வகையில் பயன்படதக்க உயர்ந்த பொருளாகப் படைத்தல் அவரது பொறுப்பு. இல்லையேல் அஃது இலக்கியப் பொருள் ஆகாது.

உரிப்பொருளைத் தெரிந்தபின், அதனைச் சிறப்புற வெளிக்கொணரத் தக்க பாத்திரங்களையும் (characters) சம்பவங்களையும் (plots) அமைப்பதிலேயே எழுத்தாளனின் திறமை இருக்கின்றது.

இக்காலத்தில் பாத்திரங்களை வைத்துக் கொண்டு உரிப்பொருளைத் தேடுகின்றார்கள். இலாபத்தை வைத்துக் கொண்டு அதற்கொரு குதிரையைத் தேடுவது ∴.,..

எனினும், சினிமாத் துறையில் இது பெரியதொரு கலையாகிவிட்டது.

சிவாஜி கணேசன், எம்.ஜி.ஆர் ஆகியோரை வைத்துக் கொண்டும், ரஜினிகாந்த், கமல்ஹாசன் போன்றவரை மனதிற்கொண்டு கதைகள் எழுதப்பட்டிருக்கின்றன.

பாத்திரங்களை வைத்துக்கொண்டு பாட்டுக்கள் எழுதிய கண்ணதாசனும் வைரமுத்துவும் தரமான படைப்புக்களைத் தந்திருக்கின்றார்கள்.

சினிமாத் துறையில் இது சாத்தியமாகலாம். மற்றும்படி உரிக்கு உகந்த பாத்திரங்களையும் அப்பாத்திரங்களுக்குத்தக்க சம்பவங்களையும் தெரிவு செய்தலே ஆக்கப்படைப்புக்கு உகந்த முறையாம்.

உரிப்பொருள் உண்மைப் பொருளாக இருத்தல் வேண்டும். அதுவே நிலைக்க வல்லது: எல்லோர்க்கும் எக்காலத்துக்கும் பொருந்த வல்லது.

மெய்ப்பொருளை இனங் காண்பதற்கு எழுத்தாளருக்குப் பரந்த அறிவு வேண்டும்.

தொடரும்...

■ ■ ■

# சிறுவர் துஷ்பிரயோகம் (Child Abuse)

ஜீவா திசைராஜா
jeeva@thaiveedu.com



கடந்த இதழில் குடும்ப வன்முறைகள் நடைபெறும் வீடுகளில் பிள்ளைகள் எவ்வாறு பாதிக்கப்படுகிறார்கள், இத்தகைய பிள்ளைகள் பெற்றோரிடமிருந்து எவ்வாறு தற்காலிகமாகவேனும் பிரிக்கப்படுகிறார்கள் என்று நோக்கினோம். சிறுவர்கள் குடும்ப வன்முறையினால் மட்டுமன்றி வேறு பல சந்தர்ப்பங்களிலும் உடல், உள, பாலியல் ரீதியில் அதிகளவில் பாதிப்புகட்கு உட்படுகிறார்கள்.

பிள்ளைகளை உடலியல், உளவியல், பாலியல்ரீதியான முறையில் தவறான முறையில் நடத்துதலே சிறுவர் துஷ்பிரயோகம் எனப்படும். பிள்ளைகள் எனும்போது 18 வயதை அடையாத சிறுவர்கள் இதனுள் அடங்குவர். அநேகமான சிறுவர் துஷ்பிரயோகங்கள் வீட்டில் நடைபெறும் அதே வேளை, கணிசமானளவு துஷ்பிரயோகங்கள் பிள்ளைகள் தொடர்புபடும் இடங்களான ஆலயங்கள், பாடசாலைகள், பிள்ளைகள் பராமரிக்கப்படும் இடங்கள் போன்றவற்றிலும் நடைபெறுகின்றன. சிறுவர் துஷ்பிரயோகத்தினுள் பிரதான நான்கு வகைகளான அலட்சியம் (Neglect), உடலியல் துஷ்பிரயோகம் (Physical), உளவியல் அல்லது உணர்வு சார்ந்த துஷ்பிரயோகம் (Psychological), பாலியல் துஷ்பிரயோகம் (Sexual) என்பனவற்றினை அடக்கும் அதே வேளை ஒவ்வொரு வகை துஷ்பிரயோகத்திலும் வெவ்வேறு உபவகையும் உள்ளன.

அலட்சியம் (Neglect) என்பதனுள் உடலியல், கல்விசார்ந்த மற்றும் உணர்வு சார்ந்த அலட்சியம் என மூன்று வெவ்வேறு வகையான உபபிரிவுகள் உள்ளன. உடலியல் ரீதியான அலட்சியத்தினுள் போதுமான உணவு, உடை, சுகாதார வசதிகள் வழங்காமை அடங்கும். கல்வி சார்ந்த அலட்சியத்திற்கு உதாரணமாக பிள்ளைகளை பாடசாலையில் சேர்க்காமல் இருத்தலைக் கூறலாம். உணர்வு பூர்வமான அலட்சியத்தினுள் போதுமான கவனிப்பு, அன்பு இல்லாமையைக் குறிப்பிடலாம்.

அடித்தல், நெருப்பால் சுடுதல், குலுக்குதல் (Shaking), கிள்ளுதல் (Pinching), தலைமயிரை அல்லது காதைப் பிடித்து இழுத்தல், மூச்சுத் திணறச் செய்தல் போன்றன உடலியல் துஷ்பிரயோகத்தினுள் அடங்கும். பாலியல் துஷ்பிரயோகத்தினுள் அநேக வகைகள் உள்ளன. இதனுள் பாலியல் உறுப்பை உட்செலுத்துதல் (Penetration), கட்டியணைத்தல், பிள்ளையின் அந்தரங்க விடயங்களை வெளிப்படுத்தல், வளர்ந்தோரின் பாலியல் உறவுகளை பிள்ளைகள் அறியச் செய்தல், பாலியல்ரீதியாக பிள்ளைகளைப் பயன்படுத்துதல் என்பன இதனுள் அடங்கும்.

சிறுவர் துஷ்பிரயோகத்தினுள் உளவியல் அல்லது உணர்வுபூர்வமான துஷ்பிரயோகம் மிகவும் குறைவாக விளங்கிக் கொள்ளப்பட்ட சிறுவர் துஷ்பிரயோகமாகும். ஏனெனில் இதன்போது எந்த அடையாளமும் வெளிப்படையாகத் தெரியாது. ஆனால் எல்லா துஷ்பிரயோகங்களினுள்ளும், மிகவும் குரூரமானதும் மிகவும் அழிவை ஏற்படுத்துவதுமான துஷ்பிரயோகம் இதுவாகும். உணர்வு பூர்வமான துஷ்பிரயோகத்தினுள் வார்த்தைகளால் துஷ்பிரயோகம் செய்தல் (Verbal abuse), அன்பைக் கொடாதிருத்தல் (Withholding affection), அளவுக்கதிகமான தண்டனை, அலட்சியம் செய்தல், நிராகரித்தல், பயமுறுத்தல், தனிக்க வைத்தல் (Isolating), மரியாதையைக் குறைத்தல் என்பன அடங்கும். மரியாதையைக் குறைத்தலினுள் ஒருவரது உணர்வுகளை நிராகரித்தல், அலட்சியம் செய்தல், கேலி செய்தல், குறை கூறுதல், கீழ்த்தாழ்த்துதல் என்பன அடங்கும்.

பொதுவாக துஷ்பிரயோகம் செய்யப்படும் வீதத்தை நோக்கினால், அலட்சியம் என்பதனுள் 54%மான சிறுவர் துஷ்பிரயோகமும் உடலியல் துஷ்பிரயோகத்தினுள் 22% மும் பாலியல் துஷ்பிரயோகத்தினுள் 8%மும் உணர்வு ரீதியிலான துஷ்பிரயோகத்தினுள் 4%மும் ஏனைய தவறான நடத்தையினுள் 12%மும் அடங்கும்.



சிறுவர் நலன் தொடர்பான அண்மைய UNICEF அறிக்கையின்படி உலகின் முதல் நாடுகளுக்கிடையே ஒப்பிடும்போது, ஐக்கிய அமெரிக்காவிலும், ஐக்கிய இராச்சியத்திலும் சிறுவர் துஷ்பிரயோகம் அதிகமாகக் காணப்படுவதாக கூறப்படுகின்றது. இந்த அறிக்கையின்படி, இரண்டு பெற்றோர் உள்ள குடும்பங்களை விட ஒற்றைப் பெற்றோர் உள்ள குடும்பங்களில் இது மிக அதிகமாக உள்ளது. நோய் கட்டுப்பாடும் தடை செய்தலுக்குமான மையத்தின் அண்மைய ஆய்வின்படி, ஐக்கிய அமெரிக்காவில் 50 சிறுவர்களுள் ஒருவர் இறப்பை ஏற்படுத்தாத (Non fatal) அலட்சியம் அல்லது துஷ்பிரயோகத்தினால் பாதிக்கப்பட்டதாகக் கூறப்படுகின்றது.

ஐக்கிய அமெரிக்காவில், வீட்டுவசதி, உடை, உணவு, மருத்துவ வசதி உள்ளிட்ட அடிப்படைத் தேவைகளை சந்திப்பதற்கு தவறுதலும் அலட்சியம் என வரையறுக்கப்படுகின்றது. ஒரு வருட காலப்பகுதியில் (Oct 2005 – Sep 30, 2006) சிறுவர் அலட்சியப்படுத்தப்பட்ட சந்தர்ப்பங்கள் 91,000 ஆக இருந்ததாக ஆய்வுகள் கூறுகின்றன.

## அறிகுறிகள்

ஓர் பிள்ளை துஷ்பிரயோகத்தை அனுபவிக்கின்றது என்பதை பின்வருவனவற்றால் அறியலாம்.

- எப்போதும் அழுக்காக, பசியாக அல்லது போதுமான உடையற்றிருத்தல்
- பாதுகாப்பற்ற நிலமைகளில் அல்லது மருத்துவ கவனிப்பு அற்றிருத்தல்
- தொடர்ந்து அவமதிக்கப்படல், மதிப்பிறக்கப்படல்
- பெற்றோர் அல்லது பராமரிப்பாளரைக் கண்டு பயப்படல்
- கடுமையான காயங்கட்கு உட்பட்டிருத்தல்
- அவர்களது வயதுக்கு பொருத்தமற்ற பாலியல் நடத்தைகளை வெளிக்காட்டல்
- குடும்ப வன்முறை நிகழும் வீடுகளில் வளர்தல்
- கடுமையான மதுபானம் அல்லது போதை வஸ்து பாவனையுள்ள பெற்றோர் அல்லது பராமரிப்பாளர்களுடன் வாழுதல்

மேலே கூறப்பட்டவற்றை விட உங்களைத் துக்கப்பட வைக்கும் பிள்ளையின் நடத்தைகளை நீங்கள் அவதானித்தால், பிள்ளை துஷ்பிரயோகத்திற்கு உட்படுகின்றது என்பதை அனுமானிக்கலாம்.

துஷ்பிரயோகம் எப்போதும் ஓர் விரும்பத்தகாத செயலாகும். இது பாதிக்கப்படும் இளம் நபரின் தவறல்ல. இந்த அறிகுறிகள் பிள்ளை துஷ்பிரயோகம் செய்யப்படுகின்றது என்பதை வெளிப்படையாக எடுத்துக்காட்டா விட்டாலும் ஏதோ தவறாக உள்ளது என்பதை வளர்ந்தோர் (Adults) விளங்கிக் கொள்ள உதவும். இந்த அறிகுறிகள் பலவற்றை ஓர் பிள்ளையில் நீங்கள் காண்பீர்களாயின் துஷ்பிரயோகங்கள் நடைபெறுகின்றதா என்பதை ஆராய்ந்தறிந்து கொள்ள வேண்டும்.

பிள்ளை துஷ்பிரயோகத்திற்கு உட்படுகின்றது என்பதற்கான அறிகுறிகளை அவற்றின் வகைக்கேற்ப கீழ்வருமாறு பிரித்து அறிந்து கொள்ளலாம்.

## பாலியல் துஷ்பிரயோக அறிகுறிகள்

- பிள்ளையின் வயதுக்கு ஒவ்வாத முறையில் அளவுக்கதிகமாக பாலியல்ரீதியிலான அறிவைக் கொண்டிருத்தல், மற்றும் நடத்தையைக் கொண்டிருத்தல்
- நீண்டகாலம் தொடாந்திருக்கும் கடி (itching), பிறப்புறுப்புகளில் நோவு (Pain) இருத்தல், பாலியல் நோய்கள்
- ஏனைய அளவுக்கதிகமான பிரதிபலிப்புக்களான மனச்சோர்வு, தன்னைத் தானே காயப்படுத்திக் கொள்ளல், தற்கொலை முயற்சிகள், வீட்டை விட்டு வெளியேறல், அளவுக்கதிகமாக மருந்துகளை உட்கொள்ளல்
- பாதுகாப்பற்ற நிலமை அல்லது பிறருடன் அளவுக்கதிகமாக ஒட்டிக் கொள்ளும் தன்மை (Clinging) போன்ற ஆளுமைத் தன்மை மாற்றங்கள் (Personality changes)
- விரல் சூப்புதல் அல்லது அணைத்து விளையாடக் கூடிய ஆனால் கழித்து விடப்பட்ட பொம்மைகளை திரும்பவும் பாவிக்கத் தொடங்குதல் போன்ற இள வயது நடத்தைகட்கு மீண்டும் திரும்புதல்.
- உணவில் திடீரென விருப்பம் குறைதல் அல்லது உண்ண வேண்டுமென்ற கட்டாயத்திற்காக உண்ணுதல்
- தனித்து விடப்படல் அல்லது கூட்டத்திலிருந்து தானே விலகுதல்
- எதையும் கிரகித்துக் கொள்ள முடியாமை
- அவர்கள் முன்னமே நன்கு அறிந்த ஒருவரில் நம்பிக்கை இழத்தல் அல்லது அச்சப்படல். உதாரணமாக, சிறுவர் பராமரிப்பாளருடன் (Baby sitter/ Child minder) தனித்திருக்க விரும்பாமை
- இரவிலோ அல்லது பகலிலோ படுக்கையில் சிறுநீர் கழித்தல்/ பயங்கரக் கனவுகள் காணுதல்
- உடைகள் அகற்றப்படும்போது கவலையுறல்
- பாலியல்ரீதியிலான படங்களை திடீரென வரைதல்
- மிகவும் நல்லவராக அல்லது எந்தத் தவறும் இல்லாதவராக இருக்க முயலுதல், விமர்சனங்கள் மேற்கொள்ளப்படுமிடத்து அவற்றிற்கு அளவுக்கதிகமாக பிரதிபலித்தல் (Over reacting)

## உடலியல் துஷ்பிரயோக அறிகுறிகள்

- காரணமற்ற வகையில் மீண்டும் மீண்டும் ஏற்படும் உடற்காயங்கள் அல்லது சூட்டுக் காயங்கள்
- காயங்கட்கான காரணங்களைக் கூற மறுத்தல் அல்லது பொருத்தமற்ற காரணங்களைக் கூறல்
- கடும் வெப்பமான வானிலையில் கூட காயங்களை உடைகளால் மறைத்தல்
- உடற்பயிற்சியின்போது கூட உடைளைக் கழற்ற மறுத்தல்
- அடிக்கடி வீட்டை விட்டு ஓடிப்போதல்
- மருத்துவ உதவி அல்லது பரிசோதனையை எண்ணி அச்சப்படல்
- தன்னைத் தானே அழித்துக் கொள்ள முயலுதல்
- மற்றவர்கள் மேல் வன்முறையில் ஈடுபடல்
- யாரும் தொட்டால் தனக்குள் சுருங்கிப் போதல் - உடலியல் தொடர்பு குறித்து அச்சமடைதல்
- தாங்கள் தண்டனைக்குட்பட்டதாக கூறிய போதும் அதன் அளவுக்கதிகமான தன்மை பற்றி கூறாமை (உதாரணமாக படிக்கப் பண்ணுவதற்காக பிள்ளை ஒவ்வொரு இரவும் அடிக்கப்படல்)
- துஷ்பிரயோகம் செய்தவரைத் தொடர்பு கொள்ள அச்சப்படல்

## உணர்ச்சி சார்ந்த துஷ்பிரயோக அறிகுறிகள்

- உடல், மன மற்றும் உணர்ச்சி சார்ந்த அபிவிருத்திகள் (Development) பின்தங்குதல்.
- பேச்சில் ஒழுங்கற்ற தன்மை திடீரென ஏற்படல்
- தன்னைப் பற்றி தொடர்ந்து தாழ்வாக எண்ணுதல், உதாரணமாக நான் முட்டாள், அழகற்றவன்/ள், ஒன்றுக்கும் உதவாதவன்/ள் என எண்ணுதல்
- ஏதாவது புதிய சூழ்நிலையைப் பற்றியும் அளவுக்கதிகமாகப் பயப்படல்
- வலி/நோவு ஏற்படுமிடத்து அது தொடர்பாக பொருத்தமற்ற விதத்தில் சிந்தித்தல். உதாரணமாக இது எனக்குத் தேவை தான், இதற்குத் தான் நான் தகுதியானவன்/ள் (I deserve this) என சிந்தித்தல்
- நரம்புகள் தொடர்பான நடத்தை, இருக்கும்போதும் நிற்கும்போதும் ஆடிக் கொண்டிருத்தல், தலைமயிரை முறுக்கிக் கொண்டிருத்தல், தன்னைக் காயப்படுத்தல்

51ம் பக்கம் பார்க்க...

50ம் பக்கத் தொடர்ச்சி...

- அளவுக்கதிகமான கோபம் அல்லது அளவக்கதிகமான பணிவு

### அலட்சியப்படுத்தப்பட்டமைக்கான அறிகுறிகள்

- தொடர்ச்சியான பசி
- தனிப்பட்ட சுகாதாரக்குறைவு
- தொடர்ச்சியான களைப்பு
- உடைகளை போதுமானவரை நன்கு அணியாதிருத்தல்
- அளவுக்கதிகமாக உடல் மெலிந்து போதல்
- சிகிச்சை செய்யப்படாத மருத்துவ பிரச்சனைகள்
- சமூக தொடர்புகளற்றிருத்தல்
- எதையும் அழிக்க (destructive) வேண்டுமென்ற எண்ணங்கள்.

### விளைவுகள்

அலட்சியம் அல்லது உடலியல்ரீதியான துஷ்பிரயோகத்திற்குட்பட்ட பிள்ளைகள் உளவியல் பிரச்சனைகளால் பாதிக்கப்படும் அபாயங்கள் உள்ளது. அன்பு செலுத்துதலில் ஒழுங்கற்ற தன்மைகள், மனச்சோர்வு, கவலை, அளவுக்கு அதிகமாக தம்மைக் காட்டிக் கொள்ளுதல் போன்றன இதனுள் அடங்கும். ஆய்வுகளின்படி, துஷ்பிரயோகம் செய்யப்பட்ட மற்றும் தவறான முறையில் நடத்தப்பட்ட சிசுக்கள், அன்பு செலுத்துவதில் ஒழுங்கற்ற தன்மையைக் கொண்டுள்ளதாக கூறப்படுகின்றது.

சிறுவர் துஷ்பிரயோகமானது அதன் வகையைப் பொறுத்து வேறுபடும். 2006ஆம் ஆண்டு கனடாவில் மேற்கொள்ளப்பட்ட ஆய்வின்படி, சிறுவயது உணர்வுபூர்வமான மற்றும் பாலியல் துஷ்பிரயோகங்கள், வயது முதிர்ந்தோரின் மனச்சோர்வு அறிகுறிகளுடன் பலமாக தொடர்புபட்டுள்ளதாக கண்டறியப்பட்டுள்ள அதேவேளை, வார்த்தை துஷ்பிரயோகம் (Verbal abuse) மற்றும் குடும்ப வன்முறைகளை அறிய நேர்தல் என்பன நடுத்தர அளவில் பலம் வாய்ந்த தொடர்பைக் கொண்டுள்ளதாகவும், உடலியல் துஷ்பிரயோகம் நடுத்தரமானதாகவும் உள்ளது.

### சிகிச்சை

துஷ்பிரயோகங்களால் பாதிக்கப்பட்ட சிறுவர்களுக்கான எண்ணற்ற உளச் சிகிச்சைகள் (Cognitive behavioural therapy, Abuse – focused cognitive behavioural therapy) உள்ளன. இச் சிகிச்சை முறைகள் சமூகத்திற்கேற்ற நடத்தைகளை பலப்படுத்துவதை நோக்கமாகக் கொண்டது. பாதிப்பை ஏற்படுத்திய பெற்றோரும் இச் சிகிச்சை முறையில் சேர்த்துக் கொள்ளப்படுவர். இது சிறந்த பெற்றோராதல் திறன்கள் மற்றும் நடைமுறைகளை முன்னேற்றுவதை நோக்கமாகக் கொண்டது.

பிள்ளை–பெற்றோர் உளச்சிகிச்சை முறையானது பிள்ளைகட்கும் பெற்றோருக்குமிடையிலான தொடர்பை குடும்பவன்முறை அனுபவங்கட்குப் பின்பு முன்னேற்றுமுகமாக வடிவமைக்கப்பட்டது. இது சிசுக்கள், தவழும் குழந்தைகள், ஆரம்பப் பாடசாலைக்குச் செல்வோர் போன்றோரின் கோபம், எதிர்ப்பு (Defiance), கவலை ஆகிய உணர்வுகளை இலக்காகக் கொண்டு வடிவமைக்கப்பட்டது.

ஓர் பிள்ளை துஷ்பிரயோகத்திற்கு உட்பட்டுள்ளது என சந்தேகித்தால், பொலிஸ் அல்லது சமூக சேவை நிறுவனங்களிடமிருந்து ஆலோசனை பெறுங்கள்.

### ஒரு பிள்ளை தான் துஷ்பிரயோகத்திற்குட்படுகின்றது என்பதை உங்களுக்குக் கூறினால்

- அமைதியாக இருந்து துஷ்பிரயோகம் நடந்ததை நன்கு உறுதிப்படுத்திக் கொள்ளுங்கள்
- பிள்ளையுடன் பேசுவதற்கு அமைதியான இடத்தைத் தெரிந்தெடுங்கள்.
- உங்களுக்கு சொல்லப்பட்டவற்றை நம்புங்கள்
- நன்கு செவிசாய்த்துக் கேளுங்கள். ஆனால் மேலும் தகவல் பெறுவதற்காக பிள்ளையை வற்புறுத்தாதிருங்கள்.
- பிள்ளை உங்களிடம் இதனைச் சொன்னதற்காக நீங்கள் சந்தோஷப்படுவதாகக் கூறுங்கள்
- பிள்ளையை பாதுகாத்து ஆதரவளிப்பதற்கு உங்களால் ஆன ஆகக் கூடியளவு முயற்சியைச் செய்வதாகக் கூறுங்கள்.
- உங்கள் பிள்ளை இன்னோர் வளர்ந்தோருக்கு, உதாரணமாக: ஆசிரியர் அல்லது பாடசாலைத் தாதிக்கு கூறியிருந்தால், அவர்களைத் தொடர்பு கொள்ளுங்கள். அவர்களது ஆலோசனைகள் உங்கள் பிள்ளைக்கு உதவுவதை இலகுவாக்கும்.
- இந்த நிகழ்ச்சி பிள்ளையைப் பாதித்தால் பிள்ளை பாடசாலையில் எவ்வாறு நடந்து கொள்ளும் என்பதை நிர்ணயித்துக் கொள்ளுங்கள். உங்கள் பிள்ளையின் ஆசிரியர், பாடசாலை, தாதி அல்லது தலைமையாசிரியருடன் தொடர்பு கொள்ளுதல் ஆலோசனைக்குரியது.
- நடந்த சம்பவம் பற்றி உங்கள் பிள்ளை கோபமான அல்லது துக்கமான அல்லது சிலசமயம் குற்றவுணர்வைக் கொண்டிருக்கலாம் என்பதை ஏற்றுக் கொள்ளுங்கள். ஆனால் இந்தத் துஷ்பிரயோகம் பிள்ளையின் தவறல்ல என்பதை பிள்ளைக்கு வலியுறுத்திக் கூறுங்கள்.
- உங்களுக்கும் உங்கள் பிள்ளைக்குமாக ஆலோசனை கூறத்தக்க நிறுவனங்களிடம் ஆலோசனை பெற்றுக் கொள்ளுங்கள்.

கனடாவில் சிறுவர் துஷ்பிரயோகம் என்பது மிகவும் பொதுவாக நடைபெறும் சம்பவமாக உள்ளது. 1992இல் சிறுவர் பாதுகாப்பு அதிகாரிகள் கிட்டத்தட்ட 40,000 கனடிய சிறுவர்களை அவர்களது வீடுகளில் இருந்து அகற்றி பராமரிப்பு இல்லங்களில் (Foster Care) அல்லது ஏனைய நிறுவனங்களின் பாதுகாப்பில் விட்டுள்ளனர். இந்த சந்தர்ப்பங்கள் அநேகமானவற்றிற்கு துஷ்பிரயோகம் ஒரு காரணமாக இருந்திருக்கின்றது.

ஆய்வுகளின்படி, துஷ்பிரயோகம் செய்யப்பட்ட பெண்கள் தமது பிள்ளைகளும் தமது துணைவர்களால் துஷ்பிரயோகம் செய்யப்பட்டனர் என அறிவித்துள்ளனர். துஷ்பிரயோகங்களை நேரில் பார்த்த 10 பிள்ளைகளில் 3 பேருக்கும் அதிகமானோர் உடலியல் ரீதியான துஷ்பிரயோகத்திற்கு உட்பட்டவர்களே. இவர்களுள் தமது தாய்மாரின் துஷ்பிரயோகங்களை நேரில் பார்த்த பிள்ளைகள் 40% - 80%மாக உள்ளனர்.

மேலும் ஆண்களையும் பெண்களையும் பாலியல் துஷ்பிரயோகத்திற்கு உட்படுத்துவோர் எதிர்ப்பாலின சேர்க்கையில் ஈடுபடும் ஆண்களே என்றும் நிரூபிக்கப்பட்டுள்ளது. பத்தில் எட்டு பங்கான சந்தர்ப்பங்களில் சிறுவர் தம்மை பாலியல் துஷ்பிரயோகத்திற்கு உட்படுத்தியவர்கள் பற்றி தெரிந்து கொண்டுள்ளனர். பத்தில் நான்கு பங்கான சந்தர்ப்பங்களில் இத்தகைய துஷ்பிரயோகங்களில் ஈடுபடுபவர்கள் தகப்பன்மார் அல்லது தகப்பன் ஸ்தானத்தில் இருக்கக் கூடியவர்களே என்று கண்டறியப்பட்டுள்ளது.

கிட்டத்தட்ட அரைவாசியான சந்தர்ப்பங்களில் குறைபாடுடைய பிள்ளைகள் (Children with disabilities) இக்குறைபாட்டை அறிந்தோரால் துஷ்பிரயோகத்திற்கு உட்படுத்தப்பட்டுள்ளார்கள். ஒரு ஆய்வின்படி, காது கேட்காத ஆண்பிள்ளைகளில் அரைவாசிக்கும் அதிகமானோர் பாலியல் ரீதியாக துஷ்பிரயோகத்திற்கு உட்பட்டுள்ளனர் என ஒரு ஆய்வு காட்டுகின்றது. 5-10% மான அங்கக் குறைபாடுகள், கடுமையான அலட்சியத் தன்மையால் ஏற்படுவதாக மதிப்பிடப்பட்டுள்ளது. இதனுள் வன்முறையும் அடங்கும்.

சிறுவர் துஷ்பிரயோகம் என்பது பிள்ளையின் வாழ்வில் ஏற்படும் துயரகரமான சம்பவமாகும். இது அப்பிள்ளையின் எதிர்காலத்திற்கு மட்டுமல்ல ஒரு நாட்டின் எதிர்காலத்தையும் பாதிக்கும் ஒரு நிகழ்வாகும். எனவே இத்தகைய துஷ்பிரயோகங்கள் நடைபெறாது கவனித்துக் கொள்வது அனைவரதும் பொறுப்பாகும்.

■ ■ ■


Est. 1991
Computek College
BUSINESS • HEALTH CARE • TECHNOLOGY

Exam Prep
CANADIAN SECURITY COURSES ( CSC )
Volume 1 & 2

Starting on Sunday, July 6 at 9AM



Employments in:
Banks, Financial Services
Mutual Funds
Investment Funds
who enrolls

The Canadian Securities Course is designated to help you build a solid foundation for a career in financial services. Consider enrolling today if you are,

- Seeking licensing as mutual fund representative
- Training to become a full-service investment advisor, discount broker
- Investment representative or a sales associate
- A bank or trust company officer
- An insurance specialist looking to enhance your range of products and services
- A financial planner

Lecturer :
CGA, CMA, CFA qualified Senior Manager at a leading Investment Bank



Diploma Courses
PERSONAL SUPPORT WORKER ( PSW )
EARLY CHILDCARE ASSISTANT ( ECA
COMPUTERIZED ACCOUNTING
NETWORK ENGINEERING
MEDICAL OFFICE ADMIN ( MOA )
BUSINESS ADMINISTRATION

Financial Assistance may be available for those who qualify. We welcome
- EI - currently receiving / received recipients
- Maternity benefits received recipients
- New immigrants /Social Assistance recipients

For details, Call
Dr. T. Vasanthakumar

Kennedy / Sheppard
(North-East Corner)
Tel: 416-321-9911
2347, Kennedy Road, Suite 301
Scarborough, ON., M1T 3T8

Kennedy / Eglinton
(N/W Corner, Above Library)
Tel : 416-285-9941
2390 Eglinton Ave East, Suite 248
Scarborough ON M1K 2P5

www.computek.edu

CRC

கடன் தொல்லையா?

நீங்கள் கடன் பிரச்சினையில் மூல்கித் தவிப்பவரா?

NEW LIFE DEBT SOLUTIONS

கடன் பிச்சனை தீர்ந்து புதிய வாழ்வு திரும்பும் அரிய சந்தர்ப்பம்

Reduce Your debts upto 75%

கடன் 75%குறைய நடவடிக்கை

Tel:416-264-1272

Stop all Interest on you debts

கடனுக்காக விதிக்கப்பட்ட சகல வட்டிகளும் நிறுத்தப்படும்



Stop collection calls, legal action & garnishments

கடன் தொடர்பாக விடுக்கப்படும் தொலைபேசி அழைப்புக்கள் சட்ட நடவடிக்கைகள் நிறுத்தப்படும்

Tel:416-264-1272

Protect all your asstes

உங்கள் சொத்துக்கள் பாதுகாக்கப்படும்

Make one monthly payment to all of you creditors

மாதாந்த ரீதியில் எல்லாகடனையும் தீர்க்க வசதி செய்தல்

Give you a solution with out bankruptcy

Tel:416-264-1272

பாங்ரப்சிக்கு செல்லாமல் தீர்வு காண ஏற்பாடு செய்யப்படும்

55 Town Centre Court, Suite 700, Scarborough, Ont M1P 4X4

Tel:416-264-1272

Tel: 416-264-1272 Fax: 416-332-0914

Email: suren@crc4u.com Web:www.crc4u.com



# காலத்தின் கோலங்கள் - 7

- பொன் குலேந்திரன் -
kulendran@thaiveedu.com

மனிதனின் நடை உடை பாவனை காலத்தோடு மாறிக்கொண்டு வருகிறது. இதில் அவன் அணியும் ஆபரணங்கள், சிகை அலங்காரம் ஆகியவையும் உள்ளடங்கும். ஒரு காலத்தில் ஆண்கள் காதில் கடுக்கன் பூட்டுவதும், குடும்பி வைப்பதும் மரபு வழி வந்த கலாச்சாரமாக அமைந்திருந்தது. ஆனால் காலப்போக்கில் அது படிப்படியாக மறைந்து திரும்பவும் புணருத்தம் பெற்று, காதுகளில் மட்டுமல்லாமல் உதடுகளிலும், மூக்கிலும், இமைகளிலும், பொக்குள்களிலும் புதிய இடங்களை ஆக்கிரமித்து விட்டது. விளம்பரங்களில், சினிமா படங்களையும் தொலைக்காட்சியில் வரும் நாடகங்களின் பெயர்களை அடிப்படையாக வைத்துச் சேலைகளும், ஆடைகளும் உருவாக்கப்படுகிறது. சமூகத்தில், மானிடர்கள் அணியும் ஆடைகளுக்கு ஒரு தனித்துவமுண்டு. அதோடு ஆடைகள் உடலுக்குப் பாதுகாப்பினையும், பருவகாலத்துக்கு ஏற்றவாறு அமைகிறது. செய்யும் தொழிலுடன் சம்பந்தப்பட்டது. அதோடு மட்டுமன்றி ஒரு இனம் கடைப்பிடிக்கும் நாகரீகத்தை வெளியுலகுக்கு அறிமுகப்படுத்துகிறது. அரேபியர்கள் அணியும் ஆடைகள், ஆப்கான் தேசத்தவர்களின் ஆடைகள், பாக்கிஸ்தானியர்கள், இந்தியர்கள் சீனர்கள், ஜப்பானியர்கள் அணியும் ஆடைகள் இதில் முக்கியமாகக் குறிப்பிடப்பட வேண்டும். ஆடைகள் மதத்துடனும் கலாச்சாரத்தோடும் இணைந்தது. ஒழுக்கத்தையும், பாரம்பரியத்தையும் கடைப்பிடிக்கிறது. இஸ்லாமியப் பெண்கள் அணியும் ஆடைகள் ஒழுக்கத்தைக் கடைப் பிடிப்பதாகவும், தேகத்தை வெளிப்படையாகக் காட்டாதவாறு அமைகிறது. முகத்தைக் கூட கறுப்புத் துணியால் அரைவாசி மூடிவிடுவார்கள் கண்கள் மட்டும் தெரியும் வகையில். அது கூட அழகை கொடுக்கிறது. முழு உடலையும் கறுப்பு ஆடை அணிந்து மறைத்துக்கொள்கிறார்கள். இதனை மதக்கோட்பாடு என்பர். இந்தியாவில் மாநிலத்துக்கு மாநிலம் ஆடை அணியும் முறையில் பல வித்தியாசங்கள் உண்டு. கேரளா, ஆந்திரப் பிரதேசம், மகாராஷ்டிர கர்நாடகப் பெண்கள் சேலையையும், இரவிக்கையையும, அணியும் விதத்திற்கும் தமிழ்நாட்டுப் பெண் அவற்றை அணியும் முறைக்கும் வித்தியாசம் உண்டு. கோவா மாநிலத்தின் பெண்கள் போர்த்துக்கேய கலாச்சாராம் கலந்த ஆடைகள் அணிவர். பல மாநில மக்கள் தமிழ்நாட்டில் வாழ்வதினாலும், சினிமா மூலம் மேற்கத்திய கலாச்சாரத்தின் ஊடுருவலாலும், காலப் போக்கில் சேலை அணியும் முறையில் மாற்றங்கள் ஏற்பட்டு வருகிறது. ஒரு காலத்தில் ரோஜாப்பூ இரவிக்கை வைத்து சேலை அணிவது கலாச்சாரமாக இருந்தது. அந்த முறை மறைந்துவிட்டது. அதோடு கையில்லாத இரவிக்கை அணிவது நாகரீகமாக வளர்ந்து வருகிறது.

இந்தியப் பெண்களுக்கு ஆபரணங்கள் மேல் தனி விருப்பம். இந்து தெய்வங்களின் உருவங்களில் கூட அதனை அவதானிக்கலாம். அதனால் தெய்வங்களைப் போல் ஆபரணங்களை அணிந்து தெய்வமாகி விடலாம் என்ற எண்ணமோ தெரியாது. மாநிலத்துக்கு மாநிலம் ஆபரணங்களின் தோற்றம் மாறுபடுகிறது. அதோடு காலத்தோடு இதில் மாற்றங்கள் ஏற்பட்டு வருகிறதை அவதானிக்கலாம். பழமையில் இருந்து சற்று விலகி, சினிமா நடிகைகள் அணிவதைப் பார்த்து புதியரக ஆபரணங்களைப் பெண்கள் அணியத்தொடங்குகிறார்கள். ஒட்டியானம், ஜிமிக்கி அணிவது மறைந்து வருகுறிது. சாதாரண ஆபரணங்களை வீட்டிலும், விழாக்களுக்கு விலையுயர்ந்த, புதுமையான, ஆபரணங்களையும் அணிகிறார்கள். ஆபரணங்கள் அணிவது அந்தஸ்துக்கு எடுத்துக்காட்டு. ஆபரணங்களின் அமைப்பு காலத்தோடு மாறுகிறது. பல நூற்றாண்டுகளுக்கு முன்னர் பெண்கள் அணிந்த தாலிக்கும் தற்போது அணியும் தாலிக்கும் தங்கத்தின் நிறையில் எவ்வளவோ மாற்றங்கள் உண்டு. திருமணத்தின் போது ஒரு காலத்தில் இத்தனை தங்கப் பவுனில் தாலிசெய்ய வேண்டும் என பெண் வீட்டார் கட்டளையிடுவார்கள். இக்காலத்தில் சீதனம் கேட்டு வாங்குவது ஓரளவுக்குத் தடை செய்யப்பட்டதால், இதில் மாற்றங்கள் ஏற்பட்டுள்ளது. கிராமப்புறங்களில் வாழும் மூதாட்டியர்களின் காதுகளில் பெரிய குண்டலங்கள் போல் தோடுகள் தொங்கிக் கொண்டு இருப்பதைக் காணலாம். அதனால் காதின் துவாரம் பெரிதாகி ஊஞ்சலில் ஆடுவது போல் பொன் குண்டலம் தொங்கும். இது இப்போது காலத்தோடு மறைந்து விட்டது. காரணம், அந்த வழக்கம் பழமையைப் பிரதிபலிக்கிறது என தற்காலத்துப் பெண்கள் கருதுவதேயாகும்.

மூக்கைத் துளைத்து, வைரத்தோடு மூக்குத்தி அணிவது தமது பணத்திமிரைக் காட்டும் ஒரு வழியாகும். எதற்காக மூக்கைத் துளைக்க வேண்டும்? இதனை ஒரு அக்குபஞ்சர் முறையாகவும் கருதலாம். மூக்கின் மேல் கோபம் வருகிறது என்பார்களே, அதைத் தடுக்க மூக்கைத் துளைத்து மூக்கணாம் கயிறு போடுகிறார்களோ என்னவோ? பெண்களுக்கு கூரிய மூக்கு தனியழகு. அதனால் தான் மதுரை மீனாட்சி அம்மனுக்கு வைர மூக்குத்தி தனிப் பிரகாசத்தையும் தோற்றத்தையும் கொடுக்கிறது. அதனால் தானோ என்னவோ வைர மூக்குத்தி அணிந்த அம்மனாகலாம் என்ற எண்ணமோ என்னவோ? அதோடு அழகையும் கூட்டுகிறது. சீதனம் கேட்கும் போது மாப்பிள்ளை வீட்டார், பெண்ணுக்கு காதுக்கு வைரக்கம்மல், மூக்கிற்கு வைர மூக்குத்தி, கை நிறைய வளையல்கள் வேண்டும் என்று கேட்டு வாங்குவார்கள்.

காலத்தோடு எளிமையாக ஆடை ஆபரணங்கள் அணியவேண்டும் என்ற கொள்கை இப்போது பலரிடம் பரவி வருவதைக் காணலாம். செயற்கை அழகை விட இயற்கை தந்த அழகு மேல் என்ற கருத்தோ என்னவோ? அதோடு மட்டுமல்ல, அதிக ஆபரணங்கள் அணிவதால் உயிருக்கு ஆபத்தும் ஏற்படலாம் அல்லவா?

கி.மு 1500 முதல் 3000 ஆண்டுவரை இந்து நதி பல்லத்தாக்கில் வளர்ந்த நாகரிகத்தில் பெண்கள் தமது உடலின் மேற்பகுதிக்கு ஆடை அணிந்திருக்கவில்லை, ஆனால் ஆபரணங்கள் அணிந்திருந்தனர். ஆண்கள் கச்சை அணிந்திருந்தனர். ஆரியர்களின் வருகை, அணியும் ஆடைகளில் மாற்றத்தைக் கொண்டு வந்தது. அதைத் தொடர்ந்து முகாலயர்களின் வருகை மேலும் மாற்றத்தைக் கொண்டு வந்தது. அதன் பின்னர் படிப்படியாக கிரேக்கர், மேற்கத்தியர் வருகை நாகரீகத்தில் பல மாற்றங்களைத் தோற்றுவித்தன. இன்னும் என்ன என்ன மாற்றங்கள் காலத்தோடு வர இருக்கிறதோ தெரியாது. யாழ் குடாநாட்டைப் பொறுத்த மட்டில் ஆரம்பத்தில் கேரள, தமிழ்நாட்டுக் கலாச்சாரம் மக்களிடையே பிணைந்திருந்தது. அதனை அவர்கள் பல நூற்றாண்டுகளுக்கு முன்னர் அணிந்த ஆடைகளில் அவதானிக்கலாம்.



மனித சுபாவமானது எதை மற்றவர்கள் அணியவில்லையோ, எது புதுமையானதோ அதை விரும்புவதே. அதனால் புதுமையாக ஆடையோ அல்லது நகையோ அணிவதானால் மற்றவர்களின் கவனத்தை ஈர்க்கக் கூடியதாக அமையும். அதனால் இது புது நாகரீகமாக மாற்றம் பெறுகிறது. இதனால் கலாச்சாரம் பாதிப்படைகிறது என்பதைப்பற்றி கவலையில்லை.

சிகை அலங்காரம் காலத்தோடு மாற்றமடைந்து வருகிறது. ஒரு காலத்தில் நீண்ட பின்னலோடு பெண்களைக் காணலாம். ஆனால் தற்காலத்தில் வேலைக்குச் செல்லும் பெண்கள் தமது வசதிக்காக தமது கூந்தலைக் கத்தரித்து விடுவர். இது பேன் வராமல் இருப்பதற்கு உதவியாக இருக்கும். ஆண்களைப் பொறுத்தமட்டில் குடுமி வைப்பது ஒரு சம்பிரதாயமாகக் கருதப்பட்டது. அதுவும் பிராமணர்கள் குடுமி வைப்பது கலாச்சாரம். அந்தக் குடுமி கலாச்சாரம் காலத்தோடு மறைந்தாலும் திரும்பவும் பல இளைஞர்களிடையே தோன்றிவிட்டது. ஆங்கிலப் பாடகர்களான பீட்டில்ஸ் போன்றவர்களைப் பின் பற்றித் தோன்றியிருக்கலாம். ஒரு காலத்தில் தமிழ்நாட்டில், இசையில் ஈடுபட்டோர், பாகவதர்கள் போல் நீண்ட முடி வைத்திருப்பர். தியாகராஜ பாகவதர் இதற்கு ஒரு உதாரணம். ஆனால் இப்போது இசைக் கலைஞர் களிடையே இது மறைந்து வருகிறது. தற்கால இளைஞர்களிடையே சிகை அலங்காரத்தில் ஏற்பட்டுள்ள மாற்றங்கள் பல. சிகைக்கு வர்ணம் பூசுவது ஒரு வகை. மொட்டை அடிப்பது இன்னொரு முறை. சிகையை ஒன்று சேர்த்து குடுமி வைத்த பல இளைஞர்களைத் தற்காலம் காணலாம். பழைய முறை மீண்டும் திரும்புகிறது, கடுக்கனுடன் சேர்ந்து. பிறர் கவனத்தை ஈர்க்கும் ஒரு வழி.

ஆண் மயில் பெண் மயிலைக் கவர்வதற்கு தனது தோகையை விரித்தாடி சைகை காட்டும். நீண்ட தோகை உள்ள ஆண் மயில் ஆண்மைக்கு எடுத்துக்காட்டாக அமைகிறது. கவர்ச்சிக்கு ஆண்மை அவசியமாகிறது. இதனால் ஆண்கள் மேலாடை அணிவதில் பல மாற்றங்களைக் கொண்டு வந்து தமது தேகத்தின் அழகை வெளிக் காட்டுகிறார்கள். இதே போன்று பெண்களும் ஆடை அணியும்போது உடலுடன் ஒட்டிய இறுக்கமான கவர்ச்சி தரும் ஆடைகளை அணிகிறார்கள். முன்பு பாதங்களைத் தொடும் அளவுக்கு ஆடைகள் அணிவதுண்டு. இது படிப்படியாகக் குறைந்து தொடைகள் தெரியுமளவுக்கும், மார்பகம் ஆடையின் இறுக்கத்தால் பார்ப்போரின் உணர்ச்சியை தூண்டுமளவுக்கும், பெண்ணின் பின்பட்டையின் தோற்றம் கவரும் வகையிலும் அமைகிறதைப் பல சினிமாக்களில் காணலாம். அந்தத் தோற்றத்தைக், குறிப்பாக ஆடும்போதோ, அல்லது நடக்கும் போதோ படம்பிடித்துக் காட்டுவது வழமையாக வந்துவிட்டது. காலப்போக்கில் கவர்ச்சியானது கலாச்சாரத்தை மீறிவிட்டது.

எந்த நாட்டில் மதக்கொள்கைகளுக்கு முக்கியத்துவம் கொடுக்கிறார்களோ, அந்த நாட்டில் ஆடைகள் அணியும் விதத்தில், தோற்றத்தில் கவர்ச்சியைக் குறைக்கிறார்கள். இது முக்கியமாக இஸ்லாமிய மதத்தவர்களிடையே நிலவுகிறது. காலந்தொட்டு எக்காரணத்தால் ஆடைகளின் அமைப்புகளில் மாற்றங்கள் ஏற்படுகிறது என்பதை ஆராய்ந்த போது, மனித மனநிலையானது தொடர்ந்து ஒன்றையே விரும்புவது கிடையாது. புதுமையை, தமது விருப்பு வெறுப்புகளுக்கு ஏற்ப ஆதரிக்கிறது. இதனால் தான் புதிய தோற்றங்களைக் கொண்ட ஆடைகளைத் தயாரிப்போருக்கு எப்போதும் மக்களிடையே ஆதரவு உண்டு.

ஆடைகளின் தோற்றங்களும் வெவ்வேறு நாட்டு மக்கள் அணியும் ஆடைகளுடன் கலக்கிறது. அதுவுமன்றி அத்தகைய ஆடைகளின் விலை மதிப்பும் அதிகம். புதுப்புது அமைப்பில் ஆடைகளை தயாரிப்பவர்களான Pierre Cardin, Tommy Hilfiger, Ritu Kumat, Manish Malhotra போன்றவர்கள் காலத்தோடு தமது தயாரிப்புக்களை மக்களின் தேவைக்கு ஏற்ப மாற்றிக் கொள்கிறார்கள். இத்தயாரிப்பாளர்கள் அடிக்கடி ஆடைகளின் தரத்தை வெளிப்படுத்தவும், ஆதரவைக் கணிப்பதற்கும், விமர்சனங்களை ஏற்பதற்கும், விதம் விதமான ஆடைகள் அணிந்த அழகிகளை பலர் முன்னர் நடக்க வைப்பர். இதனை ஆங்கிலத்தில் Fashion Show என்பர். இதுவே காலத்தோடு ஆடைகளின் தோற்றங்கள் மாறுவதற்குத் துணைபோகிறது. இந்த முறையினை ஆபரணங்களின் தோற்றத்தை மாற்றவும் பயன்படுத்துகின்றனர். காலத்தோடு இரசனை மாறுகிறது, விருப்பு வெறுப்பு மாற்றமடைகிறது, ஆகவே நாகரீகம் மாறுகிறது. இது வணிகத்துறை வளரத் துணைபோகிறது. இனி எத்தகைய மாற்றங்கள் உலகில் ஏற்படும் என்பதை காலம் தான் பதில் சொல்லும் (தொடரும்)

■ ■ ■

எலி பூச்சித் தொல்லையா...?

RUBAN PEST CONTROL



- வீடுகள்
- தொடர்மாடி வீடுகள்
- தொழிற்சாலைகள்
- வியாபார நிலையங்கள்

ஆகிய அனைத்து இடங்களிலும் எலி, பூச்சித் தொல்லைகளை அறவே நீக்க அழையுங்கள்!

KANTHAN
416 • 291 • 3997

# தமிழர்களின் வாழிடப் பறிப்பையும் உயிர் வாழ் உரிமை அழிப்பையும் வெளி உலகுக்குக் காட்டிய மாதிரி வடிவம் 'கறுப்பு யூலை'

- அ. கணபதிப்பிள்ளை -
kanapathipillai@thaiveedu.com

உலகெங்கும் பரந்து வாழும் தமிழர்களால் நினைத்துப் பார்க்கின்ற மாதம் 'கறுப்பு யூலை' இது 1983ம் ஆண்டு யூலை மாதத்தில் இலங்கையில் எதிர்காலம் பற்றிய கனவுகளோடும் உறவுகளோடும் வாழ்ந்த தமிழ் மக்களின் உயிரைக் குடிக்கவும் உறவுகளிலிருந்து பிரிக்கவும் காரணமான மாதம்.

அரச படைகளின் அரவணைப்பில் சிங்கள வெறிக்கும்பல்களால் கொல்லப்பட்ட 3000க்கு மேற்பட்ட தமிழர்களை நினைவு கூரவும், அவர்களது பிரிவுக்காக மனம் வருந்தவும் துயரத்தை மட்டும் முன்னிலைப்படுத்தாமல் அதில் பாதிக்கப்பட்ட உறவுகளுக்குத் தெம்பூட்டி அவர்களின் எதிர்கால வாழ்வுக்கு அர்த்தம் கற்பிக்க வைக்க முயலுகின்ற செய்கையாகவும் கறுப்பு ஜுலைச் செயற்பாடுகள் அமைந்திருக்கின்றன.

சிங்களக் கொலை வெறியர்களில் விரல் விட்டு எண்ணக்கூடிய அரசியல்வாதிகளில் ஜே.ஆர். ஜெயவர்த்தனா, சிரில் மத்தியூ போன்றவர்கள் அரசியல் இயந்திரத்தைத் தமதாக்கிக் கொண்ட மமதையின் விளைவினாலும் சிங்கள தேசம் ஒன்றுதான் இலங்கையாக இருக்க வேண்டும் என்ற திட்டத்தின் அடிப்படையில் மேற்கொள்ளப்பட்ட அரசியல் நாடகம் தான் இந்த யூலை மாதப் படுகொலைகள்.

சிங்களத் தேசியவாதிகள் என்று கூறிக்கொண்டவர்கள் சிங்களம், பௌத்தம், லங்கா மூன்றையும் ஒன்றுபடுத்திய நாட்டினை உருவாக்க வேண்டும் என்ற திட்டத்துடன் செயற்படுத்திய செயற்பாடுகள் நடைமுறையில் தோற்றுப்போன்ற பொழுதில் மேற்கொண்ட திட்டமிட்ட இன அழிப்பும், உடைமைகள் அழிப்பும் தான் இந்த கறுப்பு யூலையில் சிங்கள அரசியல் வாதிகள் செய்த அட்டுழியம்.

இருபத்தைந்து வருடங்களுக்கு முன்னர் நடந்த கொடுமை பரம்பரை பரம்பரையாக வாழ்ந்த பிரதேசங்களிலேயே தொடர்ந்தும் வாழ முடியாமல் சிங்களக் காடையர்களினால் தமிழர்கள் அகதிகளாக்கப்பட்டனர். அரச படைகளின் உதவியுடன் திருகோணமலையிலிருந்தும் கொழும்பிலிருந்தும் தமிழர்களைத் துரத்திவிட்டும் சிங்களவர்களை மட்டுமே காணி உடைமையாளர்களாக மாற்ற வேண்டும் என்ற எண்ணம் 1983ஆம் ஆண்டு யூன், யூலை ஆகிய மாதங்களில் தொடங்கியிருந்தது. அதற்கு ஒரு காரணத்தை எதிர்பார்த்துக்கொண்டிருந்தவர்களுக்கு யூலை 23ம் திகதி திருநெல்வேலியில் 13 படையினர் கொல்லப்பட்டது வாய்ப்பாக அமைந்தது.

'தமிழர்களுடன் போர்' என்பது பிரகடனப்படுத்தப்பட்டு ஆயுதமே எடுக்காத அப்பாவித் தமிழர்களுடன் அரச படையினரும், தெரிந்தெடுத்த சிங்களக் குண்டர்களும் செய்த போர் தான் கறுப்பு யூலை. இந்தப் போரில் எரிக்கப்பட்டும் வெட்டப்பட்டும் கொல்லப்பட்டவர்கள் அகதிகளாக்கப்பட்டு யாழ்ப்பாணத்துக்குக் கப்பல் மூலம் அனுப்பப்பட்டவர்கள் தென்னிந்தியாவுக்கும் தமிழர் செறிந்து வாழும் பகுதிகளுக்கும் தப்பியோடியவர்கள் ஏனைய வெளிநாடுகளுக்குத் தப்பியோடியவர்கள், சிங்கள முஸ்லிம் நண்பர்களினால் பாதுகாக்கப்பட்டு பின்னர் வெளியிடங்களுக்கு அனுப்பப்பட்டவர்கள் அல்லது மீளக் குடியேறியவர்கள் என்ற பல்வேறு வகையினரும் இந்தப் போரின் பலி காரர்கள். ஒவ்வொருவரது இழப்பும் தனித்தன்மையானது. இழப்பு என்பது எது பெரியது எது சிறியது என்ற வரையறைக்கு அப்பாற்பட்டு பாதிப்பு ஒன்றை மட்டும் இரண்டு தலைமுறைகளாகத் தாங்கிக் கொண்ருப்பவர்கள் இந்தக் கறுப்பு யூலைத் தமிழர்கள்.

தமிழர்களுக்கு ஒரு நின்மதியான வாழிடம் தேவை என்று தமிழர்கள் சிந்திக்கும் பொழுதில் எல்லாம் அரசாங்கங்களினால் கட்டவிழ்த்து விடப்பட்ட இனப்படுகொலைகள், இனக்கலவரம் என்பதாக வெளியுலகுக்குக் காட்டப்பட்டது. இனங்களுக்கிடையிலான கலவரங்கள் தோற்றம் பெறுவதற்கு ஒரு இனத்தின் மீது மற்றைய இனம் கொண்டிருக்கும் வெறுப்புக் காரணமாகிறது. பொருளாதாரம், கல்வி, அரசியல், உத்தியோகம் ஆகிய காரணிகளினால் ஒரு இனம் மற்றைய இனத்தின் மேல் வெறுப்புக் கொள்ளக் காரணமாக முடியும். சிங்களவர்களும் தமிழர்களும் ஒன்றிணைந்து வாழ்ந்த நகரங்களில் தானாக ஏற்படுத்தப்பட்ட இணக்கப்பாடு அடிக்கடி அரசியற் சூழ்ச்சிகளினால் தகர்த்தெறியப்பட்டது.

இந்த அரசியல் விளையாட்டில் தேர்ச்சி பெற்றவர்கள் சிங்களத் தேசியவாதிகள் என்று கூறப்படும் ஒருசிலர்தான். தாமே பெரும்பான்மையினரின் பாதுகாவலர்களாகத் தம்மை உருவாக்கியவர்கள். தமிழர்கள் மீது வெறுப்புணர்வினைத் தோற்றுவித்து அரசியல் நடாத்தி வருகின்றார்கள். ஒவ்வொரு தேர்தலின் பின்பாகவும் வெற்றி பெறும் சிங்களத் தேசியவாதிகள் தமிழருக்கெதிரான சட்டங்களையோ கலவரங்களையோ திட்டமிட்டு நடாத்திக் காட்டிப் பெரும்பான்மைச் சிங்களவர் மத்தியில் சிங்களம், பௌத்தம், எமது நாடு ஆகிய மூன்றுக்கும் பாதுகாவலர் என்பதனை நிரூபித்துக் காட்டிக் கொண்டிருக்கின்றார்கள்.

இதுதான் இலங்கையில் தமிழர்கள் அடக்கி ஒடுக்கப்படும் வரலாறு.

தமிழர்கள் மீது கட்டவிழ்த்து விடப்பட்ட வன்முறையின் விளைவாக எட்டு லட்சம் தமிழர்கள் புலம்பெயர்ந்து உலகெங்கும் உள்ள நாடுகளில் வாழ்க்கையினை நடாத்திக்கொண்டிருக்கின்றார்கள். தமிழ்ஆடி பிறந்து பத்து நாட்களுக்குள்ளாக பல ஆயிரம் உயிர்களைக் குடித்த இந்த வெறி 150ஆயிரம் பேரின் வாழிடங்களை அழிக்கக் காரணமாயிற்று. அரசியல் கைதிகளாகப் பிடித்துவைக்கப்பட்ட 52 தமிழர்களின் உயிர்கள் சிங்களக் கூலிப்படையினால் பலி எடுக்கப்பட்டன. கண்களைப் பிடுங்கியும், பாலியல் வல்லுறவுக்குட்படுதியும் பஸ் வண்டியுடன் எரியூட்டியும், வீடுகளினுள் வைத்துப் பூட்டித் தீவைத்துக் கொழுத்தியும் நடாத்தப்பட்ட கொடுமைகள் உலகில் இதுவரை பல்வேறு இனங்களுக்கு எதிராக நடாத்தப்பட்ட வன்முறைகளும் நிகரானதாகக் கொள்ளத்தக்கது.

இந்த வன்முறைகளின் பின்பாகப் படிப்படியாகத் தமிழர்கள் முக்கிய நகரங்களில் குடியேறினாலும் கூட முன்னர் இருந்த ஐக்கியம் ஒருமைப்பாடு, நல்லெண்ணம் என்பன குறைவாகவே காணப்பட்டது. சிங்கள மக்கள் மத்தியில் தமிழர்களுக்கு எதிராக நடாத்தப்பட்ட அடாவடித்தனம் பற்றிய குற்ற உணர்வு இருந்து கொண்டேயிருந்தது. இவற்றையெல்லாம் மழுங்கடிக்கும் முயற்சியாகத் தொடர்ந்தும் தமிழருக்கெதிரான நடவடிக்கைகளை ஆட்சியாளர்கள் நடத்திக் கொண்டேயிருக்கின்றார்கள் என்பது வேதனைக்குரிய விடயமாக இருந்து கொண்டிருக்கின்றது.

> “ஒற்றுமையாக இனத்தைக் கட்டியெழுப்பும் மனப்பாங்குடன் வாழ வேண்டும் என்ற மனத்துணிவை ஏற்படுத்த வேண்டும் என்பது தான் கறுப்பு ஜுலை நிகழ்வுகளின் கனவாதல் வேண்டும்.”

1983ம் ஆண்டு யூலையில் நடாத்தப்பட்ட இனப்படுகொலைகளுக்கும் இனச் சுத்திகரிப்பு நடவடிக்கைக்கும் பல ஆண்டுகாலமாக ஏற்படுத்திக் கொடுக்கப்பட்ட சட்டங்களும் அரசியற் பின்னணியும் தான் காரணமாக இருந்ததாக ஆய்வுகள் தெளிவு படுத்தின.

1935ல் உருவாக்கப்பட்ட அரச உதவிக் குடியேற்றத்திட்டங்கள் தொடர்பான சட்டங்கள் தமிழர் வாழும் எல்லைப்பகுதிகளில் சிங்களக் குடியேற்றங்களை உருவாக்க உதவியது. 1956ல் உருவாக்கப்பட்ட சிங்களம் மாத்திரம் அரச கரும மொழிச் சட்டம் சிங்கள உத்தியோகத்தர்களின் தொகையைக் கூட்டியது. 1972 புதிய அரசியல் திட்டம், 1981ல் உருவாக்கப்பட்ட பயங்கரவாதத் தடைச்சட்டம் போன்றன அரச பணியிலுள்ள சிங்கவர்களுக்கும் சிங்களப் படையினருக்கும் பெருமளவு அதிகாரத்தைக் கொடுத்தது. இதுவே தமிழர்களை வடக்கு நோக்கித்தள்ள வேண்டும் என்ற சிங்கள ஆட்சியாளர்களின் சிந்தனைக்கு வலுவூட்டுவனவாகவும் அமைந்திருந்தன.

துன்பத்தை நினைவு கூருவது தமிழர்களின் ஆற்றாமையினை நினைவுபடுத்தும் செயலல்ல. தமிழினம் மீண்டும் எழுந்து சுதந்திரம் தனித்துவம் ஆகிய பண்புகளை முன்னிலைப்படுத்தி ஒற்றுமையாக ஒரேயினமாக இனத்தைக் கட்டியெழுப்பும் மனப்பாங்குடன் வாழ வேண்டும் என்ற மனத்துணிவை ஏற்படுத்த வேண்டும் என்பது தான் கறுப்பு ஜுலை நிகழ்வுகளின் கனவாதல் வேண்டும்.

■ ■ ■

KESAVAN LAW OFFICE

இலவச ஆரம்ப ஆலோசனை
மாலை, வார இறுதி நாட்களிலும்
சந்திக்கலாம்

• Real Estate
• Business Law
• Immigration Law
• Family Law
• Last Wills
• Power of Attorney
• Affidavits



சட்டம் சம்பந்தமான சகல
தேவைகளுக்கும்
கேசவன் சட்ட நிறுவனம்

THANGAVEL M. KESAVAN
(Barrister & Solicitor)


Tel: 416-754-9843
Fax: 416-754-2362

5200 Finch Ave. East, Unit 302,
Scarborough, ON M1S 4Z5
(Middlefield & Finch)
Web: www.lawyers.com/kesavanlaw
E-Mail: kesavanlawoffice@bellnet.ca

# CELL TEL MOBILITY

For all your cellphone and accessory needs...

# 11 th Anniversary Sale !!!



We sell new & used cellphones, Pagers and accessories for:

**ROGERS WIRELESS, FIDO,**
**TELUS MOBILITY, BELL MOBILITY**

### Anniversary Sale !!!



Geunine Leather Case

From **$1.99** Reg. $19.99

Coupon valid only between August 1st to August 31st.

One coupon per family. Customer must bring this coupon to get the offer.
The coupon must be redeemed during the valid redemption period.
Cell Tel Mobility Reserved the rights to terminate the offer any time without notice.

### Anniversary Sale !!!



Hands free

From **$1.99** Reg. $29.99

Coupon valid only between August 1st to August 31st.

One coupon per family. Customer must bring this coupon to get the offer.
The coupon must be redeemed during the valid redemption period.
Cell Tel Mobility Reserved the rights to terminate the offer any time without notice.

### Anniversary Sale !!!



Smart car charger

From **$1.99** Reg. $39.99

Coupon valid only between August 1st to August 31st.


One coupon per family. Customer must bring this coupon to get the offer.
The coupon must be redeemed during the valid redemption period.
Cell Tel Mobility Reserved the rights to terminate the offer any time without notice.






**Call Toll free:- 1.877.312.5123** ***SHOP ONLINE*** @ www.celltelmobility.com

## CELL TEL MOBILITY WIRELESS REPAIR CENTER



NOKIA, MOTOROLA, SONY ERICSSON, SAMSUNG, LG
HTC,BLACKBERRY,iPHONE,

***Display,Antenna Replacement and all other Repairs (Software & Hardware).***

**2637 Eglinton Ave. East,**
**Eglinton Ave/Midland Rd**
**416.266.6818**

**220 - 5990 16th Avenue**
**16th Avenue/ Markham Rd**
**905.201.4859**

**5C - 2950 Birchmount Rd**
**Birchmount / Finch Ave**
**416.495.7776**

# யோகம் தரும் ஆரோக்கிய ரகசியம்

**N.T. கருணாகரன்**
- யோகா ஆசிரியர் -
ntkaruna@thaiveedu.com



## யோக முத்திரா

சென்ற இதழில் பத்மாசனத்தை பற்றிப் பார்த்திருந்தோம். இம்முறை யோக முத்திராசனம் அல்லது யோக முத்திரா என்று பெயர்



செய்முறை
(யோகமுத்திரை)

குறிக்கப்படும். மிக அருமையான பயிற்சி பற்றிப் பார்ப்போம்.

யோகம் என்றால் தனி மனதறுக்கும் உலக மக்கள் சமூகத்திற்கும் நிகழ்காலத்திலும் எதிர்காலத்திலும் நன்மையை மட்டும் தரும் அனைத்துமே யோகம் எனலாம். அவ்வாறு பார்க்கையில் யோகாசனம் என்றால், யோகம் தரும் இருக்கை எனவும், யோக முத்திரை என்றால் அந்த யோகத்தின் சின்னமாகவும் அதை கிடைக்கச் செய்யும் மார்க்கமாகவும் கொள்ள முடியும். இந்த யோக முத்திரையானது பிரதானமாக வயிற்றை சரியான முறையில் பராமரிக்கிறது.

பத்மாசனத்தில் அமர்ந்து இருக்கவும். கைகள் இரண்டையும் பின்னால் முதுகுப்பக்கமாக கொண்டு வந்து வலது கையை இடது கையால் பிடித்து மூச்சை ஆழமாக உள்ளே இழுத்து அந்த மூச்சை வெளி விட்டபடி முன் குனிந்து நெற்றி தரையை தொடும் வரை குனியவும். (நெற்றி தரையை தொட முடியாவிட்டாலும் தவறு இல்லை. பின் மூச்சை உள்ளே இழுத்தவாறே மேலே நிமிர்ந்து கொள்ளவும். இது ஒரு சுற்று

இது போல் ஒரு பயிற்சி வேலையில் 3 தொடக்கம் 10 தடவை செய்யலாம்.

*குறிப்பு :- வயிற்றில், சத்திர சிகிச்சை செய்திருப்பினும், வயிற்று வலி வயிறு சார்ந்த ஆரோக்கிய குறைகள் உள்ளோர் கர்ப்பிணிகள் இப்பயிற்சியை தவிர்க்கவும்.*

### பயன்கள்

பசியின்மை, நீரிழிவு, மலச்சிக்கல், ஆண்மைக் குறைபாடு, பெண்மை சார்ந்த பிரச்சினைகள் போன்ற குறைபாடுகள் அனைத்துக்கும் ஓர் அற்புத நிவாரணி. மற்றும் முதுகுத் தண்டு, கழுத்து, நுரையீரல், இதயம் போன்றவையும் பயனடையும்.

ஆரோக்கிய ரகசியம் எனும் இத் தொடரில் அன்பர்களின் கேள்விகளுக்கான யோகாசிரியரின் பதில்கள் "யோகமும் வாழ்வும்" எனும் பகுதியில் பிரசுரிக்கப்படும். யோகாசனம் சம்பந்தமாக உங்களது வினாக்களை

**P.O.Box #63581**
**Woodside Squarew**
**1571 Sandhurast Circ.**
**Toronto, ON. M1V 1V0**

**Fax : 416.849.0594**
**E-mail : info@thaiveedu.com**

## ஆரோக்கிய ரகசியம் - 7

என்னும் முகவரிக்கு அனுப்பிவையுங்கள்.

***நான் கடந்த 15 வருடங்களாக கனடாவில் வாழ்ந்து வருகிறேன். யோகாசனம் பயில வேண்டும் என்று நீண்ட நாள் விருப்பம். கடின வேலை ஏற்கனவே செய்வதால் அத்துடன் யோகாசனமும் செய்தால் அதிக களைப்பு ஏற்பட வாய்ப்பு உள்ளதா? மற்றும் வேறு வைத்திய முறையையும் எடுப்பதால் ஏதாவது ஒவ்வாமை ஏற்படுமா?***

ராஜன் - ஸ்கார்புரோ

உங்களுடைய முதலாவது வினாவுக்கு பதில், கடின வேலை செய்யும்போது பொதுவாக உடல் சக்தி இழக்கப்படுகிறது. யோகாசனம் செய்யும்போது உடலில் ஒரு வித சக்தி உருவாகிக் கொள்கிறது. மற்றும் ஆசனங்கள் செய்யும் போது சக்தி விரயம் ஏற்படுவதில்லை.

அத்துடன் தினசரி 30 தொடக்கம் 1 மணி நேரம் ஆசனங்களை செய்துவரலாம். வேலை செய்த உடலுக்கு இது மாற்றாகவும் ஓய்வாகவும் இருக்கும்.

இரண்டாவதாக யோகாசனம் எவ்விதமான வைத்திய முறைகளுக்கும் ஒவ்வாமையை ஏற்படுத்தாது மாறாக ஒத்துழைப்பைத்தான் தரும்.

எனவே நீங்கள் தாராளமாக யோகம் பயிலலாம்.

■ ■ ■

**Mccowan/Denison (98 Coppard Ave)**



Less than 2 years NEW
Apx: 3100 sq.ft
4 Bedrooms
4 Washrooms
Separate Entrance

**Markham/14th Ave**



Gorgeous All Brick Home With A Beautiful Layout.
3 Bedrooms
3 Washrooms


**Markham/Steeles**







2000
I will pay $2000 towards your closing cost for completing the purchase of your Home with me.
($1000 for properties less than $300,000 value)



Century 21
Affiliate Realty Inc. Brokerage
2000
Pakeerathan Sahadevan
Sales Representative
416-908-6003
Only one Gift Certificate can be used per transaction per client.
Not intend to solicit properties currently listed
some conditions apply.

**Ellesmere/Morningside**
Condo Townhouse



Bedrooms 2
Washrooms 2
$80,000

**Markham.Eglington**
Condo



Bedrooms 2
Washrooms 2
$99,000

Life Insurance
Whole Life 36 cents*
Non Medical 42 cents*
RESP Education Plan
- Access to government grants of up to $9,200 per child*

# தமிழ் ஸ்ரார் வானொலி ஒலிபரப்பு ஆரம்பம்

கடந்த மாதம் தமிழ்ஸ்ரார் வானொலி உத்தியோகபூர்வமாக தனது ஒலிபரப்பை ஆரம்பித்தது. ஈழத்து ஒலிபரப்புத் துறையின் முன்னோடிகளில் ஒருவரான திரு. கே. எஸ். பாலச்சந்திரன் அவர்கள் ஒலிபரப்புக்களை ஆரம்பித்து வைத்தார். அப்போது எடுக்கப்பட்ட படங்களில் சிலவற்றை இங்கு காண்கிறீர்கள்.



photos: digi Media

# Magnificent India

## EXPERIENCE INDIA LIKE NEVER BEFORE WITH OUR AWESOME NEW TOURS.

### Manasarover Yatra



Kathmandu – Kodari – Zangmu – Nyalam – Saga – horpa – Manasorover – Dharchen – Mt.Kailash – Dehraphuk – Zuthulphuk – Dolmala

**16 Days / 17 Nights**

### North Indian Experience

Delhi – Mandawa – Bikaner – Khimsar – Jaisalmer – Jodhpur – Deogarh – Ranakpur – Udaipur – Pushkar – Ranthambore – Bharatpur – Agra – Jhansi – Khajuraho – Khajuraho – Varanasi – Delhi



**21 Days / 20 Nights**


### Romantic Kerala

Munnar (Houseboat) - Alleppey - Kovalam



**6 Days / 5 Nights**

### Southern Heritage



Cochin (Houseboat) - Thekkady - Madurai - Tanjore - Rameshwaram - Kannayakumari - Kovalam

**12 Days / 11 Nights**

### Best of Kerala



Cochin – Munnar – Thekkady – Kumarakom (Houseboat) – Kovalam – Kanyakumari

**10 Days / 9 Nights**

### Exotic Kerala

Cochin – Munnar – Thekkady – Kumarakom (Houseboat) – Cochin



**21 Days / 20 Nights**

### Temples of South India

Chennai - Chidambaram - Kanchipuram - Kerala - Madurai - Palani - Rameshwaram - Thanjavur - Tiruchi - Tiruchendur - Tirupathi



**21 Days / 20 Nights**

### The Sacred Ganges



Delhi – Mathura – Agra – Allahabad – Varanasi – Delhi

**12 Days / 11 Nights**

For tour packages and more information contact us or vist our website.

## SERANDIB TRAVEL 1

IATA TICO 50012691

**Toll Free: 1-888-207-0902** www.serandibtravel.com

**Toronto: 416-750-0009** 2075 Lawrence Ave East Suite 202

**Mississauga: 905-564-7564** 1332 Khalsa Drive (@ Dixie & Derry) Unit 3

**Montreal: 514-448-1389** 1410 Rue Guy Unit 10

Calgary: 403-770-9647
Vancouver: 604-625-0495

BMK

# கண்ணைக் கட்டுது தாய்லாந்து



திரு மகேசன்
mahesan@thaiveedu.com

களைகட்டத் தொடங்கி விட்டது கோடைக் கால விடுமுறை. எந்தப் பக்கம் நடையைக் கட்டலாம் எனத் தலையைத் பிய்த்துக் கொண்டு திரிகிறது ஒரு கூட்டம். அவர் போன இடத்தை விட திறமான இடமாகப் போக வேண்டும் என அவர்களுக்குள்ளேயே போட்டி.

போன இடத்தில் இடம் பார்ப்பதோடு நின்று விடாது SHOPPING வேறு செய்ய வேண்டடும்.'அஜால் குஜால்'PARTY வேறு போட வேண்டும். சொல்லாமல் கொள்ளாமல் 'BUSINESS TRIP' என்று 'கௌரவ' வேடத்தில் ஒரு கூட்டம் தலைமறைவாக போய்விடுகிறது. இவற்றையெல்லாம் மோப்பம் பிடிக்கப் போன இடத்தில் தான் சிக்கியது 'சிங்கன் கதை' ஆன்மீகப் பயணம் போய் வருபவர்களும் அங்கேதான் TRANSIT கேட்கின்றார்கள். BUSINESS TRIP போபவர்களும் அங்கேதான் TRANSIT கேட்கிறார்கள் என்ற செய்தி காதில் விழுந்ததும் ஐயப்பா இது மெய்யாப்பா? என்று மண்டையைப் போட்டுக் குடைந்ததில் கிடைத்தது... பொறி அல்ல தீச்சுவாலையே.

டண்ணென்று மணியடித்தது போல் வந்து விழுந்த வார்த்தை தாய்லாந்து. அட போங்கடா கியூபாவை விட தாய்லாந்துக்கு அவ்வளவு POWERஆ என்று பார்க்கப் புறப்பட்டால் திரும்பிய பக்கமெல்லாம் மெய்மறக்க வைத்து BLOOD PRESSUREஐயே எகிற வைத்துவிட்டது தாய்லாந்து.

போய் தாய்லாந்து நாட்டில் கால் வைத்ததும் நினைவுக்கு வந்தது 'சுனாமி' தான். சீறி அடித்து சுனாமி சிதறடித்த நாடா இது என்று வாயில் கை வைக்க வைக்குமளவுக்கு பிரமிக்க வைத்து எழுந்து நிற்கிறது. இந்தியா, இலங்கை இரண்டிலுமே சுனாமி சுவடுகள் இன்னமும் மறையவில்லை. இன்னமும் சுனாமியால் பாதிக்கப்பட்ட அகதிகளின் ஓலம் ஓயவில்லை.

சுனாமியால் சூறையாடப்பட்டு எதுவுமே இல்லை என்று உலமே வாயைப் பிளந்து நின்ற நேரத்திற்குள் தன்னை மீண்டும் கட்டியெழுப்பி உல்லாசப் பயணத்துறையில் மீண்டும் கொடிகட்டிப் பறக்கிறது தாய்லாந்து.

விமானத்தில் ஏறிய உடனேயே சீவி முடித்து சிங்காரித்து சிரிப்பழகிகள் தமது சேவையைத் தொடங்கிவிடுகின்றார்கள். விமானத்திலேயே நீங்கள் உலகின் முதலாம் தர உல்லாசப்புரிக்கு பயணமாகின்றீர்கள் என்று கூறியபடியே வரவேற்கின்றார்கள் உடையலங்காரம் முதல் உணவு, குடிவகை அனைத்துமே தாய்லாந்து வாசனையோடு தான் காணப்படுகின்றது.

எங்கே போகின்றீர்கள் என்று கேட்டு அங்கே நாம் அறியாத பலவற்றை நமக்கு விமானத்திலேயே பாடம் நடத்தி விடுகின்றார்கள். நல்லது எது கெட்டது எது என்று பிரிவு படுத்தி எம்மை விமானத்திலேயே தயார் படுத்திவிடுகின்றார்கள்.

இயற்கை அழகு கொட்டிக்கிடக்கும் தாய்லாந்து நாடானது இந்தோனேசியா, மியான்மார், சீனா இவற்றுக்கெல்லாம் திறவுகோலாக விளங்கும் ஒரு நாடாகும். தாய்லாந்து செல்பவர்கள் ஒரு சுற்றுச் சுற்றி பக்கத்து நாடுகளையும் தட்டிப் பார்த்து விட்டு திரும்புவதே வழக்கம்.









தாய்லாந்தின் வடக்குப் பகுதியை மலைகளும் காடுகளும் ஆக்கிரமித்து இருக்கின்றன. மத்திய பகுதியை அரிசி விளையும் வயற் கழனிகள் பரவிக்கிடக்கின்றன. மேற்குப் பகுதியில் அழகிய சின்னத் தீவுகள் இயற்கை கொஞ்ச வரவேற்கின்றன. 76 மாகாணங்களை உள்ளடக்கிய நாடு தாய்லாந்து என்றால் நம்ப முடிகின்றதா? இதிலும் பாங்கொக் நகரமே அரசியல், பொருளாதார, விஞ்ஞான அமைப்புக்களை உள்ளடக்கிய பகுதியாகும். அதுமட்டுமல்ல பாங்கொக் தான் தாய்லாந்தை ஆளும் அரச பரம்பரை(ROYAL FAMILY)அவர்களது அரண்மனைகளை உள்ளடக்கிய பகுதியாகும்.

அசு, முப்படை, புத்தமதம் உட்பட அனைத்து மதங்கள் என எல்லாவற்றுக்கும் அரசரே பொறுப்பானவராக இருக்கின்றார். இராமர் ஆட்சி புரிந்த இலங்காபுரி தாய்லாந்து தான் என தாய்லாந்து மக்கள் கருதுகின்றனர். இங்குள்ள அருங்காட்சியகத்தில் இராமர் ஆட்சி புரிந்தபோது அமர்ந்த கதிரை, கட்டில் போன்றவை முக்கிய குறிப்புகளுடன் இடம்பிடித்துள்ளன. அனேகமானவர்களின் பெயர்களில் 'RAMA' என்ற சொல் இடையிட்டு வருவதை அவதானிக்க முடிகின்றது. இதனாலோ என்னவோ இங்குள்ள அரசரும் தனது பெயரை King Rama ix (The inth King of Chakri Dynasty) அழைக்கின்றார். கிட்டத்தட்ட இவ் அரசரே 50 ஆண்டுகளுக்கு மேலாக ஆட்சிப் பீடத்தை அலங்கரித்து நீண்ட காலம் ஆட்சி புரியும் அரசர் என்ற பெருமையையும் தாங்கி நிற்கிறார். 513-115 SQ km பரப்பளவைக் கொண்ட தாய்லாந்து நாட்டில் அரசரின் அரண்மனையைக் காண கண் கோடி வேண்டும்.

தங்க முகாமிடப்பட்ட அரண்மனை ஒரு புத்த விகாரையின் வடிவிலேயே அமைக்கப்பட்டுள்ளது. இதனுள் நுழைய பெண்கள் அனுமதிக்கப்படும் போது கால்கள் தொியாத வாறு நீண்ட ஆடை அணிந்தவர்களே செல்ல அனுமதிக்கப்படுகின்றனர். அவர்களுக்கான நீள ஆடை வாசலில் வழங்கப்பட்டு பின்னர் வெளியே வரும்போது அவர்களிடமிருந்து திரும்ப வாங்கப்படுகின்றது. அரண்மனையை பார்வையிட வருபவர்களில் வெளிநாட்டினர் ஒரு வரிசையிலும், தாய்லாந்து நாட்டவர் பிறிதொரு வரிசையிலேயும் அனுமதிக்கப்படுகின்றனர்.

4 பிரிவாக பிரிக்கப்பட்டுள்ள தாய்லாந்து நாட்டில் ஓர்கிட் பூக்கள் கொட்டிக் கிடக்கிறது. அந்நிய செலாவணியை இவ் ஓர்க்கிட் பூக்கள் ஏற்றுமதி மூலம் சுலபமாக சம்பாதிக்கின்றனர். மலைப்பிரதேசங்களில் இவ் ஓர்க்கிட் பூக்களுடன் பழவகைகளான மங்குஸ்தான், ரம்புட்டான், வாழைப்பழம் போன்றவற்றை குவியலாக வைத்து விற்பனை செய்கின்றனர். பாங்கொக் வீதியெங்கும் திரும்பிய பக்கமெல்லாம் பழக்கடைகள் குவிந்து கிடக்கின்றன.

நாம் அன்று திருநெல்வேலி சந்தையில் பார்த்த அனைத்துவகை மாம்பழங்கள், வாழைப்பழங்கள் எல்லாம் தாய்லாந்தில் நாம் ஈழத்தில் இருக்கின்றோமா என்ற பிரமிப்பை கொடுக்கின்றன. உல்லாசப் பிரயாணிகள் காலையில் எழுந்து கடற்கரையில் நடை சென்றுவிட்டு வந்து பழக்கடைகளை மொய்த்தபடி இருக்கின்றார்கள். பலாப்பழத்தை வெட்டி சுளை எடுத்து தட்டில் தருகின்றார்கள். இதற்கான கட்டணம் $2.00க் கும் குறைவானதே. வாயைச் சப்புக்கொட்டி என்ன பயன் போயல்லவா ரசிக்க வேண்டும்.

62 மில்லியன் பிரசைகளைக் கொண்ட தாய்லாந்து நாட்டில் பெரும்பான்மையினர் தாய் இனத்தவரே. இவர்களில் 7 மில்லியன் மக்கள் பாங்கொக்கில் தான் வாழ்கின்றார்கள். இவர்களுக்கு அடுத்ததாக சீனர்களும் இந்தியர்களும் இடத்தைப் பிடிக்கின்றார்கள். பெரும்பாலான உடு புடவை வியாபாரத்தில் இந்தியர்களே கொடிகட்டிப் பறக்கின்றார்கள். 'தாய்' (THAI) மொழி பேசுகின்ற போதும் பரவலாகவே ஆங்கிலம் சரளமாக பேசுகின்


60ம் பக்கம் பார்க்க...



VEEDU
REALTY INC.
BROKERAGE
1345 Morningside Ave., Unit #8
Toronto, ON, M1B 5K3
Tel: 416.759.6000
Fax: 416.759.6005

• Building permit
• Zoning info.
• Site plan approval
• Rezoning approval

Gop Kalaieswaraan
Master in Architecture
Sales Representative
(Residential, Commercial, Institutional)
Dir: 416.723.7467



# கண்ணைக் கட்டுது தாய்...

59ம் பக்கத் தொடர்ச்சி...

றார்கள்.
பாங்கொக்கில் ஓடும் BTS SKY TRAIN னிலேயே நீங்கள் CITY சுற்றிப் பார்த்து விடலாம். வீதிகளில் மோட்டார் சைக்கிள் கள் கண்ணைப் பறிக்கும் வேகத்தில் ஓடு கின்றன. எவே நீங்கள் வீதியைத் தாண்டும் போது கரணம் தப்பினால் மரணம் என்பது போல் அவதானமாக இருக்க வேண்டும்.

இங்கே இருக்கின்ற இந்துக் கோவிலுக்கு செல்வீர்களாயின் அங்கே தாய்லாந்து நாட்டினர் அர்ச்சனைத் தட்டுக்களுடன் வந்து ஆராதனையில் ஈடுபடுவதைக் காண முடி கின்றது. ஐரோப்பிய நாடுகளில் வாழும் ஈழத்தமிழர்களில் பலர் இலங்கை செல்ல அனுமதி இல்லாத காரணத்தால் இந்த ஆலயத்திற்கு வந்தே திருமணம் செய்வதை காண முடிகின்றது.

CHIANG MAI தாய்லாந்து நாட்டின் இரண்டாவது மிகப் பெரிய நகரம். பண்டைய புத்த ஆலயங்கள், மலைப் பாங்கான குகைகள் என 1296 ஆம் ஆண்டில் ஆட்சி புரிந்த அரச வம்சத்தவரின் கலாச்சாரப் பிர- திகள் இன்னமும் காணப்படுகின்றன.

CHIANG MAI மக்களின் வாழ்க்கை வித்தியாசமான அமைப்பை கொண்டதாக இருக்கின்றது. பாங்கொக் இப்போதைய மன்னரின் ஆட்சிப்பீட இடமாக இருப்பதை இவர்கள் வரவேற்கவில்லை. தமது இடமே அரசரின் உண்மையான அரண்மனை அமைய வேண்டிய இடமென்று திரும்பத் திரும்ப எம்மிடம் சொல்கின்றார்கள். தாமே அரச பரம்பரை என்று அடித்துச் சொல்கின்- றார்கள்.

கைவினைப் பொருட்கள், பட்டுப் பொருட் கள், வெள்ளி பாவனை பொருட்கள் மிக மலிவாக இங்கே கிடைக்கின்றன. மறந்து விடாதீர்கள் யானைச் சவாரி செல்ல அழகான இடம் இதுவே. காட்டினூடா நம்மை யானையில் ஏற்றிச் சென்று நம்மை திரிலில் ஆழ்த்துகின்றது. நமது இரவு உணவை CHAO PHRAYA ஆற்றில் படகுச் சவாரியு- டன் ருசிக்கலாம்.

PHUKET ISLAND நீண்ட தெளிந்த பளிங்கு நீர் நிறைந்த கடற்கரை. இங்கே அனேக- மானவர்களுக்கு ஸ்ரீலங்காவை தெரியாவிட்- டாலும் ஈழத்தமிழர்களை நன்றாகவே தெரி- கின்றது. பல ஈழத்தமிழர்கள் இங்கே வியாபாரங்களில் கொடிகட்டிப் பறக்கின்றார் கள். 70 நிமிட விமானப் பயணத்தின் மூலம் புக்கட்டை அடையலாம். தாய்லாந்து நாட்டின் நீளமான தீவு இதுவே.

இதைப் போன்றதொரு தீவே பட்டையா. PATTAYA தாய்லாந்து நாட்டின் NO 1 WIND SURFING இடமாக குறிப்பிடப்படு- கின்றது. எங்கு பார்த்தாலும் வெளிநாட்டவர் களே அதிகம் உலாவித் திரிவதைக் காண- முடிகின்றது. PATTAYA WATER PARK மிக அழகானது. நமது பணத்தில் $10 உடன் முழு நாளையும் WATER PARKஇல் கழிக்க லாம். இவை மட்டுமன்றி மீன்பிடிக்க ஆசைப்படுகின்றீர்களா உங்களைப் படகில் அழைத்துச் சென்று அந்த அனுபவத்தையும் பெற்றுத் தருகின்றார்கள். BUNZEE JUMP- ING, MOTOR CYCLE RACE WATER SKVING பட்டாயாவே கலங்குகிறது.

சரி போனதுதான் போகிறோம் என்று SHOPPING செய்யாமல் வந்தால் மனம் கோணலாகிவிடுமே என்று ஆதங்கப்பட வேண்டாம். அதற்காகவே இருக்கவே இருக்கிறது INDIRA SQUARE இல் பிரட்ருனாம் (PRATUNAM) MARKET. இரவு நேர MARKET ஆன இதனை INDI- RA MARKET என்றே அழைக்கின்றார்கள்.

POLO, NIKE, ADDIDAS என்று BRAND NAME ஆடை வகைகள் முதல் SILK வகை உடுப்புக்கள், சப்பாத்துக்கள், அழகிய HAND CRAFTS என்று அள்ளிக் கொள்ள லாம். இங்கே விலை குறிப்பிடப்பட்டிருக்காது. நீங்கள் அவர்கள் சொல்லும் விலையில் 1/4 விலையை சொல்லியே வாங்கிவிட லாம். உதாரணத்திற்கு SILK TIE ($1.00) LEVIS PANTS ($3.00), NIKE T SHIRTS ($.2.00) என்றே விலை போகிறது. பல கனடிய வியாபார ஸ்தாபனத்தில் மொத்த மாக இவற்றை வாங்குவதை காணக்கூடிய தாக இருக்கின்றது. கனடிய $500க்கு நான்கு TRAVELING BAG நிரம்பியபடி ஜாலியாக வரலாம். ■ ■ ■


சுழிபுரம் கிராமசபை ஒன்றியம் நடாத்தும்

## கலைமாலைப் பொழுது

சுழிபுரம் கிராம சபை ஒன்றியம் விருந்துபசார நிகழ்வையும் (இசை , நடனம்) ஒன்று கூடல் நிகழ்வாக நடாத்தவுள்ளது, இவ்விழாவிற்க்கு சுழிபுரம் கிராமசபை வட்டாரத்தில் வசித்த அனைத்துக் கிராமசபை மக்களையும் வருகை தருமாறு அன்போடு அழைக்கின்றனர்
கனடாவாழ் சுழிபுரம் கிராமசபை ஒன்றியத்தினர்.
நன்றி

தொடர்புகளுக்கு

துலகநாதன் : 416 . 497 1310
முரளிதரன் : 416 . 732 1933

2008 ஆவணி 16 திகதி
5:00 pm

**York Woods Library**
**1785 Finch Ave. West**
**at the intersection of Jane and Finch.**






# Divine Home

*Ancient Indians designated an important part of the home as a sacred section where they retreat before each dawn to commune with the Supreme Being, the centre of the Spiritual Force is called Devatarchanam.*

*Love, Joy and prosperity come to a Hindu Family who worships in their homes through Poojas where the divine energies are invoked. The home shrine is also the focus point for private and group prayers.*

*The place should be meticulously kept like a temple through which whole household will be charged with Spiritual Vibration.*


OUR CRAFTSMEN CAN CUSTOM DESIGN AN ALTAR FOR YOUR POOJA ROOM AS REQUIRED


**NO PLYWOOD AND NO VARNISH**
**HEAT, OIL AND WATER RESISTANT**
**SPRAYED WITH HIGH QUALITY A.C. LAQUER**
**MORE THAN 100 MODELS ON DISPLAY**

## THE PERFECT POOJA MANDIR FOR YOUR HOME



A HOME IS NOT COMPLETE WITHOUT A "DIVINE HOME"





**Jaipur Gore Plaza**
Units 9 & 10
8917 The Gore Road
Brampton, ON
Tel: 647 887 3997

**747 Flea Market**
Booths, 326,327,328
Tel: 416 999 3997
www.divinehome.org

**1845 Lawrence Ave East**
Scarbourough, ON. M1R 2Y3
Tel: 647 435 0105
divinehome@rogers.com



# LOFRANCO CHAGPAR
PERSONAL INJURY LAWYERS

*"Dedicated and determined to provide the best results for your personal injury claims"*

# 30 மில்லியன் டொலர்கள்

**2006ம் ஆண்டு இழப்பீடாக மீளப் பெற்றுக்கொடுத்துள்ளோம்**



- வாகன வீதி விபத்தில் காயமடைந்தீர்களா?
- விபத்தின் காரணமாக வேலைக்கு செல்வதில்லையா?
- உங்கள் குடும்பத்தின் தேவைகளை கவனிக்க முடியவில்லையா?
- காப்புறுதி நிறுவனம் பணம் செலுத்துவதை நிறுத்திவிட்டதா?
- இழப்பீட்டுத் தொகையைப் பெறுவதில் தாமதமா?




**Rocky Lofranco**
Senior Partner

இலவச ஆலோசனைகளுக்கு அழையுங்கள்

**LOFRANCO CHAGPAR**
Personal Injury Lawyers

**வாகன விபத்து கோரிக்கைகளில் 15 வருடங்களுக்கு மேற்பட்ட அனுபவம் கொண்ட சட்ட நிறுவனம்**

தமிழில் சேவை வழங்கப்படும்
இலவச ஆலோசனைகளுக்கு

**இலங்கதாஸ் பத்மநாதன்**

TORONTO OFFICE
Yonge / Norton Centre
5255 Yonge Street,
Suite1300 North York
416 223-8333

MISSISSAUGA OFFICE
Dundas / Hurontario
257 Dundas St. East,
Unit 1
905 275-8806

FREEE CONSULTATION

**LANKATHAS PATHMANATHAN**

**416 774-8122**
DIRECT LINE

**TORONTO • BRAMPTON • MISSISSAUGA • KITCHENER**

# ஓய்வு நேரத்திற்கு ஓர் இனிய துணை EASY CHAIR

## தாயகத்தில் கிடைத்த அதே வடிவத்தில் இப்போது இங்கும் கிடைக்கிறது

அதி விசேட சலுகை
ஜீலை 10ம் திகதி முதல்


**25%***

கழிவு விலையில் கிடைக்கிறது

~~Reg: $120.00~~
Now: **$90.00**

*குறித்த காலப்பகுதிக்கு மட்டும்

முள்ளந் தண்டுகளின் இயல்பான வளைவுகளுக்கு ஏற்ப Easyயாய் அமர்ந்து கொள்ள



digi

உறுதியான அமைப்பு
வண்ண வடிவம்
குறைந்த விலை
நிறைந்த ஆனந்தம்

**AVRA Inc.**
**416-854-1639**
E-mail:avrainc@gmail.com

---

PENS
CLOCKS
CALENDERS
MEMOS
MEASURING TAPES
CELL PHONE STANDS
FRIDGE MAGNETS
B. CARD HOLDERS
CORPORATE GIFTS
SEASONAL GIFTS
LASER ENGRAVING
PAD PRINTING
AND MORE................

# One Stop for
## TROPHIES, AWARDS AND PROMOTIONAL PRODUCTS

2007ம் ஆண்டுக்கென தமிழ்க் கலை சார்ந்த தொழில், வியாபார விருத்தி அன்பளிப்புப் பொருட்கள் (PROMOTIONAL PRODUCTS) கலை சார்ந்த நிறுவனங்களுக்கும் கலை நிகழ்வுகளுக்கும் சிறப்பு விலைகளில் கிடைக்கிறது.

புதிய அறிமுகம்

On high with your thoughts
உங்கள் எண்ணங்களோடு உயரத்தில்





PRO MAR
Awards & Promotions Ltd

www.promarawards.com **416-291 2344**

585 Middlefield Rd Unit # 3, Scarborough, ON., M1V 4Y5

---

The Big choice
இல்லங்களை அழகுபடுத்த ஓர் பெரிய தெரிவு

மிகப் பெரியதும் மிக வித்தியாசமுமான வீட்டு, அலுவலக சுவர்களை அலங்கரிக்கும் வர்ணக் கலைப் பொருட்கள்

சிறப்புத் தெரிவுகளாகவும், குறைந்த எண்ணிக்கையிலும் இறக்குமதி செய்யப்பட்டிருப்பதால் உங்கள் தெரிவுகளுக்கு முந்துங்கள்
IN WHOLESALE PRICE FOR RETAIL

80 Nasdane Rd Unit C-59 416-898 4846

# மேக்கப்போ, உனக்கு வயது என்ன?



மஞ்சுளா ராஜலிங்கம்
manju@thaiveedu.com

பல பெற்றோர்களுக்கு (குறிப்பாகத் தாய்மார்களுக்கு) தமது சின்னப் பெண் குழந்தைகளுக்கு அழகாக உடையுடுத்தி விட்டு, பின்னர் முகத்திற்கு பெரிய மனுஷி தோரணையாக அழகுச் சாதனங்களையும் பாவித்து அழகு பார்ப்பதில் ரொம்பவே பெருமை. தப்பில்லை தான். இடைக்கிடை அந்த இன்பத்தைக் கெடுப்பானேன்? ஆனால், அதையே ஒரு வழமையாகக் கொண்டு வாழும் சின்னக்குழந்தைகளின் அந்த எண்ணம் சரிதானா?

எந்த ஒரு கடைக்கும் போய்த்தான் பாருங்களேன், கட்டாயம் அங்கு அழகுச் சாதனங்கள் அடங்கிய பொதிகள் எங்கேயும் மலிந்து கிடக்கின்றன, ஆனால் பெற்றோர் அவற்றை எடுத்து, அதிலுள்ள இரசாயனச் சேர்க்கைகள், அவற்றின் விளைவுகள் பற்றி பொறுமையுடன் வாசித்துப் பார்க்கின்றார்களா என்றால், இல்லையென்று தான் சொல்ல வேண்டும். பிஞ்சு முகங்களின் தோல்கள் மிகவும் மென்மையானவை. குழந்தைகளை, இவற்றை அணிய அனுமதிப்பதன் மூலம், அந்த முகங்களுக்கு எவ்விதமான மறைமுகமான தீங்கை விளைவிக்கின்றோம் என்பதை அவர்கள் அறிந்திருக்க வாய்ப்பில்லை. நாம் எதிர்பார்க்கும் காலத்திற்கு முன்பாகவே trouble skin தோன்றிவிடும் அபாயம் அவர்களுக்கு உண்டு.

சில பெற்றோர்கள் தம் குழந்தைகள் முக அழகுச் சாதனங்களை அணிந்தால் அது ஒரு பெரிய விடயமில்லை என்பது போல் கண்டும் காணாமல் இருந்து விடுகிறார்கள். விரும்பினால் அணிந்துவிட்டுப் போகட்டும் என்பது அவர்களின் எண்ணம். ஆனால் சிலர் தங்கள் பெண் ஒரு பருவப் பெண்ணாக மாறியவுடன் கொஞ்சம் இம்மாதிரிப் பொருட்களைப் பாவிக்கலாம் என்று சமாதானப் படுத்திக் கொள்வார்கள். இரசாயனப் பொருட்கள் முகத்தின் அழகைப் படிப்படியாகக் கெடுத்துவிடும் என்பது மட்டுமல்ல, அவர்கள் முகம் குழந்தையிலேயே அழகு கெட்டு, பெரியவர்களின் முகம்போன்று



மாறுவதற்கும் வாய்ப்புக்கள் உண்டு.

இதிலும் சின்னஞ்சிறு குழந்தைக்கும் அழகு கருதி, மேக்கப் போட்டால், பின்னர் தோலின் குணம் பற்றிக் கேட்கவே வேண்டாம்.

சிறுவயதில் பாவிக்கும் அழகுச் சாதனங்களால், முகத்தில் அழகு சிதைவுற்று, பருக்களும் தோன்றி, பின்னர் அதை மறைப்பதற்கே இன்னும் அதிகமாக மேக்கப் போட வேண்டிய நிலைக்கு அப்பெண் குழந்தைகள் தள்ளப் படுகிறார்கள். பெற்றோர்கள் கொஞ்சம் சிந்தித்துப் பார்க்க வேண்டும். பெற்றோரின் இந்த முற்போக்கு எண்ணத்தால், குழந்தைகள் மனதில், “அட, அழகு சாதனம் பயன்படுத்தினால் மட்டுமே நான் அழகு” என்ற எண்ணம் சாதாரணமாக அடிமனதில் ஆழப் பதிந்து விடும். இயற்கை அழகே அழகு என்பதை அவர்கள் மனதில் கொண்டு வருவது தான் நல்லது. ஆனால் மருத்துவரீதியாக அவர்களுக்கு ஒரு தோற் பிரச்சினை இருந்து அதை மறைக்க வைத்தியர்களின் ஆலோசனை மூலம் ஒரு சில, அங்கீகரிக்கப்பட்ட அழகுசாதனப் பொருளைப் பயன்படுத்தின் தப்பில்லை.

உதாரணத்திற்கு, கண்ணுக்குப் போடும் மேக்கப்பை எடுத்துக் கொள்வோம். சின்னப் பிள்ளைகள் தம்மையறியாமலே கண்களைக் கூட அடிக்கடி தேய்த்துக் கொள்வார்கள். அப்பொழுது கண்களுக்கு போடப்பட்டிருக்கும் அழகு சாதனங்களின் துகள்கள், மற்றும் கண்மை போன்றன அவர்களை அறியாமலே கண்ணுக்குள் சென்று, கண்களில் நோய்களைக் கொண்டு வந்து விடும். உங்கள் குழந்தையை அப்படி ஒரு அபாயகரமான கட்டத்திற்கு உட்படுத்த வேண்டியது அவசியமா? பார்வையின் அவசியம் கண் இல்லாதவர்க்குத் தான் தெரியும். இவை பெரிய பாரதூரமான விளைவுகளை பார்வைக்குக் கொண்டுவந்து விடக்கூடியன. அதன்பிறகு, குழந்தையை மருத்துவரிடம் கொண்டு போய் அவதிப் படுமிடத்து தான், குழந்தைகளின் சுட்டித்தன அழகு, இந்த மாதிரி முந்திரிக்கொட்டைத்தனமான செயல்களால், எவ்வளவு பாதிக்கப்பட்டு விட்டது என்பதைக் காலம் கடந்து உணர்வார்கள். இதற்குக் காரணம் என்ன? அழகுப்பொருட் சாதனங்கள் தான். அல்லது பெற்றோரைக் கேளாமலே, குழந்தைகள் தாமாகவே இவற்றை இஷ்டத்திற்குப் பாவிக்கத் தொடங்கியது தான் காரணம் எனலாம்.

எந்தவிதமான முகப்பூச்சுக்களை உங்கள் மகள் அணிய விரும்புகிறாள் என்பதை முதலில் தெரிந்து கொள்ளுங்கள். எதற்காக அவள் மேக்கப் போட விரும்புகிறாள்? அவள் வகுப்பில் படிக்கும் எத்தனை பெண்கள் மேக்கப் தினமும் அணிந்து கொள்கிறார்கள்? அவற்றின் அளவுகோல் என்ன? இதற்கான விடைகளைத் தெரிந்து கொள்வதன் மூலம், நீங்கள் உறுதியான ஒரு விடையை உங்களுக்குள்ளேயே கண்டு கொள்ளலாம். மகளுக்கு தன் சினேகிதிகளின் ஊக்கத்தில், அருகாமையின் அழுத்தத்தில் தானும் அவர்கள் போல் இருக்க வேண்டும் என்ற எண்ணம் தோன்றலாம், அல்லது முதல்நாள் முகத்தில் கொள்ளை கொண்ட அந்தப் பருவின் பாதிப்பினை மறைக்கவும், அவள் உங்களிடம் சாதகமான ஒரு பதிலை எதிர்பார்க்கலாம்.

65ம் பக்கம் பார்க்க...

Connectiong tutors & students in the GTA

**BRILLIANT TUTOR @ YOUR HOME INC.**

தமிழ் மாணவர்களின் நலன் கருதி அவர்களின் வீடுகளுக்கு சென்று
பாடங்களை ஒன்ராரியோ பாடத்திட்டத்திற்கு அமைய கற்பித்து வருகின்றோம்.

- SCIENCE
- CHEMISTRY
- PHYSICS
- BIOLOGY
- MATH
- CALCULUS
- ALGEBRA & GEOMETRY
- DATA MANAGEMENT
- ENGLISH
- FRENCH

EQAO Preparation

Call Kuna Today

Tel: 416-291-4684, 905-507-8470, 647-295-5862, Fax: 416.264.6306

E-mail: info@brillianttutor.com

Over 100 Tutors

We will visit your home

JK to GRADE 8 $80^{00}$/MONTH


1 ON 1 OR GROUP

9 to University 2nd Year $90^{00}$/MONTH

Over 1500 Students

79 Eastvale Drive, Markham, ON, L35 4R9

Markham, Scarborough, Mississauga, Toronto, Etobicoke, Brampton, North York, East York, Richmond Hill, Ajax, Malton, New Market, Vaughan




digi Media - 416-467-4952

# A1 TOP QUALITY FLORIST





உங்களின் மங்களகரமான வைபவங்களுக்கு
தேவையான பொருட்களுக்கும் நாடுங்கள்


பிள்ளை 416-269-5522

2871 Lawrence Ave. East, Scarborough. Ontario M1P 2S8



# A1 TOP QUALITY FLORIST

## Funeral Services




Floral Arrangement for Funeral Needs

பிள்ளை 416-269-5522

2871 Lawrence Ave. East, Scarborough. Ontario M1P 2S8

# மேக்கப்போ, உனக்கு வயது...

63ம் பக்கத் தொடர்ச்சி...

சினேகிதிகளின் தூண்டுதல் தான் காரண-மெனில், அவர்களுக்கு எவ்வளவு அழகு சாதனப் பொருட்களைப் பாவித்தாலும், நிறைந்த திருப்தி இருக்காது. இதைக் கருத்தில் கொள்ளும் தாய்மார்கள், முதலில் தமது பெண் குழந்தைகளிடம், ஒரு தீவிரமான உரையாடலைக் கைக்கொள்ள வேண்டும். அத்துடன், "மேக்கப் போடாமலே நீ எவ்வளவு அழகாய் இருக்கிறாய் தெரியுமா?" என்ற எண்ணத்தை அவர்கள் மனதில் வேரூன்றச் செய்ய வேண்டும். அந்த எண்ணத்தை தினந்தோறும் ஊக்குவிக்க வேண்டும்.

மீண்டும் எண்ணுகையில், இதற்குச் சரியான தீர்வு தான் என்ன? நடுநிலைமையான ஒரு தீர்வை இதில் எடுக்கப் பாருங்கள். அது பெண்ணின் மனதையும் எதிர்மறையாகப் பாதிக்காது. அவளிடம், நிறமற்ற மஸ்காரா, மெல்லிய நிறங்களைக் கொண்ட நகப் பூச்சுக்கள், நிறமற்ற, அதேநேரம் உதட்டிற்கு கவர்ச்சியைக் கொடுக்கக் கூடிய lip balm போன்றவற்றை அணிய அனுமதியுங்கள். அவளுக்கு தான் மேக்கப் போடுகிறோம் என்ற அடக்கமாட்டா ஆசை நிறைவேறுவதுடன், அவளது அழகும் இயற்கையான அழகாய் இருப்பதை அவளால் உணர்ந்து கொள்ள முடியும்.

இந்த வயதில் மகள் அணியும் அழகு சாதனப் பொருட்களுக்கு உங்கள் அனுமதி இருப்பின், அவளுக்கு தரம் வாய்ந்த மேக்கப் சாதனங்களையே வாங்கிக் கொடுங்கள். பருவப் பெண்களுக்கு அந்த வயதிற்கேற்ற நல்ல சருமம் இருப்பதால், அவர்களுக்கு powder மற்றும் foundation போன்ற சமாச்சாரங்கள் இப்போதைக்குத் தேவையில்லை. அதுவும் இப்பொழுதே இப்படியான சமாச்சாரங்களைப் பாவிக்குமிடத்து, காலப்போக்கில் இவையாலேயே சருமத்திற்குக் கேடு வந்துவிடும். கொடுக்கும் மேக்கப் மூலம் எப்படி அழகான இயற்கையான தோற்றத்தைப் பெறுவது என்று உங்கள் மகளிற்குக் கற்றுக் கொடுங்கள். சில அங்காடிகளில் free makeup service and tips கிடைக்கும். அங்குபோய், அவர்க-ளிடம் எப்படி மேக்கப் போடுவது என்று கற்பதுடன், பலவித உபயோகக் குறிப்புக்களையும் அவர்களிடமிருந்து இலவசமாகப் பெற்றுக் கொள்ளலாம். நடிகையர் போடும், கனமான மேக்கப்பை விடுத்து, சரியான முறையில் முகத்தை அலங்கரிக்கும் முறையை அவள் அறிந்து கொள்வதற்கு நீங்கள் தான் சரியான வழிகாட்டி.

எத்தனை வயதில் மேக்கப் போடுவதை பழக்கமாக்கிக் கொள்ளலாம் என்பது பற்றி பல கருத்துக்கள் உள்ளன. ஒவ்வொரு வரும் இந்த விடயத்தில் ஒவ்வொரு மாதிரி. சிலர் மேக்கப் பக்கமே தலைவைத்துப் படுக்க மாட்டார்கள். ஒருசிலர் பனிரெண்டு வயதிலேயே கூட இந்தச் சமாச்சாரங்களைப் பாவிக்கத் தொடங்கி விடுவார்கள்.

பனிரெண்டு வயது, மேக்கப் போடுவதற்கு மிகவும் சிறிய வயதா? தற்போதைய வாழ்க்கைச் சூழல்களில், குழந்தைகள் பெரியவர்கள் போல், நடக்கவும் பழகவும் சிறுவயதி-லேயே தூண்டப் படுகிறார்கள். உடைகளிலும் அந்த மாதிரி மாற்றங்களைப் பெற்றோர் குழந்தைகள் வாழ்க்கையில் கொண்டு வந்து விடுகிறார்கள். இதில் அவர்களின் மழலைப்பருவ இயல்புகள் காணாமலேயே போய், ஒருவித போலியான மனுஷித்தோரணை வந்து விடுகின்றது. வயது வந்தவர்களின் ஒருவித உலகம் தான் மேக்கப். அதைப் பயன்படுத்துவதன் மூலம், ஒரு பெண் தன் பருவ வயதை ஒருபடி தாண்டி பெரியவர்கள் பட்டியலுக்குள் சேர்க்கப் படுகிறாள்.

ஒரு தாய் ஸ்தானத்தில் இருந்து, உங்கள் மகள் மேக்கப் போடுவதை அங்கீகரிக்கும் பட்சத்தில், நீங்களும் அவளுடன் கூடப் போய், எது சரியான, நல்ல தரமான சாதனங்கள் என்பதைத் தெரிவு செய்வது நல்லது. உதடு மற்றும் கண்களுக்குத் தேவையான eye shadows, mascara, அத்துடன் இமைகளை நன்றாக அழகான மேல் நோக்கிச் சுருட்டிவிடும் eye curlers போன்றவற்றை முதலில் வாங்கிக் கொடுங்கள். இப்படிக் கூட்டு முயற்சிகள் செய்வதே உங்கள் இருவரின் நெருக்கத்தையும் அதிகப் படுத்தும்.

ஒரு நல்ல தரம் வாய்ந்த அங்காடிக்கு அவளையும் கூட்டிச்சென்று அங்குள்ள அழகுக்கலை நிபுணர்களிடம் உங்கள் சந்தேகங்களை நிவர்த்தி செய்வதுடன், இந்த அழகுச் சாதனங்களை அறியும் சரியான முறையையும் கற்றுக் கொள்ளலாம். மேக்கப்பே போடாத தாய்மார்களுக்கு இவை பற்றி அறிந்திருக்க வாய்ப்பில்லை அல்லவா?

சில பிள்ளைகளுக்கு மேக்கப் போடும் விதத்தில், மனதில் கூடுதல் தன்னம்பிக்கையும், உற்சாகமும் உண்டாவதும் ஒரு நன்மையே, ஏனெனில் இதைத் தவிர்ப்பதாலேயே அன்றைய பொழுதில் அப்பிள்ளையின் மனதில் என்னவிதமான எண்ண ஓட்டங்கள் எதிர்மறையாக தாக்குகின்றன என்பது நமக்குத் தெரியாது தானே?

நல்ல அழகிய நூல்கள் கடைகளில் கிடைக்கும். இவற்றில் teen makeup பற்றி குறிப்புக்கள் இருக்க வாய்ப்புண்டு. அவற்றை வாங்கி அதில் மற்ற, உங்கள் மகள் வயதுப் பெண்கள் எப்படியான அழகு சாதனத்தைப் பயன் படுத்துகிறார்கள் என்று படித்துப் பாருங்கள். கிட்டத்தட்ட உங்கள் பிள்ளையின் முக உருவைக் கொண்ட ஒரு படம் காணின், அவர் அணிந்திருக்கும் மேக்கப் எப்படி உங்கள் மகளுக்கும் பொருந்தும் என்று ஒப்பிட்டுப் பாருங்கள். அல்லது ஒருநாளைக்கு, இவள் வயதையொத்த பெண்களையும் வீட்டுக்குக் கூப்பிட்டு, மேக்கப் கலையில் தேர்ந்த ஒருவரை வரவழைத்து, இவர்கள் கேள்விக்கெல்லாம் கூட விடையளிக்கலாமே?

கீழ்க் கொடுக்கப் பட்டுள்ள புத்தகத்தை வாங்கிப் படித்துப் பார்க்க, உங்கள் மகளி-டம் கொடுக்கலாம் (Teenage Beauty by Bobbie Brown). இப்புத்தகத்தில் 12 வயதிலிருந்து ஒருவர் படித்து அறியக்கூடிய மேக்கப் பற்றிய அரிய பல தகவல்களும், அணியும் விதம், பின்னர், தோலைப் பராமரிக்கும் முறை பற்றிய விளக்கங்கள் பற்றிக் குறிப்பாக இந்த வயதுப் பெண்களுக்காகவே எழுதப் பட்டிருக்கின்றன.

சிலபேருக்கு வயதுக்கு மிஞ்சிய தோற் பிரச்சினைகளால் பருக்கள் ஏற்கனவே முகத்தைப் பதம் பார்க்கத் தொடங்கியி-ருக்கும். இக்குழந்தைகளை இந்தப் பிரச்சி-னையின் முளையிலேயே மருத்துவரிடம் காட்டி அதற்கான தீர்வைப் பெற வேண்டும். சிறுவயதாக இருந்தாலும், மெல்லிய இரசா-யனக் கலவை கொண்ட சோப்பினால் முகத்தைக் கழுவுதல், நல்ல சிறந்த க்ரீமைத் தடவுதல், sunscreen போன்ற க்ரீமைப் போடுதல் போன்றன நல்ல பலனைத் தரும். இப்பழக்கத்தை எல்லாப் பெண்பிள்ளைகளும் ஓரளவு சிறுவயது முதலே கடைப்பிடித்தல் அவசியம். இவ்வாறு செய்வதனால், மெதுவே தொடரும் பருக்களைக் கூட அதன் தொடக்கத்திலேயே காணாமல் போகச் செய்து விடலாம்.

ஓரளவு உங்கள் மகளுக்கு மேக்கப் அணியும் வயது வந்துவிட்டது என்று நீங்கள் கருதினால், கொஞ்சம் அனுசரித்துப் போகலாம். Lip glossஐ வேண்டுமானால் தினம் தினம் பாடசாலைக்கு அணியலாம். மஸ்காரா, ஐ ஷேடோ போன்றவற்றை சிறப்பு பள்ளிக்கூட நாட்களில் அணியலாம். மற்றும்படி, எப்பொழுது எங்கே மேக்கப் அணிய வேண்டும் என்பதை நீங்கள் நிர்ணயிக்கலாம் (அதாவது, பள்ளிக்கூட விழாக்கள், பள்ளிக்கூடத்தில் நடக்கும் நடன விருந்துகள் போன்ற விஷேட நாட்கள்).

உங்கள் மகளிடம் எது மிகவும் அழகாகத் தென்படுகிறதோ, உதாரணமாக கண், உதடு போன்றன, அவற்றை இன்னும் அழகாகக் காட்டக்கூடிய மேக்கப்பை அணிந்து கொள்ளப் பழகுவதில் உங்கள் உதவி மிகையாகாது.

என்னதான் இருந்தாலும், lip glossஐத் தவிர வேறு எந்த ஒரு மேக்கப்புமே அந்த வயதில் உங்கள் மகளுக்கு அனாவசியம் தான். 13 வயதில் மெதுவாக மேக்கப் மிகையாக இன்றி மென்மையாக அணியும் விதத்தைப் பயிற்று விப்பதோடு, அவர்களுக்கு தோல் சம்பந்தமான முகப் பிரச்சினைகள் இருப்பின், அவற்றையும் நிவர்த்தி செய்ய இதுவே தக்க தருணம். உங்கள் நெருக்கமும் நிச்சயம் அதிகரிக்கவே செய்யும். மகளின் தன்னம்பிக்கையும் ஊக்குவிக்கப்படும் காலம் இது. தப்பான விதத்தில் மேக்கப் அணிவ-தையும் இது தடுக்கும். 12 வயதில் மேக்கப் போட விளையும் உங்கள் பெண்ணை நீங்கள் தடுக்கும்போது, அவளுக்கு உங்கள் மேல் வெறுப்புக் கூட வரலாம், ஆனால் அதுவே அவள் பதினாறு வயதை எட்டும் போது, மானசீகமாக உங்களுக்கு நன்றி கூறத் தயங்க மாட்டாள்.

■ ■ ■

# துயர் பகிர்வோம்



## திரு. வேலுப்பிள்ளை தம்பிராஜா

உடுப்பிட்டி வைரவர் கோவிலைப் பிறப்பிடமாகவும், ரொறன்ரோ, கனடாவை வதிவிட-மாகக் கொண்டவருமாகிய திரு. வேலுப்பிள்ளை தம்பிராஜா அவர்கள் யூலை மாதம், 21ந் திகதி, திங்கட்கிழமை கனடாவில் சிவபதமடைந்தார்.

அன்னார் காலஞ் சென்றவர்களான வேலுப்பிள்ளை-சின்னத்தங்கம் தம்பதிகளின் அன்பு மகனும், காலஞ் சென்றவர்களான அருணாசலம்-செல்லாச்சிப்பிள்ளை தம்பதிகளின் மூத்த மருமகனும், இரத்தினம் என அழைக்கப்படும் பத்மாசனி அவர்களின் அன்புக் கணவரும், கனடாவில் வசிப்பவர்களான அரியமலர், நடராஜா, கிருபாநிதி, விசாகராஜா, சற்குணராஜா, சாந்தகுணராஜா, தபோநிதி, பிருந்தா மற்றும் சுந்தர்ராஜ் (Boston-U.S.A) ஆகியோரின் பாசமிகு தந்தையும், கனடாவில் வசிப்பவர்களான சொர்ணலிங்கம், பாமதி, கணேசலிங்கம், கலாநிதி, பாரதி, சுபத்திரா, குணசேகரன் மற்றும் தாரணி (Boston-U.S.A) ஆகியோரின் அன்பு மாமனாரும், உடுப்பிட்டியைச் சேர்ந்த காலஞ் சென்ற நாகரத்தினம் அவர்களின் அன்புச் சகோதரருமாவார்.

இரத்தினம் (416) 490-0479, நடா (416) 837-2834, சற்குணம் (416) 893-2624



## திருமதி. அந்தோனிமுத்து மரியம்மா

(மனோன்மணி)

குப்பிளானை பிறப்பிடமாகவும், சில்லாலையை வதிவிடமாகவும், கனடா ஸ்காபுறோவில் தற்போது வசித்து வந்தவருமாகிய திருமதி அந்தோனிமுத்து மரியம்மா அவர்கள் 21.07.2008 திங்கட்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்ற சூசைப்பிள்ளை அந்தோனிமுத்துவின் அன்பு மனைவியும், காரைநகர் களபூமியைச் சேர்ந்த வர்த்தகர் காலஞ்சென்றவர்களான சிதம்பரப்பிள்ளை அன்னம்மா தம்பதிகளின் மூத்த மகளும், செல்வராஜா ஜேசுதாசன்,லூக்காஸ் இரட்னம் (இந்தியா), மேரி கமலா, மோசஸ் ஞானப்பிரகாசம் (பிரான்ஸ்), அலோசியஸ் (ஜேர்மனி), மரியகொரற்றி, தாய்வீடு பத்திரிகையின் கட்டுரையாளரும் Royal LePage வீடு விற்பனை முகவருமான ரஞ்சன் பிரான்சிஸ், கிங்ஸ்லி நேசன், ஜேம்ஸ் இராஜன் (ஜேர்மனி) மேரி ஜோசபின் அற்புதம், NEW குவாலிற்றி பேக்கரி அதிபர் ஜெயசீலன் (Kennedy and Ellesmere) ஆகியோரின் பாசமிகு தாயாரும் அந்தோனியாபிள்ளை கமலா, அந்தனி ராகல், மனோன்மணி (பிரான்ஸ்) எலிசபெத் ஜெயராணி வதனா (ஜேர்மனி), ஜேசு தியாகராஜா, செல்வராணி, அன்னமலர், சந்திரா (ஜேர்மனி), இன்பநாதன், மேரி அருணா ஆகியோரின் மாமியாரும் ஆவார்.

416.816.1220. 905.940.6444, 416.897.7511, 647.273.1802

# புதிய பெயர், புதிய தோற்றம், புதிய குடும்பம் ஏன்?

- சிவா சுப்ரா -
sivasubra@thaiveedu.com

நாற்பத்தி எட்டு மணி நேரம் வேகமாக ஓடி வந்த களைப்பில் ஒரு பெரு மூச்செறிந்து நின்றது அந்த இரயில் வண்டி. பெட்டி, படுக்கைகளுடன் பிரயாணிகள் எல்லாம் ஒரு வேகத்துடன் இறங்கி நடந்தனர்.

ஒரு இரயில் பெட்டியில் இருந்து வயது 30 மதிக்கத்தக்க மனிதன் மட்டும் மிக மெது வாக இறங்கினான். வெள்ளை நிறச் சட்டையும், கறுப்பு நிற கால்ச்சட்டையும், சப்பாத்தும் அணிந்திருந்தான். அவனைப் பார்ப்பதற்கு ஒரு மத்தியதர குடும்பத்தைச் சேர்ந்தவன் போல் இருந்தது. ஆனால் அவனுடைய முகத்தில் ஏதோ இனம் புரியாத குழப்பம் தெரிந்தது.

இரயில் நிலையத்தை விட்டு வெளியே வந்தவன் வெகு நேரமாக யோசித்தான். தன்னுடைய காற்சட்டைப்பையை துருவித் துருவி எதையோ தேடினான். அதற்குள் சில டொலர் நோட்டுகள் தான் இருந்தது. உதட்டைப் பிதுக்கிக் கொண்டான். அவன் குறிப்பாகத் தேடியது அவனுக்குக் கிடைக்கவில்லை என்று அவனுடைய முகம் கூறியது.

பின்னர் மிகுந்த யோசனையுடன் தெருவில் நடந்தான். பசிக்குமாப் போல் இருந்தது. ஒரு சிறிய உணவகத்திற்குள் சென்று உணவருந்தினான். தற்செயலாக அவனுடைய கண்களுக்கு 'வேலைக்கு ஆட்கள் தேவை' என்ற அறிவித்தல் தட்டுப்பட்டது.

சாப்பிட்டு முடித்து பில்லுக்குப் பணம் கொடுக்கும் போது அந்தப் பெண்மணியிடம், அந்த வேலைக்கு தான் விண்ணப்பிக்க விரும்புவதாகக் கூறினான்.

கிளாரா என்று தன்னை அறிமுகப்படுத்திய அந்தப் பெண் இவனுடைய பெயரைக் கேட்டாள். உடனே இவன் ஏனோ தடுமாறிப் போனாலும், சில கணங்களிலேயே சமாளித்துக் கொண்டு ஜோன் என்று கூறினான்.

"ஜோன் கொஞ்ச நேரம் தாமதியுங்கள். நான் உள்ளே சென்று இந்த உணவகத்தின் முதலாளியிடம் தெரிவிக்கின்றேன்." கிளாரா கூறிவிட்டு உள்ளே சென்றாள்.

சில நிமிடங்களில் பருத்த, வயதான பெண்மணி ஜோனிடம் வந்தாள். ஜோனை நம்பிக்கை இல்லாமல் ஏறிட்டுப்பார்த்தவள், உள்ளே அழைத்துச் சென்றாள்.

இங்கு வேலை செய்ய விருப்பமா என்று அந்த உணவகத்தின் முதலாளி தமரா கேட்டாள். தனக்கு உடனடியாக வேலை வேண்டும் எந்த வேலையும் செய்யத்தயார் என்று ஜோன் கூறினான்.

விறகு கொத்தும் வேலைக்குத்தான் உடனடியாக ஆள் தேவை, அது கடினமான வேலை, ஆனால் நல்ல சம்பளம் தரப்படும் என்று தமரா கூறிய போது ஜோன் தனக்கு அதில் நல்ல அனுபவம் உள்ளது என்று கூறி அந்த வேலையைப் பெற்றுக் கொண்டான்.

உடனடியாக ஜோனை வேலை செய்யும் படி தமரா கூறினாள். வெகு உற்சாகமாக ஜோன் விறகுகளைக் கொத்திப் போட்டான்.

ஜோனின் வேலை தனக்குப் பிடித்துப் போய் விட்டதாக அன்று மாலை தமரா சந்தோசமாகக் கூறினாள்.

தங்குவதற்கு வேறு இடம் இல்லாதபடியால், இரயில் நிலையத்தில் இரவு படுத்துத் தூங்கி விட்டுக் காலையில் வேலைக்கு வந்து விடுவான் ஜோன்.

ஒழுங்காக வேலை செய்தான் ஜோன். தன்னுடைய வேலை போக தமராவுக்கும் உணவு தயாரிக்க ஒத்தாசை செய்தான். கிளாராவுக்கும் ஜோனைப் பிடித்துப் போயிற்று.

சில தினங்களுக்குப் பின்னர் தங்குவதற்கு ஒரு புதிய இடம் தான் தேடுவதாக ஜோன் தமராவிடம் கூறினான். கிளாராவின் வீட்டில் வாடகைக்கு இருந்தவர் காலி செய்து கொண்டு போனபடியால் அந்த இடத்தை கேட்டுப்பார்க்கலாம் எனத் தமரா கூறினாள். கிளாராவும் தன்னுடைய வீட்டு அறையை ஜோனுக்கு வாடகைக்கு கொடுக்க சம்மதித்தாள்.

சில நாட்களிலேயே கிளாரா ஜோனுக்கு தன் மனதிலும் இடம் கொடுத்துவிட்டாள். ஜோனும் கிளாராவும் மனம் ஒத்த தம்பதியினராக வாழத்தொடங்கினர்.

பல மாதங்கள் கழிந்தன...

ஒரு நாள் காலை நித்திரை விட்டு எழுந்த ஜோன் திடுக்கிட்டுப் போனான்.

நான் எங்கிருக்கின்றேன்? எப்படி இங்கு வந்தேன்? என்று அதிசயமாய்க் கேட்டான்

"ஏய் டார்லிங்?... என்ன நடந்தது உனக்கு?" என்று கிளாரா சிணுங்கினாள்.

"நீ யார்?" என்று ஜோன் கிளாராவைக் கேட்டான்.

"ஜோன் உனக்கு என்ன பைத்தியமா பிடித்து விட்டது? நான் தான் உன்னுடைய மனைவி கிளாரா". என்று கிளாரா கத்தினாள்.

"இல்லை. நான் ஜோன் இல்லை. என்னுடைய பெயர் ரிச்சாட். என் மனைவியின் பெயர் சில்வானா, மகள் பெயர் செரின்." என்று ஜோன் கூறினான்.

"நான் எப்படி இங்கு வந்தேன்." என்று திரும்பத் திரும்ப கேட்டான்.

இவனுக்கு என்னவோ நடந்து விட்டது என்று கிளாரா அம்புலன்சை அழைத்தாள்.

ஜோனின் உடல், உள நிலைமை எல்லாமே சரியாகத்தான் இருந்தது. ஆனால் அவன் தன்னுடைய பெயரை ஜோன் இல்லை ரிச்சாட் என்றும் தனக்கு கிளாரா, தமரா ஒருவரையும் தெரியாது என்று அடம்பிடித்தான். அவன் விறகு கொத்தும் வேலை செய்கின்றான் என்றதும், சிரித்தான். தான் ஒரு கம்பனியில் கணக்காளராக வேலை செய்வதாயும், விறகு கொத்துகின்ற கஸ்டமான வேலைகளை எல்லாம் தன்னால் செய்ய முடியாது என்று கூறினான்.

ரிச்சாட்டின் விலாசத்தை பொலிசார் கேட்ட போது அந்த விலாசம் ஆயிரம் கிலோ மீற்றருக்கு அப்பால் உள்ள இன்னொரு மாநிலத்தில் இருந்தது. இது எல்லோரையும் ஆச்சரியப்படவைத்தது. ரிச்சாட் திடுக்கிட்டான், ஆயிரம் கிலோ மீற்றரை எப்படித் தான் கடந்து வந்தேன் என்று.

பொலிசார் தொடர்பு கொண்டு விசாரித்தனர். எல்லா உண்மைகளும் வெளிவந்தன.

ரிச்சாட்டின் உண்மையான வசிப்பிடம் இன்னொரு மாநிலத்தில் இருந்தது. ரிச்சாட் தனது கம்பனியில் வேலை செய்து கொண்டிருந்தபோது, மனைவியும், மகளும் விபத்தில் சிக்கி வைத்தியசாலையில் இருப்பதாக செய்தி வந்தது. அதிர்ச்சியடைந்த ரிச்சாட் அவர்களைப் பார்ப்பதற்கு புறப்பட்டான். அதன் பின்னர் எங்கே என்று தெரியாமல் காணாமல் போய்விட்டான். பின்னர் இப்போ இங்கு கண்டுபிடிக்கப்பட்டுள்ளான்.

எப்படி இங்கு வந்தேன்? இந்தப் புதிய இடத்தில் என்னென்ன செய்தேன் என்பது எதுவும் ரிச்சாட்டுக்கு இப்போ நினைவுக்கு வரவில்லை.

ரிச்சாட்டுக்கு என்ன நடந்தது?

ரிச்சாட்டுக்கு வந்தது Dissociaitve Fugue என்ற எதிர்பாராத விதமாக திடாரென ஏற்படுகின்ற ஒரு நிலையாகும். மிக அபூர்வமாகவே இது ஏற்படுகின்றது.

இவர்கள் திடாரென வீட்டை விட்டு ஓடிப் போய்விடுவார்கள். பெரும்பாலும் தமது சொந்த இடத்தை விட்டு பல நூறு கிலோ மீற்றர்கள் பிரயாணம் செய்வார்கள். இவர்களின் மூளையில் பழைய நினைவுகள் எதுவும் இருக்காது. தமது, பெயர், ஊர், மனைவி, குழந்தைகள், பெற்றோர்,உறவினர் என்று எந்த விபரமும் இவர்களின் நினைவுக்கு வராது.

புதிய இடத்தில் தமக்கு ஒரு புதிய பெயரை வைத்துக்கொண்டு, புதிய வேலையைத் தேடிக்கொண்டு வாழ்வார்கள். சமயத்தில் புதுக் குடும்பம் கூட இவர்களுக்கு அமைந்துவிடும்.

பழைய விடயங்கள் எல்லாம் மறந்து விட்டது என்றால் இவர்களுடை மொழி ஆற்றலும் மறந்து போக, மறுபடியும் அ,ஆ, இ என்றா இவர்கள் படிப்பை ஆரம்பிக்க வேண்டுமே? என்ற நியாயமான கேள்வி உங்களுக்கு வரலாம்.

இதில் ஆச்சரியம் என்ன வென்றால் இவர்களுடைய மொழி ஆற்றல் எதுவும் மறந்து போகாது. எத்தனை மொழி தெரிந்திருந்தாலும் அது அவர்களுக்கு தொடர்ந்து பேசவோ, எழுதவோ, வாசிக்கவோ வரும்.

புதிய இடத்தில் இவர்கள் தமக்கு புதிய அடையாளங்களையும் வைத்துக் கொள்வார்கள். தமது பழையதோற்றம் கூட இவர்களுக்கு சில நேரம் பிடிக்காது. முன்பு மீசை வைத்திருந்தவர், 'என்ன இது முகத்தில் காட்டுச் செடி மாதிரி ஒன்று' என்று அதை முற்றாக மழித்தெறிந்து விடலாம்.

சேலையே கட்டி வாழ்ந்த பெண் 'இது சரியான பட்டிக்காடு' என்று தூக்கிப் போட்டுவிட்டு நவநாகரீக உடைக்குத் தாவி விடலாம்.

இந்த Fugue நிலைமையில் உள்ளவரை பார்த்து அவருக்கு இந்த Fugue இருக்கின்றது என்று கண்டுபிடிக்க முடியாது. காரணம் பழைய நினைவுகள் அழிந்து போனதை விட வேறு எந்த குறைபாடும் இவர்களுக்கு இருக்காது. சாதாரண மனிதர்களைப் போலவே இருப்பார்கள், செயற்படுவார்கள்.

இந்த Fugue நிலைமை சில மணி நேரம், சில நாட்கள், சில வாரங்கள், அல்லது சில மாதங்களுக்கும் நீடித்திருக்கக் கூடியது.

யுத்தங்கள் நிகழும் பகுதிகளில் வாழ்பவர்களுக்கு, விபத்தில் சிக்கிக் கொண்டவர்களுக்கு, இயற்கை அழிவுகளுக்குள் அகப்படுபவர்களுக்கு, அல்லது தனிப்பட்ட முறையில் பெரும் கவலைக்கு உள்ளாகின்றவர்களுக்கு இந்த Fugue நிலைமை ஏற்படுகின்றது.

திடீரென ஒரு நாள் இவர்களுக்கு இந்த Fugue நிலைமை போய் பழையன எல்லாமே நினைவுக்கு வந்துவிடும். ஆனால் துரதிஸ்டவசமாக Fugue நிலையின் போது நடந்தது எதுவும் இவர்களுக்கு நினைவுக்கு வராது. அதை நினைவுக்கு கொண்டுவர முயற்சிப்பதாலும், அந்த நாட்களில் நடந்த சம்பவங்களின் விளைவுகளும் இவர்களுக்கு மனச் சிக்கல்களை ஏற்படுத்தலாம்.

கில்லாடிக் கிரிமினல்கள் கொலைகள், பாலியல் வல்லுறவுகளைச் செய்து விட்டு Fugue நிலையிலே தாம் இதைச் செய்ததாக கூறிச் சட்டத்தின் பிடியில் இருந்து தப்பித்துக் கொள்ள முடியுமா?

கனேடிய நீதி மன்றம் இப்படியான வழக்குகளைச் சந்தித்திருக்கிறது. மனோதத்துவ நிபுணர்கள் கில்லாடிக்கு கில்லாடிகள். அவர்களின் கண்களில் மண்ணைத் தூவுவது சரியான கஸ்டம். இந்த கிரிமினல்களுக்கு தண்டனை வாங்கிக் கொடுத்து விட்டுத்தான் அவர்கள் ஓய்ந்தார்கள்.

■ ■ ■

> "யுத்தங்கள் நிகழும் பகுதிகளில் வாழ்பவர்களுக்கு, விபத்தில் சிக்கிக் கொண்டவர்களுக்கு, இயற்கை அழிவுகளுக்குள் அகப்படுபவர்களுக்கு, அல்லது தனிப்பட்ட முறையில் பெரும் கவலைக்கு உள்ளாகின்றவர்களுக்கு இந்த *Fugue* நிலைமை ஏற்படுகின்றது."

*தாய்வீடு பத்திரிகை பற்றிய விமர்சனங்களை எதிர்பார்க்கின்றோம். விமர்சனங்கள் எம்மை ஓர் ஆரோக்கியமான பாதையில் இட்டுச்செல்லும்.*

*E-mail:thaiveedu@gmail.com*
*Fax: 416-849-0594*
*Tel: 416-646-3422*

# CTR தகவல் பலகை

## ROOMS / BASEMENT RENT

**Miss / Brampton**
2 B/R Basement வேண்டும்
Usha 905-501-8420
416-858-5474

**Brimley / Lawrence**
2 B/R Basement Separate entrance
Near all facilities
2 Girls விரும்பத்தக்கது
Jegatheeswary 416-264-9421

**Neilson / Sheppered**
Basement 2/3 B/rooms
Near shops, Parking தனிவழி
Bala 416-281-5298
16-346-6555

**Keele / Rutherford**
2 Room Basement separate Entrance
News Paus
Selvan 416-450-5902

**Mccowan/Eglinton**
Basement 1 B/Room
Amutha 416-438-2941

**Morningside / Sheppard**
Basement
1 B/R
பெண்களுக்கு மட்டும்
Anusha 416-724-7877

**Bramoton / Ellesmere**
2 B/R Basement Vacant
Sri 430-0455

**Morningside / Old finch**
2 B/R Basement
Malar 416-878-4453

**Morningside/Sheppard**
1 B/R Basement
Savarimuthu 416-282-0951
416-570-6920

## HOUSE FOR SALE

**Markham/ Elson**
3 B/R House For Sale
3 Years old
Tharan 416-267-0931

**Hamilton**
1,50,000 (4 B/R)
Selva 416-720-0664

**Mcowan / 16th ave**
4000 Sq. feet- New home for sale
5 B/Room
Rajan 905-591-1151

**Gore / Hwy 7 ( Brampton)**
3 B/R House for Sale
New 3 Years Old
1890 Sq, feet
Bala 416-931-4498
905-792-7576

**Weston / Eglinton**
1,49,000
2 B/R Condo For Sale
Suresh 416-294-9764

**Saree Blouse**
Frocks, Chidithar, Salwar
Rajakumar 416-299-4848
647-896-2297

**A/C**
Aprtற்கு பாவிக்கக்கூடியது
Rajani 416-498-4938

**Daycare**
Neilson /Mcowan
This week discount
Kala 416-438-2941

**Cake making**
Markham/ eglinton
தையல் வேலை -
Thanka 416-266-5006
647-346-4795

**Tution for kids**
Islington/ Finch
(Maths, Science, English)
Leela 647-343-4223

**Leather Jacket**
New / Sofa repair
Rajs647-895-4337

**Chennai Guest House**
Fully furnished
Sinnarajah
905-471-0022

**Walunet, TV/VCR**
$75.00
416-430-0035

## AUTO

**1997 Toyoto Corrolla Dx**
2161cm
Rajan 416-716-2975

CTR
கனடியத் தமிழ் வானொலி
416 264 8798

**1996 Dodye Caravan**
225 Km
$ 1000.00
Sivam 905-294-5538

**1996 Ford windstar**
7 Passenger also
416-388-1549

**1988 Toyoto Corrolla LE.**
$ 250.00
Devan 416-754-4211

**Morningside / Sheppard**
2 Years old
600 Sq.feet
5 B/R Hardwood Floor
Lingam 905-509-7493

**Toyoto Camery**
1994- 260 Km
416-878-4453

**Brimley /Lawrence**
2 B/R Basement,
Separate entrance (தனிவழி)
Near all facilities

Jeya
416-275 0070



# வீடு விற்பனைக்கு எவ்வளவு காலம் எடுக்கும்



அலன் சிவசம்பு
- வீடு விற்பனைப் பிரதிநிதி -
skbales@thaiveedu.com

வீடு விற்பனைக்கு விட்ட பின், அது பல வகையான காரணங்களால் அந்த வீடு உடன் விற்கப்படலாம் அல்லது நாம் எதிர் பார்த்ததை விட கூடிய காலமும் எடுக்கலாம். உதாரணமாக வட்டி வீதம் அதிகமாக இருந்தால் வீடு வாங்குபவர்கள் குறைவாக இருக்கும். ஆகவே விற்பதற்குக் கூடிய காலம் எடுக்கலாம். அப்படியான சில முக்கிய காரணங்களை கீழே ஆராய்வோம்.

### Market Situation

முதலாவதாக Market Situation, அதாவது Marketல் எவ்வளவு வீடுகள் விற்பதற்கு இருக்கின்றது என்பதைப் பொறுத்தது. சில நேரத்தில் நாம் விற்கப்போகும் போது Marketல் வீடுகள் குறைவாக இருக்கலாம். ஆனால் போட்ட பின்பு Market விற்பதற்கு இருக்கும் வீடுகளின் எண்ணிக்கை அதிகரிக்கும் போது வீடு விற்பதற்கான நாட்கள் அதிகரிக்க வாய்ப்புக்கள் உண்டு. அதாவது எம்மால் இப்படியான Marketல் நடக்கும் மாற்றங்களைக் கட்டுப்படுத்த முடியாது.

### Competition

அடுத்ததாக Competition, அதாவது எமது வீட்டைப் போன்று பல வீடுகள் Marketல் வரும் போது, வீடு வாங்குபவர்களுக்கு கூடிய Choice இருக்கும் போது கூடிய காலம் எடுக்கும்.

### வீட்டின் விலை

அத்துடன் வீட்டின் விலை - எது சரியான விலை சந்தையில் விற்கப்பட்டிருக்கும் விலைதான் சரியான விலை. அதாவது உங்களது வீட்டுடன் ஒத்ததான வீடுகள் குறைந்த விலைக்கு விற்கப்படும் போது உங்களது வீடு விற்பதற்கு நாட்கள் எடுக்கும். ஆகவே நாம் விற்கும் விலையை விட சில காரணங்களுக்காக கூடிய விலைக்குப் போகும் போது எமது வீட்டின் விலை அதிகமாக இருந்தால் அது மற்றவர்களின் (Comparable Properties) வீட்டை விற்பதற்கு உதவியாக இருக்குமே தவிர எமது வீடு விற்கப்பட மாட்டாது.




### வாங்குவோரைக் கவரும் வீடு

அடுத்ததாக எமது வீடு எவ்வளவிற்கு மற்றவர்கள் அதாவது, வீடு வாங்குபவர்களின் கண்ணுக்குத் தெரிகின்றது என்பதைப் பொறுத்து வீடு விற்க்கும் நாட்கள் வேறுபடலாம். நாம் ஒரு வீட்டை $500 செலவு செய்து Paint அடிப்பதால் வீட்டை விரைவாக விற்பது மட்டும் அல்லாது, வீட்டின் விலையை அதிகமாக்குவதற்கும் உதவியாக இருக்கும். அத்துடன் நாம் அநேகமாக வீட்டிற்குச் சரியான தளபாடங்களை தெரிவு செய்யாமல் மலிவான தளபாடங்களை வாங்கி போட்டிருக்கும் போது அதாவது வீடு விற்கும் தேவை வரும்போது வாங்குபவர்கள் கண்ணுக்கு அழகாகத் தெரியாது இருப்பது மட்டுமல்லாமல் வீட்டைச் சிறிதாகவும் காட்டலாம். (தளபாடங்கள் பெரிதாக இருந்தால்) ஆகவே சரியான தளபாடங்களை நாம் வீடு வாங்கியவுடன் தெரிவு செய்து அவற்றைச் சரியான இடத்தில் போட்டு வாழ்ந்து வந்தால், நாம் அவ் வீட்டில் வசிக்கும் காலத்தில் சந்தோசமாக இருப்பது மட்டும் அல்லாமல் வீடு விற்க்கும் போதும் இலகுவாக விற்பதோடு கூடிய பணத்திற்கும் கொடுக்கக்கூடியதாக இருக்கும்.

### Financing

அடுத்ததாக நாம் மேலே குறப்பிட்டது போல், Financing ஒரு முக்கிய இடத்தைப் பிடிக்கின்றது. கடன் வாங்குவதற்கான செலவு, கடந்த சில ஆண்டுகளாகக் கனடாவில் நாம் விலை குறைந்த வீடு வாங்குவது மட்டும் அல்லாது, வங்கியில் பணம் கடன் பெறுவதற்கான செலவும் குறைவாக இருந்தது. ஆகையால் தான் எம்மில் பலர் எமக்குப் பிடித்த வீட்டை வாங்குவதற்கு உதவியாக இருந்தது. இருப்பினும் நாம் எம்மால் சமாளிக்கக்கூடிய விலைக்கு வீடு வாங்குவது நாம் வேறு இடங்களில் கடன் வாங்காமல் இருப்பதற்கு உதவியாக இருப்பது மட்டும் அன்றி நிம்மதியாக வாழ்வதற்கும் நிட்சயம் உதவியாக இருக்கும்.

ஆகவே மேற்கூறிய காரணங்களே வீடு விற்பதற்கு எவ்வளவு நாட்கள் எடுக்கும் என்பதைத் தீர்மானிக்கும். அதைவிட எல்லாவற்றிற்கும் மேலாக வீட்டைப் பார்வைக்கு விடும் போது, தளபாடங்கள், Paintகள் சரியாக இருப்பது மட்டுமல்லாது வீடு மிகவும் சுத்தமாக இருத்தல் அவசியம். அதுவும் வீட்டின் ஒவ்வொரு அறையும் தினமும் சுத்தம் செய்யப்பட்டு சுத்தமாக இருப்பது அவசியமாகும். இப்படியான சில சிறிய காரணங்கள் உங்கள் வீட்டின் விலையைக் குறைப்பது மட்டுமல்லாமல் விற்பதற்கான நாட்களையும் அதிகரிக்கும். ஆகவே நாம் வீடு விற்பதற்கு, வீடு விற்கும் பிரதிநிதியுடன் மாத்திரம் தங்கி இருக்காது எம்மால் முடிந்தவரை வீட்டை சுத்தமாக வைத்திருப்பது அவசியமாகும். நாங்கள் சில வேளைகளில் வீடு விற்கும் பிரதிநிதியில் முழுப் பழியையும் போடுவது வழக்கம். இருந்தாலும் அதனால் நட்டப்படுவது வீட்டு உரிமையாளர்களாகிய நாங்கள் தான். ஆகவே எவ்வளவிற்கு நாம் எமது களைப்பைப் பாராது வீடு விற்பனை முகவருடன் சேர்ந்து செயல்படுகின்றோமோ அந்தளவிற்குப் பயன் கிடைப்பதற்கு வாய்ப்பு நிச்சயமாக உண்டு.

■ ■ ■

N.K.S
Drapery & Blinds Fabric LTD



திறமையான சேவையால் பல விருதுகளை பெற்ற நிறுவனம்

உங்கள் வீட்டுக்குனுத் தேவையான சகலவித யன்னல் திரை வகைகளையும், கேட்டின் துணி வகைகளையும் மிகவும் மலிவான விலையில் பெற்றுக் கொள்ள அழையுங்கள்.

கேதா நடராஜா
416.321.6420

Ketha Nadarajah
(President)
Tel: 416.321.6420, 905.944.0218
Fax: 416.321.2217
www.nksdrapery.ca

Drapery & Blinds Fabric Ltd., 210 Silver Star Blvd., Unit #825, Scarborough, ON M1V 5J9

வீடு வாங்க விற்க




Sutton

Alen Sivasambu
Sales Representative



Please Call Alen :
905-822-5000
Fax: 905-822-5617

alen@sutton.com

# எஸ்.பி. இம்போட்டஸ் நிறுவனத்தின் 2008ம் ஆண்டு நடைபாதை மலிவு விற்பனையும், கண்காட்சியும்

எஸ்.பி. இம்போட்டஸ் நிறுவனத்தினரால் August 2ஆம், 3ஆம், 4ஆம் திகதிகளில் மிகப் பிரமாண்டமான முறையில் ஒவ்வொரு வருடமும் நடைபெறுவது போல் இவ்வருடமும் நடைபெற்ற நடைபாதை மலிவு விற்பனையில் பெருந்திரளான வாடிக்கையாளர்கள் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.

ஸ்தாபனத்திற்கு முன்பாக பந்தல் அமைக்கப்பட்டு அதற்குள் தளபாடங்களும், பலசரக்குப் பொருட்களும் நிறைக்கப்பட்டு விற்பனை நடைபெற்றது.

வாடிக்கையாளர்கள் காலை முதல் இரவு 11 மணி வரை பொருட்களை கொள்வனவு செய்வதில் முனைப்புடன் ஈடுபட்டிருந்தனர்.

மாலை வேளைகளில் இலவச BBQ வழங்கி வாடிக்கையாளர்களை எஸ்.பி. இம்போட்டஸ் நிறுவனத்தினர் மகிழ்ச்சிப்படுத்தினர். சுறுசுறுப்பாக இருந்த இந்நாட்களில் C.T.R., CMR, Tamil Star வானொலிகளும், T.V.யும் தமது நேரடி ஒலிபரப்புகளை அங்கிருந்து வழங்கியிருந்தது.

மற்றும் அங்கு கொள்வனவு செய்த வாடிக்கையாளர்களின் விபரங்கள் பதியப்பட்டு, திங்கள் மாலை குலுக்கல் முறையில் 3 பேர் முதல் பரிசைப் பெறுபவர்களாகவும், 10பேர் ஆறுதல் பரிசுகளைப் பெறுபவர்களாகவும் வாடிக்கையாளர்கள் தெரிவு செய்யப்பட்டனர்.

முதற் பரிசான Picnic Tableஐ பெறும் 3 அதிஷ்டசாலிகள்

1. Shanthadevi (416-269-****)
2. S. Priyatharsini (416-850-****)
3. Kala (416-609-****)

ஆறுதல் பரிசில்களுக்குரிய 10 அதிஷ்டசாலிகள்

1. Varathan (416-286-****)
2. Geetha (416-824-***)
3. Ravithran (416-724-****)
4. S.Thila (514-333-5****)
5. Rajaratnam (416551-****)
6. Vibena (905-751-****)
7. Pratheepan (416-505-****)
8. Kanjana (905-492-****)
9. Jejnthy (416-297-****)
10. Uthayamala (416-332-****)

அன்றைய தினங்களில் முதல் முறையாக சிவாஜி, பில்லா படுக்கையறைத் தளபாடங்களும், புது டிசைன்களில் Sofa setகளும் இவ்விற்பனையில் அறிமுகப்படுத்தப்பட்டிருந்தமையும் இங்கே குறிப்பிட்டுக் கூறலாம்.

மொத்தத்தில் எல்லோர் மனங்களிலும் எஸ்.பி.இம்போட்டஸ் ஸ்தாபனத்தினர் நிறைந்திருந்ததுடன், வாடிக்கையாளர்கள் மகிழ்ச்சியும், திருப்தியும் அடைந்திருந்தனர் எனலாம்.

எஸ்.பி. இம்போட்டஸ் நிறுவனத்தின் 2008ம் ஆண்டு நடைபாதை மலிவு விற்பனை மற்றும் கண்காட்சியின்போது எமது நிருபர் எடுத்த படங்கள் சில...



















வாழ்வோம்.... வளர்வோம்.... வாழ வைப்போம்.......!


Indran Sweets & Catering
Specializing in South Indian and Sri Inakan Sweets, Snacks, Mixer and Pakoda, We do wholesale and Party Packages
80 Nashdene Rd, Unit# C56,C57 & C58, Scarborough,ON M1V 5V4
Tel:416-321-7552 Cell: 416-725-2543
SMI
STANDARD MORTGAGES INC.
Residential & Commercial
Raj S
Broker / Director
416.993.2638
உங்கள் கனவு இல்லத்தை நனவாக்கிட நம்பிகையுடன் சேவை செய்யும் ஒரு தமிழர் நிறுவனம்
80 Corporate Drive, Suite #307, Toronto, ON M1H 3G5
FULL TIME REALTORS
Century 21
PUNCH SOCKALINGAM
416-PUNCH ME
416.564.9642
www.tamilcarnival.com
AUG 09 SAT
AUG 10 SUN
MARKHAM FAIR GROUNDS
10801 McCowan Road
McCOWAN / ELGINMILLS
Helicopter Ride
காதல் வைரஸ் from UK
MOST WANTED SINGERS
Video by tamil one
Live on TamilOne TV
TAMIL CARNIVAL 2008
GUINNESS WORLD RECORD ATTEMPT
LONGEST MARATHON PLAYING GUITAR
FOR Over 55 HOURS
By Suresh Joachim
Start: 8th August 2008 at 12:00 noon
Finished: 10th August 2008 at 7.30 pm
Little Empire
Model Car Competition
you can bring your own model car.
Call us early
DJ Doublem
DJ KUMAR
JUDGEMENT DAY
SOUNDCREW
LLS
Live Animals
digi Media creations
Tickets Available @
Scarborough
Ocean Super Market (Markham/McNicole)
Video Express (Bellamy/Eglinton)
Chankanai Santhai (Kennedy/Steeles)
Era CD Market (Midland/Eglinton)
Shankar & Co (Kennedy/Eglinton)
New Shankar & Co (Kennedy/Eglinton)
Saravanas Market Inc. (Markam/Ellesmere)
Lucky Grocery (McCowan/Sheppard)
Sri & Brothers (Lawrence/Victoria Park)
Kumar Video (Markham/Sheppard)
New SpiceLand (Markham/Sheppard)
Elanthulir Video (Warden/Finch)
Daily Needs Super Market (Pharmacy/Finch)
Scarborough
Photo Fast (Lawrence/Warden)
Manikanndan Takeout (Ellesmere/Morningside)
North York
Pravin Video (Jane/Finch)
Mississauga
Vijaya Silk (Hwy 10 & Dundas)
New Seematy Silk (Dixie & Bloor)
Brampton
Colombia Video (Kennedy/Steeles)
Markham
Markham Video (Markham/Denison)
Nevekka Garments (Brimley/Steeles)
Etobicoke
Uthayas Super Market (Steeles/Kipling)
Downtown
Kana Super Market (Jameson/Queen)
Nerosy Super Market (Lansdown/Bloor)
Ramy Video (Wellesley/Parliament)
Maple
Maple Groceries (Jane/Rutherford)
FREE for Birthday Person (Photo ID Required)
FREE for Out of Ontario People (Before 1:00 pm, Photo ID Required)
FREE for Under 8 years old Kids
$5.00 Seniors and Kids All day
ADVANCE TICKETS $5.00
DOOR PRICE $10.00

# குழந்தைகளை கருவிலே தாக்கும் Fragile X Syndrome

ராஜ்மோகன் செல்லையா
- ஈட்டுக்கடன் பிரதிநிதி -
rmohan@thaiveedu.com



விஞ்ஞான வளர்ச்சியின் சிகரங்களை தொட்டுக் கொண்டிருக்கும் இந்த நூற்றாண்டில் மனிதக் கட்டமைப்பின் அடிப்படை அலகான DNA பற்றிய விரிவான கண்டுபிடிப்புகள் மனித வாழ்வியலில் ஒரு முக்கிய மைல்கல்லாக கருதப்படுகின்றது.

கிட்டத்தட்ட 98 சதவீதத்திற்கும் மேலான மனித DNA கட்டமைப்புகள் இதுவரை வகைப்படுத்தப்பட்டுள்ள போதும் அவை ஒவ்வொன்றும் எவ்வகையான புரதங்களைச் சுரக்கின்றன அவற்றின் முழுமையான தொழிற்பாடு என்ன என்பது பற்றி தொடர்ந்தும் ஆராய்ச்சிகள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன.

ஒரு மனிதனை பிரதிபண்ணக்கூடிய அளவிற்கு முன்னேறியுள்ள இந்த DNA ஆராய்ச்சிகள் மனித குலத்திற்கு பலவகையான நன்மைகளை வழங்கியிருக்கின்றன. முக்கியமாக பரம்பரை பரம்பரையாக கடத்தப்படும் நோய்களை (Hereditary diseases) தவிர்த்தல் மற்றும் புதிய நோய்களுக்கான காரணங்களை கண்டறிந்து அவற்றை இல்லாது பண்ணுதல் போன்ற பலவற்றைக் குறிப்பிடலாம்.

இவ்வகையான ஒரு கண்டுபிடிப்பின் மிக முக்கியத்துவம் வாய்ந்த விடயம் தான் Fragile X Syndrome எனப்படுகின்ற குழந்தைகளை தாயின் கருவிலே தாக்கும் ஒரு குறைபாட்டு நோயாகும். தாய் அல்லது தந்தையிடம் இருந்து குழந்தைக்கு DNA மூலம் நேரடியாக கடத்தப்படும் இக் குறைபாட்டு நோயின் தாக்கம் குழந்தைகளின் கருவிலேயே ஆரம்பிக்கப்பட்டு படிப்படியாக அக்குழந்தைகளை disable (Develop-mental disabilities) குழந்தைகளாக்கிவிடும். இப்படி எம்மை அறியாமலே குழந்தைகளை கருவிலே தாக்கும் இந்த Fragile X Syndrome பற்றி அறிவதற்கு முன்னர் DNA பற்றிய சில அடிப்படைத் தகவல்களைப் பார்ப்போம்.

## DNAஇன் அடிப்படைத் தகவல்கள்:

மனித உடல் 100 trillionக்கும் மேலான கலன்களினால் (cells) உருவாக்கப்பட்டுள்ளது. ஒவ்வொரு கலத்தினுள்ளும் கரு அமைந்திருக்கும். இந்தக் கருவிலே அமைந்திருக்கும் நிறமூர்த்தங்கள் (Chromosomes) ஒவ்வொரு மனிதர்களது Genetic கட்டுப்பாட்டு தகவல் மையமாக செயல்படும். இந்த நிறமூர்த்தங்களுக்குள்ளே geneகளும் அதன் உள்ளே புரதத்தை சுரக்கும் DNAகளும் அமைந்திருக்கின்றன. (படம் 1 இதை சிறப்பாக விளக்குகின்றது)

அனேகமான மனிதர்களின் ஒவ்வொரு கலத்தினுள்ளும் 46 வகையான நிறமூர்த்தங்கள் உள்ளன. இவற்றில் 23 வகையான நிறமூர்த்தங்கள் தாயிடம் இருந்தும் அடுத்த 23 வகையான நிறமூர்த்தங்கள் தந்தையிடம் இருந்தும் பெறப்பட்டவையாக இருக்கும். அத்துடன் இவையாவும் 23 சோடி நிறமூர்த்தங்களாக இணைந்து காணப்படும்.

இந்த 23 சோடி நிறமூர்த்தங்களில் 23 வது சோடி நிறமூர்த்தம் Sex chromosomes என்று அழைக்கப்படுகின்றது. ஏனெனில், இந்த நிறமூர்த்தமே இனப்பெருக்கத்தின் போது குழந்தையின் Sexஐ தீர்மானம் செய்யும் நிறமூர்த்தமாக செயல்படுகின்றது.
தாயின் 23வது சோடி நிறமூர்த்தத்திலே இரண்டு XX என்ற நிறமூர்த்த அலகும் தந்தையில் XY என்ற நிறமூர்த்த அலகும் அமையப்பெற்றிருக்கின்றன. கருவிலே வளரும் குழந்தை ஆணா அல்லது பெண்ணா என்ற தீர்மானம் இந்த 4 வகையான நிறமூர்த்த அலகுகளின் நிகழ்தகவுச் சேர்க்கையினாலேயே முடிவு செய்யப்படுகின்றது. இந்த அடிப்படை விடயங்களுடன் இனி Fragile X Syndrome பற்றிப் பார்ப்போம்.

> **“ Disabilityஆன குழந்தைகள் உருவாகுவதற்கு நிறமூர்த்தங்களில் உள்ள Fragile X தான் காரணம் என்பதை பலரும் அறிந்திருக்கமாட்டீர்கள். அத்துடன் அதிகரித்துவரும் இந்த Fragile X Syndromeதின் தாக்கம் மருத்துவ விஞ்ஞானிகளுக்கு மிகப் பெரிய சவாலாக இருக்கின்றது. ”**

## Fragile X Syndrome என்றால் என்ன:

மேலே குறிப்பிட்டுள்ள Sex நிறமூர்த்த சோடிகளில் இருக்கும் X வகையான நிறமூர்த்த அலகில் உள்ள FMR1 என்கின்ற geneஇல் ஏற்படும் ஒரு தாக்கம் அல்லது குறைபாடே Fragile X Syndrome என்று அழைக்கப்படுகின்றது.
இதைச் சற்று விளக்கமாக பார்த்தால் FMR1 gene மனித கலத்திற்கு தேவையான Fragile X Mental Retardation Protein (FMRP)என்கின்ற புரதத்தை சரியானஅளவில் சுரக்காத காரணத்தினாலேயே இது ஏற்படுவதாக மருத்துவ விஞ்ஞானிகள் கண்டுபிடித்துள்ளார்கள். அத்துடன் இந்த FMRP என்கின்ற புரதம் மூளை மற்றும் உடல் வளர்ச்சிகளுக்கு மிகவும் முக்கியமானதாக இருப்பதாலும் இதன் தாக்கம் மனிதர்களிடையே அதிகரித்து வருவதாலும் இது பற்றிய ஆராய்ச்சிகள் இன்றையை காலகட்டத்தில் மேலும் முனைப்புப் பெற்றுள்ளன.

X நிறமூர்த்த அலகில் உள்ள இந்த FMR1 geneஇல் இடம்பெறும் புரதத் தயாரிப்பு செயல்பாட்டில் ஏற்படும் மாறுதலாலே இந்த FMRP என்கின்ற புரதம் சுரக்கும் அளவு பாதிப்படைகின்றது. ஒரு சாதாரண FMR1 geneஇல் உள்ள DNAகளில் 3 வகையான அடிப்படை அலகுகள் (Cytosine, Guanine, Guanine) பிணைந்து பிரதியீடு செய்யப்பட்டுக் காணப்படுகின்றன. இவ்வகை அலகுகளை CGG Repeats என்று அழைப்பார்கள். இந்த CGG அடிப்படை அலகுகள் சாதாரண X நிறமூர்த்தங்களில் குறிப்பிட்ட அளவில் (6க்கும் 44க்கும் இடையே) பிரதியீடு செய்யப்பட்டுக் காணப்படும்.




FMR1 geneஇல் இருக்கும் இந்த CGG Repeats சந்ததிகளுக்கு சந்ததி கடத்தப்படும் போது பிரதியீடு (copy) செய்யும் அளவு அசாதாரணமாக அதிகரிக்கின்றது. இந்த பிரதியீட்டின் காரணமாகவே FMRP என்கின்ற புரதம் சுரக்கும் அளவு பாதிப்படைந்து Fragile X Syndromeதை உருவாக்குகின்றது.

ஒரு சாதாரண மனிதனில் உள்ள FMR1 geneகளில் CGG repeats 6-44 வரை பிரதியீடு செய்யப்பட்டிருக்கும். இந்த அளவு ஒரு ஆரோக்கியமான பிரதியீடு அளவாக கணிப்பிடப்பட்டுள்ளது. ஆனால் Fragile X Syndrome உள்ள ஒருவரில் இப் பிரதியீடு 200க்கும் மேற்பட்டதாக காணப்படும்.

அத்துடன் 55-200க்கும் இடையே CGG பிரதியீடு உள்ள மனிதர்களில் அதிக அளவிலான தாக்கத்தை காண முடியாது. ஆனால் இவர்களில் முக்கியமாக பெண்கள் ஒரு காவியாக செயல்பட்டு அடுத்த சந்ததிக்கு அதிகளவு பிரதியீட்டை கொடுப்பார்கள்.

45-54க்கும் இடைப்பட்ட பிரதியீடு உள்ளவர்கள் பாதுகாப்பான கட்டத்தில் இருந்தாலும் இவர்களும் காவிகளாக செயல்பட்டு அடுத்த சந்ததியினருக்கு அதிகளவு பிரதியீட்டை கொடுப்பதற்கான சந்தர்ப்பங்கள் அதிகமாக காணப்படுகின்றது.




படம் 1

அத்துடன் மிக முக்கிய விடயம் என்னவென்றால் ஆண்களை விட பெண்களில் இருக்கும் இந்த CGG பிரதியீடே அதிக அளவில் அடுத்த சந்ததிகளுக்கு பிரதியீடு செய்யப்படுவதாகவும் கண்டறியப்பட்டுள்ளது. எனவே பெண்களே இதன் முக்கிய காவிகளாக செயற்படுகின்றார்கள்.

## எத்தனை பேர் இதனால் பாதிப்படைந்துள்ளார்கள்:

அண்மைக்கால ஆய்வின்படி 1:2000 ஆண்களும் 1:4000 பெண்களும் இதனால் பாதிப் படைந்திருப்பதாக தெரிவிக்கப்பட்டிருக்கின்-

72ம் பக்கம் பார்க்க...


RAVI
INCOME TAX
SERVICE

- LAST 14 YEARS IN TAX SERVICES
- PERSONAL INCOME TAX
- CORPORATE INCOME TAX
- SMALL BUSINESS TAX
- GST/PST AND PAYROLL REMITTANCE
- E.FILE SERVICES
- YEAR ROUND SERVICES

MORE INFO PLEASE CALL
RAVI PARAMU
416-262-4176

HOMELIFE HIGHER STANDARDS

Ravi Paramu
Sales Representative
416•262•4176
rparamu@hotmail.com
www.raviparamu.com
Bus: 416-298-3200
HomeLife/Today Realty Inc., Brokerage*
31 Progress Ave., Suite 210, Toronto, ON, M1P 4S6



# குழந்தைகளை கரு...


71ம் பக்கத் தொடர்ச்சி...

றது. ஆனால் இது வருடாவருடம் சந்ததிகளுக்கு இடையே அதிகரித்து வருவதாகவும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. Fragile X Syndrome பற்றிய தகவல்கள் பலராலும் அறியப்படாத காரணத்தால் இது பற்றிய சோதனைகளை அநேகர் மேற்கொள்வதில்லை. இது பற்றிய தெளிவு ஏற்படும்போது பாதிப்படைந்தவர்களின் கணக்கீடு அதிகரிக்கும் என்றும் கூறப்பட்டுள்ளது.

## இது எப்படி அடுத்த சந்ததிக்கு கடத்தப்படுகின்றது:

(படம் 2 இதை சிறப்பாக விளக்குகின்றது)

**Affected Mother and unaffected Father:**




படம் 2

Source: www.FRAXA.org

**Affected Father and unaffected mother:**

| | Father(XY) | |
|---|---|---|
| | Y | X Fragile |
| Mother (XX) | | |
| X | Boy XY | GirlXX Fragile |
| X | Boy XY | GirlXX Fragile |

இதன்படி தாயிடம் இருக்கும் Fragile X ஒரு ஆண் குழந்தைக்கோ அல்லது ஒரு பெண் குழந்தைக்கோ கடத்தப்படுவதற்கான சந்தர்ப்பங்கள் 50க்கு50 ஆக காணப்படுகின்றது. இது எவ்வகையான நிறமூர்த்தங்கள் ஒன்று சேர்கின்றன என்பதை பொறுத்தே அமையும். இப்படி 50:50 என்ற விகிதாசாரத்தில் கடத்தப்படும் Fragile X Syndrome குழந்தைகளை கருவிலேயே தாக்குவதால் Mental Retardation உள்ள குழந்தைகள் பிறப்பதற்கான பல வாய்ப்புகள் உருவாகின்றன.

## Fragile Xக்குரிய அறிகுறிகள் என்ன?

- Mental impairment – முளையின் பாதிப்பு
- Learning disabilities
- Hyper activity – அதிக சுறுசுறுப்பு
- Anxiety and unstable moods - கோபப்படுதல்
- Autistic behaviors
- Long Face, Large ears and flat feet
- Hyper extensible Joints-fingers
- Seizures – வலிகள்
- Self abuse (Self biting, Starching head banging)

> **"*Fragile X* பரம்பரை பரம்பரையாக சந்ததிகளுக்கிடையே கடத்தப்படுகின்றது. இதன் முக்கிய காவிகளாக பெண்களே விளங்குகின்றார்கள். நீங்கள் ஒரு *Fragile X Syndrome* காவியா என்பதை தெரிந்து வைப்பதன் மூலம் ஒரு ஆரோக்கியமான சந்ததியை உருவாக்க முடியும்."**

- Very low logical thinking skills
- Delayed speech and Language skills
- Serious Sensory issues - தொடுகை உணர்வு

இப்படிப் பல வகையான அறிகுறிகளை குறிப்பிட்டாலும் ஒருசில துறைகளில் இதனால் பாதிப்படைந்தோர் மிகவும் கெட்டிக்காரர்களாகவும் விளங்குவார்கள்.

## Fragile X Syndrome நம்மில் இருப்பதை அல்லது நாம் ஒரு காவியா என்பதை எப்படி அறிந்து கொள்ள முடியும்

DNA அடிப்படையிலான பரிசோதனை மூலம் Fragile X Syndromeஐ உறுதி செய்து கொள்ள முடியும். உங்கள் குடும்ப மருத்துவரை அணுகி உங்கள் இரத்தத்தை அல்லது கலத்தை பரிசோதித்துக் கொள்வதன் மூலம் இது பற்றிய நிலைமையை சரியாக அறிந்து கொள்ள முடியும். இந்த பரிசோதனை எல்லோரையும் பொறுத்தவரை ஒரு ஆரோக்கியமான விடயமாக இருப்பதோடு மட்டுமல்லாது பல முன் எச்சரிக்கையான நடவடிக்கைகளையும் எடுக்க முடியும். எனவே மருத்துவரிடம் இது பற்றிய பூரண விபரங்களை அறிந்து கொள்ளுங்கள்.

## இதன் பாதிப்பில் இருந்து விடுபட ஏதாவது மருந்துகள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளதா:

இன்றைய நிலையில் Fragile X Syndromeக்கு நேரடியான மருந்துகள் எதுவும் கண்டுபிடிக்கப்படவில்லை. ஆனாலும் ஒருசில வகையான மருந்துகள் மருத்துவ சந்தையில் கிடைக்கப்பெற்றாலும் அவை ஒரு தற்காலிக பலனைக் கொடுப்பதாக மட்டுமே காணப்படுகின்றன. உங்கள் மருத்துவரின் அனுமதியுடனேயே இவ்வகையான மருந்துகள் உபயோகிக்க வேண்டும். ஏனெனில் இவ்வகை மருந்துகள் பக்க விளைவுகள் பலவற்றை ஏற்படுத்திவிடும்.

ஒரு குழந்தையின் கருக்கட்டலில் Folic acid இன் உபயோகம் மிகவும் அத்தியாவசியமானதாக அறியப்பட்டுள்ள போதிலும் Fragile X Syndromeக்கும் Folic acidக்குமிடையிலான தொடர்பு இன்னும் சரியாக அறியப்படவில்லை.

இதேவேளை பரம்பரை பரம்பரையாக உக்கிரமாக அதிகரித்து வரும் இதன் தாக்கத்தினால் ஒரு இருண்ட சமுதாயம் உருவாகிவிடும் என்ற காரணத்தினால் மருத்துவ விஞ்ஞானிகளின் முழுக்கவனமும் இன்று இதன் பக்கமே திரும்பியுள்ளது.

Gene therapy, Protein replacement, Protein substitute through medication போன்ற பல வழிகளில் இதனை தவிர்க்கலாம் என நம்பிக்கை வெளியிட்டுள்ள விஞ்ஞானிகள் ஏற்கனவே Fragile X Syndromeதினால் பாதிப்படைந்தவர்களுக்கான வழிமுறைகள் எதனையும் வெளியிடவில்லை.

ஆனால் ஏற்கனவே பாதிப்படைந்துள்ளவர்களில் உள்ள Fragile Xஇன் தாக்கத்தை கட்டுப்படுத்துவதற்கு இவர்கள் பலவகையான வழிமுறைகளை வெளிப்படுத்தியுள்ளார்கள். அதாவது அவர்களுக்குரிய சிறப்பு கல்வி முறைகள் (Individualized Education plane), Therapeutic option (behavioral/ physical/speech/occupational Therapy) மற்றும் சிலMedication options போன்றவைகளை குறிப்பிடலாம்.

அத்துடன் இதில் உள்ள முக்கியமான விடயம் என்னவென்றால், எவ்வளவு விரைவாக Fragile Xஇனால் பாதிப்படைந்தவர்களை கண்டுபிடிக்கின்றோமோ அவ்வளவு விரைவாக மேற்குறிப்பிட்ட வழிகளில் பாதிப்படைந்தவர்களை முன்னேற்றி விட முடியும்.

## உறவினர் ஒருவருக்கு Fragile X Syndrome இருந்தால் நான் என்ன செய்ய வேண்டும்:

உங்கள் உறவினர் ஒருவருக்கு (குழந்தையாக இருக்கலாம் அல்லது பெரியவராக இருக்கலாம்). Fragile X பாதிப்பு இருந்தால் நீங்கள் முதலில் இதற்குரிய பரிசோதனை செய்து நீங்கள் காவியாக இருக்கின்றீர்களா என்று அறிந்து கொள்ளுங்கள். அத்துடன் இது பற்றிய சரியான தகவல்களை சம்பந்தப்பட்டவர்களுக்கு கொடுக்க முன்வாருங்கள்.

## Fragile Xஐ உறுதிப்படுத்துவதற்கு எவ்வளவு பரிசோதனைகள் மேற்கொள்ளப் படுகின்றன?

**DNA Molecular tests:**

இது FMRI geneஇல் உள்ள CGG repeatsகளை கணக்கெடுப்பதாகும்.

**Chromosome Tests:**

இது எங்காவது விடுபட்ட நிறமூர்த்த பகுதிகள் இருக்கின்றதா என்று அறிதல்.

**Protein Test:**

இது FMR1 geneகளில் சுரக்கும் FMRPஇன் அளவை கணிப்பிடும் முறையாகும்.

## Fragile X காவியாக உள்ள கருவுற்ற பெண்கள் என்ன செய்ய வேண்டும்.

Fragile X Syndrome தம் குழந்தைகளுக்கு கடத்தப்படுவதற்கான சந்தர்ப்பங்கள் (காவிகள்) அதிகம் உள்ள கருவுற்ற பெண்கள் மருத்துவருடன் தொடர்பு கொண்டு விசேட பரிசோதனை மூலம் குழந்தைகளுக்கு இது கடத்தப்பட்டுள்ளதா என்று அறிந்துகொள்ளலாம். ஒரு குறிப்பிட்ட காலத்திற்குள் கருவில் உள்ள குழந்தையைச் சூழவுள்ள திரவத்தை (Amniotic fluid) எடுத்து amniocentesis எனப்படுகின்ற பரிசோதனை மூலம் குழந்தையின் நிறமூர்த்தங்கள் ஆராயப்பட்டு அறியப்படுகின்றன.

மேலும் பல வழிமுறைகளில் நடைபெறுகின்ற இவ்வகை பரிசோதனைகளால் Miscarriage என அழைக்கப்படும் கரு அழிவு ஏற்படுவதற்கான சந்தர்ப்பங்கள் சிலருக்கு இருப்பதாக மருத்துவர்கள் சுட்டிக்காட்டுகின்றபோதும் இது ஒரு அத்தியாவசியமான பரிசோதனையாக கருதப்படுகின்றது. இது பற்றிய மேலதிக தகவல்கனை உங்கள் மருத்துவர் மூலம் தெரிந்துகொள்ளுங்கள்.

இப்படி எம்மை அறியாமலே எம்மை காவிகளாக பயன்படுத்தி குழந்தைகளை கருவிலேயே பாதிப்படைய வைக்கும் Fragile X Syndrome பற்றிய முழுமையான தகவல்களை தெரிந்திருப்பது இன்றைய கால கட்டத்தில் அத்தியாவசியமானதொன்றாக இருக்கின்றது. இது எமக்கு ஒரு முன்னெச்சரிக்கையாக மட்டும் இல்லாமல் ஒரு ஆரோக்கியமான சமுதாயத்தின் அத்திவாரமாகவும் விளங்குகின்றது.

■ ■ ■

*தாய்வீடு பத்திரிகை பற்றிய விமர்சனங்களை எதிர்பார்க்கின்றோம். விமர்சனங்கள் எம்மை ஓர் ஆரோக்கியமான பாதையில் இட்டுச்செல்லும்.*

*E-mail:thaiveedu@gmail.com*
*Fax: 416-849-0594*
*Tel: 416-646-3422*

சொர்க்கமே என்றாலும் அது சொந்த வீடு போல வருமா...

Uthayan Alex Sivasambu B.Sc. (Hons), M.B.A
Broker

Ottawa: 613.276.SALE (7253)
Toronto: 416.659.SELL (7355)
alex-sivasambu@coldwellbanker.ca, www.sivasamburealty.com

COLDWELL BANKER



# Law Office

## T. JEGATHEESAN

(Barrister, Solicitor and Notary Public (on)



உங்கள் சட்டப் பிரச்சினை எதுவாகிலும் தமிழிலும் ஆங்கிலத்திலும்
ஆலோசனைகளுக்கும் சட்ட நடவடிக்கைகளுக்கும் தொடர்பு கொள்ளுங்கள்.

## தி. ஜெகதீசன்

(Barrister, Solicitor and Notary Public (on)

Off: **416 • 266 • 6154**
Res: 416 • 449 • 0358
Fax: 416 • 266 • 4677

2620 Eglinton Ave., East # 201
Scarborough. ON
M1K 2S3




# NetCom College

**Where minds are challenged to a great future...**

**Registered and Approved as a Private Career College**
**Under the Private Career Colleges Act.**

- International Students Welcome
- EI Students Could receive Free Diploma / Certification If Qualified



- Microsoft Technology Courses
- Accounting
- Programming
- VoIP
- Cisco Education
- LINUX
- MS Office
- Wireless Technologies
- Dataware Technologies
- A+ / Network+ / Security +

## Special Summer 2008 Computer Classes

**Only 7 Students per Class**

## Register NOW

We are introducing...
Microsoft Exchange 2007
Microsoft SQL 2005
Microsoft windows server 2008
Ethical Hacker

**authorized Exam centers for**

PEARSON VUE AUTHORIZED TEST CENTER
Authorised PROMETRIC TESTING CENTRE

1200, Markham Rd, Suite # 525,
Scarborough, ON,
M1H 3C3, Canada


Tel: **416.438.3737**

www.netcomcollege.com
info@netcomcollege.com

அறியவில்லையானால் அறிந்துகொள்ளுங்கள் - கனடாவில் சில தகவல்கள்

# ஆயுள் காப்புறுதி ஒப்பந்தத்தில் சேரும்போது
# வழங்கும் தகவல்களும் புலனாய்வுகளும்

தகவல் தொடர் - 20



சிவ பஞ்சலிங்கம்
- ஆயுட்காப்புறுதி பிரதிநிதி -
sivapunch@thaiveedu.com

- **ஆயுள் காப்புறுதி ஒப்பந்தம் ஒன்றில் சேர்ந்து கொள்பவரிடம் எப்படியான தகவல்களை கம்பனி முதலில் விண்ணப்பப் படிவம் மூலம் பெற்றுக் கொள்ளும்?**
- **பெற்றதகவல்களை எவ்வாறு கம்பனி புலனாய்வு செய்து கொள்ளும்?**
- **புலனாய்வின் முடிவில் எப்படியான தீர்வினை கம்பனி வழங்கும்?**
- **புலனாய்வில் நிராகரிக்கப்பட்டால் அடுத்து என்ன செய்யலாம்?**

## ஆயுள் காப்புறுதி ஒப்பந்தத்தில் சேரும்போது வழங்கப்பட வேண்டிய தகவல்கள்

பொதுவாக ஆயுள் காப்புறுதி உட்பட எந்த வகையான காப்புறுதி ஒப்பந்தங்களில் சேர்ந்து கொள்வதாக இருந்தாலும், சேர்ந்து கொள்பவர் எப்படிப்பட்ட நிலையில் இருந்து தகவல்களை வழங்குதல் வேண்டும் என்பதனை காப்புறுதியின் ஒரு தத்துவமாக ஆங்கிலத்தில் ஒரு சொற்றொடர் மூலம் சுருக்கமாக குறிப்பிடுவார்கள். அதாவது, “Follow up utmost good faith” என்பதாகும்.

இவ் ஆங்கில சொற்றொடரின் தமிழ்மொழி அர்த்தம் யாதெனில், ஒப்பந்தம் ஒன்றில் சேர்பவர் ஒருவர் விண்ணப்பத்தில் கேட்கப்படும் சகல கேள்விகளுக்கும் நேர்மையான முறையில், நேர்மைக்கு அப்பால் ஒரு படி மேலேபோய் உண்மையாகவும், விசுவாசமாகவும், எதுவித ஒழிப்பு மறைப்பும் இல்லாது தகவல்களை வழங்குதல் வேண்டும் என்பதாகும்.

இக் காப்புறுதிக் கோட்பாட்டினை சரியான முறையில் பின்பற்றும் எவரையும் கனடாவின் காப்புறுதி சட்டங்கள் இறுக்கமாகப் பாதுகாத்துக் கொள்ளும். அதாவது காப்புறுதி ஒப்பந்தம் கைச்சாத்திடும்போது சகல விபரங்களையும் பூரணமாக புரிந்து நேர்மையாக தகவல்களை வழங்குபவர்களுக்கு காப்புறுதியில் ஏமாற்றம் என்பது ஒன்றும் உருவாகுவதில்லை என்பதே காப்புறுதியின் அடிப்படை தத்துவமாகும். இங்கு பின்வரும் தகவல்கள் ஒப்பந்தத்தில் சேர்ந்து கொள்பவர் வழங்குதல் வேண்டும். வழங்கப்படப் போகும் தகவல்களை எவ்வளவு விபரமாக வழங்கலாமோ அவ்வளவு விபரமாகவும், தெளிவாகவும் வழங்குதல் வேண்டும்.

## ஆயுள் காப்புறுதி ஒப்பந்தத்தில் சேர்ந்து கொள்பவரின் சொந்த தகவல்கள் (Personal Information)

முழுப்பெயர், வசிக்கும் விலாசம், தொலைபேசி இலக்கம், சமூக காப்புறுதி இலக்கம் ஆணா? பெண்ணா? என்பதும் பிறந்த திகதி, ஆண்டு விவரங்கள். (இவ் விவரங்கள் விலை வித்தியாசங்களின் ஏற்ற இறக்கங்களை பிரதிபலிக்கும். பெண்களுக்கு ஆண்களை விட மாத கட்டுப் பணம் சற்றுக் குறைவு! அது தவிர பொதுவாக வயது அதிகரிக்க அதிகரிக்க விலையும் அதிகரிக்கும்)

பிறந்த நாடு, கனடாவில் குடியுரிமை அந்தஸ்து (பிரஜா உரிமை, நிரந்தர குடியுரிமை அல்லது அகதி அந்தஸ்து கனடாவில் கோரியவர் அது அங்கீகரிக்கப்பட்டு, நிரந்தர குடியுரிமை அந்தஸ்துக்காக காத்திருப்பவர்களின் விண்ணப்பங்களை மட்டும் காப்புறுதிக் கம்பனி ஏற்றுக் கொள்ளும். வேறு எந்த நிலைமையில் இருப்பவர்களையும் அங்கீகரித்துக் கொள்ள மாட்டார்கள்)

செய்யும் தொழில், தொழில் செய்யும் கம்பனி, பெயர், விலாசம் விபரங்கள் (இராணுவ வீரர்கள், உயர் மாடி கட்டிடங்களில் தொங்கி கொண்டு சுவர்களுக்கு வர்ண பூச்சு பூசும் தொழில்கள் போன்றவற்றினை நிரந்தரமான தொழிலாக செய்து கொள்பவர்களுக்கும் விலை வித்தியாசங்களில் ஏற்ற இறக்கம் இருக்கும்).

புகைப்பவரா? போதைவஸ்துகளும் உபயோகிப்பவரா? மதுபானத்துக்கு அடிமையானவரா? (இந் நிலைமையில் இருந்தால் மாதம் செலுத்தும் விலை என்பது அதிகமாக இருக்கும்)

எப்போதாவது கனடாவில் வங்குரோத்து நிலைமைக்கு தள்ளப்பட்டவரா? மலையேறுதல், கார் வேக ஓட்டம், படகு ஓட்டம் போன்ற ஆபத்தான விளையாட்டுக்களில் ஈடுபடுபவரா? கனடாவிற்கு வெளியே செல்லும் எண்ணம் அடுத்த சில வருடங்களில் உண்டா? ஏற்கனவே ஆயுள் காப்புறுதி விண்ணப்பம் ஏனைய கம்பனிகளினால் நிராகரிக்கப்பட்டதா? அல்லது சற்று அதிக விலை செலுத்த வேண்டும் என நிர்ப்பந்திக்கப்பட்டதா? கடந்த மூன்று வருடங்களில் வீதி ஒழுங்கு சட்டங்களை மீறிய சம்பவங்கள், மற்றும் சாரதி அனுமதி பத்திரங்களுக்கு ஏதாவது ஆபத்துகள் ஏற்பட்டதா? கிரிமினல் பதிவுகள் ஏதாவது கடந்த பத்து வருடங்களில் உள்ளதா?

## ஆயுள் காப்புறுதி பெறும் நோக்கமும் ஏற்கனவே இருக்கும் காப்புறுதி ஒப்பந்த விபரங்களும் (Purpose of Insurance & Insurance History)

சாதாரணமாக ஒருவர் தமக்கு ஒரு மில்லியன் டொலருக்கு ஆயுள் காப்புறுதி தேவை என விண்ணப்பித்தவுடன் கம்பனி உடனடியாக எதற்காக இவருக்கு இவ்வளவு தொகை தேவை? என்ற கேள்விக்கு விடை காணாது ஒரு போதும் விண்ணப்பங்களை அங்கீகரிக்க மாட்டாது. உயிர் இழப்பு நடந்தால் தங்கியிருக்கும் குடும்பத்தவருக்கு ஒரு வருமான இழப்பீடு நேரலாம் என்பதால் வருமானத்தினை அடிப்படையாக வைத்து அல்லது ஏதாவது சொத்து அடமான ஈட்டு கடன்கள் இருந்தால் அதனை பாதுகாப்பதற்காக ஒரு குறிப்பிட்ட தொகை ஆயுள் காப்புறுதி தேவை என்ற அடிப்படையில் காப்புறுதி வழங்கலாம்.

இது தவிர ஏற்கனவே இருக்கும் காப்புறுதி தொகை எந்த கம்பனியில் உள்ளது என்ற விபரங்களும் பரிசீலனை செய்யப்பட்டே முடிவு பண்ணப்படும்.

## மருத்துவ உடல் நிலைமைகளின் தகவல்களும் குடும்பங்களில் உள்ள ஏனையோரின் மருத்துவ தகவல்களும் (Health Information & Family History)

ஆயுள் காப்புறுதி ஒப்பந்தத்தில் புலனாய்வு செய்து முடிவு செய்யப்படும் முக்கியமான தகவல் பிரிவு இதுவாகும்.

உயரம், நிறை, இந் நிறையில் கடந்த ஒரு வருடத்தில் ஏதாவது மாற்றம் ஏற்பட்டதா? குடும்ப மருத்துவரின் பெயர், விலாசம் இறுதியாக எப்போது சிகிச்சை பெற்றது? இது தவிர ஏனைய மருத்துவர்களிடம் சிகிச்சை பெற்று இருந்தால் அது பற்றிய விபரங்கள்

ஒரு மனிதனுக்கு ஏற்படும் சகல வகையான நோய்களையும் குறிப்பிட்டு, இந் நோயால் வாழ்க்கையில் பாதிக்கப்பட்டவரா? இவ்வாறு பாதிக்கப்பட்டு இருந்தால் எப்போது? பெற்ற சிகிச்சைகள்? சிகிச்சை வழங்கிய மருத்துவர்களின் விபரங்கள்? தற்போது உள்ள நிலைமை?

குடும்பத்தில் பெற்றோர், சகோதரர்கள் பற்றிய மேலோட்டமான விபரங்களும், அவர்களுக்கு ஏற்பட்ட சந்ததி நோய்கள், மரணமாகியிருந்தால் மரணமாகிய வயதும் அதற்கான காரணமும்.

எதிர்காலத்தில் ஏதாவது சிகிச்சைகள் செய்ய வேண்டியிருந்தால் அது பற்றிய விபரங்கள்.

## உயிர் இழப்பு நடந்தால் நட்டஈடு பெற உரித்துடையவர் தொடர்பான விபரங்கள் (Beneficiary Information)

உயிர் இழப்பு நடந்தால் நட்டஈடு பெறுபவர் யார்? அவருக்கு இவருடன் உள்ள உறவு என்ன? ஒன்றுக்கு மேற்பட்டவர்களை நியமித்து இருந்தால் என்ன விகிதத்தில் பெற உரித்துடையவர் என்பது குறிப்பிடப்படுதல் வேண்டும். இங்கு நட்ட ஈட்டினை பெற முதல் உரித்துடையவர் (Primary Beneficiary), அவர் சில நேரங்களில் உயிருடன் இல்லையேல் இரண்டாவது நிலையில் இருந்து நட்டஈட்டினைப் பெற உரித்துடையவர் (Contingent Beneficiary)என நியமிக்கப்பட்டு அதன் விபரங்கள் வழங்கப்படல் வேண்டும்.

## பெற்றுக் கொள்ளப் போகும் ஒப்பந்தம், தொகை, மாத கட்டுப் பணம் (Type of Coverage, Amount, Price)

ஆயுள் காப்புறுதியில் பல்வேறு வகையான வகைகள் பெற்றுக் கொள்ளப் போகும் தொகையின் அடிப்படையில் விலை என்பது தீர்மானிக்கப்டுகின்றது. ஒரு அனுபவமுள்ள முகவரின் உதவியுடன் இது பற்றி தெளிவாக புரிந்து எப்படி தெரிவு செய்யப்பட்டது என்பது விண்ணப்பத்தில் குறிப்பிட வேண்டும்.

இத்துடன் மாதா மாதம் சொந்த வங்கியிலிருந்து பணம் செலுத்துவதற்குத் தீர்மானித்தால் அது தொடர்பான விபரங்களும் வழங்கப்படுதல் வேண்டும்.

மேற்குறிப்பிட்ட தகவல்கள் யாவும் விண்ணப்பத்தில் வழங்கி தமது அடையாளத்தினை சாரதி அனுமதிப் பத்திரம் அல்லது கடவுச்சீட்டு மூலம் உறுதிப்படுத்தி கைச்சாத்திடுவதுடன், இக் கையொப்பத்திற்கு சாட்சியாக ஒரு லைசென்ஸ் முகவர் கைச்சாத்திடுவார்.

விண்ணப்பத்தில் வழங்கப்படும் தகவல்கள் யாவும் காப்புறுதி கம்பனிகளின் மின் கணனி தகவல் மையத்தில் பதிவு செய்யப்படுவதுடன், விண்ணப்பத்தின் பிரதி தலைமையகத்தில் களஞ்சியப்படுத்தி வைத்திருப்பதுடன் முகவரின் அலுவலகத்திலும் ஒரு கோப்பாக களஞ்சியப்படுத்தி வைக்கப்படும். அதேநேரம் ஒப்பந்த பத்திரம் காப்புறுதி செய்பவருக்கு வழங்கும்போது விண்ணப்பத்தின் பிரதியும் இத்துடன் இணைக்கப்பட்டு இருக்கும். எனவே இங்கு ஆயுள் காப்புறுதிக் கம்பனியுடன் சட்ட பிரச்சனைகள் என ஏதாவது எழுந்தால் நியாய மன்றத்தில் இவைகள்யாவும் ஒரு ஆதாரமாக அமையும்.

விண்ணப்பத்தில் வழங்கப்பட்ட மேற்குறிப்பிட்ட தகவல்கள் யாவும் நிஜமானதா என்பதனை காப்புறுதி கம்பனிகள் பல வழிகளில் புலனாய்வு செய்து ஒப்பந்தத்தினை அங்கீகரிப்பதா? இல்லையா? என முடிவு செய்வார்கள். பின்வரும் வழிகளில் தகவல்களை உறுதிப்படுத்திக் கொள்வார்கள்.

- மருத்துவ தகவல் மையம் (Medical Information Bureau) என்னும் மையத்தின் மூலம் தங்களின் மருத்துவ சிகிச்சை விபரங்களை பெற்றுக் கொள்வார்கள்).
- தாங்கள் சிகிச்சை பெற்ற குடும்ப மருத்துவர்கள், மருத்துவ மனைகளில் இருந்து முழு தகவல்களையும் அறிக்கைகளாக பெற்று பரிசீலனை செய்வார்கள்.
- நேரடியாக ஒரு மருத்துவ பிரதிநிதியினை அனுப்பி குருதி பரிசோதனை, உடல் பரிசோதனைகள் என செய்து அவர்களின் நுண்பரிசோதனை அறிக்கைகளின் அடிப்படையில் தகவல்களை உறுதிப்படுத்துவார்கள்.
- சமூக காப்புறுதி இலக்கம் (Social Insurance Number) மூலம் முழு தகவல்களையும் பெறுவார்கள்.
- வாகனமோட்டும் மற்றும் குற்ற புலனாய்வு பிரிவுகளில் இருந்து தகவல்களை தேவையாயின் பெற்று பரிசீலனை செய்து கொள்வார்கள்.

விண்ணப்பத்தில் வழங்கப்பட்ட தகவல்களை அடிப்படையாக வைத்து பரிசீலனை செய்யும் போது மேலதிக விசேட தகவல்கள் தேவைப்பட்டால் அதனை முகவர் மூலம் விசேட பிரத்தியேக விண்ணப்ப படிவத்தில் நிரப்பி பெற்றுக் கொள்வார்கள்.


சகல புலனாய்வுகளின் பின்பு விண்ணப்பத்தினை ஏற்றுக் கொள்வார்கள். அல்லது மேலதிக சற்று விலை அதிகரிப்புடன் ஏற்றுக் கொள்வார்கள். அல்லது நிராகரிப்பார்கள். இங்கு ஒரு கம்பனியின் முடிவு என்பது பின்னர் இன்னொரு கம்பனிக்கு விண்ணப்பம் செய்யும்போதும் பதிவுகளில் காட்டும். முடிவுகள் என்பது கம்பனிக்கு கம்பனி வித்தியாசப்படுவதால் நிராகரிக்கப்பட்டவர் இன்னொரு கம்பனியிற்கு விண்ணப்பித்து முயற்சி செய்து பார்க்கலாம்.

சாதாரணமாக புலனாய்வுகளுடன் ஆரோக்கியமான உடல் நிலைமையில் ஏற்றுக் கொள்ளும் காப்புறுதிக் கம்பனியில் சந்தர்ப்பம் இல்லாவிட்டால் அணுக வேண்டிய இன்னொரு இடமே மருத்துவ புலனாய்வுகள் எதுவும் இல்லாத காப்புறுதி ஒப்பந்தம் (Non-Medical Life Insurance) ஆகும். இங்கு விலை என்பது புலனாய்வுகளுடன் வழங்கும் ஆயுள் காப்புறுதி ஒப்பந்தங்களுடன் ஒப்பிடும்போது சுமார் இரு மடங்காக பொதுவாக இருக்கும். நோய்வாய்ப்பட்டவர்கள் சற்று அதிக விலையில் செய்து கொள்ளும் ஒப்பந்தம் இதுவாகும்.

காப்புறுதி சம்பந்தமான
தேவைகளுக்கும்
ஆலோசனைகளுக்கும்
சிவ.பஞ்சலிங்கம்
B. Com,
Licensed Insurance Broker
416.321.0999

**LEADING THE REAL ESTATE INDUSTRY WITH OUR HIGHER STANDARDS FIVE STAR SERVICE.**

# Residential and Commercial
# Buying / Selling & Leasing



## Sinna S. Rajagopal

Sales Representative

**Dir : 416.727.8647**

Email : sinnarajagopal@hotmail.com

**Honesty & Professional Experience to Serve your Real Estate Needs**




3+1 Bed Rooms, 2 Washrooms, Basement Finished



Morningside & McLevin 3+1 Bed Rooms, 3 Washrooms,



Duffren & Eglinton $5,600 Rental Income Commercail Sale




Middlefield & Finch 2+1 Bed Rooms, 1 Washrooms,



Medowvale & Sheppard 3+1 Bed Rooms, 2 Wash Rooms




Morningside & Nightstar 3+1 Bed Rooms, 4 Washrooms,



Warden & Finch 2 Bed Rooms, 1 Washrooms,



Midland & Danforth 3 Bed Rooms, 2 Wash Rooms



Victoria Pk & Eglinton 2 Bed Rooms, 2 Washrooms,



Finch & McCowan 4+2 Bed Rooms, 4 Wash Rooms



HWY7 & 9th Line 4 Bed Rooms, 3 Washrooms,




**வீடு வாங்கும் போதோ அல்லது விற்கும் போதோ இந்த சன்மானம் உங்களுக்கு உறுதியாகிறது!**

(நேரடியாக தொடர்பு கொள்பவர்களுக்கு மாத்திரமே)

**Our gift to you on closing to use as you wish***

## HomeLife/Future Realty Inc.,

**Brokerage***

262 Markham Road, Scarborough, Ontario M1J 3C5

**Bus.: 416.264.0101 Fax : 416.261.1519**

*Independently Owned and Operated, REALTOR

MULTIPLE LISTING SERVICE®

Apex 416-297-0707

# குழந்தைகளின் அறிவுத்திறன் வளர்ச்சி


சிவவதனி பிரபாகரன்



vathani@thaiveedu.com


அறிவுத்திறன் என்பது உயிர் வாழ்தலில் அடிப்படை ஆதாரமானது. உடல் உள ஆரோக்கியத்தின் நிர்ணயிப்போடு அறிவுத்திறனின் வளர்ச்சியிலுமே ஒரு மனிதவாழ்வின் பூரணத்துவம் அளவிடப்படுகின்றது. ஒரு மனிதனின் அறிவுத்திறன் வளர்ச்சியானது அவன் தாயின் வயிற்றில் கருவாகி உருவாகிய பொழுதே ஆரம்பிக்கின்றது. அதே போன்று அறிவுத்திறனிலே ஏற்படும் குறைபாடுகளும் பெரும்பாலும் கருவிலிருக்கும் போதிருந்தே உருவாகின்றது.

ஒருவருடைய குறைபாடுகளுக்கு காரணமாக அமைவது அவருக்கு ஏற்படும் பாதிப்புகளே யாகும். ஒருவருடைய பாதிப்புக்கள் இரு வகைப்படும்.

1. தான் சார்ந்த உடலியல் (Biological)
2. சுற்றுச் சூழல் (Environmental)

### தான் சார்ந்த உடலியல் (Biological)

தாயின் வயிற்றில் கருவிலிருக்கும் போதே ஏற்படும் பாதிப்புக்களிற்கான உடலியல் காரணங்களைப் பார்ப்போம்.

### 1. கருக்காலம்:

கருக்காலத்தில் தாயின் நரம்பு மண்டலத்தில் ஏற்படும் பாதிப்புக்கள் கருவிலிருக்கும் குழந்தையின் மூளை வளர்ச்சியினை பாதிக்கின்றது.

### 2. பிரசவகாலம்:

பிரசவ காலத்தில் தாயின் உடல் நிலையில் ஏற்படும் சடுதியான மாற்றங்கள் மற்றும் அறுவை சிகிச்சை, கருவியுதவியுடனான மகப்பேறு போன்ற காரணங்களாலும் சில குழந்தைகளுக்கு மூளையில் பாதிப்பு ஏற்பட வாய்ப்புண்டு.

### 3. தாயின் ஆரோக்கியமற்ற பழக்கங்கள்:

புகையிலை, வெற்றிலை பாக்கு, மது, போதைவஸ்து என்பன உபயோகித்தல், புகைப்பிடித்தல், மூக்குப்பொடி போடுதல், அதிகளவில் தேநீர், கோப்பி குடித்தல், தவறான உணவு முறைப் பழக்கங்கள் போன்ற தாய் கடைப்பிடிக்கும் ஆரோக்கியமற்ற பழக்க வழக்கங்களாலும் குழந்தையின் மூளை பாதிக்கப்படும் அபாயம் உருவாகின்றன.

### 4. மருந்து உட்கொள்ளுதல்:

தாய்க்கு வேறு நோய்கள் இருந்து அதற்கான சிகிச்சை பெறும் நேரத்தில் உட்கொள்ளும் மருந்துகள் பலவும் சிசுவிற்கு மூளைச் சிதைவை ஏற்படுத்துகின்றன. எத்தகைய மருந்தையும் மருத்துவரின் ஆலோசனையின்றி எடுக்கலாகாது.

### 5. போசாக்கின்மை:

கருவுற்ற தாய் மாச்சத்து, புரதம், கல்சியம், இரும்புச்சத்து தாதுப்பொருட்கள், விட்டமின்கள் என அனைத்து வகை சத்துக்களும் உள்ள சமச்சீரான உணவுகளை ஒவ்வொரு வேளை உணவிலும் உட்கொள்வது அவசியமாகும். உணவு வகையில் தானியம், புரதம், காய்கறி, பழங்கள், பால் என்பன அதிகம் சேர்க்கப்பட வேண்டும். சிறந்த உணவு முறையும் சிசுவின் மூளை வளர்ச்சியை தீர்மானிக்கின்றது.

### 6. ஓமோன்கள்:

தாயின் ஓமோன்கள் எனப்படும் நாளமில்லாச் சுரப்பிகளின் சமநிலையும் பேணப்படுகின்றதா என்பதை மருத்துவ பரிசோதனையூடாக உறுதிப்படுத்துவது அவசியமாகும். ஓமோன்களில் ஏற்படும் சமச்சீரின்மையும் சில சமயங்களில் சிசுவைப் பாதிக்கக் கூடும்.

### 7. அணுக்கதிர் வீச்சு:

கருவுற்ற தாய் 'எக்ஸ்ரே' எடுப்பதை கண்டிப்பாக தவிர்த்தல் அவசியம். யுத்த சூழலில் அல்லலுறும் மக்கள் அணுகுண்டுகளின் கதிர்வீச்சால் பாதிக்கப்படுகின்றார்கள். குறிப்பாக கர்ப்பிணிகளின் வயிற்றில் உள்ள குழந்தைகள் மூளை வளர்ச்சி குன்றியவராக பிறக்கும் அபாயம் இத்தகைய சூழலில் வாழ்பவருக்கு பெருமளவில் உண்டு.

### 8. தாய் எதிர்நோக்கும் எதிர்பாராத அதிர்ச்சி:

கீழே விழுதல், அடிபடுதல், வழுக்கி விழுதல், எதிர்பாரா விபத்துக்கள் போன்றவற்றினால் தாய்க்கு ஏற்படும் உடல் மன அதிர்ச்சிகள் கருவிலிருக்கும் குழந்தையின் மூளையையும் பாதிக்கின்றது.

### 9. மரபு ரீதியான குறைபாடு:

பரம்பரை பரம்பரையாக காவப்படும் குறைபாடுகளில் ஒன்றாக மூளை வளர்ச்சியும் அமைகின்றது. அறிவுத்திறன் வளர்ச்சியின்மையானது மரபு ரீதியாக காவப்படவல்ல நோய்களில் ஒன்றென ஆராய்ச்சிகள் கூறுகின்றன.

### 10. தலையின் வளர்ச்சி:

குழந்தைகள் பிறந்ததிலிருந்து தலையின் அளவை வைத்தியர்கள் அறிந்து அளவிடுவர். குழந்தையின் ஆரம்பகால வளர்ச்சியிலேயே தலையின் சுற்றளவு அளவிடப்பட்டு ஒப்பிட்டு நோக்கி உறுதி செய்யப்படும். தலையின் அளவானது சராசரி அளவை விட பன்மடங்கு பெரிதாகவோ, சிறிதாகவோ இருப்பின் அக்குழந்தைகளுக்கு அறிவுத் திறன் குறைபாடு தென்பட வாய்ப்புண்டு இதற்கு மேற்கூறிய தாய்வழிக் காரணங்களும் காரணமாயிருக்கலாம். இல்லையேல் இதர வளர்ச்சியைப் பாதிக்கும் காரணிகளும் காரணமாயிருக்கலாம்.

### சுற்றுச் சூழல் காரணங்கள் (Environmental Reasons)

ஒரு மனிதனின் வாழ்வின் ஆரோக்கியத்தை சூழலே அதிகளவில் நிர்ணயிக்கின்றது என்பது உலகப் பொதுக் கருத்து. சுத்தமான சுகாதாரமான ஆரோக்கியமான சூழல் அமைவது ஆரோக்கிய வாழ்வின் இரகசியம் ஆகும். உடலாரோக்கியத்தைப் போல் மனமும் ஆரோக்கியமாக இருக்க வேண்டுமானால் அன்புமயமான அரவணைப்பான சூழல் இருப்பதும் மிக மிக அவசியமாகும்.

கருவுற்ற தாய் ஆரோக்கியமான சூழலில் சுத்தமான காற்றை சுவாசிக்க வேண்டும். வாழும் வீடும் சுத்தமாக இருப்பது அவசியம்.

கருவுற்ற தாயைச் சூழ மகிழ்ச்சிகரமான உறவுமுறைகளின் இதமான அரவணைப்பும் பாசமும் அளவற்றுக் கிடைப்பின் அது கருவிலிருக்கும் சிசுவின் வளர்ச்சிக்கு ஊட்டமாக அமைகின்றது புலம்பெயர்ந்து வாழும் எம்மக்களுக்குள் எல்லோருக்குமே உறவுகளில் அரவணைப்புக்கள் கிடைப்பதில்லை. பல பெண்கள் தனிமை வாழ்வு தரும் துன்பத்துள் துயரப்பட்டு வாழ்கின்றனர். 'உறவுகளில்லாவிட்டால் என்ன? எம்மைச் சுற்றி இருப்பவர்களை உறவுகளாக்கிப் பழகலாமே' எனும் மனத் தெளிவும் துணிவும் இருப்பின் தனிமைத் துயரில் எவரும் துடிதுடிக்கத் தேவையில்லை. மனதுக்குப் பிடித்த சூழலில், மனதுக்குப் பிடித்தவர்களுடன் அளவளாவி வாழும் மனம் நிறைந்த சூழல் தாய்க்கு இருப்பது கருவிலிருக்கும் குழந்தையின் வளர்ச்சிக்கு மிக மிக அவசியமாகும்.

கருவுற்ற தாய்மார் தனிமையின் கொடுமையில் தம்மைத்தாம் வருத்தவும் கூடாது. அதேவேளை பேசிப் பேசி கொல்பவர்களிடம் மாட்டி உள்ளம் வதைபடவும் கூடாது.

கருவுற்றத் தாய்மார் தமக்காக இல்லாது போனாலும், தாம் சுமக்கும் சேயின் நலனைக் கருத்திற்கொண்டேனும் தம்மை இயன்றவரை மகிழ்ச்சியாக வைத்திருப்பது அவசியமாகும்.

### அறிவுத்திறனை அளவிடும் வழிகள்

மனோதத்துவ நிபுணர்கள் குழந்தைகளின் அறிவுத் திறனை அளவிட பலதரப்பட்ட அறிவுத்திறன் பரீட்சைகள் வைப்பார்கள். IQ (Intelligent Test) எனப்படும் இச்சோதனையின் தரவுகள் குழந்தைகளின் அறிவுத்திறனை நிர்ணயிக்க உதவுகிறது.

### IQ 100 சராசரி அறிவுத்திறன்

இத்தகையோரில் நடவடிக்கை பேச்சு என்பன நல்லபடியாக இருத்தல்.

### IQ 56 - 70 மிதமான அறிவுத் திறன் வளர்ச்சிக் குறைவு

அறிவுத் திறனோ சராசரித் திறமைகளோ இவர்களுக்கு இருக்காது இது மரபுவழியில் வரும் குறைபாடுகளில் ஒன்றாகும்.

### IQ 41 – 55 சுமாரான அறிவுத்திறன்

இத்தகைய குழந்தைகளுக்கு தமது திறமைகளை தாமே வளர்த்துக்கொள்ளத் தெரியாது. நல்ல விடயங்களை செய்தாலும் அதை மனதில் நிறுத்தி மறுபடியும் செய்யத் தெரிவதில்லை. ஊக்கத்திறன் குறைவாக இருக்கும்.

### IQ 26 - 40 தீவிரமான அறிவுத்திறன் குறைவு

ஓரளவுக்கு அறிவுள்ளவர்களாக இருந்தாலும் தம்மைத் தாம் ஒழுங்குபடுத்தி சுத்தமாக வைத்திருக்க இவர்களுக்குத் தெரியாது.

### IQ 25 இலும் குறைவு (அறிவுத்திறன் பாதிப்புற்ற நிலை)


இத்தகைய குழந்தைகள் மிக மிகக் கடுமையான அறிவுத்திறன் வளர்ச்சி குன்றிய பிள்ளைகளாக இருப்பார்கள் இவர்களில் மிக மோசமான நிலையிலுள்ளவர்கள். வெளியுலகோடு தமது தொடர்புகளை துண்டித்தவர்களாக, எதையும் கவனிக்காமல் தம்போக்கில் இருப்பர்.

இத்தகைய குழந்தைகளுக்கு தமது அடிப்படைக் கடமைகளைக்கூட செய்யத் தெரியாது. அவர்களை கவனிக்க யாராவது இருத்தல் வேண்டும். பெற்றோர்களுக்கும் மற்றவர்களுக்கும் சுமையாக வாழும் நிலை இச்சிறுவர்களுக்கு உண்டாகிறது. இவர்களுக்கு இதர உடல் வளர்ச்சி இருக்கலாம். ஆனால் அறிவுத்திறனில் வளர்ச்சி இல்லாமையால் பெற்றோரின் உதவியும் பராமரிப்பும் காலம் முழுவதும் தேவை. இத்தகைய

78ம் பக்கம் பார்க்க...


தமிழ் வகுப்பு

(McCowan & Dennison சந்திப்பிற்கருகில்)



இளமழலை முதல் தரம் 12 வரையான மாணவர்களுக்கு பல வருடகாலம் பட்டறிவுள்ள ஆசிரியையால் தமிழ் கற்பிக்கப்படுகின்றது.

- உங்கள் பிள்ளைகளும் தமிழில் பேசி, எழுதி, வாசித்து தேர்ச்சி பெற வேண்டுமா?
- பேச்சுப் போட்டிகள், சிறுவர் நாடகங்கள், பட்டிமன்றங்கள், சிறுவர் அபிநயப் பாடல்கள் போன்ற கலைநிகழ்ச்சிகளில் பங்குபற்றி தமது திறன்களை வெளிப்படுத்த வேண்டுமா?
- தொலைக்காட்சி, வானொலி சிறுவர் நிகழ்ச்சிகளில் பங்கேற்று தமது திறன்களை ஆளுமையுடன் வெளிக்கொண்டுவர வேண்டுமா?

அழையுங்கள்: 905-554-2496

"தமிழின் மேன்மை அதன் தொன்மையில் இல்லை அதன் தொடர்ச்சியில் உள்ளது."

நாளைய எமது தமிழ்ச் சந்ததியினர் தமிழ் பேசும் நல்ல தமிழ்ப் பிள்ளைகளாக வளர்வது எமது கரங்களிலேயே உள்ளது.

# Just make a phone call

## A Bright Financial Future is waiting for you!

## NOW Hiring! Agents.

Free Class

- Best Compensation in the industry
- Step-by-step Personal Training
- Guartanteed Leads Provided

You can make **50 to 100** Thousands dollars

## Join hands with Canada's #1 RBC Life Broker (2006-2007)

A state-of-the-art web site, that will make you
• More Productive • More Efficient • More Money

ROYAL BROKERS
Tel: 416•315•8100

பல்வேறு நிறுவனங்களிடமிருந்து குறைந்த விலையில் உங்கள் காப்புறுதியை தெரிவு செய்துகொள்ள

மருத்துவ பரிசோதனையற்ற ஆயுட் காப்புறுதி

Insuring your life. Ensuring your trust.



Siva Kandiah
*Managing General Agent, RBC*
416•992•1259

Canada
Top Life Insurance
Sales Award Winner
2006-2007
RBC Insurance

ROYAL BROKERS
Corporation

80 Nashdene Ave., Unit B26 Toronto ON. M1V 5E4
Tel: 416•298•4722 Fax: 416•298•4664

மிகக் குறைந்த கட்டணமாக
$15ல் இருந்து!

வயோதிபர்களுக்கு
அதிகுறைந்த விலையில் காப்புறுதி

**100% Cash Back**
**Mortgage Insurance**

சிறுவர்களுக்கான
சிறந்த RESP திட்டங்கள்


RBC Insurance
Managing General Agent

Industrial Alliance

Canada Life

• Life Insurance/ Income Protection • Disability/ Critical Illness • Mortgage & Mortgage Insurance • Registered Education Saving Plans
• Travel Coverage • RRSP's, Annuities, RIF's GIS's • Tax Sheltered Savings & Investments

jeyan-ad-08




# குழந்தைகளின் அறி...

76ம் பக்கத் தொடர்ச்சி...

அறிவுத்திறன் வளர்ச்சியற்ற பெண் பிள்ளைகள் பருவமெய்தியபின்னர் மாதவிடாய் காலத்தில் தமக்கு உதிரப்போக்கு போவது கூட அறியாது பெற்றோரில் தங்கியிருக்கின்றமை மிகவும் கடினமான நிலையாகும்.

எனினும், இத்தகைய IQ குறைந்த சிறார்களுக்குக் கூட மனோதத்துவ சிகிச்சைகள் உள்ளன. ஓரளவு முன்னேற்றத்தினை கொண்டுவரவல்ல சிகிச்சையினூடாக இச் சிறாரை பிறரில் தங்கி வாழாத நிலைக்கு கொண்டுவர பெற்றோர் முயல வேண்டும். மனநல மருத்துவர்களை அணுகி இது குறித்த ஆலோசனைகள் பயிற்சிகளைப் பெற முன்வர வேண்டும். பொறுமையான பயிற்சிகளினூடாகவே குறிப்பிடத்தக்க முன்னேற்றத்தைக் காணலாம். அவர்கள் இத்தகைய நிலையில் பிறந்தாலும் அவர்களை பாசத்தோடு ஏற்று அரவணைத்து அன்பு காட்ட பெற்றோர்கள் முன்வர வேண்டும். அன்பு மூளை வளர்ச்சிக்கு பிரதானமான மருந்தாகத் திகழ்கின்றது. ஆதலால் அளவற்ற அன்பை அள்ளி வழங்கி குழந்தைகளின் அறிவுத்திறனை வளர்ப்பது பெற்றோர்-களின் கடமையாகும்.

‘ஒரு குழந்தையிலுள்ள குறைபாடுகள் அதன் 30 மாதகால அகவைக்குள் வெளியே தெரிந்துவிடும்’ என்கிறார் Dr. Kenner Syndrome என்ற மருத்துவர். 1943ல் இவர் குழந்தைகளிடம் பிறவியிலேயே தோன்றும் குறைபாடுகளை பரிசோதனை மூலம் கண்டுபிடித்தார். இவரது இக்கண்டுபிடிப்புப் பரிசோதனையை இன்றும் மனநல மருத்துவ உலகம் பின்பற்றி வருகின்றது.

ஆரம்ப மாதங்களில் குழந்தை முகம் பார்த்து சிரிப்பதும், கதைக்கையில் கவனித்து சிரித்து பதிலளிக்கும் வகையில் முகபாவனைகளை மாற்றுவதும் ஆரோக்கியமான குழந்தைக்கான அடையாளங்களாகும். அறிவுத்திறன் குறைந்த குழந்தைகள் எதைக் கண்டும் சிரிக்க மாட்டார்கள். அணைத்தெடுக்கையிலும் உணர்ச்சிகளைக் காட்ட மாட்டார்கள்.

பிறவிக் குறைபாட்டில் அறிவுத்திறன் பாதித்துள்ள பிள்ளைகள் வளரும் பருவத்தில் இதர பிள்ளைகளுடன் சேர்ந்து விளையாடவோ பேசவோ மாட்டாது. தானாக எதையும் சொல்லாமல் சொன்னதை மட்டும் சொல்லும். தனக்கென எதையும் கேட்காது. கையில் பிடித்த பொருளை திரும்பத் தரமாட்டாது, அழும்போது பயங்கரமான சத்தத்தோடு அழும்.

ஏங்கோ வெறித்தபடி எதையோ பார்த்துக் கொண்டிருப்பார்கள். பெரும்பாலும் மனிதர்களை விட பொருட்களை அதிகம் உற்றுப் பார்த்த வண்ணம் இருப்பார்கள். இத்தகைய குழந்தைகளுக்கு பேச்சுத் திறமையும் மிகக் குறைவாக இருக்கும்.

பள்ளிப் பருவத்தில் இக்குழந்தைகளிடம் மொழிவளம் இருக்காது. எவரோடும் பழகத் தெரியாதிக்கும். இத்தகைய சிறாரின் மனோ நிலையை உணராமல் பல பெற்றோர்கள் அவர்களை துன்புறுத்தி கற்பிக்க எண்ணுவது மிக மிகக் கொடுமையான விடயமாகும். இதர பிள்ளைகளோடு தம் பாதிப்புள்ள பிள்ளையை ஒப்பிட்டுப் பேசி அடிக்கும் இப்பெற்றோரால் இக்குழந்தைகள் மேன் மேலும் மனநிலை பாதிக்கப்படுகின்றார்கள். தமது பிள்ளைகளில் அறிவுத்திறன் குறைபாடு உள்ளதென அறியும் பெற்றோர் அவர்களுக்கான பள்ளிகளில் தம் பிள்ளைகளைச் சேர்த்து பயன் பெற வேண்டும். மாறாக சாதாரண சிறாருடன் பயிற்றுவிக்கையில் அது மனநலபாதிப்பையும் ஆளுமைப் பாதிப்பையும் மேன் மேலும் உருவாக்குகின்றது.

இத்தகைய குழந்தைகளுக்கு பெற்றோரே முதல் எதிரிகளாகி விடுகின்றமையால் அவர்களைக் கண்டால் பயமும் வெறுப்பும் கொள்பவர்களாக இப்பிள்ளைகள் மாறி விடுகின்றனர். இது மிகக் கொடூரமான உளவியல் பாதிப்பு என்பதை பெற்றோர் உணர்வதில்லை. எம் பிள்ளைகள் பெற்றோர்களாகிய எம்மாலேயே அநாதரவாக்கப்படலாமா என இச்சிறாரின் பெற்றோர் எண்ணிப்பார்க்க வேண்டும்.

உடலில் ஏற்படும் குறைபாடு போன்றதே மனதில் ஏற்படும் குறைபாடுகளும். எவரையும் அவரவராகவே ஏற்று மதிக்க பழகினால் இத்தகைய சிறாரை மேன்மேலும் சிதைக்காமல் காக்கலாம்.

என்மனதை என் அம்மா அப்பா கூட புரிந்து கொள்கிறார்கள் இல்லையே என ஏங்கும் நிலை எந்தக் குழந்தைக்கும் ஒருபோதுமே வரக்கூடாததொன்று.

ஆகக்குறைந்தபட்சம் அன்பையாவது உங்கள் பிள்ளைகளுக்கு அள்ளியள்ளிக் கொடுப்பதுவே பெற்றோர்களாகிய உங்களது தலையாய கடமையாகும்.

வந்தபின் வருந்துவதை விட வரமுன் எச்சரிக்கையாக இருப்பது பிள்ளைப்பேற்றின் அவசியமானதொன்றாகும். பொதுவாக சிறுவர்களில் தென்படும் அறிவுத்திறன் குறைபாட்டை பெற்றோர் கண்டுகொள்வதில்லை.

குழந்தை பருவத்து மனப்பாதிப்புக்களை உடனுக்குடன் களைந்துவிட வேண்டும். பெற்றோர் தம் பிள்ளைகளின் பிரச்சினையை கண்டறிய வேண்டியவராவர்.

ஆரம்ப நிலையில் நோய்களைக் குணமாக்குவது இலகுவானது. நோய் காலம் தாமதித்து முற்றிவிட்டால் அதன் பின் வருந்திப் பயனில்லை. இதர நோய்கள்போல் இல்லாமல் மனநோய்களை தமக்குள் உண்டா இல்லையாஎன அறிந்து மனநல வைத்தியரை நாடுதல் இயலாத ஒன்றாகும். அதற்கு அடுத்தவர் உதவி அவசியம் வேண்டும். சிறார்களைப் பொறுத்தவரையில் பெற்றோர்களின் கைகொடுப்பு மிக மிக அவசியமானது. மனநோய்கள் யாவுமே அறிவுத்திறன் குறைபாட்டால் ஏற்படும் நோய்களல்ல.

மூளையமைப்பினால் ஏற்படும் குறைபாடுகள் வேறு. உளவியல் நோய்கள் வேறு. இது குறித்த நூல்களைக்கற்பதன் மூலம் மேலதிக தெளிவினைப் பெற முடியும்.

இந்த ஆக்கத்தை எழுதி முடிக்கையில் எனக்குள் தமிழில் இது குறித்த நூல்களில்லையே என ஆதங்கம் எழுந்தது. இந்நிலையில் சில நாட்களிற்கு முன்பு ‘வாழ்வின் திருப்பம்’ எனும் நூலை எழுதி மிகவும் வித்தியாசமான முறையில் முன்னுதாரணமாக வெளியிட்ட திருமதி. யோகா பத்மநாதன் அவர்கள் என் மனதை வெகுவாக தன்பக்கம் ஈர்த்துள்ளார்.

குறைகளை நிறைகளாக்கி வாழ்ந்து காட்டி சாதனைகள் பல புரிந்த எம்மவர் பலரின் உண்மைச்சரிதங்களை அந்நூலில் அவர் தொகுத்துத் தந்துள்ளார்.

‘உளி தாங்கும் கற்கள் தான் மண்மீது சிலையாகும்’ என்பதற்கு இந்நூல் ஒரு சிறந்த எடுத்துக்காட்டாக திகழ்கின்றது.

மூளைவளர்ச்சி குன்றிப் பிறந்து சிலகாலமே இவ்வுலகில் வாழ்ந்து தன்னை விட்டுப் பிரிந்த தன் தெய்வக்குழந்தை சௌமியாவின் ஞாபகார்த்தமாக ஊனம் என்ற பெயரால் மனச்சிதைவுற்றுக்கொண்டிருக்கும் அனைவருக்கும் இதமாக மருந்திட்டு வாழ்வின் உன்னத பொருளினை வெளிச்சம் போட்டுக்காட்டியிருக்கின்றார் ஆசிரியர். இந்த சிறப்பான நூல் வலுவளர் சவால்களை எதிர் நோக்குவோருக்கு மட்டுமன்றி வாழ்வினை நம்பிக்கையோடு வாழ்ந்து சாதிக்கத் துடிக்கும் அனைவருக்குமான அருமருந்தாகவும் ஊட்டமாகவும் திகழும் நூலாக உள்ளது என்பதை பெருமையோடு உறுதியாக குறிப்பிட விரும்புகின்றேன்.

■ ■ ■

# வாஸ்து சாஸ்திரம்...

82ம் பக்கத் தொடர்ச்சி...


நடைபெறும் சிகிச்சையின் அடிப்படையில் அங்கு இருக்கும் சுவர்களுக்குப் பூசப்படும் நிறம் மாறி இருப்பதையும் அவதானித்திருப்பீர்கள் (உங்கள் வீட்டின் ஒரு அறைக்கு தனியே சிகப்பு நிறம் பூசிப்பாருங்கள். அங்கு சண்டையைத் தவிர வேறு எதுவும் மிஞ்சாது).

ஒத்த அமைப்புடைய சதுரம், செவ்வகம், வட்டம், அறுகோண அமைப்பு உடல், மனதுகளில் கொண்டுவரும் முட்டைவடிவ, முக்கோண, நட்சத்திர காம்பு உடையவை நன்மை பயக்காது என வாஸ்து சாஸ்திரம் கூறுகிறது.

கட்டடம் அமையும் பகுதி உயரமாக உள்ள நிலத்தை உடையதாக இருந்தால், நிலப்பரப்பின் தெற்கு, மேற்குப் பகுதிகள் உயர்த்தப் பட்டதாகவும், வடக்குக் கிழக்குப் பகுதிகள் பணிவாகவும் அமைந்தால், வளத்தினையும், மகிழ்வையும் தருமெனக் கூறப்படுகிறது.

உங்கள் வாகனத்தில் வெளிச்சம் உள்ள இடத்தில் Pyramid போன்ற அமைப்பை வைத்திருந்தால் அதிக சக்தி தரும் என கருதப் படுகிறது (பொதுவாக பல தெய்வங்களின் படங்கள் Pyramid வடிவத்தினைக் கொண்டு கண்ணாடி அமைப்புக்களில் விற்பனையாவதைக் கவனித்திருப்பீர்கள்). காசு வைத்திருக்கும் பெட்டியில் சிறிய அளவிலான Pyramid வைத்திருந்தால் மனநிறைவு தரும் எனவும் கூறுகிறது. அதேவேளை வட்டவடிவமான crystalகளை கதவுகளில் தொங்க விடுவதினால் எதிர்மறையான சக்திகளைக் களைந்து நன்மையையும், புத்துணர்வையும் கொடுக்கும் என நம்பப் படுகிறது. (பணம் புழங்கும் பெரிய வீடுகளில் Chandeliers pyramid அல்லது வட்டவடிவில் crystalகள் தொங்குவதை அவதானித்திருப்பீர்கள்).
மேலும் தகவல்களை www.vastutricks.com என்ற இணையத்தள முகவரி மூலமாக அறிந்து கொள்ளலாம்.

இந்துக்களின் வாழ்வியலில் ராசி பார்ப்பதில் இருந்து வானசாஸ்திரம், வாஸ்து சாத்திரம் வரை அதீத கணக்கு முறைகள் இருக்கின்றன.




ஹிந்து தத்துவார்த்தங்களில் பூமி மேற்பரப்பை (சாத்திரக் கணக்கியலுக்காக) ஒரு சதுர அமைப்பாக கருத்தில் எடுக்கப் படுகிறது. பூமியில் சூரியன் உதயமாவதிலிருந்து மறையும் திசைகளையும், வடக்கு, தெற்கு திசையிலிருந்து உருவாகும் காந்த மண்டலங்களையும் 4 மூலைகளாகக் கொண்ட (chart) அட்டவணைப்படுத்தும் முறையை அமைத்திருக்கிறார்கள்.

இனி, வாஸ்து சாஸ்திரத்தின் ஆரம்பத்தினையும், பூகோள அமைப்பின் திசைகளின் பலாபலன்களைக் கூறும் முறையினையும் பார்ப்போம். ஒருமுறை சொர்க்கத்திற்கும், பூமிக்கும் இடையில் இருந்த வழி அடைக்கப்பட்டபோது பிரம்மன் உட்பட பல கடவுள்களும் (ஏறத்தாழ 45 கடவுள்கள் எனக் கூறப் படுகிறது) பூமியில் அடைக்கப்பட்டு விடுகிறார்கள். இவர்கள் பூமியில் இருந்த இடத்தையும், திசையையும் அடிப்படையாக வைத்து வாஸ்து புருஷ மண்ணலம் உருவாக்கப் பட்டது.
(இங்கு கொடுக்கப்பட்டுள்ள படவிளக்கத்தினைப் பார்க்கவும்) சில முக்கியமான திசைகளையும், அதில் இருக்கும் விசேடங்களையும் பார்ப்போம்.

**North East (Eashanya)** எல்லாக் கடவுள்களாலும் ஆளப்படும் இடம். (ஆன்மீகம், நம்பிக்கை அதிஷ்டம்)

**East (Aditya)** சூரிய கடவுளால் ஆளப்படும் இடம் (உலகப் பார்வை)

**south East (Agni)** நெருப்புக் கடவுளால் ஆளப்படும் பகுதி
(சக்தி உற்பத்தியகம்)

**South (Yama)** மரணக் கடவுளால் ஆளப்படும் பகுதி (அழிவு)

**South West (Pitru)** முன்னோர்களால் ஆளப்படும் இடம் (சரித்திரம்)

**West (Varna)** நீர்க்கடவுளால் ஆளப்படும் இடம் (Physics)

**North West (Vaya)** வாயுதேவனின் ஆட்சிக்குட்பட்ட இடம் (விளம்பரம்)

**North (Kubera)** செல்வக்கடவுள் ஆட்சி செய்யும் இடம் (செல்வம், வருமானம்)

**Centre ( Brahma)** உலகை உருவாக்கிய பிரம்மா இருக்கும் இடம் (ஆசை)
கடவுள் இருக்கும் திசைகளைப் பொறுத்து அமைக்கப்படும் வியாபாரம், கட்டட நிலைகளின் பிரதி பலன்களைக் கண்டுள்ளீர்கள்.

மீண்டும் ஒரு சந்தர்ப்பம் அமைந்தால் இந்த திசைகளின் தாக்கங்களின் அணுகு முறையைப் பார்ப்போம்.


இயற்கையுடன் ஒன்றி வாழ்ந்து நம் வாழ்வை சிறப்பானதாக அமைத்துக் கொள்ள நமது முன்னோர்கள், சான்றோர்கள் கூறிய சில வழி முறைகளை வாஸ்து சாஸ்திரம் என்ற முறைகளில் நமக்கு எடுத்துக் காட்டியிருக்கிறார்கள் என்பதை மறுக்க முடியாது.

வாழ்க வளமுடன்!

■ ■ ■



# மில்லியன் டொலர் பெறுமதிமிக்க ஆலோசனை உங்களுக்குக் கிடைக்கிறதா?




## ஆயுட்காப்புறுதியும் குழந்தைகளின் உயர்கல்விக்கான சேமிப்புத் திட்டமும்

- வயோதிபருக்கான காப்புறுதி மிகக் குறைந்த செலவில்
- மருத்துவப் பரிசோதனை இல்லாத காப்புறுதி
- வீட்டுக்கடன் காப்புறுதி
- கொடிய நோய்களுக்கான காப்புறுதி

## குழந்தைகளின் உயர் கல்விக்கான சேமிப்புத் திட்டம்

*கனடிய அரசினால் வழங்கப்படும் 20 - 40 சதவீத மானியத்துடன் எமது நிறுவனத்தால் 15 சதவீத சலுகையயும் அதிகமாக வழங்கப்படும். அத்துடன் 500 டொலர்* Canada Learning Bond *அரசினால் வழங்கப்படுகின்றது.*

MDRT is The Premier Association of Financial Professionals. An independent, international association, MDRT members demonstrate exceptional professional knowledge, strict ethical conduct and outstanding client service. MDRT membership is recognized internationally as the standard of excellence in the life insurance and financial services business.

**ஆயுட்காப்புறுதி சம்பந்தமான அனைத்து ஆலோசனைகளுக்கும்** Million Dollar Round Table **உறுப்பினருடன் தொடர்பு கொள்ளுங்கள்.**

# சிறீதரன் துரைராஜா

MDRT Member of Million Dollar Round Table

**416.918.9771**



Assumption Life   INDUSTRIAL ALLIANCE INSURANCE AND FINANCIAL SERVICES INC.   RBC Insurance

LILAND INSURANCE INC. 759 Warden Ave. Toronto, ON M1L 4B5, Bus: 416-759-5453 x: 407

# ஆயுட் காப்புறுதி முகவர்களின் அவசியமும் கடமையும்




சிறீதரன் துரைராஜா

- ஆயுட் காப்புறுதி முகவர் -

sritharan@thaiveedu.com


அண்மையில் ரொறென்ரோ (Toronto) நகரில் ஆயுட்காப்புறுதி முகவர்களுக்கான MDRT என்ற அமைப்பின் வருடாந்த பொதுக்கூட்டம் 4 நாட்களாக நடைபெற்றது. இந்தப் பொதுக் கூட்டத்தில் உலகெங்கும் உள்ள ஆயுட் காப்புறுதி முகவர்களின் MDRT அமைப்பில் அங்கத்துவம் வகிக்கும் 8000க்கும் அதிக மானோர் கலந்து கொண்டனர்.

MDRT எனப்படும் அமைப்பு உலகெங்கும் உள்ள ஆயுட்காப்புறுதி முகவர்களுக்கான ஒரு அமைப்பு. MDRT அமைப்பு Million Dollar Round Table என்பதன் சுருக்கமாகும். 1927ம் ஆண்டில் இருந்து இந்து அமைப்பு இயங்கி வருகின்றது.

ஆயுட் காப்புறுதி முகவர்களும் நிதித்திட்ட மிடல் ஆலோசகர்களும் தங்கள் வாடிக்கை யாளர்களுக்கு சரியான சிறந்த சேவையை வழங்குவதற்கு தேவையான வழிமுறை களை செய்வதே MDRT நிறுவனத்தின் செயற்பாடாகும்.

இந்த வருடக் கூட்டத்தின் சாராம்சம் (CHANGING LIVES) என்பதாகும். அதாவது மக்களின் வாழ்க்கைத் தரத்தை மாற்றி அமைப்பதற்கு ஆயுட் காப்புறுதி முகவர் களின் அவசியத்தையும் கடமையையும் வலியுறுத்துவதாக அமைக்கப்பட்டி-ருந்தது.

24 மணித்தியாலங்களில் ஒருவரின் வாழ்க் கை எப்படி மாறுபடும் என்பதை அங்கு உரையாற்றிய பேச்சாளர் ஒருவர் தனது சொந்த அனுபவத்தின் மூலம் எல்லோருக் கும் தெளிவுபடுத்தியிருந்தார்.

DAVE Buchwald என்ற ஆயுட் காப்புறுதி முகவர் New York நகரத்தில் ஆயுட் காப்புறுதி முகவராகக் கடமையாற்றிக் கொண்டிருந்தார். September 11 2001 அவர் தனது வாடிக்கையாளரைச் சந்திப்பதற்தாக பயணம் செய்து கொண்டிருக்கும் போது அவரது கார் வானொலியில் New York நகரத்தில் Twin Tower விமானத்தால் தாக்கப்பட்டிருக்கும் செய்தியைக் கேட்டார். அவரது வாடிக்கையாளர்களில் மிகவும் பெரிய ஒரு வாடிக்கையாளரின் அலுவலகம் அங்கே அமைந்திருந்தது. அங்கு வேலை பார்க்கும் 52ஊழியர்கள் அவரின் வாடிக்கை யாளர்களாக இருந்தார்கள். அவர்களில் பலர் இவரிடம் ஆயுட் காப்புறுதி மற்றும் முதலீட்டுத் திட்டங்கள் பல செய்திருந்தனர். New York நகரத்தின் Twin Tower என அழைக்கப்படும் இந்த பெரிய கட்டடம் தாக்கப்பட்ட செய்தி இவரை மிகவும் கவலைக்குள்ளாக்கியது. அங்கே வேலை பார்க்கும் அவரது நண்பர்கள் வாடிக்கை-யாளர்கள் எல்லோருக்கும் என்ன நடந்தி-ருக்கும் என அறிய முயற்சி செய்தார். ஒருவருடனும் தொடர்பு கொள்ள முடிய வில்லை. அவர் வீட்டுக்குப் போய் தொலைக்காட்சியை பார்க்க ஆரம்பித்தார். அவரது 52 வாடிக்கையாளர்களுக்கும் என்ன நடந்தது என்பதே அவரது கவலை.

September 12 2001 புதன்கிழமை அவர் தனது நிறுவனத்துடன் தொடர்பு கொண்டு அவரின் 30 வாடிக்கையாளர்கள் ஆயுட் காப்புறுதி செய்தவர்கள் மரணமடைந்த செய்தியை அறிந்தார். ஒரு நாளில் 24 மணிநேரத்தில் அவரின் 30 வாடிக்கையாளர் கள் மிகவும் நன்றாகத் தெரிந்தவர்கள். ஒவ்வொருவரதும் குடும்பத்தையும் அவர்க-ளின் எதிர்காலத் திட்டங்களையும் அறிந் திருந்ததனால் அவருக்கு இதை எப்படி கையாழ்வது என்பது மிகவும் கடினமாக இருந்தது.

24 மணிநேரத்தில் 30 மரணச் சடங்குகள், 30நிற்கதியான குடும்பங்கள். 100க்கு அதிக மான தந்தையை, தாயை இழந்த குழந்தை கள். இவர்களில் பலர் இன்னும் 40 வயதைக் கூட கடக்காதவர்கள்.

இவர் என்ன செய்வது என்று தடுமாறி அழ ஆரம்பித்தார். அப்போது இவரது முகாமை யாளர் கூறினார் ஆயுட் காப்புறுதி முகவ-ரின் வேலை இப்போது தான் ஆரம்பமாகின் றது. ஒரு ஆயுட் காப்புறுதி முகவர் ஒருவ ருக்கு ஆயுட் காப்புறுதி செய்யும் போது விண்ணப்ப பததிரத்தில் கையொப்பம் வாங்கி விண்ணப்பத்தை பூர்த்தி செய்து கொடுப்பதுடன் மட்டும் உங்கள் வேலை முடிவதில்லை. ஒவ்வொருவரும் ஆயுட் காப்புறுதி விண்ணப்பத்தில் கையொப்ப மிடும்போது ஆயுட்காப்புறுதி முகவர்கள் அவர்களுக்கு கொடுக்கும் வாக்கு நீங்கள் இல்லாத வேளையில் உங்கள் குடும்பத் துக்கு தேவையான பணத்தை நாங்கள் உங்கள் குடும்பத்துக்கு பெற்றுத்தருவோம் என்பதாகும்.

எனவே இப்போது தான் ஒரு ஆயுட்காப்பு-றுதி முகவரின் மிக முக்கியமான கடமை ஆரம்பமாகின்றது. அவர் 30 குடும்பங்களை யும் போய் சந்தித்து அவர்களுக்கு ஆறுதல் கூறி அவர்களின் பணத்தை பெற்றுக் கொடுப்பதற்கான பத்திரங்களை பூர்த்தி செய்து ஒவ்வொரு குடும்பத்துக்கும் கிடைக்க வேண்டிய ஆயுட் காப்புறுதிப் பணத்தை பெற்றுக்கொடுத்தார். எல்லாமாக 30 மில்லி-யன் டொலர் வரை ஆயுட் காப்புறுதிப் பணம் பெற்றுக் கொடுத்தார். அப்போதுதான் அவர் தான் செய்யும் தொழிலின் அவசியத் தையும் கடமையைப் புரிந்து கொண்டார்.

அவரின் வாடிக்கையாளர்களின் குழந்தை கள் பலர் தொடர்ந்து அவர்களின் கல்வி யைத் தொடர்வதற்கும், அவர்களின் குடும்-பங்கள் தொடர்ந்து அதே வதிவிடங்களில் வாழ்வதற்கும் ஆயுட் காப்புறுதி உதவியது.

அந்தக் குடும்பத்தினர் பணம் இல்லை என்று வேறு வதிவிடங்களுக்குகோ, அல்லது

> “ *ஒருவர் ஆயுட் காப்புறுதி செய்து கொள்வது அவர் இறந்து போகிறார் என்பதற்காக அல்ல. இன்னொருவர் வாழ்வதற்காகவே.* ”

குழந்தைகள் வேறு பாடசாலைக்கோ போக வேன்டிய அவசியம் இல்லை. ஆயுள் காப்புறுதியின் உதவியுடன் அவர்களின் வாழ்க்கைத்தரம் எதுவிதத்திலும் குறையாது தொடரமுடிந்தது.

ஆயுட் காப்புறுதித் திட்டமானது உங்கள் இறந்துபோன கணவரையோ அல்லது தந்தையாரையோ மீட்டுத்தர முடியாது. ஆனால் உங்கள் வாழ்வைத் தொடர்வதற்கு அன்பின் அடையாளமாக உங்கள் கணவர் அல்லது தந்தையார் செய்து வைத்த முன்-னேற்பாடுதான் இந்த ஆயுட் காப்புறுதித் திட்டம் என்பதை அவர்களின் வாடிக்கை யாளர்களுக்கு கூறினார்.

ஆயுட் காப்புறுதித் திட்டமானது ஒரு குடும்பத்தின் வாழ்க்கைத்தரத்தை மாற்று-வதற்கு அல்லது மேம்படுத்துவதற்கு மிகவும் சிறந்த முன்னேற்பாடாகும்.

ஒருவர் ஆயுட் காப்புறுதி செய்து கொள்வது அவர் இறந்து போகிறார் என்பதற்காக அல்ல. இன்னொருவர் வாழ்வதற்காகவே.

24மணி நேரத்தில் ஒவ்வொருவரின் வாழ்வும் எப்படியும் மாற்றியமைக்கப்படலாம். ஆனால், நாங்கள் எம்மால் முடிந்தளவு தயாராக இருக்க வேண்டும். நான் இன்று இல்லை. என்னால் எனது குடும்பம் பொருளாதார ரீதியாக பாதிக்கப்பட்டுள்ளதா என்ற கேள்-வியை நாம் எப்போதும் கேட்க வேண்டும். நான் இருக்கும்போது எனது குடும்பம் எப்படி வாழ்ந்ததோ அதே தரத்துடன் தொடர்ந்து எனது குடும்பம் வாழ்வதற்கான வழிமுறை களை வகுத்து வைக்க வேண்டியது எங்கள் கடமை.

எங்கள் எல்லோருக்கும் பல கனவுகள் உண்டு. அவற்றை நிறைவேற்றுவதற்காக நாங்கள் மிகவும் முயற்சி செய்கின்றோம். ஆனால், நாங்கள் இல்லாவிட்டாலும் எங்கள் கனவுகளை நிறைவேற்ற ஆயுட்காப்புறுதி திட்டம் உதவி புரியும்.

■ ■ ■


கனடா எழுத்தாளர் இணையத்தின் ஆதரவில்

**கலாபூஷணம், பண்டிதர் சி. அப்புத்துரை அவர்களின்**

“இருபதாம் நூற்றாண்டில் வாழந்த ஈழத்துத் தமிழ் புலவர் வரலாறு”
இரண்டாம் பாகம்

**நூல் வெளியீடு**

ஆகஸ்ட் 18, 2008
பி.ப. 5.00 - 8.00

**Cedarbrae Library Hall**
**545 Markham Road**
**(Markham & Lawrence)**

**416 546 1394**

GP TELECOM

இரமணன் திரு

(முன்னாள் பெல் கனடா, ரோஜேர்ஸ் ஊழியர்)

For Your Business We

- Install, Repair, Sell
- Meridian Phone Systems & System Phones
- Structured Voice & Data Cabling
- Install, Repair Home Phone Wiring
- TV Cable (RGB)
- Network Cable

உங்கள் அழகிய வீட்டில் பழுதுகள் ஏதும் ஏற்பட்டாமல் சுவர்களுக்கு உள்ளால் வயர் எடுத்து கொடுக்கப்படும்

**416.203.0344**



# வாஸ்து சாஸ்திரம்

# கட்டிடத்திற்கு மனைப்பொருத்தம் அவசியம்!

கணணித் தொழிற்துறையைச் சார்ந்த எனக்கும், பழைய தத்துவங்களை அடிப்படையாகக் கொண்ட வாஸ்து சாத்திரத்திற்கும் என்ன சம்பந்தம் என நீங்கள் ஒரு கேள்விக் குறியுடன் இந்தக் கட்டுரையை வாசிக்க முற்படலாம். சாஸ்திரங்களையும், பழமை வழிமுறைகளையும், மாந்திரீக முறைகளையும் கூடுதலாகப் பின்பற்றிய அல்லது அவற்றில் அதீத நம்பிக்கை வைத்திருந்த கிராமதில் இருந்து வந்தவன் என்ற முறையில் எனக்கு கைராசியில் இருந்து மைபார்த்தல், சூனியம், வானசாஸ்திரம் எனப் பலராலும் மூடநம்பிக்கைகளாகக் கூறப் படும் நம் முன்னோரின் வழிமுறைகளை எனக்குத் தெரிந்த விஞ்ஞான அடிப்படைகளுடன் அடிக்கடி தொடர்பு படுத்த முயற்சி செய்வேன். அதன் விளைவுகளில் ஒன்றே இது.

உலகில் உயிருள்ள அல்லது உயிரற்ற எந்த ஒரு பொருளும் தனக்கு என ஒரு குறிப்பிட்ட இடத்தை எடுத்துக் கொள்கின்றன.

கணணி உலகில் ஒரு கணணியை வடிவமைக்க பல நீண்ட நாட்களைக் கொண்ட ஆராய்ச்சியை செய்வார்கள். கணணியின் உதிரிப் பாகங்களான CPU, Power supply, memory, chipsets, capacitor, memory modules, hard drive என்று இவற்றை ஒரு கணணியை வடிவமைக்கும் போது எந்த பொருள் எந்த இடத்தில், இரண்டு வேறு பட்ட இலத்திரனில் உதிரிப் பாகங்களுக்கு இடையே ஏற்படக் கூடிய இலத்திரனியின் மின் தாக்கங்கள், வெப்ப வெளியேற்றம், காற்றோட்டம் என்று பல பக்கவிளைவுகளையும் கருத்தில் கொண்டே ஒரு கணனியை வடிவமைப்பார்கள். இந்த சரியான வடிவமைப்புக்களினால் பல கணணிகள் சிறந்த பாவனைத் திறன் சிறப்பானதாக அமைந்து பலராலும் விரும்பப்பட்ட "model" ஆகக் கருதப்பட்டு அதன் விற்பனைகளிலும் வெற்றி பெறுகிறது. கணணிகள் வடிவமைப்பில் அதிக கவனம் செலுத்தப் படுவதற்குக் காரணம் அதனைப் பாவிக்கும் உதிரிப் பாகங்கள் அனைத்துமே சக்தியுடன் சம்பந்தப்பட்ட இலத்திரனியை அடிப்படையாகக் கொண்டு இயங்குவதனாலேயே.

இதேபோன்றே ஒவ்வொரு மனிதனும் மின் காந்தவியல் சக்தியை அடிப்படையாகக் கொண்ட நரம்பு மண்டலத்தில் ஊடாக நடை பெறும் தகவல் பரிமாற்றங்கள் மூலமாகவே நமது உடல் உறுப்புக்களின் அசைவுகளைக் கட்டுப்படுத்துகிறார்கள்.

ஒரு கணனியை வடிவமைக்கும் போத எத்தனையோ கவனங்களை எடுத்துக் கொள்கிறார்கள் என பார்த்தோம். இதே போன்றே நாம் வாழும் வீட்டின் அல்லது கட்டடத்தின் வெளி, உள் அமைப்புக் களையும் கருத்தில் கொள்ள வேண்டியது அவசியம்.

ஒரு கணணி எப்படி முழுமையாக மின் காந்தவியலை அடிப்படையாகக் கொண்டு இயங்குகிறதோ, அதே போன்றே நாம் வாழும் பூமியும் மின்காந்தவியலை அடிப்படையாகக் கொண்டே இயங்குகிறது.

பூமி சூரிய குடும்பத்தில் சூரியனிலிருந்து 3வதாக அமைந்திருக்கிறது. பூமி ஒரே அச்சில் 23.5பாகை கோணத்தில் சரிந்தபடி, தன்னைத் தானே வலதுபுறமாகச் சுற்றிக் கொண்டு, சூரியனை மேற்கிலிருந்து கிழக்கு நோக்கிய திசையில் சுற்றி வருகிறது. பூமி வலது பக்கமாக சுழன்றுகொண்டு இருப்பதாலேயே நாம் எந்த கட்டடம் அல்லது புதிய இடங்களுக்குச் செல்லும்போதும் வலது காலை முன்வைத்துச் செல்ல வேண்டும் என்று முன்னோர்கள் கூறினார்கள். இந்த முறை உலகின் சுழற்சி முறையுடன் நமது உடலைச் சமநிலை செய்து தடுமாறி விழாமல் இருக்க உதவும் என்று விஞ்ஞானம் கூறுகிறது.

பூமி மேற்கிலிருந்து கிழக்கு நோக்கி அசைந்து கொண்டிருப்பதாலேயே பெரிய கட்டிடங்களைக் கட்டும்போது, கிழக்கு திசையினை நோக்கிய கட்டடத்தின் பகுதி, மேற்குத் திசையில் இருக்கும் பகுதியினை விட உயரம் குறைவாக இருக்கும். இது ஏறத்தாழ வேகமாகச் செல்லும் கார்களை வடிவமைக்கும்போது காற்றை எதிர்நோக்கும் முன்புறம், பின்புறத்தை விடவும் உயரத்தில் மிகக் குறைந்ததாக இருப்பதற்கு ஒப்பிடலாம். பூமியின் சுழற்சியுடன் ஒவ்வி கட்டப்படும் கட்டிடங்கள், நீண்ட காலம் நிலைத்து நிற்க இந்த முறை பயன்படுத்தப் படுகிறது. புவியீர்ப்புச் சக்தி என்ற சக்தியீர்ப்பாலேயே நாம் இந்த உலகின் விளிம்பில் வாழ்ந்து கொண்டிருக்கின்றோம்.

பூமியின் வடதுருவத்திற்கும், தென்துருவத்திற்கும் இடையே உலகைச் சுற்றி ஒரு காந்த மண்டலம் இருக்கிறது (திசைகாட்டியின் இயக்கம் இந்த இயற்கையை அடிப்படையாகக் கொண்டது). நாம் வாழும் பூமியினை ஒரு பெரிய வட்டமான காந்தத்திற்கு ஒப்பிடலாம்.

சூரியனினதும், அதனைச் சுற்றிவரும் பூமியினினதும், பூமியைச் சுற்றிவரும் சந்தரனினதும் சுழற்சியின்போது, அவை சமாந்திரக் கோட்டில் வரும் சந்தர்ப்பத்தில் சந்திர கிரகணம் அல்லது சூரிய கிரகணம் ஏற்படுவதை நாம் அறிவோம். அப்படிக் கிரகணங்கள் ஏற்படும் போது, சூரியனுக்கும், பூமிக்கும், சந்திரனுக்கும், பூமியிலிருக்கும் வட தென்துருவ காந்தவியல் மண்டலத்திற்கும் இடையே ஏற்படும் காந்தவியல் தாக்கங்களினால் கடல்பெருக்கு போன்றவை ஏற்படுதுடன் பல மனிதர்களுக்கு புத்தி பேதலிப்பும் ஏற்படும். (கிரகண காலத்தில் மனோரீதியாக பாதிக்கப் பட்டவர்கள் மிக அவதானமாக கவனிக்கப் படுவார்கள் என்பதை அறிவோம். இதே காலங்களில் கற்பிணிப் பெண்களையும் வெளியே செல்லாமல் பாதுகாப்பதனையும் அறிவோம்.)

மனிதனுடைய முழு இயக்கமும் நரம்பு மண்டலத்தாலேயே கட்டுப் படுத்தப் படுகிறது. இந்த நரம்பு மண்டலம் மின்காந்தவியல் மூலமாகவே மூளையையும், உடம்பின் மற்ற அங்கங்களுக்கிடையே தகவல் பரிமாற்றத்தை ஏற்படுத்துகின்றது. இந்த மனிதனில் இருக்கும் மின்காந்தவியல் மண்டலம் பூமியில் இருக்கும் வட, தென் துருவ காந்த மண்டலங்களால் மிகவும் பாதிக்கப் படுகிறது.


மனிதனுடைய தலைப்பகுதி வடதுருவமாகவும், காற் பகுதி தென்துருவமாகவும் செயற்பட்டு, உடலின் நரம்பு இயக்கங்களைக் கொண்டு செல்வதாக மருத்துவம் கூறுகிறது. இதனாலேயே நாம் வடக்கு திசை நோக்கி தலையை வைத்துத் தூங்கினால் சரியான தூக்கம் பெற முடியாததுடன் மனக்குழப்பத்திற்கும், நோய்வாய்ப்படவும், சந்தர்ப்பம் இருப்பதாக விஞ்ஞானிகள் கூறுகிறார்கள். இதற்கு வாஸ்து சாஸ்திரம் கூறும் விளக்கம், நாம் வடதிசை நோக்கித் தலைவைத்துப் தூங்கும்போது பூமியின் வடதுருவத்திற்கும், மனிதனின் வடதுருவ காந்தவியல் மண்டலத்திற்கும் இடையில் ஏற்படும் எதிர்மறைத் தாக்கமே இந்த அவஸ்தைக்குக் காரணம்.


## வாஸ்து சாத்திரம் என்றால் என்ன என்று பார்ப்போம்...

வாஸ்து சாத்திரம் ஒரு கட்டிடத்தில் அல்லது வாழும் மனையில் எப்படி சக்தி ஊடுருவிச் செல்கிறது என்பதைக் கூறும் பரம்பரை வழிமுறைச் சாத்திரம். (கட்டிடத்திற்கு மனைப் பொருத்தம் அவசியம் என்ற பழைய பாடல் ஞாபகத்திற்கு வந்து இருக்கும் என்று நினைக்கிறேன்).

"வாஸ்து" என்பது நாம் வாழும் இடத்தைக் கூறியிருக்கும் ஒரு சொற்பதம். சாஸ்திரம் எனில் விஞ்ஞானம் என்று பொருள்படும்.

வாஸ்து என்பது ஐம்பெரும் பகுதிகளைக் கொண்டது. இந்த ஐம்பெரும் பகுதிகளும் எந்த வகையில் நாம் வாழும் சூழலையும் சுற்றாடலையும் பாதிக்கின்றன என்பதையும், ஒரு கட்டிடம் அமையும்போது. நாம் தெரிவு செய்யும் நிலத்தின் தன்மை, கட்டிடடம் அமையும் திசை, அதனுள் அமையப் போகும் அறைகளின் அமைப்பு, காற்றோட்டம், அதனுள் அழகுபடுத்தப் பயன்படுத்தப்






படும் பொருட்களின் வடிவம், அவைகள் ஆக்கப்பட்ட மூலப்பொருட்கள் (மரம், இரும்பு, கிரனைட்) அத்துடன் அவற்றை அணுகும் போதும், பாவிக்கும்போதும், நாம் இருக்கும் திசை என்பவற்றிற்கான வழிமுறையினைக் கூறும் பரம்பரை வழிவந்த கட்டுமான முறையே வாஸ்து சாஸ்திரம் எனப்படும்.

இதேபோன்ற சாத்திரமான முறையையே சீன தேசத்தவர்களும் FENGSHUI என்ற பெயரில் கைக்கொண்டு வருகிறார்கள் (2008 ஒலிம்பிக் கட்டிட அமைப்புக்களில் இந்த முறை மிக அழுத்தமாகப் பாவிக்கப் படுவதாகக் கூறப்படுகிறது.)

வாஸ்து சாஸ்திரம் அடிப்படையில் ஐந்து இயற்கைகளை (ஐம்பூதங்கள்) அடிப்படையாகக் கொண்டது. இந்த ஐந்து இயக்கங்களினதும் தாக்கம் ஒரு கட்டத்தில் வாழ்பவர்களின் மனநிலை, உடல்நிலை போன்றவற்றில் அந்தக் கட்டத்தின் அமைப்பினால் அந்த இயற்கை ஏற்படுத்தும் பாதிப்பில் தங்கி இருக்கிறது. இந்த ஐந்து இயற்கைகளையும் இப்போது பார்ப்போம்.

## பூமி (Earth)

சூரியனிலிருந்து 3வதாக அமைந்திருக்கும் கோள். இதில் இருக்கும் வட, தென் துருவத்துக்கு இடையிலான மிகப் பெரிய காற்று மண்டல அமைப்பு உயிருள்ள, உயிரற்ற பொருட்களில் பெரும் தாக்கத்தை ஏற்படுத்துகிறது.


ஜெவ்றி உதுமாலெப்பை
- கணனி வல்லுனர் -
jiffry@thaiveedu.com




## நீர் (Jala)

இது மழை, கடல், நதி என திரவநிலையிலும், பனிக்கட்டி வடிவில் திண்மநிலையிலும், நீராவி, மேகம் போன்ற அமைப்பில் வாயு நிலையிலும் இருக்கிறது. நமது உடலில் 90 சதவிகிதம் நீரையும், இரத்த கலங்களில் hemoglobinஐயும் ஒட்சினையும் கொண்டது.

## காற்று (Vayu)






உயிர் வாழ்வதற்கு மிக முக்கியமான உயிர் நாடி. மனிதனுடைய மனநிலை, உணர்வு நிலை என்பன அவன் வாழும் சூழலில் இருக்கும் காற்று மண்டலத்தின் தட்ப (Humidity), வெட்ப, காற்றோட்டம், காற்றழுத்தம் (Air pressure), காற்றில் கலந்திருக்கும் பொருட்கள் (Air compositions) ஆகியவற்றில் அமைந்திருக்கிறது.

## நெருப்பு (Agni)

இது உயிரினம் உயிர் வாழ்வதற்கு மிக அத்தியாவசியமான வெளிச்சத்தையும், வெப்பத்தையும் கூறுகிறது.

## வான்வெளி (Aahasha)

நாம் மேலே குறிப்பிட்ட எல்லாவற்றிற்கும் இடம் அளித்திருக்கிறது. நம்முடைய அன்றாட, சந்தோசமான வாழ்க்கைக்கு மேற் கூறிய ஐந்துக்கு இடையிலான சாதகமான தொடர்பும் சமஅளவும் பேணப்பட வேண்டும் என்பதை எல்லோருமே ஏற்றுக்கொள்வோம். ஒரு கட்டடத்திற்குள் அல்லது ஒரு அறைக்குள் இருக்கக் கூடிய சக்தியின் உள்ளாற்றத்தையும், அதனுள் பெறக்கூடிய சூரிய ஒளி, காற்றோட்டம் என்பன பாதிப்பதன் மூலம் அதனுள் வாழ்பவர்களின் உளநலம், பணவிருத்தி, அமைதி, சந்தோசம் என்பவற்றைப் பாதிக்கும். பொதுவாக சிறைச்சாலைகளுக்கு நிறம் பூசும்போது ஒரு குறிப்பிட்ட நிறத்தையும், வைத்தியசாலைகளில் அங்கு

79ம் பக்கம் பார்க்க...

# வீடு வாங்கவும், விற்கவும்...

**16th Ave/9th Line**



**$539,900**

5 Bedrooms, 4 Washrooms
Gorgeous & Immaculate Exeutive 5 Brs Hm Loaded W/Upgds, Approx.3000 Sqft, Over $80K Upgrades

**Brampton**



**$413,000**

4 Bedrooms, 3 Washrooms
New 2348 Sqft. Detached Upgraded & Modified Kitchen Beautiful House. In A Very Quiet Neighbourhood With 9 Feet Ceiling In Main Level

**Mccowan/16th**



**$505,000**

4 Bedrooms, 3 Washrooms
One And Half Years Old. Bright Well Kept Detached Home By Rosehaven Development In Markham. Demand Location, Quiet Street,Calm Neighbourhood

**Finch/Keele**



**$269,900**

tunning 3 Bedroom Townhouse W/ Rooftop Terrace & Balconies. Brand New Paint & Carpet. One Of The Largest Townhomes In Development.

**Brimorton/Orton Park**



**$275,000**

3 Bedrooms, 2 Washrooms
Beautiful Design For Split Level Home, Spacious Bedrooms, Seperate Family Room, Walk Out To A Two Teired Deck & Private 130 Ft Lot.

**Hwy 10/403**



**$177,900**

Priced For Quick Action. Luxury 2 Bedroom + Den Condo. Spacious Kitchen With Ceramic Flooring. Huge Master Bedroom With Ensuite. Very Bright And Sunny Unit. Freshly Painted

**Midland/Lawerence**



**$129,900**

2 Bedrooms, 1 Washrooms
Spacious, Bright, Clean, Well Kept Unit, And Well Maintained Building With Indoor Pool, Exercise Room, Party Room, Private Play Ground For Kids

**Manse/Lawrence**



**$389,900**

4+2 Bedrooms, 3 Washrooms
Great All Brick Family Home On A Quiet Cul-De-Sac In West Hill,Master Has 4Pc Ensuite With Walk-In Closet

**Bathurst/Mulock**



**$229,000**

3 Bedrooms, 2 Washrooms
Tastefully Decorated & Maintained. Bright & Spacious Rooms. Money Spent In Renovation. New Ceramic In The Entrance & Kitchen

**Kennedy/Kingston**

PICTURE NOT AVAILABLE

**$169,900**

Best Priced Bungalow In The Area
Call for More Info

**Middlefield / Finch**



**$179,900**


2 Bedrooms, 1 Washrooms
Clean, Bright, Beautiful (0-5) Years Low Rise Condo, Close To Woodside Square Mall, Gta Square, Temple, Worship Places. 24 hrs TTC

**Morningside/Sheppard**



**$229,000**

4+1 Bedrooms, 3 Washrooms
Freehold Townhouse On Child Safe Court, Spacious And Bright, Convenient Location Close To School And Hwy 401



**RAJ Ariyanayagam Pathmarajah**
Real Estate Broker
**Cell: 416-930-4663**

**Kirew Kanagasabai**
Real Estate Broker
**Cell: 416-903-4663**



HOMELIFE
HIGHER STANDARDS

**HomeLife Today Realty Inc., Brokerage***
Independently Owned And Operated

31 Progress Avenue, Suite 210
Toronto, ON M1P 4S6
Office: 416-298-3200

NEW CREDIT - BAD CREDIT - NO CREDIT
BANKRUPT - NO PROBLEM
On Line - Credit Approvel, All kind of Credit Repairs
உங்கள் வியாபார முதலீடு வீட்டு முதலீடு ஆகியவற்றுக்கான
பணத்தேவைகள் உடன் ஒழுங்கு செய்து தரப்படும்
Shan Kanapathipillai
416.890.2300
e-mail: shankana@juno.com
CENTUM
Looking out for your best interest

• Real Estate Law
• Business Law
YASO SINNADURAI
BARRISTER & SOLICITOR, NOTARY PUBLIC
THE LAW OFFICES OF YASO SINNADURAI
2100 Ellesmere Rd., Suite 202
Scarborough, Ont. M1H3b7
Tel: 416•265•3456
Fax: 416•265•2770

DOOR TO DOOR
DISTRIBUTION THROUGH CANADA POST POSTES CANADA
One Solution for you
WE DESIGN • PRINT • DELIVERY
50,000
starting at $599
OUR DELIVERY GUARANTEED BY CANADA POST
Design and Printing in Full Colour.
Delivery to every house and apartment in a postal zone every month.
MORE DETAILS: 416.297.0707 / 647.290.0540

WIN
BUY AND SELL through Pat Pushpakanthan And enter to win Brand new Toyota FJ Cruiser
வீடு, வியாபாரம், காணி வாங்க விற்க அழையுங்கள்!
PAT PUSHPAKANTHAN Real Estate broker
416 493 2100
Quick Sale!!
commission solution*
2.5%
Also available
Markham
NEW
ZONING FR GARAGE WORK
1400- 2200SQFT
AUTO REPAIR
GARAGE FR LEASE
new
Warden/St.clair
Open house
sat+sun 2-4 pm
Business
Cafetaria In office building
Century 21
YOUR SOLE AGENT



பல கிளைவிட்ட ஒரு பனை
(வல்லிபுரக் கோவில்)



இராவணன் வெட்டு
(திருகோணமலை)



**இம்மாதப் புகைப்படக் கலைஞர்**
**சி. குமரன்**

கனடா, ஸ்காபுரோவில் வசிக்கும் வணிகப் பட்டதாரியும் வானொலிக் கலைஞருமான இவர் தனது ஓய்வு நேரங்களில் கலைத்துறையிலும், மற்றும் சிறுகதைகள், விமர்சனக் கட்டுரைகள் எழுதுவதுடன் புகைப்படத்துறையிலும் ஆர்வம்காட்டி வருகின்றார்.

**உங்களிடம் (நீங்கள் எடுத்த) அழகான புகைப்படங்கள் இருக்கின்றனவா? அவற்றை நாங்கள் பிரசுரிக்க விரும்புகிறோம்.**

புகைப்படம் எடுத்தவரின் பெயர், விலாசம், தொலைபேசி இலக்கம், மின்னஞ்சல், புகைப்படம், எடுக்கப்பட்ட காட்சி அல்லது எடுக்கப்பட்டவருடைய விபரங்கள் என்பவற்றுடன் நீங்கள் எடுத்த புகைப்படத்தையும் அனுப்பிவையுங்கள். அவை இந்தப் பகுதியில் பிரசுரமாகும்.

• சுமார் 10 வருடங்கள் Scotia வங்கியில் மோட்கேஜ் அனுபவம்
• 7 நாட்களும்... 24 மணி நேரமும் நட்பான சேவை
• குறைந்த வட்டி வீதம் • 0% Down Payment
Scotiabank
Ragavan Ramanathan
Mortgage Development Manager
• New • Switch • Refinance
Tel: 416•579•7533
Fax: 416•579•9433
ragavan.ramanathan@scotiabank.com

Insurance Ocean
PROTECT YOURSELF AND YOUR LOVED ONES!
Product we serve:
• Accident Death Insurance • Affordable Life Insurance • Critical Illness Insurance
• Disability Income Insurance • Mortgage Insurance • Permanent Life Insurance
• Pet Insurance • Term Life Insurance • Travel Insurance • No Medical Exam Insurance
We provide free training and prepare you for the certification
Now hiring at Ocean Mortgage Include: Marketing Specialist, Sales Reps.
Call today 416-321-2300
Get the best rate online @
www.insuranceocean.com
digi